# தஞ்சை
# வேதநாயகம் சாஸ்திரியார்

டாக்டர் தா. வி. தேவநேசன்



6999

# தஞ்சை
# வேதநாயகம் சாஸ்திரியார்

சென்னை

கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தால்
தஞ்சை சுவிசேட கவி சங்கை வேதநாயக
சாஸ்திரியார் நூற்றாண்டு விழா வைபவத்தில்
பொது. (1864- 1964) ஸ்ரீமான் ராஜ ராஜஸ்ரீ
ராஜாசலிங்கப் சத்ரபதி அவர்களுக்கு அன்

எழுதியவர்

டாக்டர் தா. வி. தேவநேசன்

பரிசாகக் கொடுக்கப்பட்டது.

H. N. Schwartz
ஹெ. என். சுவார்ட்ஸ்

A. Koilpitchai
அ. கோயில்பிச்சை

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(*In association with the United Society for Christian Literature*)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
*and at*
MYSORE BANGALORE TIRUVALLA

G.L.
*COPYRIGHT*
*Second edition, 1956*

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS 7—1956. B4732

# PREFACE

(First Edition)

In his reminiscences written about sixty years ago, Bishop Caldwell has said: "In the year 1841, I met in Tanjore the celebrated 'Tanjore Poet', a native of much ability and great poetical power, the author of a prodigious number of lyrics many of which will probably always hold their place in the public and private use of the Christians of the Tamil country. The good done by his writings survives."

Aye, these writings still live on, and the estimate which the Bishop had formed so long ago about the quality and extent of the influence of the lyrical compositions of the venerable poet Vedanayaga Sastriar has never been challenged. It is therefore the duty of all Tamil Christians to keep ever green the memory of his name. One method of doing this is to transmit to posterity incidents from the life of Sastriar which are inspiring and elevating and which mark out the greatness of the man. Dr. D. W. Devanesan has done this task in a most able and efficient way, and has laid the Christian community under a deep debt of gratitude to him. His readers are introduced in this work to several happenings in the career of Sastriar which they might not have heard of before. I fervently pray that the Lord's blessings may abundantly rest on this venture, and that this book may run into several editions for the glory of His Kingdom.

'GRACE LODGE',
VEPERY, MADRAS
5-3-1947

S. BALASINGAM SATYA,
M.A., M.L., LL.B.

# முன்னுரை

## (முதலாம் பதிப்பு)

சங். வேதநாயக சாஸ்திரியாரின் அரிய பெரிய நூல்களை வாசித்தறிந்து அவைகளில் அமைந்துள்ள அதிமதுர இன்பச் சுவை ததும்பும் பண்களைப் பல்லாண்டுகளாகப் பாடியும், பாடக்கேட்டு பரவசமுமடைந்து வரும் செந்தமிழ்க் கிறிஸ்தவ திருச்சபையோர்களே!

வேதநாயக சாஸ்திரியின் பிரபௌத்திரன் ஆனபடியினாலும், தஞ்சை சபையார் அக்காலத்தில் அவருடன் செய்த உடன்படிக்கையின் பிரகாரம் வம்சபரம்பரையாக சூடிவரும் 'சாஸ்திரியார் பட்டம்' அளிக்க அவருடைய ஊழியத்தை சுதந்தரத்துவமாகப் பெற்று பணி செய்து வருகிறபடியினாலும், என் பந்துவாகிய ஸ்ரீ D. W. தேவநேசன் அவர்கள் பெரு முயற்சியுடன் ஆராய்ச்சி செய்து வெளியிடும் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரத்திற்கு முன்னுரை எழுதவேண்டுமென்று என்னை விரும்பி கேட்டுக்கொண்டபடியினாலும், இவ்வரிய நூலுக்கு ஓர் முன்னுரை எழுத நான் துணிந்தேன்.

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவ சபைகள் சங். வேதநாயக சாஸ்திரியாரை நன்கு அறிவதற்குக் காரணம் அவர்கள் இயற்றியிருக்கும் எண்ணிறந்த கீர்த்தனைகள் மட்டுமல்ல. செபமாலை, பராபரன்மாலை, ஞானவுலா, தியானப்புலம்பல், பேரின்பக் காதல் முதலிய பல விசேஷமான பக்தி விர்த்திக்குரிய நூல்களுமேயாம்.

நிலைபெற்றோங்கும் கலைகளே அவர்கள் ஞாபகத்தை ஸ்தாபித்ததுவென்று கூறுவது மிகையாது. உரோமன் கத்தோலிக் கிறிஸ்து மார்க்கத்திற் சிறந்து விளங்கிய Robert de Nobili (தத்துவ போதகர்), Father Beschi (வீரமாமுனிவர்), Abbe J. A. Dubois முதலிய ஐரோப்பிய குருக்களின் முயற்சியால் அக்காலத்தில் தமிழ்க் கத்தோலிக் சபைகள் நன்கு பலத்திருந்தது. அந்தக் குருக்கள் தங்கள் மார்க்கத்திற்கேற்ற நூல்களையும் தங்கள் கோவில்களின் ஆராதனைகளுக்கு வேண்டிய பாவினங்கள் பலவற்றையும் இயற்றிக்கொடுத்தார்கள். சீர்திருத்தமடைந்த ஏனைய கிறிஸ்தவ சபைகளுக்குக் கனம் Fabricius

ஐயர் மொழிபெயர்த்த ஞானப்பாட்டுகள் தவிர, தேசாசாரத்தை யொட்டி ஆராதனைக்குரிய பாடல்கள் வேறு ஒன்றும் இருந்ததில்லை. அந்த ஞானப்பாட்டுகளும் ஐரோப்பிய பிரமுகர்கள் முக்கியமாக ஜர்மானிய பக்தர்களால் உண்டுபண்ணினதேயாகும். நம் நாட்டு பக்திவிநயத்தையும் ஆசார ஒழுக்க வியல்புகளையும் ஒட்டி செபமாலை, பராபரன்மாலை, ஞானபத கீர்த்தனங்கள் முதலானவைகளைத் தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஆராதனைகளி லுபயோகிக்க முதல் முதலாக அருளினது சங். வேதநாயக சாஸ்திரியார் அவர்களே.

ஆதலால், அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை ஒருவாறு அறிந்து கொள்வது நமது கடமையாகும். முதன் முதலில் சாஸ்திரியாரின் சரித்திர வரலாற்றை எழுதினவர் Dr. Henry Bower ஐயர் அவர்கள். அவர் தஞ்சாவூருக்கடுத்த வேதியர்புரத்தில் (அம்மன்பேட்டை) 1844–1858-ம் வருஷம் வரையில் அங்கிருந்த ஒரு வேதசாஸ்திர பள்ளிக்கூடத்தை நடத்தினவர். வேதநாயக சாஸ்திரியாரை முக முகமாய் அறிந்தவரானபடியினலும், முதலாவதாக சாஸ்திரியாரின் சரித்திரத்தைச் சுருக்கமாக அமைத்தவரானபடியினலும், அவருடைய வரலாற்றுக்கு விசேஷ மதிப்புண்டு. ஆனலும் அவர் ஹிந்து ஆசாரங்களையும் மனப்பான்மையையும் விளங்கிக்கொண்டு அவைகளை அங்கீகரிப்பது கூடாத காரியமாகும். எனவே, சாஸ்திரியாரின் நூல்கள் அவருக்குப் பெரும்பாலும் விளங்கியிருக்காது என்பது திண்ணம். ஆகையால் அவர் அமைத்த சாஸ்திரியாரின் ஜீவிய வரலாற்றில் அவரின் நூல்களின் கீர்த்தியைக்குறித்து பாராமுகமாய் இருந்தாரெனத் தோன்றுகிறது.

இதன் பொருட்டு என் பாட்டனர் சங். நோவா ஞானதிக்கம் சாஸ்திரியார் 100 பக்கங்கள்கொண்ட சாஸ்திரியாரின் சரித்திர புத்தகமொன்று எழுதி பிரசுரப்படுத்தினர்கள். இப்போதும் ஸ்ரீ D. W. தேவநேசன் அவர்கள் சாஸ்திரியார்பேரில் நல் அபிமானமுடையவர்களாகையால் அவர்களுடைய சரித்திர சம்பந்தமான சம்பவங்களைத் தகுந்த விதமாய் ஆராய்ச்சி செய்ததுமன்றி, நூல்களின் பேரில் வியாக்கியானமும் எழுதி இந்தப் புஸ்தகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இதற்கு நான் சாஸ்திரியாரின் குடும்பத்தார் சார்பாகவும் தமிழ்த் திருச்சபையோர் நிமித்தமாகவும் எங்கள் மனப்பூர்வமான நன்றியுணர்வை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர்,
25-3-1945

வே. சேம். வேதநாயக சாஸ்திரி.

# முகவுரை

## (இரண்டாம் பதிப்பு)

இற்றைஞான்று நிலவும் தமிழ் வாசக நடைக்கு இசைவாக முதலாம் பதிப்பில் பயன்படுத்தின வடமொழி வார்த்தைகளில் பலவற்றைத் தமிழ் சொற்களாக மாற்றியிருக்கிறேன். சமஸ்கிருத வார்த்தைகளொன்றையும் பயன்படுத்தக்கூடாது என்று சாதிக்கும் கட்சியுடன் நான் இணங்குவதில்லை, தமிழினூடு சமஸ்கிருதச் சொற்கள் ஓராறு விரவி நிற்கலாம். அவை உணவுக்கு உப்பிட்ட வண்ணம் ஒரோவழி ருசிக்கும்.

பெரும்பாலும் சமஸ்கிருதச் சொற்களை மட்டுக்கு மிஞ்சி உபயோகிக்குஞ் சார்பை கிறிஸ்தவ எழுத்தாளரிடம் எதிர்பார்க்கக்கூடாத வண்ணமாய் பரக்கக் காணலாம். இதனுக்கு அடிப்படை விவிலிய நூலாம். இதனுள் சுத்த வெள்ளைத் தமிழுடன் எண்ணிறந்த வடமொழிச் சொற்கள் கலந்து நிற்கின்றன. இதையொரு வசைமங்கலம் (Paradox) என்றே நாம் புகலவேண்டும். இந்த வரம்பு கடந்த சார்பினை நாம் தடுத்தாள முயலாவிட்டால் நாளடைவில் செந்தமிழுக்குக் கேடு உண்டாவது ஒருதலை.

இந்த இரண்டாம் பதிப்பில், சில பாகங்களைத் தள்ளியும், இரண்டு புதிய அத்தியாயங்களைக் (14, 15) கூட்டியும் இருக்கின்றேன். முதல் பதிப்பை உவந்து ஏற்றுக்கொண்ட கிறிஸ்து சபை இப்பதிப்பையும் வரவேற்குமென்ற பூரண நம்பிக்கை எனக்குண்டு.

PALAYAMCOTTAH,
27–8–1955

D. W. DEVANESAN.

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | Preface (First Edition) ... ... | iii |
| | முன்னுரை (முதலாம் பதிப்பு) ... ... | v |
| | முகவுரை (இரண்டாம் பதிப்பு) ... ... | vii |
| | பாயிரம் ... ... ... ... | xi |
| 1. | பிறப்பும் வளர்ப்பும் ... ... ... | 1 |
| 2. | தேவசகாயம் பிள்ளை சுவார்ச்சு ஐயரிடம் தன் மகனை ஒப்புவித்தது (Christian Frederick Schwartz of Tanjore) ... ... ... | 5 |
| 3. | சி. எப். சுவார்ச்சு ஐயர் பொன்னகர் புகுதலும், வேத நாயகம் மணம் புரிதலும் ... ... | 11 |
| 4. | கிறிஸ்தவ சபைகள் அளித்த பட்டப் பெயர்களும் அந்தச் சபையார் நடாத்துவித்த நல்லேற்கையும் ... | 17 |
| 5. | யாழ்ப்பாணத்திற்குச் செல்லல் ... ... | 46 |
| 6. | His Highness சரபோஜி மகாராஜாவுக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் இருந்த இணக்கமும் பின் நேரிட்ட மனத்தாபமும் ... ... | 49 |
| 7. | வேதநாயக சாஸ்திரி நிறைவேற்றின உத்தியோகங்களும், கர்த்தரின் பெறலரிய கருணையை முன்னிட்டு நடாத்தின இல்லாண்மையும், நோயாளிகளைச் செபத்தினல் குணமாக்கின அவரது திறனும் ... ... | 55 |
| 8. | பல்வேறு நடபடிக்கைகள் ... ... ... | 59 |
| 9. | வேதநாயக சாஸ்திரியின் ஆசீர்வாக்கும் அவர் என்றுமுள்ள இராச்சியத்தில் புகுதலும் ... ... | 70 |

அத்தியாயம் பக்கம்

10. வேதநாயக சாஸ்திரியின் பின்சந்ததியார்... ... 76

11. வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய நூல்களைக் குறித்து மதிப்புரை ... ... ... 80

12. கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் பரவும்படி வேதநாயக சாஸ்திரி செய்த ஊழியம் ... ... 107

13. வேதநாயக சாஸ்திரியும் ஜாதி பேதமும் ... ... 110

14. வேதநாயக சாஸ்திரியாரும் சைவ சமயக் கருத்துக்களும். 120

15. தமிழ் இசையும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரும் ... 122

16. சாஸ்திரியாரைப்பற்றிய கிளைக் கதைகள்... ... 129

17. இறுதியுரை... ... ... ... 134

உடன் கலந்து வாசித்த புத்தகங்கள் ... ... 136

## சித்திரப் படங்களின் அட்டவணை

சங். சி. எப். சுவார்ச்சு ஐயர் ... ... ... 6

வேதநாயக சாஸ்திரியும், சுவார்ச்சு ஐயரும் அடங்கிய ஓர் கற்சித்திரம் (Lithograph) ... ... 14

H. H. சரபோஜி மகாராஜா ... ... ... 49

ஷை மகாராஜாவின் ஸ்படிக சிலை ... ... 54

சங். வேதநாயக சாஸ்திரியார் ... ... ... 70

வேதநாயக சாஸ்திரியாரின் சமாதி ... ... 75

நோவா ஞானதிக்க சாஸ்திரியார் ... ... 76

எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் ... ... 77

சங்கை சேம். வேதநாயக சாஸ்திரியாரும் அவர்கள் பிள்ளைகளும் ... ... ... 79

சுவிசேஷ பிரபல்லிய மண்டபம், தஞ்சாவூர் ... ... 108

# பாயிரம்

## I

வேதநாயக சாஸ்திரியார் தோன்றி வசித்தது கிறிஸதாப்தம் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளாம். அக்காலத்தில் சீர் திருத்தமடைந்த கிறிஸ்து மார்க்கத்தின் (Protestant Christianity) பரவுதல் தென்மார்க்கு (Denmark) அரசனின் பேரீகையினாலும், இங்கிலாந்தில் S.P.C.K. சங்கத்தாரின் பண உதவியினாலும் அலுவல் பெற்ற செர்மானிய (German) மிஷனெரிமார்கள் கைவச மிருந்தது. எனவே சாஸ்திரியார் அறிந்து பழகின மிஷனெரிமார்கள் பெரும்பாலும் சேர்மானியார். இவர்களிடம் பழந்தமிழ் கிறிஸ்தவரா னோர் பெற்ற உபதேசம் லுத்தர் (Martin Luther) போதகத்தையும் கொள்கைகளையும் சார்ந்தது. சாஸ்திரியாரும் லுத்தர் போதகத்தை அடிப்படையாகக்கொண்ட வேதாகம சாஸ்திரத்தை (Theology) ஆழ்ந்தறிந்து கற்றவரானபடியால் பிற்காலத்தில் உத்தியோகம் வகித்த ஆங்கில குருக்களுடன் இவருக்கு ஒற்றுமையும் இயைபும் ஏற்பட வில்லையென்பது ஒருதலை.

மேலும் இவர் பெப்ரிசியூஸ் (Fabricius) ஐயர் மொழிபெயர்த்த வேதாகம புத்தகத்தை (விவில்விய நூல்) குடும்ப ஆராதனையிலும் தனி செபத்திலும் நெடுநாள் பயன்படுத்தியவர். இதில் கடவுளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் சொல், 'பராபரன்'. 1835-ம் ஆண்டில் Dr. Henry Bower இம்மொழிபெயர்ப்பில் பழுதுகள் உண்டென வேறொரு மொழிபெயர்ப்புக்கு ஒழுங்குகள் செய்தபொழுது, லுத்தரன் சபையாரும் சாஸ்திரியாரும் இணங்கவில்லை. இதனுக்கு விரோதமாக, 'புதுத்திருத்துதலின் கூக்குரல்' என்ற நூலை வெளிப் படுத்தினார். இவரின் செய்கைகள் பல அக்காலத்து ஆங்கிலேய மிஷனெரிமார்களுக்கு மாறுபாடாகக் காணப்பட்டன.

வேதநாயக சாஸ்திரியார் இந்துக்களின் வேத நூல்களையும் மற்ற நூல்களையும் தம்முடைய புத்தக நிலையத்தில் வைத்துக்கொண்டு படிப்பது வழக்கமாம். ஆராய்ச்சிக்கும் கலையின் விர்த்திக்கும் இவ்வப் பியாசம் மிகவும் வேண்டியதொன்றாம். அச்சில் பதித்த புத்தகங்கள் அக்காலத்தில் அரும்பொருளானவையாதலின் இவை பெரும்பாலும்

சுவடிகளாய்த்தான் (palm leaves bound together) இருந்தன. குருத்தோலையின் மிசை எழுத்தாணிகொண்டு எழுதப்படித்தவர் சாஸ்திரியார். கலைஞான விருத்திக்கு இக்காலத்தில் அனுகூலமாக விருக்கும் வசதிகள் அவருக்குக் கிடைத்ததில்லை. தாம் இயற்றிய பிரபந்தங்களை அச்சிட சாதனமுமில்லை. மிஷனெரிமார்களின் தயவினாலும் சிபாரிசினாலும் S.P.C.K. Tract Society* இவருடைய பிரபந்தங்களைச் செலவின்றி அச்சிட்டு வெளியிட்டார்கள். மேலும், எழுத்தாளர்களைக்கொண்டு கையெழுத்தாலும் சில நூல்களின் படிகளை ஆயத்தப்படுத்தி விலைக்குக் கொடுத்ததுண்டு.

## II

வேதநாயக சாஸ்திரியார் காலத்தில், தஞ்சாவூரும் அதையடுத்த நாடும் மகாராஷ்டிர அரச வம்சத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தது. மைசூர் நாடு திப்புசுல்தான் (Tippu Sultan) ஆளுகைக்குட்பட்டிருந்தது. ஆங்கிலேய கிழக்கு இந்திய கம்பேனியார் (The English East India Company) இந்து தேசத்துடன் வர்த்தகஞ் செய்துவருவாராயினர். சாஸ்திரியார் காலத்தில் நடந்த முதன்மையான சம்பவங்களாவன:—

1. உடன்கட்டை யேறுதல். இந்தக் கொரேமான ஆசாரம் 1828-ம் வருஷம் Lord William Bentinck உடைய முயற்சியால் ஒழிக்கப்பட்டது. J. A. டுபோயி (Abbe J. A. Dubois) என்ற கத்தோலிக் மிஷனெரி தான் எழுதின 'Hindu Manners and Customs' என்ற புத்தகத்தின் 361–367-ம் பக்கங்களில் இரண்டு திருட்டாந்தங்களை விஸ்தரித்திருக்கிறார். அவையில் ஒன்று தஞ்சாவூர் மகாராஜா Ameer Singh 1801-ம் வருஷம் மரணமடைந்தபோது, (பிராமண புரோகிதர்கள்) அவருடைய நான்கு இராணிகளில் இரண்டு பேரைத் தெரிந்தெடுத்து, மகாராஜாவின் பிரேதத்தோடு (உடன்கட்டை ஏற்றுவித்ததாக) சகல விவரணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரியாரின் பிரபந்தங்களில் உடன்கட்டை யேறுதலைக் குறிப்பிட்டிருக்கிறதாகத் தெரியவில்லை.

2. மைசூர் யுத்தம். ஹைதர் ஆலி (Hyder Ali) 1782-ம் வருஷம் மரித்தார். பின்பு அவர் குமாரர் திப்பு சுல்தான் ஆங்கிலேய கிழக்கு இந்தியா கம்பேனியாருடன் யுத்தஞ் செய்து தன்னுடைய இராஜ்யத்தை இழந்தார்.

---

* The present Diocesan Press, Vepery, Madras.

3. **வேலூர் பட்டாளக் கலகம் (1806).** திப்பு சுல்தானுடைய குமாரர்களைக் கம்பேனியார் வேலூரில் சிறையில் வைத்திருந்தனர். இவர்களினேவுதலால் கம்பேனியாருடைய சிப்பாய்கள் கலகம் பண்ணினார்கள். இது சீக்கிரத்தில் அடக்கப்பட்டு முடிவுக்கு வந்தது.

4. **இந்து மகா பட்டாளக் கலகம் (1857).** வட இந்தியாவில் நடந்தது.

5. 1858-ம் வருஷம் இந்து தேசம் கம்பேனியார் ஆதீனத்திலிருந்து மகா இராணியான 'விக்டோரியா' (Queen Victoria) சக்கரவர்த்தினியினது ஆளுகைக்குட்பட்டது. வேதநாயக சாஸ்திரியின் ஆயுட்காலத்தில் கடைசி 6 வருடங்கள் மாத்திரம் விக்டோரியா சக்கரவர்த்தினியின் ஆட்சியில் பங்கு பெற்றது.

மேற்கூறிய சரித்திரவரலாற்றான் ஏற்படுகிறதென்னவெனில், சாஸ்திரியார் வதிந்த உலகம் தற்காலத்து மக்களுக்கு எளிதில் விளங்காததொன்று. தஞ்சாவூர் மராட்டிய இராஜாவின் அதிகாரத்திற்குட்பட்டு, சேர்மானிய குருக்களினது லுத்தரன் கொள்கைகளையும் உபதேசங்களையும் கேட்டு அறிந்துகொண்டு, விசுவாச பலத்தினால் அவற்றைக் கொண்டாடியும், கிறிஸ்து மார்க்க சத்தியங்களையே புகழ்ந்துபோற்றியும், இந்து மார்க்கத்தின் விபரீதங்களை யிகழ்ந்து தூற்றியும், சாஸ்திரியார் நெடுநாள் வாழ்ந்தார் என்க. இவ்விதமாக அன்னவர் ஆத்ம சரீர வைதிக லௌகிக கட்டநட்டங்களிலும், தம் பக்தி குறைவுபடாமல், தமக்குற்ற இடையூறுகளையெல்லாம் அறவே சகித்து, தம் விசுவாச வாழ்க்கையை நிறைவேற்றினதும், முடித்ததும் ஓர் அற்புதம் என்றே நம்மனோர் உணரற்பாலது.

## III

வேதநாயக சாஸ்திரியார் காலத்தில் (1774-1864) புறத்தேசங்களிலிருந்து இந்து தேசத்திற்கு வந்தவரும், இத்தேசத்திலே தோன்றினவருமான சில தலைமைபடைத்தோரை இவண் சுருக்கமாகக் குறித்துக் கூறுதும்.

1. Father C. F. Schwartz (1726-1798). இவருடைய சரித்திரம் Jesse Page, F.R.G.S., என்ற ஆசிரியரால் 1921-ம் ஆு வெளியிடப்பட்டது. இவர்தான் வேதநாயக சாஸ்திரியாரை 12 வயதில் திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்குக் கொண்டுவந்து தன்னுடைய சுவிகார புத்திரனைப்போல வளர்த்து, தேவபக்தியையும்

கல்வியையும் மிக்க அவருக்குப் புகட்டினவர். இவர் தென் இந்தியாவில் மிஷனெரி ஊழியம் நிறைவேற்றின காலம் 48 வருடங்களாம் (1750–1798). இதில் 25 ஆண்டுகளைத் தஞ்சாவூரிலே கழித்து அவ்வூரிலேயே பரகதி அடைந்தார்.

2. ஸ்ரீ தியாகராஜா (1751–1847). சாலா விழுப்பமெய்திய இச்சங்கீத வித்வான் சாஸ்திரியாரினது ஏககால வாசி. இவரை இப் புத்தகத்தின் சில அத்தியாயங்களில் குறிப்பிட்டிருக்கிறது.

3. William Carey (1762–1834). இவர்தான் இந்தியாவுக்கு வந்த முதல் ஆங்கிலேய மிஷனெரி. 41 ஷூ வங்காள ராஜதானியில் கிறிஸ்தவ ஊழியம் செய்தவர். வேதாகம புத்தகத்தை வங்காள பாடையில் மொழிபெயர்த்தவர். சாஸ்திரியாரைப்போலவே கடவுளைச் செபத்தினாலும் விசுவாசத்தினாலும் விடாப்பிடியாய்ப்பற்றி நெடுநாள் வாழ்ந்தவர்.

4. The Abbe J. A. Dublois (1765–1848). இவரோர் பிரென்சு (French) கத்தோலிக்க மிஷனெரி. 1792-ம் ஷூ முதல் 1823-ம் ஷூ வரை விசேடமாக மைசூர் இராஜ்யத்தின்கட் கிறிஸ்து மார்க்கத்திற்கு இந்துமக்களைச் சேர்க்க, இந்து சந்நியாசி உடையைத் தரித்துக்கொண்டு வெகு முயற்சி எடுத்தவர். அக்காலத்தில் நடைபெற்ற இந்துமத ஆசாரங்களையும் சடங்குகளைப்பற்றியுமொரு சவிஸ்தாரமான நூல் பிரென்சு பாடையில் எழுதினவர். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

5. Rajah Ram Mohan Roy (1774–1833). சாஸ்திரியார் பிறந்த வருஷத்திலேயே இவரும் வங்காள ராஜதானியின்கட் பிறந்து, இந்துமார்க்கத்தின் ஆசாரங்கள் கொள்கைகள் பல விகற்பமானவைகளெனப் பிரசங்கித்து, இந்துமார்க்கத்தைச் சீர்திருத்த பெரும் பிரயாசையெடுத்தவர். பிரதானமாக 'உடன்கட்டை யேறுதல்' இந்து சாஸ்திரத்திற்கு விரோதமான சடங்குச் செயல் என வாதித்து, அதை நிறுத்துவதற்காக இங்கிலாந்துவரை சென்று முயற்சி எடுக்கா நின்றவழி, அவண் மரணமடைந்தனர்.

6. Henry Martin (1781–1812). ஆங்கிலேய மிஷனெரி. இவர் வங்காள தேயத்தில் கொஞ்சகாலம் வேலைசெய்து, 'பாரசீக பாடையையும் (Persian) அரபி பாடையையும் (Arabic) செவ்வையாய்க் கற்றபின் புதிய ஏற்பாட்டை இப்பாடைகளில் மொழிபெயர்த்தனர். பின்னர் தானே பாரசீகம் சென்று, Teheran நகரத்திலிருந்த பாரசீக அரசனுக்குப் பாரசீக புதிய ஏற்பாட்டின்படி ஒன்றை பிரதம மந்திரியின் மூலமாகக் கொடுத்தனுப்பினர். Tokat என்ற

வோர் நகரத்தில் திடீரென மரித்து, அர்மீனிய கிறிஸ்தவர்களால் அவ்வூரிலே அடக்கம் பண்ணப்பட்டார்.

7. ஸ்ரீ S. வேதநாயகம் பிள்ளை, District Munsiff, Mayavaram (1823–1889). தமிழ்க் கீர்த்தனைகளையும், கவிகளையும், விநோத கதைகளையும் இயற்றிய கத்தோலிக் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர். வேதநாயக சாஸ்திரியார் இவரென பிழைபட்ட கருத்து இற்றை ஞான்றும் நிலவுகின்றது.

8. ஸ்ரீ H. A. கிருஷ்ணபிள்ளை (1827–1900). இவர் சாஸ்திரியார் உதித்த திருநெல்வேலி நாட்டைச் சேர்ந்தவர். 'இரக்ஷணிய யாத்திரிகம்', 'இரக்ஷணிய மனோகரம்' முதலிய சிறந்த காவியங்களை இயற்றி 'கிறிஸ்தவக் கம்பர்' என்ற கீர்த்திப் பெயர் பெற்றவர். சாஸ்திரியார் மரித்தபோது, கிருஷ்ணபிள்ளைக்கு 37 வயது. விவேகமடைந்த பருவமானபடியினாலும், வேளாள குலத்தினரானபடியினாலும், சாஸ்திரியாரைப்பற்றி கேள்வியுற்றிருப்பார்.

9. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சா (1836–1885). இவர் வங்காளத்தில் தோன்றினவோர் இந்து பக்தன். இந்து, கிறிஸ்து, மகம்மது மார்க்கங்களின் கொள்கைகளை யெல்லாமொன்று திரட்டி, எல்லா மதங்களும் ஒரே கடவுளைத்தான் காண்பிக்கிற தென்றும் மார்க்க பேதங்களால் ஆத்மாவுக்குப் பிரயோசனமில்லையென்றும் சாதித்தவர்.

10. The Rev. G. U. Pope. இவர் 1837-ம் ஆு தென் இந்தியாவுக்கு வந்து வெஸ்லியன் மிஷனெரியாக வந்து 1843-ம் ஆு இங்கிலாந்து சபையைச் சேர்ந்து 1882-ம் ஆு வரையில் சுவிசேஷ ஊழியத்தைச் சென்னை இராஜதானியில் நடத்தினவர். தஞ்சாவூரிலே எட்டு வருஷ காலமாக (1850–1858) மிஷனெரியாக வேலை பார்த்தார். வேதநாயக சாஸ்திரியாருக்கும் அவருக்கும் ஒற்றுமையில்லாமையின் அநேக மனத்தாபங்கள் நேரிட்டன. அவற்றைச் சாஸ்திரியார் எழுதின 'உபத்திரா பத்திரம்'* என்ற நூலில் வாசிக்கலாம். G. U. Pope ஐயர் தமிழ் நூல்களில் ஆற்றல் வாய்ந்த ஒண்மையாளரானதால் சாஸ்திரியாரை மதித்து, கேண்மையைப் பேணி இருப்பார் என்று நாம் இயற்கையாய் எதிர்பார்க்கக் கூடியதற்கு நேர் விரோதமாக சம்பவங்கள் நடந்தன. இதற்குத் தலைமையான காரணங்கள் யாவை யெனில், அவை பின்வருமாறு:—

(i) வேதநாயக சாஸ்திரியார் பாராட்டின சாதி வித்தியாசம்;

(ii) கோவிலில் சாஸ்திரியார் இயற்றிய கீர்த்தனைகளை, அவரின் பாடகர்கள் பாடக்கூடாது என்று போப்பு ஐயர் தீர்த்தது;

* இந்நூல் அச்சிடப்படவில்லை.

(iii) மேலும் இவர் கீர்த்தனங்களின் கடைசி செய்யுள்களில் தன் பெயரை அமைத்திருக்கிறபடியால், அச்செய்யுள்களை மாத்திரம் சபையார் ஆராதனையில் பாடக்கூடாதென்று போப் ஐயர் சட்டம் ஏற்படுத்தினது.

இங்ஙனம் சாஸ்திரியார் தன் வயோதிப காலத்தில், போப் ஐயரினது இசைவு கெட்டு வாதிக்கப்பட்டார். 'சான்றோர் சான்றோர் பலர் ஆக', 'நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்ற நீதிமொழிகளுக்கு இசைவாக இவர்களிருவரும் இணங்கி நட்பை பாராட்டியிருக்கலாம். அதனுக்கு எதிரிடையாக நடபடிக்கைகள் இருந்தது மிக்க விசனிக்கத்தக்க தொன்றும். G. U. Pope ஐயர் 1882-ம் ஞு இங்கிலாந்திற்குச் சென்று 1903-ம் ஞு ஆங்கு மரித்தார். மரிக்குமுன் மாணிக்க வாசகர் இயற்றிய திருவாசகத்தைத் திறம்பட செய்யுள் நடையில் மொழிபெயர்த்து நீடிசை பெற்றனர்.

C. F. சுவார்ச்சு ஐயர் 1708-ம் ஞு பரகதியடைந்தபின், J. C. Kohloff ஐயர் தஞ்சாவூர் சபையைத் தன் ஆயுட்காலம் முற்றும் (1844-ம் ஞு) கண்காணித்து வந்தார்; இவருக்குப்பின் வந்த மிஷனெரிமார் Schmitz, Brotherton, G. U. Pope, Percival, Guest, Kearns, Dr. Henry Bower முதலியவர். J. C. Kohloff ஐயர் பரகதியடைந்து 20 வருடங்களுக்குப்பின் வேதநாயக சாஸ்திரியார் முக்தியடைந்ததினாலே, இவருடைய உயிர் வாழ்க்கைக் காலத்தில் இவர் மனத்தை ஈர்த்து இவருக்குள் கிரியை செய்த ஐரோப்பிய மிஷனெரிமார் C. F. சுவார்ச்சு ஐயரும் J. C. Kohloff ஐயருமாகிய இருவர் மாத்திரமே!

மேற்கூறிய ஏககால வாசிகளில் ஒருவராவது, சாஸ்திரியார் ஆயுளுக்கு (91 வயது) சீவித்ததில்லை. தியாகராஜா 88 வயதில் மரித்தார். William Carey மரித்தபோது வயது 73. சங். C. F. சுவார்ச்சையர் மரணம் 72-ம் வயதில். நீடிய ஆயுள் காலத்தில், இவருடைய அன்றாடக உணவிற்கு யாதொரு குறைவுமின்றி மராட்டிய ராஜ வம்சம் தன்னைக் கைநெகிழவிட்டாலும், இவர் குலதெய்வமாக வேற்றுக்கொண்ட 'ஏசுராஜா', இவரை அற்புதமாகக் காப்பாற்றி வந்தார் என்க.

## IV

1864-ம் ஞு சங். பாக்கிய நாட்டையர் குமாரன் தேவசகாயம் பிள்ளை, வேதநாயக சாஸ்திரியாரின்பேரில் பாடின சரம கவியின் முதல் 21 வரிகளாலும், பின்னும் மற்ற சான்றுகளாலும், வேதநாயக சாஸ்திரியார் திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்கு 12 வயதில்

கொண்டுவரப்பட்டு சுவார்ச்சு ஐயர் ஆதீனத்தில் வளர்ந்தார் என்பது துலாம்பரமாக விளங்குகின்றது. இங்ஙனமிருந்தும், ஆசிரியர்கள் எழுதும் C. F. சுவார்ச்சு பாதிரியாரின் சரித்திரத்தின்கட் அவருடைய சிறந்த மாணவனுன வேதநாயகத்தைக் குறித்து ஒரு வரியாவது காண்பதரிது. இத்தவிர்ப்பொரு பழுதென்றே கருதற்பாலது. எனெனில் இது வேதநாயக சாஸ்திரியின் பெற்றிக்குக் குறைவுண்டாக்குகிறதுமன்றி, சுவார்ச்சு ஐயருடைய ஊழியத்தின் பூரண பலனை மறைக்கின்றது. கவிச் சக்கரவர்த்தியென்று புகழப் பெற்றவோர் இந்திய கிறிஸ்தவர், ஐயர் விரும்பித் தெரிந்தெடுத்ததினுலும், கல்வி பயிற்றுவித்ததினுலும், அவர் பல்நாள் உழைத்த வட்டத்திலேயே முதலாவது கடவுளுக்கு மாட்சியாகவும், இரண்டாவது தனக்கே சிறப்பாகவுந் தோன்றிப் பிரகாசித்த விடயத்தை ஐயர் சரித்திரத்தில் ஒரு வரியிலாவது எடுத்துக் காட்டாமற்போனது, அந் நூல்களை இயற்றியவர்களின் ஆராய்ச்சிக் குறைவும் குற்றமுமென்றே சொல்லத் துணிவேம்.

தஞ்சாவூர் மிசியோனுக்கும் பாளையங்கோட்டை மிசியோனுக்கும் ஐயர் தம் மரண சாசனத்தின் வழியாய் பொருளுதவி செய்தார். தாம் படித்துக் கொடுத்து, தம் உபதேசம் கேட்டு உயர்ந்த வேதநாயக சாஸ்திரியின் வழியாக அருள் உதவிசெய்தார். கர்த்தனை நம்முடைய அன்னை மொழியில் நமக்கு சுயமாய் ஏற்பட்ட நடையிலும் இராகத்திலும் போற்ற முதன்முதல் வழி காட்டினவர் சுவார்ச்சு ஐயரின் சீடனுன வேதநாயக சாஸ்திரியே!

## V

Fabricius ஐயர் சேர்மானிய பாடையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த ஞானப்பாட்டுகளின் மாட்டு (Hymns), வேதநாயக சாஸ்திரியாருக்கு பெரும் பற்று இருந்ததாகத் தெரியவருகிறது. இற்றை ஞான்று சிலர் ஞானப்பாட்டுகள் ஐரோப்பியருக்குரியதென் றும், தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக் கேற்றதல்லவென்றும் பிழைபடக் கருதுகின்றுர்கள். திருஷ்டாந்தமாக, Dr. S. எசுதாசன்* பின்வருமாறு எழுதியிருக்கின்றுர்: 'கிறிஸ்தவ கோவில்களில் மேல் நாட்டுப் பாடல்களை, இந்திய ராகங்கள், யாப்பிலக்கிய போக்குகள் முதலியனவற்றை அறவே அசட்டைசெய்து, விகார முறைமையாய் மொழிபெயர்த்துப் பாடும் 'ஞானப்பாட்டுகள்', 'சுவிசேஷ கீதங்கள்' என்னும் பலவகை பாட்டுகள் பால்ய பிராய முதல் அவை

---

*For a full discussion of the point of view of Dr. Jesudasen the reader should refer to the Preface of ஆசிரம பாமாலை. 1937 Edition.

களில் பழகிவிட்ட கிறிஸ்தவர்களுக்கு இன்பமாய் போய்விட்டாலும், நமது தேசத்தினருக்குக் கோர சப்தமாகவே தொனிக்கும். நமது தேசத்தில் மெய்யாகக் கிறிஸ்து பகவான் அந்நியரல்லர். சொந்த மானவரே யென்று சாட்சி பகர்வது கிறிஸ்தவர்களின் பிரதான வாஞ்சையென்றால் இப்படிச்செய்வது தகுதியோ? நமக்கு எழுப்புதலா யிருந்துவிட்டாலுங்கூட மற்றவர்களுக்கு இடையூறா யிருக்கும் முறைப்படி செய்வது ஆத்மீக தன்னயமாகிவிடுமல்லவோ? நமது ஆராதனை போக்குகள் நமது தேசத்தினர்க்கு 'அந்நிய பாஷை போலாகிவிட்டதல்லவோ?'

ஆங்கிலேய இராகங்களில் தமிழ்ச்சொற்களைக் கோத்து பாடு வது சரியாவென்று ஆராய்ந்ததில், சில விழுமிய கருத்துக்கள் அகப் பட்டன. 'ராஜ ராஜ பிதா, ௸', 'மைந்தன் பதத்தைத் துதிக் கிறோம், ௸' என்ற இரண்டு கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் கீர்த் தனங்களை, வேதநாயக சாஸ்திரியார் English band tune-இல் அமைத்து பாடியிருக்கிறது வெளிப்படை. இரண்டாவது கீர்த்தனை யின் ராகத்தை, Band* வழியாகத் தொனிக்கிற ஒலியைப்பேணி 1832-ம் ௵ எழுதின சரணம் பின்வருமாறு:—

4 தரம் } டம் டம் டடிற்றி டடிற்றி டாம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி

2 தரம் } டம்டம் டாம் டடிற்றி டம்டம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி†

இவைகள் தமிழ் யாப்பிலக்கணத்திற்கு இசைவாக மகிழ்ச்சிபட அமைக்கப்பெறவில்லையோ? தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு அறி முகமான 'ஆதி தேவ பாலகா நமோ, நமோ, ௸'‡ என்ற கிறிஸ்மஸ் கீர்த்தனையும்;

'There were three crows that sat on a tree
Billy magee magaw!'

என்ற பகடியான (Ballad) இங்கிலீஷ் பாட்டின் இராகத்தில் இசைக்கப்பெற்றிருக்கிறது. தமிழ் கீர்த்தனையைத்தான் சிறுவயதில் முதலாவது நான் கேட்டுப் பாடினது. பிற்பாடுதான் அதே இராகத்தி

* இங்கிலீஷ் வாத்தியத்தைக் குறித்து ஓர் இந்து வித்வான் மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கும் வியாசத்தை, 'வினோதரச மஞ்சரி பக்கம் 31–40 வரை காண்க.

† இதை இசைத்த காயகஸ்தர் இன்னார் என்று எனக்குத் தெரியவில்லை.
‡ இது ஆங்கிலமுமல்ல, தமிழுமல்ல.

லோர் இங்கிலீஷ் பாட்டு இருக்கிறதென தெரியவந்தது. இராகம் இங்கிலீஷ் ஆகவிருக்க ஆங்கிலேய சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம். Dr. S. ஏசுதாசனவர்களின் வழக்கு இவ் உதாரணங்களால் அற்றுப்போகிறதைக் காண்மின்! ஞானப் பாட்டுகளை (Hymns) தமிழில் இங்கிலீஷ் ராகத்திற்கு இசைவாகப் பாடப்பட்டவையென நாம் ஏற்றுக்கோடல் பொருந்தும். Dr. S. ஏசு தாசன் அவர்களுடைய கடைப்பிடிக்கு இசைவாகத்தான் வேதநாயக சாஸ்திரியார் 35-ம் ஞானப்பாட்டை,* 'இம்மட்டும் சீவன் தந்த, ஓ' என்ற கீர்த்தனை வடிவமாக மாற்றினார். இவ்வாறு ஒவ்வொரு ஞானப்பாட்டையும் கீர்த்தனையாக மாற்ற பெரு முயற்சியும் பயிற்சியும் வேண்டும். மேலும், வான்பெற்றோர் யதேச்சையாய்ப் பாடித் துதிப் பது இவ்வித பயிற்சிகளினால் குறைவுபடுமல்லவோ? வேதநாயக சாஸ்திரியார் விவேகத்தை அனுசரித்து மேற்கூறிய அப்பியாசத்தைப் பின்தொடரவில்லை.

ஞானப் பாட்டுகளின் இராகம் தமிழர் செவிக்கு விகற்பமாகத் தொனிக்குமென்றால், புதுப் புதுக் கீர்த்தனைகளை இசைத்தவரான சாஸ்திரியாருக்கு அவைபாட்டு பேரவா ஏற்பட்டது என்ன காரணத் தினாலென்று கூறவொல்லுமோ! எனக்குத் தெரிந்தபடி எந்த கீர்த்தனையின் இராகமும் சப்த சரங்களுக்குள் அடங்கும் குணமே. English tunes வேறென்றும் தமிழ் இராகங்கள் மற்றவையென்றும் நாம் வகிர்த்தல் ஒல்லும்வகையல்ல; நியாயமுமில்லை.

ஞானப்பாட்டுகளின்கட் காணப்படும் ஆத்ம எழுப்புதலும், உயிரும், உணர்வும் யாவருக்கும் ருசிக்கும் என்ற மெய்மையைப் பின் வரும் கதை விளக்கும்:

'சில வருஷங்களுக்கு முன்னே, ஒரு ஐயர் சென்னைப்பட்டணத் தைச் சார்ந்த சூளைக் கடைத்தெருவில் பிரசங்கம்பண்ணிக்கொண் டிருக்கிறதை ஒரு பண்டாரம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து, பிரசங்கம் முடிந்தபின்பு அந்த ஐயருடைய வீட்டிற்குப் போய் தான் கேட்ட பிரசங்கத்தின் பொருளை விளக்குகிற ஒரு நல்ல நூல் தன்னிடத்தில் உண்டென்று சொல்லி, உட்கார்ந்து, காவிச் சீலை யினால் வெகு பத்திரமாய்க் கட்டப்பட்டிருந்த ஒரு புத்தகத்தை அவிழ்த்துக் காண்பித்து, தான் அதிலிருந்து மனப்பாடம்பண்ணி யிருந்த வாக்கியங்களை விநயத்தோடு பாராயணம் பண்ணினான். ஐயர் அந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்து, அதற்குப் பெயர் முதலானவை யடங்கிய முகப்பேடுகள் இல்லாதிருந்தும் அது பெப்ரிசியுஸ் ஐயர் ஞானப்பாட்டுப் புஸ்தகம் என்று அறிந்துகொண்டு, 'இந்தப் புஸ்தகத்

---

* Translation by Fabricius.

திற்குப் பெயர் என்ன?' என்று பண்டாரத்தைக் கேட்டார். புஸ்தகத்துக்குரிய சரியான பெயர் அவனுக்குத் தெரியாமையால், 'இது நெஞ்சுருக்கி நூல்' என்று அதற்குப் பெயரிட்டுச் சொன்னான். அந்தப் பெயர் பெப்ரிசியஸ் ஐயரின் ஞானப்பாட்டு புஸ்தகத்துக்குத் தகுந்த பெயர்தான் என்று அதின் பொருளை உணர்ந்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள். (Dr. பௌவர் ஐயருடைய 'கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்', 383, 384-ம் பக்கங்கள் பார்க்க).

இவ்வாறு இந்துக்களும் அவாக்கொள்ளத்தக்க பாட்டுகளை விலக்கிவிட்டு கீர்த்தனைகளையே கோவில் ஆராதனைகளில் கையாண்டால் கிறிஸ்து மார்க்கம் இந்துக்களால் உகந்து எடுத்துக்கொள்ளப்படுமோ? இஃதுதானோ இரு சமயங்களுக்கும் ஒற்றுமையுண்டாக்கக்கூடிய துணைக் கருவிகோல்! இந்து மார்க்கத்தில் கண்கூடாகக் காணப்படும் விக்ரக பூஜையல்லவா இந்துக்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவுதற்கு இடையூறாக விருக்கிறது. கிறிஸ்து மார்க்கத்தின் கொள்கைகள்: (1) இயேசுநாதரே உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தவர். (2) பாவமன்னிப்பு. (3) நித்திய சீவன். (4) பரிசுத்த ஆவி முதலியன அவர்களால் வெறுக்கப்படுவன. நமக்கும் இந்துக்களுக்கும் இராசியுண்டாவது ஒல்லும் வகையன்று. கிருஷ்ணுவுக்கும் கிறிஸ்துவுக்கும் ஒருகாலும் ஐக்கியம் அமையாது. இத்தவறுதலான உபதேசத்தை நம்பி நாம் ஐரோப்பியர் இயற்றிய ஞானப்பாட்டுக்களைப் புறக்கணித்துத் தள்ளிவிடுவது கிறிஸ்து மார்க்கத்தின் முன்னேற்றத்திற்கு இடந்தராது. ஞானப்பாட்டுகள் தவிர சுவிசேட கீதங்களும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் நன்மையைப் பெருக்குகின்றன. நம்முடைய ஆராதனைகளுக்கும் இந்து பூசைகளுக்கும் தீர்மானத்துடன் நிரம்ப வித்தியாசம் அமைத்துக்கொள்வது என்றும் நன்றுமென்க. இவ்வியல் ஞாலத்தின் இரட்சகரான இயேசுகிறிஸ்துவுக்காகவும், அவருடைய பாடுகளின் புண்ணிய பலன்களுக்காகவும் புறமதஸ்தர் நம்முடைய சபையில் புகவேண்டுமேயொழிய, வேறொன்றும் அவர்களைக் கவர்ந்துகொண்டு கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவும்படி ஏதுகரமாயிருக்குமானல் அத்தகைய கிறிஸ்தவர்களினது விசுவாசமும் பக்தியும் பதராகுமே! தமிழ்க் கீதங்களுக்கு ஆங்கில மொழிகளைக் கற்பித்துப் பாடினல் சுவையும் இரசமும் அஃது அளிக்குமோவெனச் சோதிப்பது ஆங்கிலேயருடைய பொறுப்பு. அஃதைக் குறித்து நாம் துயருற வேண்டியதில்லை. திராவிட பாஷைகளுக்கும் ஞானப்பாட்டுகளின் இராகங்களுக்கும் யாதோவோர் யாப்பிலக்கணப் பொருத்தம் இருக்கின்றது. மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாடைகளிலும் ஞானப்பாட்டுக்களைப் பாடுகிறார்கள். இறுதியில்

எனக்குப் புலனானதென்னவெனில், இவ்விடயம் மறுகட்சியின் உண்மைக்குள் அடங்காது (The converse proposition need not be true). எதிர்மறைமுகத்தான் கூறுகின்றுழி அஃது உண்மை யல்லவென்பது.

பண்டாரம் ஞானப்பாட்டுக்களின் இராகங்களினால் ஈர்க்கப்படா மல், அவைகளின் உட்கருத்துக்களால் கவர்ந்துகொள்ளப்பட்டான். இவ்வகைய ஆத்ம இரட்சிப்புக்கு முதகண்ணாகிய பொருட்கள் அடங் கிய ஞானப்பாட்டுக்களின் பெற்றி இவ்வுதாரணத்தால் விளக்கமுறு கின்றது.

இக்காலத்தில் இருவிதமான கிறிஸ்துமார்க்கக் கட்சியார் முளைத் திருக்கின்றனர். ஒரு சாரார், கிறிஸ்துமார்க்க ஆராதனையை இந்துக் களுக்கு உகந்தவண்ணம் அவர்களுடைய பக்தி விநயத்திற்கேற்ப மாற்றவேண்டும் என்ப. மற்றொரு சாரார், ஜெபப் புத்தகம் (Book of Common Prayer), ஞானப்பாட்டுக்கள், குழாய் வாத்தியம் (Organ) முதலியன கிறிஸ்துமார்க்க ஆராதனைக்குத் தகுந்த சாதனங்க ளென்றும் அவைகள் விக்ரக பூசைக்கும் மெய்யான கடவுளின் ஆராதனைகளுக்கும் இருக்கும் வேற்றுமைகளைத் துலாம்பரமாகச் சுட்டிக் காட்டுகிறதென்றும் சாதிக்கின்றனர். இயேசு கீழ்நாட்டுக்கு முரியவர் (Oriental); மேல்நாட்டுக்கு முரியவர் (Occident). அற்று யின் அவருடைய உபதேசங்கள் யதேச்சையானவைகளும் சகல நற்குணமுடையவைகளானபடியான அவருக்குரிய வணக்கத்தை மட்டுப்படுத்தவொண்ணாது. நம்முடைய பாடல்கள் இந்து இராகங் களுக்கேற்ப இசைக்கப்பட்டாலென்ன! நம்முடைய கோவில்கள் இந்து ஆலயங்களைப்போல மாற்றப்பட்டாலுமென்னே! அவை இந்துக்களை நம் மார்க்கத்தைத் தழுவச் செய்யுமோ? நம் மார்க்கம் காண்பிக்கும் இரட்சணிய வழி பிற மார்க்கங்களில்லாதவோர் தனிச் சிறப்புள்ள மூலாதாரமுடையதானதால் நம்முடைய ஆராதனையின் இலக்கணப் போக்குகளையும் ஒழுங்குகளையும் விக்ரக பூசையுடன் ஒத்திணங்கச் செய்வது (Compromise) உசிதமல்லாதது காண்மின்!

## VI

தம்முடைய கீர்த்தனங்களின் இறுதி அடியில் தம் பெயரை 'வே. சா.' கிறுவியதினால் G. U. Pope ஐயருக்கும் அவருக்கு மொரு வழக்கு எழுந்தது. இதற்குச் சாஸ்திரியாரின் பிரதிவாதம் அவ ருடைய 'உபத்திரா பத்திரம்' என்ற புத்தகத்திலடங்கியிருக்கிறது. இவ்வழக்கின் விடயம், அச்சடிக்காத பாடல்கள் இன்னார் பாடினா ரென நாளடைவில் தெரியாமல் போகுமாதலின் கையொப்பத்துக்குச்

சமானமாய் கடைசி சரணம் பாடப்பட்டதென்பது. கிறிஸ்தவ காயகஸ்தர்கள் இவற்றை நாளில் வே. சா. வின் முன்னடக்கையைப் பின்பற்றி வருகின்றனர். இஃதை யொருவரும் பிழைபடக் கருதக் காணோம்.

## VII

சாஸ்திரியாரின் சுருக்கமான வரலாற்றை முதன்முதல் வரைந்து அச்சடித்தவரோர் இயுரேசியரான Dr. Henry Bower (1) பிற்பாடு அவருடைய தலைமகன் நோவா ஞானதிக்க சாஸ்திரியார் அவருடைய வரலாற்றை 1899-ம் ஞூ வெளியிட்டார். இப்புத்தகத்தின் படிகளைத் தற்காலம் காண்பதரிது. சாஸ்திரியாரின் வீட்டிலிருந்த ஒரேயொரு படியை என்னிடம் ஒப்புவித்தார்கள். இதை அடியாக வைத்துக்கொண்டுதான் விரிந்த ஆராய்ச்சி செய்து இந்த சரித்திரத்தைத் தொடுக்கலானேன். இந்நூலை வாசிக்கும் நண்பர் ஒருகால் நான் அவருடைய குடும்பத்தைப் பின்சந்ததியில் நேரிட்ட விவாக சம்பந்தங்களினால் சேர்ந்தவனானபடியினால் எனக்கு அதன் பிரசுரத்தில் சுய உரிமை யிருக்கிறதென்று ஐயுறலாம். ஆனாலதுமாத்திரம் மூலகாரணமாகாது. சாஸ்திரியாரின் குமாரர்களான (1) நோவா ஞானதிக்க சாஸ்திரியாரையும் (2) எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரையும் முகமுகமாய்ப் பார்த்தும், முறையே 'பெரிய தாத்தா', 'சின்னத் தாத்தா' வென்றழைத்தும் அவர்களுடன் பேசிப் பழகியுமிருக்கிறேன். சுமார் எட்டு வயதில் C. F. சுவரர்ச்சு ஐயரால் திறக்கப்பெற்று நிலைபெற்ற பாடசாலையில் (Primary School) கற்கின்றுழி சாஸ்திரியார் வீட்டில் சிறிதுகாலம் 'பெரிய தாத்தா'வின் ஆதீனத்தில் வளர்ந்து அவர்கள் தகப்பனார் ஏற்படுத்தின அன்றாடக குடும்ப ஆராதனையிலும் கிறிஸ்து சமய உற்சவங்களைக் கொண்டாடும் கிரியைகளிலும் நான் பங்கு பெற்றேன்.

என் தகப்பனார் ஜீ. தாவீதுபிள்ளை தென் இந்தியா இருப்புப் பாதை சேகரத்தில் உத்தியோகம் வகித்திருந்தபோது, தஞ்சாவூரில் ஒரு வருடத்திற்குமேல் வசிக்க நேரிட்டது. அக்காலத்தில் நான் சுவார்ச்சு ஐயர் பள்ளிக்கூடத்தில் திரும்பவும் கல்விபயின்று 1900-ம் ஞூ 'Lower Secondary Examination' இல் தேறினேன். அதே ஆண்டில் தானே தஞ்சாவூரில் தூண்களில்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட பரிசுத்த பேதுருவின் தேவாலயத்தின் பிரதிஷ்டை உற்சவ வாரத்திலே, Father W. H. Blake ஐயரின் ஆதீனத்தில், Bishop Henry Whitehead அவர்களால் திடப்படுத்தல் பெற்றேன். இவ்விழாவில் இந்து கோவில்களின் உற்சவங்களில் தூக்கப்படும் பிரமாண்டமான பட்டுக் குடையைப்போன்ற வொரு குடையை அச்சமயத்தில் கிறிஸ்துமதத்தை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த

வோர் இந்து தூக்கிப்பிடிக்க, அக்குடையின்கீழ் 'பெரிய தாத்தா' தன் பாடகர்களுடன் கோவில் சன்னதியில் நின்று பாடி பிரசங்கித்த தையும் கண்ணுற்று மகிழ்ந்தேன்.

பிற்பாடு 1907–1910-ம் ஆண்டுகளில் என்னுடைய தமக்கையார் Dr. Miss Gnanodayam David, தஞ்சாவூர் 'ராஜா மிராஸ்தார்' வைத்தியசாலையில் Lady Doctor ஆக உத்தியோகம் வகித்தபோது பன்முறை தஞ்சாவூருக்குப் போக வர நேரிட்டது. இவ்விதத்தில் நான் சிலகாலம் வளர்ந்த சாஸ்திரியார் வீட்டிற்குப் போக்குவரத்து நேர்ந்தபடியினாலும், தமிழ்க் கல்விக்கடுத்த நூல்களில் ஏற்கனவே நல்வேட்கையுமுண்டாயிருந்தபடியினாலும், 'வே.சா.'வின் வரலாற்றை ஆழ்ந்தாராய்ந்து அந்தக் கிறிஸ்து பக்தனுடைய புகழும் வெற்றியும் அழியாவண்ணம் இனிது தொடுத்து நல்வகையில் எழுதுமோர் பேரவா என்னை அறியாமலே, நான் B.A. பரீட்சை தேறினபின் 1910-ம் ஆண்டில் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டது. எனினும் 50-வது வயதில்தான் இந்தப் பெரு முயற்சியை இடையறாது எடுக்க சமயம் வாய்த்தது.

இறுதியில் இச்சரித்திரத்தை ஆராய்ச்சி செய்து திருத்துவதற்கும், இத்துடன் முன்பு அச்சில் வராத சங்கதிகளைக் கூட்டுவதற்கும் உதவி புரிந்த யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். சாஸ்திரியாரின் பேரனார் ஸ்ரீ E. ஞானேந்திரம் பிள்ளையவர்கள் தன்னுடைய தகப்பனார் திரட்டி பத்திரமாய் வைத்திருந்த அரிய நூல்களையும், பிரதிகளையும் நான் கேட்டபொழுது உடனுக்குடன் அனுப்பி உதவியதுமன்றி, கிளைக் கதைகளில் சிலவற்றை அறிவித்தும், இந்நூலை அச்சடிப்பதற் கேற்ற ஒழுங்குகள் செய்தும், சித்திரங்களுக்குத் தன்னிடமிருந்த அச்சுக்கட்டைகளைக் கொடுத்தும் மற்றும் பலவகைகளிலும் புரிந்த சகாயத்திற்குக் கடமைப்படி நன்றி செலுத்துகின்றேன். சாஸ்திரி யாரின் மற்றொரு பேரனார், ஸ்ரீ E. வேதபோதகம் பிள்ளையின் அரும் பிரயாசையால் சாஸ்திரியாரின் நூல்களில் சில அச்சடிக்கப்பட்டன. அவைகள் 'நூல்களின்மேல் மதிப்புரை' என்ற அத்தியாயத்தை உதவின. ஸ்ரீ S. பாலசிங்கம் நாடார் அவர்கள் நூன்முகம் எழுதி இந்தப் பிரபந்தத்தைப் பூரணப்படுத்தினதற்கு என்னால் பதில் ஈகை செய்தலரிது.

தஞ்சாவூர் சபையாரினிடையில் சாஸ்திரியாரின் நூல்கள் மூல மாய் சிறந்த ஊழியஞ் செய்துகொண்டு வரும் ஸ்ரீ வே. சேம். வேத நாயக சாஸ்திரியாருக்கு இந்த விருத்தாந்தத்திற்கு முன்னுரை வரைந்ததற்காக நன்றிமொழி கூறி இப்பாயிரத்தை முடிக்கின்றேன்.

பாளையங்கோட்டை,
21-3-1945

D. W. DEVANESAN.

உ

# தஞ்சாவூர் சுவிசேட கவிராய

## வேதநாயக சாஸ்திரியாரின்

# சுருக்கமான சரித்திரம்

## அத்தியாயம் 1

### பிறப்பும் வளர்ப்பும்

திருநெல்வேலியூரில் தொண்டர் சந்நிதித் தெருவில் அருணாசலம் பிள்ளை யென்ற பெயர் பெற்றவோர் இந்துக் காசுக்கடை வியாபாரி வசித்து வந்தனர் (1735–1799). இவர் கோழைபடா மேழிச் செல்வராய வேளாண் மாந்தர் குலத்தினர். இந்து மதத்தில் பெரிதும் வைராக்கியம் வாய்ந்தவர். வாலிபனாயிருந்தபொழுது, சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். உரோமான் உபதேசியாரொருவர், காசுக் கடையினது வியாபாரத்துடன், வந்த ஏழைகளுக்கு இவர் தாராளமாகத் தருமமுஞ் செய்கின்றதைக் கண்டு, வியந்து, இவரையணுகி, "ஐயா! நீர் தருமஞ் செய்கின்றது நல்லது தான். ஆனால் ஆண்ட பொருளையறியவேண்டும்.

> "ஆண்ட பொருளை யறியாதார் செய்ததவம்
> மாண்டமரத்துக் கணைத்த மண்"

என விளக்கமுறக் குறளொன்றைக் கூறினார். இச்செவி யறிவைக் கேட்ட அருணாசலம் பிள்ளை கிறிஸ்து மதத்தைச் சற்று ஆழ்ந்தறிய விழைந்து, ஒருநாள் அந்த உபதேசியாருடன் சென்று உரோமன் குருவைக் கண்டு பேசி, உபதேசங் கேட்டதின் பயனாக உரோமன் கிறிஸ்து மதத்தைத் தழுவிக்கொண்டார். "தேவசகாயம்" எனத் தன் இந்து பெயரையும் மாற்றித் தீட்சை பெற்றார்.

**வேதநாயக சாஸ்திரியின் தகப்பனார்**

சவரிராயன் செட்டி என்ற பிறிதொரு உரோமான் சபையைச் சார்ந்தவருடைய மகள் ஞானப்பூ அம்மாளை 1770-ம் ஆண்டில் தன்னுடைய 35-ம் வயதில் மணம்புரிந்தார். அவருக்கு 1774-ம் ஆண்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது; இவர்தான் வேதநாயக சாஸ்திரியார். எனவே சாஸ்திரியார் இந்துவாகப் பிறக்கவில்லை. தகப்பனுர் மாத்திரம் இந்துமத வீரனுக விளங்கினவர்.

பிறந்த மகவுக்கு உரோமான் குரு ஒருவரைக்கொண்டு 'வேதபோதகம்' என்ற பெயரை இட்டார்கள். ஆனுல் இப்பெயர் அக் குருவினது பெயராயிருந்தமையின் தேவ சகாயம் பிள்ளை மகனை* "வேதநாயகம்" என மாற்றி அழைத்துவருவாராயினர். அச்செல்வப் பெயர்தானே நெடுகிலும் வழங்கிவரலாயிற்று. மகனுக்கு ஐந்து வயதான பொழுது தேவசகாயம் பிள்ளை ஓர் இலக்கண உபாத்தியா யரைக் கொண்டு படிப்பைத் துவக்கினுர். அடுத்த ஆண்டில் ஞானப்பூ அம்மாள் இறந்துபோனுள். தாயை இழந்த மகனையும் இரு பெண்மக்களையும் மதுரையினருகிலுள்ள ஆனைக்குளத்தில் வதித்த அவர்கள் தாயைப் பெற்ற பாட்டனுர் வீட்டில் வளரும்படி தேவசகாயம் பிள்ளை ஒழுங்கு செய்தார். அவர்கள் மிகுந்த கரிசனத்துடன் வளர்க்கப் பட்டார்கள். செட்டியார் நிலபுலமுள்ளவரானமையின் பேரனுடைய படிப்பைச் சிறுதுணையும் கவனிக்க இடமில்லா மற் போயிற்று. ஆங்கு அவருடைய வேலையாளருடன் சில நாட்களாக ஆனிரைகளை மேய்த்துக்கொண்டிருந்தார். 1783-ம் ஆண்டில் சொக்கம்பட்டிக் காவலான புளியங்குடியி லோர் இந்து உபாத்தியாயரிடத்தில் மகனைக் கற்கச் செய்தார். அப்பொழுது இவருக்கு வயது ஒன்பது. ஆங்கு எண் ணும் எழுத்தும் கற்ருர்.

ஒருநாள் சாயுங்காலம் ஐந்து மணி வேளையில் திண்ணை யில் அமர்ந்திருக்குங்கால், ஆள் உயரமானவோர் சிலுவை

---

* இப்பெயரை முதன்முதல் வழக்கில் கம்ப ராமாயணத்தில் காண் கின்ருேம். சீதை இராமனை உருவகப்படுத்தி "வேதநாயகம்" என் றழைக்கின்ருள். சூளாமணிப்படலம் 25-ம் செய்யுள் பார்க்க. 'வேதநாயகம்' என்ருல் வேதங்கட்குத் தலைவன் என்பது பொருள்.

இவரது கண்ணுக்குத் திட்டமாய்த் தோன்றி அருகாமையில் விசும்பின்கண் மெல்ல அசைந்து வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாய்க் கடந்து போயிற்று. அது மேகங்களி னால் அமையப்பெற்று தோன்றின. சிலுவை அடையாளம் அன்று நேர்மையாய் மரத்தினுலுண்டுபண்ணப்பட்ட சிலுவையாயிருந்தது. இவரதை யுற்றுப் பார்த்துக்கொண்டிருக்கின்றுழி, கிட்டவிருந்த பையன் இவ ரைத் தட்டி, "நீ என்னடா, படியாமல் பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கிருய்?" என்று வினவினன். இவர் உரோமானி விருந்தமையின், அம்மதத்தினரின் வழக்கப்படி, "இதோ எங்கள் சுவாமி போகுது பார்! பார்!" என்று அவனுக்குச் சுட்டிக் காட்டினர். அச்சிலுவை அரை நாழிகை காணப் பட்டு மறைந்துபோயிற்று. வீட்டுக்கு வந்தபின் இவ்வரிய காட்சியைத் தன் பாட்டியாருக்கு அறிவிக்க, அவள் விம்மி தங்கொண்டு, "உண்மையாகவே அது சுவாமியினுடைய அடையாளம். கிடைக்கக்கூடிய தரிசனமல்ல. யாதோ வோர் அதிசயம் உன் காலத்திலே நடைபெறும்" என்ருள்.

**வேதநாயகங் கண்டவோர் சிலுவைக் காட்சி**

பின்னர் தேவசகாயம் பிள்ளை மறு தாரம் மணம்புரிந்து வந்து மகனைக் கூட்டிக்கொண்டு திருநெல்வேலி ஊருக்குச் சென்று ஆண்டுள்ளவோர் பள்ளிக்கூடத்தில் கற்க இவரை அனுப்பினர். தன் பள்ளி நண்பர்களுடன் ஒருநாள் வெள்ளத்திலே முழுகிப்போயிருந்த வெள்ளரித் தோட்டங் களுக்குள் நடந்து காய்களைத் தடவித் தடவிப் பறிக்கின்ற போது, ஆங்கு மறைந்துகிடந்த கிணற்றென்றில் தவறி விழுந்து அமிழ்ந்துபோனர். இதைக் கண்டவுடன் கூடிப் போன பையன்களெல்லாம் ஓட்டமெடுத்தார்கள். இவரோ இரண்டுதரம் கிணற்றிலே அமிழ்ந்து மூன்ருந்தரம் எழும்பினபோழ்து இறைவனின் திரு அருளின் துணையால் வரம் பைப் பிடித்துக்கொண்டேறி வெளிவந்து தப்பி உயிர் பிழைத்தார். இந்நிகழ்ச்சியைப் பல நாட்களாய்த் தந் தைக்கு அறிவிக்கப் பயந்திருந்து பின்னர் சொன்னராம். அவரதைக் கேட்டுத் தன் மகனை பிராணச்சேதத்துக்கு விலக் கிக் காப்பாற்றின இறைவனை இறைஞ்சினர்.

**ஓர் ஆபத்தினின்று தப்பிப் பிழைத்தது**

சின்னாள் பாட்டன் சவரிராயன் செட்டியார் வீட்டில் மாடுகளை மேய்க்கிறவர்களோடு விளையாடித் திரிந்தபடியால் படிப்பின்மிசை கருத்தூன்றாமல் பாடசாலையைவிட்டு ஓடி ஓடி ஒளித்துக்கொள்ளுகிறதும், உபாத்தியாயர் தேடித் தேடிப் பிடித்துக்கொண்டு வரச்சொல்லுகிறதுமா யிருந்து, மிகவும் சோர்வுற்றாராம். அவர் ஒருநாள் மிக்க இரங்கி நின்று வருத்தத்துடன், "யாருக்குப் படித்துக் கொடுத்தாலும் இவனுக்குப் படித்துக் கொடுக்கவொண்ணாது. யமனுக்குப் படிப்பு வரினும் இவனுக்குப் படிப்பு வராது" என்று திட்டவட்டமாய் மொழிந்தார். ஆசானின் உட்கருத்து முழுப் பிழை என்பதை வேதநாயக சாஸ்திரி பிற்றைநாள் பெற்ற முன்னேற்றம் மெய்ப்பிக்கின்றது. மகனின் தீயவொழுக்கத்தைக் கேள்வியுற்ற தந்தை விசாரமுற்று, "இவன் தாயில்லாத பிள்ளையுமாயிருக்கிறான், என்ன செய்யலாம்!" என்று யோசித்து சாயுங்கால நேரத்தில் கண்ணீர் உகுத்துக் கடவுளிடம் கலந்து பேசி விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேதநாயகம் தன் தகப்பனைக் கிட்டி, "என்ன ஐயா! உயரப் பார்த்து விசனமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, முகாந்தரமென்ன?" என்றான். அதற்கவர், "அப்பா, உனக்காகத்தான் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். பற்பல சுவடிகளை உண்டாக்கி உனக்காகச் சேர்த்து வைத்தேன். எத்துணை முயன்றாலும், நீ முட்டாளாய்ப் படியாமற் கெட்டுப்போகின்றாய்!" என அதட்டினார். வேதநாயகம், "ஐயா! எனக்குப் படிப்பு வருமா?" என்று வினவ, அதற்குத் தந்தை, "கருத்தூன்றிப் படிப்பாயானால் கடவுள் உன் கண்ணைத் திறப்பார், உன் புத்தியைத் தெளிவிப்பார். நீ படித்துக் கெட்டிக்காரனாய்ப் போவாய்" என்று செவியறிவுறுத்தினார். மகன்: "ஐயா! எனக்குப் பாடம் எழுதிப் போடுங்கள், இனிமேல் நான் கவனித்துப் படிக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தான். தேவசகாயம் பிள்ளை மறுநாள் முதல் வேதநாயகத்துக்கு பாடங்களுங் கணக்குகளும் ஓலையில் எழுதிப்போட்டு படிப்பித்து வந்ததுமன்றி சரிவர ஒப்புவிக்கின்ற பாடங்

களுக்குத் தின்பண்டங்களும், காசுகளும் கொடுத்து ஒரு சிறந்த வகையைக் கையாடிக்கொண்டு வந்தார்.*

## அத்தியாயம் 2

### தேவசகாயம் பிள்ளை சுவார்ச்சு ஐயரிடம் தன் மகனை ஒப்புவித்தது

(Christian Frederick Schwartz of Tanjore)

பாளையங்கோட்டையில் கர்னலாயிருந்து இறந்துபோன இலீட்டிலட்டன் (Colonel Lyttleton) துரையினது கைம்பெண்ணுன பிராமண ஸ்திரீ கிளாரிந்தாளம்மாளுக்கு (Clorinda), 1778-ம் ஆண்டில் சங். C. F. சுவார்ச்சு ஐயர் ஞானஸ்நானம் கொடுத்தார். கிறிஸ்து மதத்தைத் தழுவின இந்த மாதுவின் ஊக்கத்தினுலும் பெரும் முயற்சியினுலும் சொந்தச் செலவினுலும் பாளையங்கோட்டையில் சிறிய கோவிலொன்று 1785-ம் ஆண்டில் கட்டி முடிந்தது. இதை ஆண்டவருக்குக் கையளிக்கும்பொருட்டு, மற்று இரண்டு கிறிஸ்தவர்களோடு கிளாரிந்தாளம்மாள் தஞ்சாவூருக்குப் பிரயாணஞ்செய்து, C. F. சுவார்ச்சு ஐயரை திருநெல்வேலிக்கு வரும்படி கேட்டுக்கொண்டதினுல், திருநெல்வேலிச் சபையையும் விசாரணை செய்யலாமெனக் கருதி ஐயர் புறப்பட்டுப் போந்தார். பாளையங்கோட்டையில் தேவசகாயம் பிள்ளையைச் சந்தித்தபொழுது, இரவிலொரு நாள் வேதநாயகம் செபம்பண்ணித் தன் கட்டிலிலே படுத்துக்

---

* தேவசகாயம் பிள்ளையுமொரு புலவர் எனத் தெரிகின்றது. ஸ்ரீ பவுல் அப்பாசாமியவர்கள் இயற்றிய புத்தகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கின்றது:

"The most notable name in the list after Clorinda is 'Devasagayam Pillai, poet Tinnevelly aged 50' whom Schwartz took with him to Tanjore. His son became even more famous as a Christian poet—Vedanayaga Sastriar who was twelve years of age at this time went with his father and Schwartz to Tanjore."

கொண்டதை அவர் கண்டு, இவன் ஆண்டவருக்கேற்ற தொண்டனுவானென்று மனதிலே எண்ணினுர். மறுநாள் ஐயர் வேதநாயகத்தோடே அன்புற்று பேசி, "நீ என்னேடு தஞ்சாவூருக்கு வந்தால், உன்னையோர் பெருமகனுக்குவேன்" என நயம்பட மொழிந்தார். இவன், "நல்லதையா உங்களோடு வருகிறேன்" என்று உடன்பட்டான். இது சங்கதி தேவசகாயம் பிள்ளைக்குத் தெரியாது. ராஜ ராஜ ஸ்ரீ துளசி மகாராஜா (His Highness Raja Tuljajee of Tanjore) மரணத்தறுவாயிலிருக்கிருரென்றும், காலந் தாழ்த்தாமல் புறப்பட்டு வரவேண்டுமென்றும் தஞ்சாவூரிலிருந்து சுவார்ச்சையருக்கு காகிதமெழுதி வந்தபடியினுலே, ஐயர் பயணத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். அப்பொழுது தேவசகாயம் பிள்ளை சுவார்ச்சு ஐயரைக் கண்டுகொள்ள வந்தார். ஐயர் அவரோடே, "உம்முடைய மகனை என்னேடு அனுப்பும்; நான் அவனைப் படிப்பித்து, உயர் பதவிக்குக் கொண்டுவருவேன்" எனப் பெருமிதமாகப் பேசினுர். "அவனுக்குத் தங்களுடன் வருவதற்கு மனதாயிருக்கிறபடியால் நீங்கள் கூட்டிப்போங்கள்" என்று தேவசகாயம்பிள்ளை மகனை ஒப்புக்கொடுத்தார். உடனே கடைக்குப் போய்த் துணி வாங்கி, சிறு அங்கியும் தமானும் தைத்துக் கொடுத்து ஐயரோடே கூட்டியனுப்பினுர்.

**C. F. சுவார்ச்சு ஐயர் வேதநாய்கத்தைச் சந்தித்தது**

1785-ம் ஆண்டு தை மாதத்தில் வேதநாயகத்தைச் சுவார்ச்சையர் தஞ்சாவூருக்கு அழைத்துவரும்போது, அவனுக்கு வயது பன்னிரண்டு; சுவார்ச்சு ஐயருக்கு வயது ஐம்பத்தியொன்பது. இச்சம்பவம்தான் வேதநாயக சாஸ்திரியிடம் பிற்றைஞான்று மிளிராநின்ற பக்தி வாழ்க்கையினுக்கு முதுகண்ணும். எலியாவின் சால்வை எலிசாவின் மேல் விழுந்து நாளடைவில் இடையருது கிரியைசெய்தது போலவே, பெரும் விசுவாசியான சுவார்ச்சு ஐயருடைய ஐரோப்பிய சால்வை இந்த இந்துப் பையன்மேல் விழவே, அஃது அவன் புதுக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து சமயத்திலே நிலைபெற்றிருப்பதற்கேற்ற உறுகருவிகளாக நூல்கள் பல வியற்றவேதுகரமாக விருந்ததென்பதற்கு ஐயமில்லை.



C. F. SCHWARTZ

திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்குக் கொண்டுவந்த சிறிய செடியான வேதநாயகம் தொண்ணூறு வயதுவரை ஆண்டவருக்கு மகிமையாகத் தஞ்சாவூரிலேயே வேரூன்றி உழைத்து தம்முடைய பெயருக்குப் புகழைச் சூட்டுவிக்கும் கவிச் சக்கரவர்த்தியாக இயங்குவான் என்று கனவிலும் சுவார்ச்சு ஐயர் கருதியிருப்பாரோ, நாம் அறியேம். கடவுளின் சித்தத்தினுக்கு யாரால் வரையறுக்கக்கூடும்! "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற முதுமொழிப்படி வேதநாயகத்தின் உருவமும், பேச்சும், நடை உடை பாவனையும் அவன் புத்திசாலியெனத் தோற்றுவித்ததுகொல்! இது பற்றியே சுவார்ச்சையர் தந்தையுடன் மன்றுடி வேதநாயகத்தைத் தன்னுடன் தஞ்சாவூருக்கு அழைத்துப்போந்தார் கொல்!

1785-ம் ஆண்டில் மேற்கூறிய கிளாரிந்தாள் மாது பாளையங்கோட்டையில் எடுப்பித்த முதல் கிறிஸ்தவ கோயிலை ஐயர் பிரதிட்டை செய்ததோர் தலைமையான நிகழ்ச்சியாமென்க. இரண்டாவது வேதநாயகத்தைச் சந்தித்து, இவனைக் கிறிஸ்துசமய ஊழியத்தில் பயிற்றுவிக்கவேண்டுமென்று ஐயர் கொண்ட நோக்கம் அதிர்ட்டமான நிலையாமென்க. தஞ்சாவூருக்கு மீண்டும் வந்த ஐயரிடம் தம் தத்துப் புத்திரனான சரபோஜி இளவரசனை (Raja Serfojee) துளசி மகாராஜா ஒப்புக்கொடுத்தது அரியதோர் மூன்றுவது காரியமாம். இவ்வாண்டில் சுவார்ச்சையர் கைக்குள் அகப்பட்ட விரண்டு மாணவரும் அவருக்கு நல்விருதையும் வெற்றியையும் சூட்டுவித்தனர். துளசி மகாராஜா மரிக்கும் பொழுது சரபோஜி இளவரசனுக்கு வயது பன்னிரண்டு. இளவரசர் வேதநாயகத்தை 'அண்ணு'வென நட்புடன் அழைத்ததாகக் கூறுவர். அரியாசனமேறிய காலத்தில் சரபோஜி வேந்தன் தன்னுடைய இளமையில் நண்பனுயிருந்த வேதநாயகத்துக்குப் பேரீகையாளனுக விளங்கினுர் என்பதை பின்வருந் துறைகளில் காணலாம்:

"I have selected from the school ten lively boys whom I daily instruct in the doctrines of Christianity and Church history as well as the method of explaining the principal passages of Scripture. I allow them each a

small sum monthly to prevent the necessity of their applying to other labour for support. Not that we expect that every one of them will be fit to be employed in Church offices, but they are thus previously instructed and their abilities as well as conduct are in the way of being proved. Those of whom we entertain hopes of usefulness, we send with the catechists into the country in order to afford them some assistance. May God endue them with His Spirit, sanctify their hearts, and make them useful to the benefit of the congregation and the glory of His name." Vide pages 170 & 171 of Jesse Page's *Schwartz of Tanjore*.

வேதநாயகம் தஞ்சாவூருக்கு வந்த துவக்கத்திலே ஒரு நாள் ஐயரிடம் போய்: "நான் வாசிக்கத் தங்களுக்குச் சித்த மான ஒரு புத்தகங் கொடுங்கள்" என்று கேட்டுக்கொண் டான். "ஐயர், 'தாவீதின் சங்கீதங்கள்' என்ற புத்தகத்தின் படி யொன்றை எடுத்து வாழ்த்தி தம்முடைய கையினலே கொடுத்ததினலே இவர் கடவுளுக்குச் சங்கீதக்காரனும் நீடிசைபெற்ற புலவருமாய்ப் போனர்" எனச் சாஸ்திரியாரின் மகன் நோ. ஞானதிக்க சாஸ்திரியார் சிறப்பித்துக் கூறியுளர். ஐயர் இல்லத்திலே இவருக்கு யாதொரு தாழ்மையுமில்லா மல் உணவும் உடையுங் கொடுக்கப்பெற்றுப் பிள்ளைபோல் வளர்ந்தார்.

C. F. சுவார்ச்சு ஐயருக்கு அகத்தின் அழகு முகத்தில் தோன்றின மாணவர்களைத் தெரிந்தெடுத்து, கிறிஸ்து சமய போதனைகளை அவர்களுக்குத் தெளிவுறப் புகட்டி அவர் களின் ஆத்ம விளக்கு நன்கு ஒளிவீசுமாறு, அவர்களைத் தூண்டிக்கொண்டிருப்பது அருமையானதோர் அலுவலா யிருந்தது. சீர்மை மேதாவிகளுக்கு அவர் எழுதினவோர் கடிதத்தில் பின்வருமாறு கூறியுளர்.

சுவார்ச்சு ஐயர் பொறுக்கியெடுத்த பன்னிரண்டு பையன் களில் வேதநாயகம் ஒருவனக இருந்திருக்கலாம். தன் னுடைய ஆயுள் காலத்தில், வேதநாயக சாஸ்திரியாரும் சுவார்ச்சு ஐயரின் ஒழுகலாற்றைத் தழுவி, தானும் புத்திக் கூர்மையும் ஞானமும் வாய்ந்த பையன்களையும் வாலிபர்

களையுந் தெரிந்தெடுத்து, தன் இல்லத்தில் வளர்த்து, கிறிஸ்து சமய போதனைகளையும் கொள்கைகளையும் அவர்களுக்குப் புகட்டி, பிரசங்கிகளாகப் பிற ஊர்களுக்கு அனுப்பினார் என்று அவரின் வரலாறு அறிவிக்கின்றது.

அக்காலத்திலே ஐயர் தமது உபதேசங்களை எல்லாச் சாதியாரும் வந்து கேட்டு பயனடையுமாறு ஓர் உபாயத்தைக் கையாண்டு தேசத்திற்கு ஊறுபடுத்துதலின்றி ஒழுகினார். உயரிய சாதியாரையே சமையலாளராகவும் ஏவலாளராகவும் தம் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார். இங்நல்லொழுங்கினாலே மெய்யான தேவனை அறியாப் புறமதஸ்தரில் பலர் அவரிடம் வந்து தத்தம் ஆத்ம ஈடேற்றத்தினுக்கடுத்த உபதேசங்களைக் கேட்டு கிறிஸ்து மதத்தைத் தழுவினதுமன்றி தங்கள் தங்கள் மக்களையுங் கல்வி கற்கும் பொருட்டு அவர் கைவசம் ஒப்புவித்தார்கள். மானிடருடைய ஆத்மா உயர்ந்த கிரயத்தினால் கொள்ளப்பட்டதென்றதையுணர்ந்து, அவர்களுக்கு ஊறுபாடுள்ள மத போதனை யொன்றும் சொல்லாமல் அவர்களுடைய ஆத்மா இரட்சிக்கப்பட்டால் போதுமென்று அவர்கள்பால் மிக்க நட்புக்கொண்டு அவர்களுக்கோர் நற்தந்தையாக ஒழுகினார். ஐயர் வேதநாயகத்தைப் படிப்பு நேரந் தவிர குறிக்கப்பட்ட மற்ற நேரங்களில் முறைகாரப் பிள்ளைகளுடன் சேர்ந்து யாதொரு வேலையைச் செய்யச் சொல்லுவார். சாயுங்காலம் நாலு மணிக்குமேல் சற்று நேரம் துயில்வார். அவ்வமயங்களில், ஐயருக்கு நித்திரை வருமட்டும் வேதநாயகம் விவிலிய நூலை வாசித்துக்கொண்டிருப்பான். ஐயருக்குத் தெளிவுபட வேதநாயகம் வாசித்ததினாலே எப்பொழுதும் அவனைத் தமக்கு முன்னிருந்து வாசிக்கக் கட்டளையிட்டார். மேலும் மாணவர்களுக்குப் பள்ளிக்கூடத்துப் படிப்பு போதும் என்றிராமல், காலை மாலை செபத்திலும், மற்ற ஒழிந்த வேளைகளிலும் அவர்களோடு வேத காரியங்களைக் குறித்து உரையாடி போதித்து அவர்களை அறிவாளிகளாக்கப் பெரிதும் முயன்றார். வேதநாயகம் கல்வியைத் துவக்கி இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அப்பொழுது வேதநாயகத்தின் பெற்றோர் தஞ்சாவூருக்கு வந்தார்கள். அவர்கள் வந்து நாலைந்து நாட்களானபோது, பெற்றோர் வந்திருக்கிறபடி

யால் அவனுடைய படிப்பு கெட்டுப்போகுமென்று சுவார்ச்சையர் ஐயுறவுகொண்டு, தரங்கம்பாடியிலிருந்து வந்திருந்த டாக்டர் யோவானேயரோடு (Dr. John) கூட்டியனுப்பினூர். (1780). யோவானேயர் துவக்கமாக வேதநூலொன்றை (A book on theology) எடுத்து வேதநாயகத்துக்குக் கொடுத்து "நீ இந்தப் புத்தகத்தைப் படித்துப் போகவேண்டும்" எனக் கற்பித்தாராம். அவ்வாறே கற்று இவர் பாடின சகல பாவினங்களும் கிறிஸ்து வேத கலையின் உள்ளுறை பொருட்களுக்கியை புடைத்தனவாய்ப் பாடினதினூலே பிற்றை நாளிலே புகழ்பெற்று, வேதசாஸ்திரியென அழைக்கப்படுவாராயினர். வேதநாயகம் தரங்கம்பாடியில் கல்வி பயின்று கொண்டிருக்கின்றுழி, ஒவ்வொரு நாள் சாயுங்காலத்திலும் யோவானேயரோடு உலாவப்போகிற வழக்கமாயிருந்தது. அச்சமயங்களில் ஐயர் பல உபதேசங்களேயும் சீர்மைக்கதைகளேயும் எடுத்துச் சொல்லிக்கொண்டு நடந்து போவார். கேமரர் ஐயரும் (Dr. Cammerer), உரோத்துலர் (Rottler) முதலிய ஐயர்மார்களும் வேதநாயகத்தை அன்புடன் நடத்தினூர்கள். அவர் இரண்டு ஆண்டுகளாக வேதக்கலே, வானக்கலே முதலியன கற்றுவந்தார். அல்மாஞாப் பாஷையில்* சுவிசேடம் வாசிக்கக் கற்றுலும் அம்மொழியில் தேறவில்லே. ஆங்கிலத்தில் ஒரு சிறிது பயிற்சியிருந்தது. இவ்வாறு ஆங்குக் கல்வி கற்றபின் திரும்பவும் தஞ்சாவூருக்குச் சுவார்ச்சையரிடம் வந்து சேர்ந்தார்.

வேதநாயகம் கல்வி பயிலுதல்

அப்பொழுது சுவார்ச்சையர், "வேதநாயகத்துக்குப் போதுமான வயதும் அறிவுமிருக்கிறது. அவன் இனிக் கற்கத் தேவையில்லே" யென்று மதித்துரைத்து சபை விசாரணைக்குப் போன ஞானமுத்து உபதேசியார் முதலியவர்களோடு உதவியாளராக அனுப்பினூர். தஞ்சாவூரைச் சார்ந்த வல்லம் புதுப்பட்டி, பூதலூர், சித்திரக்குடி, இராமநாதபுரம், உத்திர

* கர்மானியா பாஷை அல்லது German, கர்மானியர் தங்கள் தேசத்தை Allemagne என்று அழைப்பதினூல், அவர்கள் பாஷை முற்காலத்தில் நந்தேயத்தில் அல்மாஞா அல்லது அலெமன்னியா பாஷை என்று அழைக்கப்பட்டது.

கோசமங்கை முதலிய ஊர்களுக்கு அவர்களோடே சென்று அவர்களுடைய ஊழியத்திற்கு வேதநாயகம் மிகவும் உதவியாயிருந்தார். பின்னர் இவருக்கு பத்தொன்பது வயதாகிறபோது ஐயர் இவரை வேத பள்ளிக்கூடத்திற்கு (Seminary) தலைமையான உபாத்தியாயராக நியமித்தார். தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட மாணவருக்கு விவில்லிய நூலையும் லௌகிக ஞான நூல்களையும் ஊக்கத்துடன் கற்றுக் கொடுத்தார். சுவார்ச்சையர் இவருடைய சமர்த்தையும் இவர் மாணுக்கர்களை நடத்துகிற ஒழுங்கினையுங் கண்டு, "இனிச் சிறுவர் தரங்கம்பாடிக்குச் சென்று கற்க அவசியமில்லை" எனக் கடைபிடித்தாராம். ஆதலின் துரைமார்களுடைய பிள்ளைகளும், நாட்டையர்மார்களுடைய பிள்ளைகளும் இவரிடத்தில் தானே வந்து கல்வி பயின்றனர். வேதநாயகத்துக்குப் பிற்றை நாள் சிலாக்கியமாகக் கிடைத்த நீடிசையினுக்குப் பற்றுக்கோடு தஞ்சாவூரில் சுவார்ச்சையராலும், தரங்கம்பாடியில் டாக்டர் யோவான் ஐயராலும் அளிக்கப்பட்டதெனப் புலனுகின்றது.

## அத்தியாயம் 3

### சி. எப். சுவார்ச்சு ஐயர் பொன்னகர் புகுதலும், வேதநாயகம் மணம் புரிதலும்

சி. எப். சுவார்ச்சு ஐயரின் சாயுங்காலத்தில் தஞ்சாவூர் நாட்டினது ஆளுகைச் சுதந்தரம் எந்த அரசனுக்குரியது? அமீர்சிங்குக்கோ? சரபோஜி இளவரசனுக்கோ? வென்ற கட்சிக்குட்பட்டது. இதன் பொருட்டு கிழக்கு இந்திய வர்த்தக சங்கத்தாருக்கும் ஐயருக்கும் கடிதப் போக்குவரவு தொடர்ந்தேற்பட்டு மிக்க களைத்துப் போனுர்; தொய்ந்து சுகக்கேடுற்ருர். பெப்ருவரிமீ 13உ 1798-ம் ஆண்டில் நாற்காலியில் வீற்றிருந்த சமயத்தில் தம் 72-ம் வயதில் உயிர் வாழ்க்கையை நீத்தார். சுவார்ச்சு ஐயருடைய மாணவனுபடியினுலும், தாம் அரசு கட்டிலேறின நிகழ்ச்சியினுக்கு ஐயர் உறுகருவியா யிருந்தாரானமையினும்

**வேதநாயகத்தின் வளர்ப்புத் தகப்பனின் மரணம்**

சரபோஜி அரசன் சடலத்தை மறுநாள் அடக்கஞ் செய்யு முன் வந்து தங்கச் சரிகைப் போர்வையாலே போர்த்தி, கண்ணீர் உகுத்து கதறியழுதார். சுவார்ச்சு ஐயர் இறந்த அன்று வேதநாயக உபாத்தியாயர் "அடிவயிற் றில் இடி விழுந்ததுபோல" தம் மனநோவை உணர்ந்திருப் பார் என்பது ஒருதலை. ஐயர் மரிப்பதற்கு சின்னாட்களுக்கு முன் சரபோஜி இளவரசனும் தன் விருப்பமெய்திய ஆசானைக் கண்டு கடை ஆசீர்வாக்குகளைப் பெற்றார் எனச் சரித்திரக்காரர் நவிலுகின்றனர். எனவே வேதநாயகத்தை யும் அவரைப்போன்ற தான் அருமையாய் வளர்த்த பிற வாலிபர்களையும் ஐயர் அழைத்து ஆசிகூறி முடித்திருப்பார் என்பதற்கு ஐயமில்லை.

தஞ்சாவூர் சபையார் துக்கித்ததைக் குறித்து Jesse, F.R.G.S., அவர்கள் எழுதிய "*Schwartz of Tanjore*" என்ற புத்தகத்தில் (6) பின்வருமாறு கூறியுளார்:

"It was intended to sing a hymn as the funeral made its way, but the lamentations and wailing of the great crowd of poor natives made this impossible. The solemn burial service was performed by Mr. Jaenicke, and when this was over and the Europeans had retired, the natives who filled the sacred building remained praying and singing hymns."

இக்குழுவில் வேதநாயகம் ஒருவராக விருந்திருக்கவேண் டும். C. F. சுவார்ச்சு ஐயருடைய விசுவாசத்தினாலும், பெருமுயற்சியினாலும், போராற்றலாலும் எழுந்த தஞ்சாவூர் சபை ஆக்கியோற்கோ ஒரு சிறந்த மகுடமாக விருக்க, அதை "ஓர் எளிய நாட்டார்களின் கும்பு" என Jesse Page ஆசிரியர் அழைத்தது சுவார்ச்சு ஐயரை அவமதித்ததுமன்றி தம்முடைய ஆராய்ச்சிக் குறைவைச் சுட்டிக்காண்பித்ததுமா மென்க. அங்ஙனமே வேதநாயக சாஸ்திரியாரைப்பற்றி ஒரு வரி எழுதாமற் போனதும் இவ் ஆசிரியரின் வரலாறு எத்துணை சிறந்து ஈடும் எடுப்புமிலாததாய் விளங்கினும் இக் கழிப்பினால் உறுகுறையாக நிற்கின்றது காண்மின்!

தம்முடைய இருபதாம் வயதிலிருந்து வேதநாயகம் மகிழ்ச்சியும் மாட்சிமையும்பட கவி இனிதிசைத்ததினலும்,

சிறு நூல்களை இயற்றி வேதநாயகம் எடுத்த துவக்க முயற்சிகள்

ஐயர் மரித்தபொழுது, இவருக்கு இருபத்திநான்கு வயதானபடியினலும் இவர் தேம்பட கவிபாடும் இயல்பை அறிந்து தாம் திருநெல் வேலியிலிருந்து கொண்டுவந்து, வளர்த்த மாணுக்கன், தாம் எண்ணினபடி ஒரு பெருமகனுக மாத்திரம் விளங்காமல் செய்யுள் யாக்குந் திறமையும் அவரிடம் மிளிரா நின்றதைக் குறித்து ஐயரின் உள்ளங் களித்திருக்குமென்பது ஒரு தலையாம். "பெத்தலகேங் குறவஞ்சி" முதற்கண் தன் 19-ம் வயதில் பாடத் தொடங்கி சுவார்ச்சு ஐயர் காலத்தி லேயே சிறு புத்தகங்கள் பல இயற்றியிருந்தார். இது விடயத் தைக் குறித்து வேதநாயக சாஸ்திரியின் பேரனர் ஸ்ரீ எ. ஞானேந்திரம் பிள்ளையவர்கள் நான் கேட்டதின் பேரில் பின்வருமாறு எழுதி அறிவித்தார்:

"தன்னைப் பள்ளிக்கூட உபாத்தியாயராக சங். சுவார்ச் சையர் நியமித்தபோது, மாணுக்கர், உபதேசிமார், குருமார் களுக்கு பிரயோஜனமாக அநேக பாடல்களையும் உண்டாக்கி 'ஞானக்கும்மி', 'பரம நீதிப்புராணம்', 'கால வித்தியாச மாலை', 'ஞான ஏத்தப்பாட்டு', 'முன்னுரை', 'மெய்யறிவு', 'ஞான வழி', 'பராபரன் மாலை' முதல் பாகம், 'ஆதியானந்தம்', 'அறிவானந்தம்', 'வஸ்து நிர்ணயம்', 'சைதன்னியத்திறவு கோல்' முதலிய சிறு புஸ்தகங்களைச் சுவார்ச்சு ஐயர் அறிய உண்டாக்கி பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுத்து உபதேசி மார்களாக அனுப்பியிருக்கிருர்."

இதுவேயுமன்றி ஸ்ரீ எ. ஞானேந்திரம் பிள்ளை அவரிட மிருந்த கற்சித்திரமொன்றை (Lithograph) எனக்கு அனுப்பி பின்வருமாறு எழுதியுளார்: "சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியார் 1778-ம் வருஷம் முதல் சங். வேத நாயக சாஸ்திரியாரின் சீவியத்தில் காணப்பட்ட முதன்மை யான பெற்றிகளைச் சுருக்கமாய்த் திரட்டி யெழுதி செர்மன்

தேயத்து சங்கத்தாருக்கு Rev. கிரம்மர் ஐயர் கைவழியாக 1862-ம்* ஆண்டில் அனுப்ப அவர்கள் அதை உகந்து வெடுத்துக்கொண்டு ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து தங்களுடைய சொந்த முயற்சியினுல் இயைக்கப்பெற்ற மேற்கூறிய கற்சித்திரத்தையும் அஃதுடன் அச்சிற் பதித்தார்கள். அந்தக் கட்டுரையின் பிரதியை இத்துடன் அனுப்பியிருக்கிறேன்." கற்சித்திரத்தை எதிர்முகத்தில் கண்டுகொள்க. வரலாறு கீழ்வருமாறு:

## TANJORE.

### (II Series, No. 3)

"Yea, all kings shall fall down before him ;
All nations shall serve him."—(Psalm 72:11)

"Tanjore, the old royal Indian city, with its 50,000 inhabitants, is well and pleasantly situated on the banks of the Cauveri River, being since 1861 also favoured with a railway station. It boasts of two famous old buildings which tower high above all the rest of its houses. We have them represented in the upper part of our picture taken from photographs. To the left we see the royal palace, an old-fashioned showy structure, a complex of several houses with a spacious court-yard. Here Dr. Graul when visiting Tanjore in 1850 saw 20 to 30 enormous elephants decked out with coloured saddles, all belonging to the glory of the Tanjore Royalty, which, however, has since ceased to exist. To the right of our picture we see the great pagoda, close the royal palace, a masterpiece of Indian architecture. It is surrounded by a row of pillars whose 120 arches contain as many idols of different sizes. In the centre of the thus enclosed temple-yard there is couched on a raised part of the

---

* வேதநாயக சாஸ்திரியார் மரித்தது 1864-ம் வருஷம். ஆகவே, அவர் மரிப்பதற்கு இரண்டு வருஷத்திற்கு முன் அவர் குமாரர் நோவா ஞானதிக்கம் தகப்பனர் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதி அனுப்பியிருக்கிறூர். வேதநாயக சாஸ்திரியாரும் இதைப் பாாவையிட்டிருப்பார்.


The Rajah's Palace
The large Pagoda.
Christian Frederic Schwartz
Born the 26. Oct. 1726 at Sonnenburg, died the 13 Febr. 1798 at Tanjore
All Kings shall fall down before him; all nations shall serve him. Ps. 72, 11.
Schwartz' monument in Christ's Church.
Wedenayagum Shastry
Born the 7. Sept. 1774 In Tinnevelly, died the 24. Jany. 1864 at Tanjore
Lutheran Church.
Girl-school.
Lutheran Missionhouse

ground " the Holy Bull ", a mighty block of black granite thirteen yards long and six yards high, most elaborately carved; next to it rises the magnificent tower, which in 14 gradations reaches the height of almost 100 feet; it is covered all over with works of sculpture, and unlike other temples—conceals in its gloomy interior the very " sanctuary" of the idol, whereas temple-towers in India usually rise over the porches of temples. The whole is consecrated to Siva with his collar of skulls, the God of destruction chiefly worshipped in the south of India. Thus we see, the fine royal city of Tanjore is a heathen town, and its inhabitants are almost all given to idolatry. But do we not read in the 72nd Psalm, what Solomon says of the great King of Peace who will finally reign over all the world, that "all kings shall fall down before him and all the heathens serve him?" Therefore, listen, how our Lord Jesus Christ has begun to make his glory known in the royal city of Tanjore.

The man who preached here the pure gospel of our Saviour with peculiar effect was the Lutheran Missionary Christian Frederic Schwartz whose likeness we have in one of the two portraits of our picture, drawn as it were on two medallions. He commenced his missionary labours in India in the year 1749 and worked in Tanjore from 1772 till 1798 with such ability and faithfulness, that his name is universally recorded among the greatest of missionaries and remembered with the most affectionate respect in all the churches of India. He often used to preach and to teach even in the king's palace, and with what success the splendid monument can tell us, which the grateful king erected to the memory of his teacher and which we see represented in the middle of our picture. It represents Schwartz on his death-bed; at his head stands Gericke, the missionary, in his surplice; at his feet stand four orphan boys mourning, and stooping over him we see King Serfojee, Schwartz's pupil, with two of his ministers. The other portrait in our picture is that of the Poet Vedanayagam, another

pupil of Schwartz; and this reminds us of the fact, that the fruits of Schwartz's labours reach down to our very times. Vedanayagam had the special gift of poetry to such a degree, that his songs are famous all over the south of India both among Christians and heathens, and when he died at January 24th, 1864, the number of the writings he bequeathed to his countrymen amounted to more than a hundred—all written for the furtherance of Christ's cause. It is true he and the whole congregation at Tanjore, together with all the charitable institutions left by Schwartz, had since been transferred from the liberal patronage of the Christian Knowledge Society, to the absolute proprietorship of the Propagation Society; a change which involved a transfer from the Evangelical Lutheran Church to the Anglican Episcopal. But the doctrines which are taught in Vedanayagam's writings and the lively interest he himself took in the revival of the Lutheran Mission in India plainly show that his heart kept true to the Lutheran doctrines, as he had received them from Father Schwartz."

சி. எப். சுவார்ச்சு ஐயர் மரித்தபோது (1798) வேதநாயகத்திற்கு சரியான வாலிபம். 21-ம் வயதில் (1795)

**வேதநாயகத்தின் விவாகம்**

அவருடைய சொந்த அத்தை மகள் வியாகம்மாளை தந்தை தேவசகாயம் பிள்ளையும் சுவார்ச்சு ஐயருமாக நியமித்து, சங். சேனிக்கையரைக்கொண்டு (Rev. J. D. Jaenicka) விவாகம் முடித்தார்கள். அப்பெண் கர்ப்பவதியாயிருந்து மறு ஆண்டில் இறந்துபோனாள். எனவே 22 வயதிலே வேதநாயகம் தாரத்தை இழந்து துக்க சாகரத்தில் மூழ்கினார். 24 வயதானபொழுது வளர்த்து தன்னை மனுவாக்கின சுவார்ச்சு ஐயரும் மறுமைக்குள் சென்றபிறகு இவருக்கு உள்ள சோகமும் சஞ்சலமும் அளவுக்கு விஞ்சினதாயிருந்திருக்கவேண்டும் என்பது வாசிப்போருக்கு எளிதில் புலனாம். தாம் பரகதியடையுமுன் வாலிபனும் மனைவியை இழந்தவனுமான வேதநாயகத்தைத் தன் நண்பனும் உடன் ஊழியக்காரனுமாயிருந்த யோவான் காஸ்பர் கொலோப்பு

(The Rev. John Casper Kohlhoff) ஐயரிடம் ஒப்புக் கொடுத்தார் என்று தெரிகிறது. இந்த ஐயர் 1801-ஆண்டில் வேதநாயகத்திற்கு அவருடைய 27-வது வயதில் அவருடைய அம்மான் மகள் மிக்கேல் முத்தம்மாள் என்ற நங்கையை இரண்டாந் தாரமாக விவாகஞ் செய்வித்தார். இம்மாதும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். தமிழுக்கடுத்த நூல்களை நன்கு பயின்று கற்றறிந்தவள். இவளாலும் புத்திர சந்தானம் இன்மை நேரிட்டது துக்கிக்கற்பாலது.

## அத்தியாயம் 4

### கிறிஸ்தவ சபைகள் அளித்த பட்டப் பெயர்களும்

### அந்தச் சபையார் நடாத்துவித்த நல்லேற்கையும்

வேதநாயகம் கவிகளிசைக்கத் துவக்கின 1794-ம் ஆண்டிலிருந்து 1808-ம் ஆண்டிற்குள் 52 நூல்களை இயற்றினதாகக் கூறுப. இருபது வயதாகின்றபோது, இவருடைய கவிவன்மை வெளிப்பட்டுத் தமிழ் மக்களிடம் நாளடைவில் நன்மதிப்புப்பெற்று யாவராலும் பெரிதும் பாராட்டப்பட்டது. இதற்கு அடையாளமும் மேற்கோளும் யாவையெனில், வெவ்வேறு சபைகள் கூடி பெருமை வாய்ந்த பட்டப் பெயர்களைச் சூட்டினதும் நற்சாட்சி பத்திரங்களைக் கையளித்ததுமே. வாலிபத்தில் பாடசாலையில் தலைமை உபாத்தியாயர் நிலை வகுத்தபடியால் இவருக்கு "அண்ணாவியார்"* என்ற சிறப்புப் பெயர் மாத்திரம் இதுகாறும் வழங்கிவரலாயிற்று. முதற்கண் 1808-ம் ஆண்டில் வேதநாயக அண்ணாவியாருக்குத் தஞ்சை சபையார் குழுமி "வேதாகம சிரோமணி மகா ஞானக்கவிச் சக்கரவர்த்தியார்" என்ற சிறப்புச் செறிந்த பட்டத்தைச் சூட்டினது கவனிக்கற்பாலது. அந்நிகழ்ச்சியைக் கீழே வரும் நற்சாட்சி பத்திரத்தில் கண்டுகொள்க.

---

* In those days there were no universities to recognise merit by giving honorary degrees. The Madura Tamil Sangam which discharged this duty to Tamil culture and learning had probably become defunct. The public therefore were justified in taking this function on themselves.

TANJORE,

*29th February* 1808.

We, the undersigned Elders and Members of the Protestant Congregation of Tanjore do bear, by this following, good testimony of Devasagaya Vedanayagam Pillai.

As the true religion of God Almighty has illuminated this part of India amongst a great many Christians who have been converted from idolatry, the said Devasagaya Vedanayagam Pillai of Vellala caste, native of Tinnevelly, was called to Tanjore with his whole family converted and brought up by the blessed hand of the most renowned and pious English Missionary, the late Reverend and Venerable Father Mr. Christian Frederic Schwartz and now is under the charge of the kind and worthy father the Rev. John Casper Kohlhoff who succeeded and is almost equal to the late Reverend Mr. Schwartz. This Devasagaya Vedanayagam Pillai has composed many divine songs to the Praise and Glory of God which we heard him repeat many times and which were highly approved of and applauded by us and we pray that the Lord may graciously be pleased to disseminate those divine songs everywhere and make them useful to us and our offspring and all other Congregations.

He has besides well searched the Old and New Testaments and according to it has compiled 52 books containing the system of Christian doctrine sweetly and metrically. We therefore jointly and with exceeding gladness testify that he is a well-learned person and better versed than all whom we have known since the spreading of the saving Gospel in this part of India to this long period, that he ought to be esteemed as a more celebrated person than all worldly poets, that he is the ornament of our Congregation, that the said 52 religious books and a complete and most advantageous Arithmetic compiled by him are most useful books for the school and for the

propagation of the Gospel of Christ, and that the great pains and labours which he has taken in composing all these books are deserving praise in our opinion and by this attestation we are in hope that as poetical pieces of the said person were approved by us, so they will be approved without doubt in all countries by the learned scholars and great gentlemen who will hear them repeated for the future. Therefore we joyfully denominated him newly as "Veda Siromony, Maha Njana Cavi Sackiravarthiar, *i.e.*, the Principal Evangelical Jewel, the monarch of the divine poets, honoured him with the first seat of place in our company and with first civilities in treating him with betel-nuts, etc., etc., and have favoured him with the honourable marks due to his superlative knowledge and given him the paper of recommendation with our signature affixed thereto with a hope that the well versed gentlemen after perusing it will have the favour to show that respect and complaisance which we have done to him.

(Signed)

(1) The Rev. Mr. Swartz Paukianada Pillay, Interpreter of Mayavaram Division.

(2) William Pearson, son of the late Captain Pearson.

(3) Samuel Pillay, Member of the Court of Justice of His Excellency Maha Rajah.

(4) Rayappa Pillay, son of late Sandosha Pillay, Post Office Writer and Elder of the Tanjore Protestant Congregation.

(5) Njanapragasam Appu Pillay of Bengal College.

(6) Malayappa Pillay, Dubash to Lieutenant Colonel Innis.

(7) Paukianada, Catechist.

(8) Seya Vedanayagan, Catechist.

(9) Abisheganada, Catechist.

(10) Arulappa, Catechist.

(11) David Pillay, English Schoolmaster, son of Sathianathan, Native Priest.*
(12) Samuel, Schoolmaster, Palamcottah.
(13) Arumanayagam, Catechist of Palamcottah.
(14) Vedamuthu, Catechist.
(15) Menjanam, Catechist.
(16) Daniel, Schoolmaster, son of the late Devasagayam.
(17) Paukianada, Catechist, son of the late Devasagayam.
(18) Njanamuthu, Schoolmaster, son-in-law to Sathianada, Native Priest.
(19) Muthoo Pillay, Elder of the Tanjore Protestant Congregation.
(20) Njanapragasam Pillay, son of Muthoo Pillay.
(21) Devasagayam, Catechist, son of the late Paramanandam, Elder.
(22) Royappa Pillay, son of the late Savarimuthoo, Catechist.
(23) Thomas, Schoolmaster, grandson to the late Njanaprasadam, Catechist.
(24) Njanapragasam Pillay, son of the late Sathianada Pillay, Mission Doctor and Elder.
(25) Njanamuthu, Catechist, son of Arulappa, Catechist.
(26) Sinnappa Pillay, Mission Doctor.
(27) Devasagayam, Catechist of Tripatur.
(28) Devasagayam, Catechist, son-in-law to Adeikalam, Catechist.
(29) Njanayudam, Catechist, son of the late Vedamuthu Pillay and Elder.

---

* இவர் பிரசித்திபெற்ற சத்தியநாத உபதேசியாரின் மகன் என்று தோன்றுகிறது. *The Centenary History of the C.M.S. in Tinnevelly* by Paul Appasamy—22-ம் பக்கம் பார்க்க. C. F. சுவார்ச்சு ஐயருடைய மற்ளெரு சீஷனை, சத்தியநாத உபதேசியாரைப்பற்றி ஞா. சாமுவேல் ஐயர் எழுதின "தரங்கை மிசியோன் சரித்திரம்" என்ற புஸ்தகத்தில் வாசிக்கலாம்.

(30) Njanapragasam, Schoolmaster, son of Sinnadu Pillay, late Padakaner of Tanjore Country.
(31) Nallathamby, Schoolmaster to the Female Asylam.
(32) Samuel, Schoolmaster, son of Njanapragasam, Catechist.
(33) Tavasiappa Pillay, Mission Writer.
(34) Samuel Pillay, Superintendent of the Printing Press of His Excellency Maha Rajah.
(35) Devasagayam Pillay, Writer in the Court of Justice of His Excellency Maha Rajah.
(36) Arulappa Pillay, Servant to Rev. Mr. Horst.
(37) Suvisashamuthoo Pillay, Servant to the Rev. Kohlhoff.
(38) Anthonimuthoo Pillay, Servant to the Rev. Mr. Pohle.
(39) David Pillay.
(40) Tayirium Pillay, Dubash to Mr. Edward Borgen.
(41) Devasagayam Samuel Pillay.
(42) Abisheganada Pillay.
(43) Sathianada Pillay, son of the said Abisheganada Pillay.
(44) Devasagayam Pillay, son of Njanapragasam, Catechist.
(45) Njanasoranam Pillay, son of the late Njanaprasahda, Catechist.
(46) Njanapragasam Pillay of Tatchenoor.
(47) Tyirium Pillay, Mission Peon.
(48) Sinnappa Pillay of Trichinopoly.
(49) Njanamuthoo, Servant to the Rev. Mr. Kohlhoff.
(50) Nallathamby, Catechist.

### மேற்கண்ட நற்சாட்சி பத்திரம் தமிழில்

பாம ஜெயம்

தஞ்சை நகரில் வாழ்கின்ற சுவிசேஷ சபையாரும் மூப்பானவர்களுமாகிய இதற்கடியில் கையொப்பம் வைத்திருக்கிற நாங்கள், தேவசகாயம் வேதநாயகம் பிள்ளையவர்களுக்கு இதைக்கொண்டு கொடுத்த நற்சாட்சி என்னவென்றால்:—

சருவ வல்லமையுள்ள கர்த்தரின் மெய்யான சத்திய வேதம், இந்த இந்து தேசத்தில் விளக்கமானதினுல், பழைய மார்க்கத்தை விட்டு குருமார்களாலே குணப்படுதலுக்குத் திருப்பப்பட்ட ஏராளமான கிறிஸ்தவர்களில் பரகதியடைந்த மகா கீர்த்தியும் உத்தம தேவதா பக்தியும் பொருந்திய, சங்கையுற்ற தகப்பனும் இங்கிலீஷ் மிசியோனரியுமாகிய, கிறிஸ்தியான் பிரதரிக் சுவார்ச்சு அய்யரவர்களால், திருநெல் வேலியிலிருந்து குடும்பத்துடன் நம் மார்க்கத்திலழைக்கப் பட்டு, அவரிஞசீர்வாத காத்திஞல் வளர்க்கப்பட்டவரும், அப்படியே இந்நாள்களில் யாவற்றிலும் அவருக்குப் போது மான சமானமாயவர் பட்டத்திலிருக்கிற பட்சமுள்ள எங் களின் நல்ல தகப்பஞராகிய சங்கையார்ந்த யோவான் காஸ்ப் பர் கொலோப்பு ஐயரவர்கள் ஆதரவுக்குள்ளிருக்கும் தேவ சகாய வேதநாயகம் பிள்ளையவர்கள், கர்த்தரின் புகழ்ச்சிக் கென்றும் மகிமைக்கென்றும் பாடின எல்லாப் பாடல்களை யும் நெடுநாளாய்க் கேட்டங்கீகாரம் பண்ணிக்கொண்டு அவை எங்களுக்கு மெங்கள் பிள்ளைகளுக்கும் மற்ற எல்லாச் சபைகளுக்கு முதவியாகவும் பிரபலமாகவும் கருணைபுரிந்து, வருத்திக்கப் பண்ணக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறேம்.

இதுவுமல்லாமலிவர் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடுகளை நன்றுயாராய்ந்து, அவற்றைக்கொண்டு, மகா அலங்காரமும் மதுரமுமான பாடல்கள் பொருந்திய ஐம்பத்திரண்டு நூல் களை யுண்டுபண்ணினதால் சத்தியமான சுவிசேஷம் இந்து தேசத்தில் பரம்பின இதுவரையி லெழும்பின கிறிஸ்தவர் யாவரிலுமேம்பாடான விற்பன்னரும் பிற கவிராயர்களைவிட சிரேஷ்டமா யெண்ணப்படத் தக்கவருமாயிருக்கிறது மல்லா மல், எங்கள் சபைக்கோர் ஆபரணம் போலிருக்கிறரென் றும், அப்படியே அவருடைய ஐம்பத்திரண்டு நூல்களும் மிகுந்த பிரயோசனமுங் குறையற்றதுமான கணக்காகமமுங் கிறிஸ்துவின் சுவிசேஷ பிரபல்லியத்துக்கும் சகல பள்ளிக் கூடங்களுக்கும் விசேஷித்த எத்தனமாயிருக்கிறதென்றும், இவற்றை யுண்டுபண்ணுகிறதிஞலே இவருக்கிருந்த மகா கருத்தான பிரயாசமும் வருத்தமும், எங்களெல்லாருடைய

எண்ணத்திலேயும் புகழப்படத்தக்கதுமாயிருக்கிறதென்றும், நாங்கள் மிகுந்த சந்தோஷத்துட னொருமனப்பட்டுத் திட சாட்சியா யறிவிக்கிறோம்.

இந்த உண்மையான வார்த்தையின்படியே சொல்லப் பட்டவருடைய பாடல்களை யெத்தேசத்திலேயும் இனி கேட்கப்போகிற விற்பன்னரும், பெரியோர்களு மெங்களைப் போலச் சந்தேகமன்றி, அங்கிகரித் தேற்றுக்கொண்டு, நாங்க ளவருக்குச் செய்த சங்கையையு முபசரணையையுஞ் செய் வார்களென்கிற நம்பிக்கையினாலே அவருக்கு 'வேதாகம சிரோமணி மகா ஞானக் கவிச்சக்கரவர்த்தியார்' என்ற புது நாமமுந் தரித்து, இவருடைய மேலான விவேகத்துக்குத் தகு மானதாயிருக்கிற, பிரதான ஆசனமும் முதல் மரியாதையுஞ் சங்கைக்கடுத்த அடையாளங்களையுங் கொடுத் தெங்கள் கை யொப்பம் வைத்துக் கொடுத்தோம்.

தஞ்சை நகரம் சுவிசேஷ சபையில் 1808-ம்வூ மாசிமீ 20உ.

தீர்க்கதரிசி யொருவனுக்குப் பொதுவாகத் தன் சொந்த ஊரில் நல்மதிப்பும் நல்வேற்கையும் கிடைப்பது அரிது. எனினும் இவர் வளரப்பெற்ற ஊராகிய தஞ்சாவூரிலேயே இவருக்கு நற்சாட்சி கிடைத்தது வியக்கற்பாலது.

அந்த ஆண்டிலேயே மார்ச்சு மாதத்தில் தரங்கம்பாடி சபையார், வேதாகம சிரோமணி மகா ஞானக் கவிச் சக்கர வர்த்தியார் வேதநாயகத்திற்கு, சதுர் வைத்து, ஞான நொண்டி நாடகம் அரங்கேற்றக் கேட்டு சுவிசேட கவிராயர் என்று நாமந்தரித்து நற்சாட்சி நிருபமு மெழுதிக்கொடுத்து, பல்லக்கிலேற்றி ஊர் புகுதல் கொண்டாடினர். கையளித்த நற்சாட்சி பத்திரம் பின்வருமாறு:—

TRANQUEBAR.
15*th March*, 1808.

We, the undersigned Elders and Members of the Protestant Congregation of Tranquebar, do give the following good record of Vedanayagam Annaviar who is come here from Tanjore.

As the true light of God has illuminated this part of India, which was involved in darkness, many souls have been brought into the bosom of the Christian Church, but as the said Vedanayagam Annaviar, a Christian who was converted into Christianity by the late Rev. Mr. Schwartz and is now under the charge of the Reverend Mr. Kohlhoff and is come to us now. We in order to ascertain his abilities, assembled in a place and heard him repeat his composition wherein we found that most part of them are suitable instructions for the propagation of the Christian religion, and that he has taken great pains in composing them in witness whereof, we, hoping that the poetical pieces composed by the above said person, will not be disapproved by the intelligent persons who will hear them for the future, as well as by those that have heard them sung heretofore, do herewith testify, that we have not had the satisfactory pleasure of meeting with a person so well qualified for composing Divine songs since the spreading of the Gospel until this period.

Hence we denominated him Suvisesha Cave Royer, *i.e.*, Evangelical Poet, received and honoured him joyfully, favoured him with the Honourable Marks due to his knowledge, and gave him this paper with our signatures affixed thereto.

(Signed)

(1) John Daniel Pillay, King of Denmark's Head Tolk.*

---

* "ஞானாபரணப் பெட்டி", "பாடுபட்ட தியானம்", "ஞான முசிப்பாறும் மணிநேரம்" முதலிய அருமையான நூல்களை மொழி

(2) Devasagayam Pillay, King of Denmark's Head Tolk.

(3) Arulappa Pillay, King of Denmark's Malabar Judge.

(4) Solomon Pillay, King of Denmark's Malabar Judge.

(5) Christian Tiogo, Elder of the Congregation.

(6) Kurubadam Pillay, Elder of the Congregation.

(7) Swamidasa, Catechist.

(8) Rayappen Daniel Pillay, Writer to the Company of Pohold.

(9) Christian Pillay.

(10) Arulappa, Schoolmaster.

(11) Rayappa, Schoolmaster.

(12) Tiyagappa Pillay.

(13) Peter Manic Pillay.

(14) Daniel Tiogo.

(15) Devasagayam, Schoolmaster, son of late Savariraya, Catechist.

&c., &c., &c., &c.

மேற்கூறிய இரண்டு நகரங்களிலும் தனது இனிதிசைக்கும் வரம் விளைவித்த பெரும் புகழைச் சென்னை ராஜதானிக்குத் தலைநகரமாகிய சென்னைப்பட்டினத்திற்கே சென்று, அவணுள்ள கிறிஸ்தவ சபையைச் சந்திக்கவும் அவர்களுடைய நல் மதிப்பைப் பெறமுயலவும் வேதநாயக கவிச் சக்கர

---

பெயர்த்த பிரசித்திபெற்ற தோல்கு தானியேல் பிள்ளை (Christian Daniel Pillai) யின் இனத்தாராய் இருக்கலாம். தோல்கு தானியேல் பிள்ளை 1802-௵ மரித்தார். தோல்கு என்பது பாஷையை மொழிபெயர்ப்பவர் (Interpreter) என்ற அர்த்தம் உள்ள பதம். தரங்கை மிசியோன் சரித்திரம் 1706–1906 ஞா. சாமுவேல் ஐயர் இயற்றியது. 37–39-ம் பக்கங்கள் பார்க்க.

வர்த்தியை ஏவிற்று. எனவே அடுத்த ஆண்டு (1809) செப்றெம்பர் மாதத்தில் அவர் ஆங்குச் சென்று வெப்பேரித் தமிழ் கிறிஸ்து சமயச் சபையைச் சந்தித்ததாக அவருடைய சரித்திரத்தில் வாசிக்கின்றோம். கால் நடையாகவும், மாட்டுவண்டியிலும் அவர் தம் பாடகர்களுடன் சென்றார். இருப்புப் பாதையில்லாத அக்காலத்தில் வேதநாயகம் கவிச் சக்கர வர்த்தி வடபால் அத்துணை தூரம் பிரயாணமாகச் சென்று வெற்றியும் எய்தினராய்த் தஞ்சாவூர் மீண்டது வீரமான செயல் என்றே நாம் மதிக்கற்பாலது.

யாவருமறிந்து இன்புற வேண்டிய "சென்னைப்பட்டினப் பிரவேசம் அல்லது "பட்டினம் நொண்டி" என்ற அவரிசைத்த நூலால் அத்தலைநகரில் அவருக்கு ஆங்குள்ள சபையார் பாராட்டின நல்லேற்கையையும் உபசாரங்களையும் ஓராறு அறிந்துகோடல் எளிதாம். அந்நூலின் முகவுரை அவருக்கு நடந்த நல்லேற்கையைச் சுருக்கமாகக் கூறுகின்றது. அதாவது:

சென்னைப்பட்டினப் பிரவேசத்தில் நிறைவேறின முதன்மையான நிகழ்ச்சி தாம் யாத்த பெத்தலேங் குறவஞ்சியை அரங்கேற்றியதே. சுமார் 25 வயதிலே இந்நாடகத்தை இயற்றியருளினார். சென்னைப்பட்டினப் பிரவேசம் செய்தபொழுது வயது 34. பின்வரும் பாட்டுகள் "பெத்தலேங் குறவஞ்சியில்" அடங்கியுள்ளன.

**பெத்தலேங் குறவஞ்சி அரங்கேற்றுதல்**

1. சீர் எசுநாதனுக்குச் செயமங்களம் ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்

இது மங்களமானதால் கலியாணங்களைச் சிறப்பிக்கப் பாடுகின்றார்கள். 'ஞானக்கீர்த்தனை' திரட்டில் இதைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தார் கூட்டியிருக்கிறார்கள். இதில் செறிந்து நிற்கும் பண்ணும், இசைவளமும், பிராஸமும் எளிதில் எடுத்துரைக்க வொண்ணாது. (12-ம் பக்கம் பார்க்க.)

58. தேவசுதனை வேண்டடா மிகுந்
தேவபத்தியினில் மூண்டடா
சீவவிளக்கைத் தூண்டடா மாயச்
செகத்தைக்கடந்து தாண்டடா

வானவர்வரங்கள் வாங்கடா சால்மோன்
மண்டபத்திலே தூங்கடா
ஈனமனத்தை நீங்கடா செபத்
திடைவிடாமலே ஓங்கடா—

மானுவேலைத்தினம் பணியடா செப
மாலைகொண்டு வந்தங் கணியடா
ஞானமனத்தினைத் தணியடா முழு
ஞாலத்தையும்விடத் துணியடா

காற்றுள்ளபோதே தூற்றிக்கோ இரு
கண்ணுள்ளபோதே தோற்றிக்கோ
ஊற்றுள்ளபோதே யிறைத்துக்கோ திரு
வுரையுள்ளபோதே நிறைத்துக்கோ—

அதாவது

சுவிசேட கவிராய வேதநாயக சிரோமணியார் சென்னைப் பட்டினத்துக்குப் போனபோது, அவ்விடத்து சபைக்கு முகாமையாயிருந்த தஞ்சை அருளப்பபுத்திர முத்துசாமியா பிள்ளை சதுர்கூடி, 'பெத்தலேங் குறவஞ்சி' அரங்கேற்றக் கேட்டு சபையின் நாமத்தினாலே, அறுபது விராகன் விலையுள்ள நேர்த்தியான ஒரு புது பல்லக்கை* உண்டுபண்ணி சங். பெத்செரலத்தையர் (Rev. Beazold) அவர்கள் உத்தரவின்பேரில் அதை வேப்பேரியிலிருக்கும் கர்த்தருடைய தேவாலயத்தின் முகப்பிலே வைத்து, சபையில் முதலியவையான நாற்பது பேருடைய கையொப்பம் வைத்த நற்சாட்சி நிருபத்தோடேகூட 'ஞானதீபக் கவிராயர்' என்கிற பட்டமுங் கொடுத்து, பல்லக்கு வரிசையுங் கொடுத்தார்கள்.

1809ஆ புரட்டாசிமீ 19உ சபைக்கெல்லாம் பெரிய விருந்துபண்ணி, சந்தனம், பூமாலை, தாம்பூல முதலியவைகளுங் கொடுத்து, வேதநாயக சிரோமணி யென்ற ஞானதீபக்

* ஏககால சங்கீத வித்வானாக திருவையாற்றில் வசித்த ஸ்ரீ தியாகராஜாவும் சென்னைப்பட்டினத்திற் கடுத்த கோவூருக்கு யாத்திரையாகப் போனபோது, சுந்தரேச முதலியார் ஒரு பல்லக்கையும் ஒரு பையில் 1,000 ரூபாயையும் இனமாகக் கொடுத்ததாக அவரது சரித்திரத்தில் கூறியிருக்கிறது.

கவிராயரைப் பசுமை சால்வை முதலிய உயர்ந்த ஆடைகளைக்கொண்டு அணிவித்து, சொல்லப்பட்ட பல்லக்கிலேற்றி, தமிழ்ச் சபையார் வலங்கை சபையார் இரு தரத்தாரும் முன்னும் பின்னும் சூழ்ந்துவர, ஞானப்பாடல்கள் முழங்க, சகல விருதுகள் வாத்தியங்களோடும் வேப்பேரியைச் சுற்றி பட்டினப் பிரவேசம் நடாத்தினார்கள்.

இப்படியாக சென்னைப்பட்டினம் சபையார் செய்த பெரிய பட்டத்துக்கு, நன்றியறிதலாகச் சபையின் தலைமை பெற்ற முத்துசாமிப்பிள்ளை பேருக்கு வாமன் என்ற மாணாக்கன் பாடின பாவனையாக, நொண்டித்தரு சந்தமான இப்பாடலையுண்டாக்கி இதற்கு 'சென்னைப்பட்டினப் பிரவேசம்' எனப் பெயரிட்டார்.

இப்பாட்டில் 24 சரணங்கள் இருக்கின்றன. நல்ல பிராசங்கள் பல இடங்களில் அமைந்து செவிக்கு இன்பந்தருவன (பக்கங்கள் 159–163 பெத்தலேங் குறவஞ்சியில் பார்த்தறிந்து கொள்ளவும்).

**3.** வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
மானுவேலை வாழ்த்துகிறேன்.

இப்பாட்டில் 14 சரணங்கள் உள. கீழே வரும் முதன்மையான சரணங்கள் விழுமிய கருத்துக்கள் அடங்கியவை. 201–203-ம் பக்கம் பெத்தலேங் குறவஞ்சியில் வாசிக்கவும்.

வேதமறை சொன்னவனை
மேதினியின் முன்னவனை
வாதைவென்ற மன்னவனைத்
தன்னவனை வாழ்த்துகிறேன்.

ஆராயக்கூடாத
அகண்டதிரி யேகத்துவ
அம்பரனை நம்பரனைத்
தம்பமென வாழ்த்துகிறேன்.

விண்ணாற்றங் கரையானை
விரிபுபெத்தலை வரையானை
யெண்ணூழி காலமெல்லா
மிருப்பவனை வாழ்த்துகிறேன்.

4. பொன்னகர் கிறைவா புவியெலாம் புரப்பாய்
மன்னர் தங்குலத்தாய் வானவர்க் கிடத்தாய். மு.

(பக்கங்கள் 113, 116 பார்க்க)

5. வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் மூல்லைநிலத் தலைவர் வந்து தொழுவார்
நட்சேத்திர சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்
தானதர்ம மேழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்
சண்டாளப்பாவமெலா மண்டாது தடுப்பார்
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்
ஏகன் மனுவானவெல்லை எங்கள் மலையம்மே. மு.

இதில் 13 சரணங்கள் உள. பக்கங்கள் 77, 81 பார்க்க.

6. அள்ளியள்ளித் தருமமெல்லாஞ் செய்யுமிந்தக் கையே!
அருளான கிருபைநதி பெருகுமிந்தக்கையே
கள்ளமற்று உபகாரம் பெய்யுமிந்தக்கையே
கற்றவர்க்குப் பணிவிடைகள் செய்யுமிந்தக்கையே
தெள்ளு தமிழ் பாவலரைப் பரிசளிக்குங்கையே
சித்திரமாய் புஸ்தகங்கள் வைத்திருக்குங்கையே
வெள்ளைநிலைத் துகிலதனைக் கொய்துடுக்குங்கையே
மேலான நன்மையெல்லாம் விளையுமிந்தக்கையே. மு.

112-ம் பக்கம் பார்க்க

தமிழில் பாண்டித்தியம் பெற்றோருக்கு இந்த நாடகம் மீதூர இன்பத்தை விளைவிக்கும்.

தமிழ்க்கலையில் புலமை பெற்றோருக்குப் பெத்தலேங் குறவஞ்சியைக் கற்பது மீதூர இன்பம் பயந்து விம்மிதத்தையும் விளைவிக்குமென்க.

"சென்னைப்பட்டினப் பிரவேசம்" என்ற நூலில் பாராட்டப் பெற்ற சபை இற்றை ஞான்று வேப்பேரியில் திகழ்ந்து கொண்டிருக்கும் பரிசுத்த பவுல் தேவாலயத்தின் (St. Paul's Cathedral, Vepery) சபையாரல்ல. இக்கோவில்

எடுப்பிக்கப் பெற்ற ஆண்டு 1858.* இற்றைநாள் திகழும் ஆங்கிலேய சபையாரின் பரி. மத்தியாவின் (St. Matthias) தேவாலயத்தின் மனையின்கட் பிறிதொரு கோவில் இருந்த தாம். இது 1740-ம் ஆண்டில் பீட்ரஸ் உஸ்கன் என்றவோர் ஆர்மேனிய (Armenian) வியாபாரியின் முயற்சியினுல் கட்டப்பட்டது. இக்கோவிலில்தான் முதற்கண் வேதாகமத்தையும் செர்மன் ஞானப்பாட்டுகளையும் தமிழில் மொழி பெயர்த்த பெப்ரிசியுஸ் ஐயர் (J. P. Fabricius), கேரிக் ஐயர் (W. F. Gericre) முதலிய மிஷனெரிமார்—தமிழ், ஆங்கிலம், போர்த்துகீஸ், டச்சு என்ற பாஷைகளில் முறையே ஆராதனை நடத்திவருவாராயினர். இந்நான்கு பாஷைக்காரருக்கும் கோவில் பொதுவாகவிருந்தது. கவிச் சக்கரவர்த்தியார் சென்னைப்பட்டின பிரவேசம் செய்தகாலை அக்கோவிலுக்கு அதிகாரியாகவிருந்தவர் பெத்சொல்த்து ஐயர் (Rev. C. W. Poezold). வெப்பேரித் தமிழ் கிறிஸ்து சபை கேரிக் ஐயர் காலத்திலேயே பெருந்தொகை யெய்தின தென்பதை பௌவர் சாஸ்திரியார் (Dr. Henry Bower) வரைந்த "கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்" (1) என்ற புத்தகத்தில் கண்டுகொள்க. 1788-ம் ஆண்டில் வெப்பேரி சபையில் 17,716 தமிழ் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆகையால் 1809-ம் ஆண்டில் வேதநாயகக் கவிச்சக்கரவர்த்தி 'பெத்தலேங் குறவஞ்சி'யை அரங்கேற்றிய பொழுது கிறிஸ்தவர்களின் பெரிய கூட்டமொன்று குழுமி அவருக்கு எல்லைகடந்த பேருவகையை அளித்தார்கள். இருப்புப்பாதையில்லாத அக்காலத்திலே தலைநகரத்திற்கு யாத்திரை செய்து வெப்பேரி சபையைச் சந்தித்து நல்மதிப்புப் பெற்றதுவோர் அரிய செயலெனவே நாம் வியந்தும் விதந்து மோதற்பாலது.

இச்சபையார் அளித்த நற்சாட்சி பத்திரம் கீழே வரு மாறு:

---

* சென்னை அத்தியட்சாதீனத்தின் சகாப்த சரித்திரம் **1835–1935; 29**-ம் பக்கம் பார்க்க. எனவே சாஸ்திரியின் யாத்திரைக்கு **39** ஆண்டுகளுக்குப்பின் பரி. பவுல் தேவாலயம் எழுந்ததென்க.

MADRAS,
*19th September*, 1809.

We, the undersigned Elders and Members of the Protestant Congregation of Madras do hereby testify of Vedanayagam Pillay, son of the late Devasagayam Pillay of Tinnevelly as follows.

The true Lord God, who will have all men to be saved and to come to the knowledge of the truth, has brought many thousand souls to His true knowledge by His Holy Scriptures in this Coromandel Coast, and accordingly has also converted the said Vedanayagam Pillay of the Carala caste of Tinnevelly by the unwearied endeavours of the late Rev. Mr. Schwartz, who left him under the inspection of the Rev. Mr. Kohlhoff his successor, and now has made him to visit this place in these days, for which inestimable favour, praise be unto Him eternally.

We, having assembled in a place, heard him repeat for about two months many of the divine songs composed by him to the glory of the great creator and to the help and assistance of the Christian Church. By which we perceived that the 52 books of songs composed by him are all of them well revised according to the grammatical and (poetical) prosodical rules, and that even the most famous poets are not able to find any fault in them, and that such plain and elegant verses cannot be composed by any one unless he understands perfectly the contents of the Old and New Testament.

Hence we also perceived that he is not only worthy of the certificates already given to him by the Protestant congregations both of Tanjore and Tranquebar, but also that he is to be esteemed as an ornament to our congregation. As he has taken good deal of trouble in composing the above said 52 book of divine songs in various tunes, we are very much honoured and praised before the pagans, which is a great advantage to our children.

In order to strengthen this certificate we honoured him with the new title, viz. 'Njanadeeba Cave Royer' which signifies the poet who is the light of wisdom and made him sit in a valuable palankeen accompanied with the different sorts of musics according to the Malabar custom, carried him through the streets of the town and made him a present of the said palankeen, etc., as a token of respect.

(Signed)

(1) Muthusamy Pillay, son of the late Arulappa Pillay, Elder of the Congregation.
(2) Arulappa Pillay, native of Tranquebar.
(3) Arulappa Pillay, son of the late Royappa Pillay.
(4) Arulappa Pillay, native of Tanjore.
(5) Chinnasamy Pillay, son of Arulappa Pillay, native of Tanjore.
(6) Tiruchelvaraya, poet of Vepery
(7) Sundara Kavirayer, son of late Sockappa Kavirayer.
(8) Canagaraya, Catechist.
(9) Savarirayan, Catechist.
(10) Vedanayagam, Catechist, son of Malayappa, Clerk at Pullicadoo.
(11) Sockanada, Schoolmaster, son of Coroobada. Catechist.
(12) Aron Muday, son of Thomas, Catechist.
(13) Ambrose, Schoolmaster.
(14) Devaprasadam Mudaliar, son of Paul, Catechist.
(15) Samidasa, Schoolmaster.
(16) Njanapragasam Pillay, son of Seganada Pillay.
(17) Kittery Mudaly, son of Devasagaya Mudaly.
(18) Sokappa Mudaly, son of Marudanayaga, Catechist.
(19) Devasagaya Mudaly, son of Devasagaya Mudaly.
(20) Savariraya Pillay, English Schoolmaster.

(21) Phillip Pillay, son of Rayappen, Schoolmaster.
(22) Njanappa, Schoolmaster, his brother.
(23) Vedamanickam Pillay, son of Mottupa Pillay, Musician.
(24) Njanabaranam Pillay, son of Arulappa Pillay.
(25) Devasagayam Pillay, son of Arulanandam, Catechist.
(26) Abishagananda, Schoolmaster, son of Andrew, Schoolmaster.
(27) Samuel Mudaly, son of Malayappa Mudaly.
(28) Jesudasen, Schoolmaster, son of David Pillay.
(29) Royappa Pillay, son of Malayappa Pillay.
(30) Appavoo, son of Royappa Pillay.
(31) Njanapragasam Pillay, son of Joanes Pillay.
(32) Muthoo Chetty, son of Sevandapada Chetty.
(33) Nallatamby Pillay, son of Njanamuthoo Pillay.
(34) Devanesam Pillay, son of David, Catechist.
(35) Amurdappa Pillay, son of Royappa Pillay.
(36) Paukiam Pillay, son of Savarirayan of Cuddalore.
(37) Belavandaram Mudaly, son of Vedanadai Mudaly.
(38) Royappa Pillay, son of Swamy Pillay.
(39) Ayyasamy Pillay, son of Royappa Pillay.
(40) Devasigamony Pillay, son of Malayappa Pillay.

"பட்டணம் நொண்டியின்" 53–61 கண்ணிகள் முத்துசாமிப்பிள்ளை சாஸ்திரியாருக்குச் செய்த விருந்தை விஸ்தரிக்கிறது. அவையாவன:

பக்கம் 12

53. இவ்வித மிரண்டுமாதம் வைபோகமா
யேந்தல் முத்துசாமியுடன் வாழ்ந்திருக்கையில்
செய்விதமாய் விருந்துசெய்தார் ஈர்க்குச்சம்பா
சீரகச்சம்பா பிசானம் வாரிமணத்தான்.

54. சித்தரியான் குங்குமச்சம்பா குண்டைச்சம்பா
தில்லைநாயகத்தினுடைய னெல்வகை யெல்லாம்
புத்தியுடன் தெரிந்தெடுத்தே யுச்சிதமாய்ப்
போசனஞ்சமைத்துக் கந்த வாசமணக்க.

55. சுத்தப்பசுவினெய் வார்த்தார் காய்கறிகள்
சுட்ட அடையப்பம் பதினெட்டுவகையுங்
கொத்தவரைக்காயுஞ் சமைத்தார் கத்தரிக்காய்க்
கூட்டுக்கறி பண்ணினதிங் காட்டுதெந்தனே.

56. பாகல்க்காய்ப்பச்சடி செய்தார் பூசணிக்காய்
பச்சைமாங்காயு மெலிமிச்ச மூறுகாய்
நாகரிகவள்ளிக் கிழங்குஞ் சிறுகிழங்கு
நற்கருணை சீனிபிலாவற்க வகையும்.

57. எட்டுவகைப் பொரியல் செய்தார் தோசை வடை
யிட்டெலி பணியங்கொழுக்கட்டை புட்டுகள்
சுட்டதிரசங்களும் வைத்தார் வாழையிலைத்
தொன்னை பதினைந்து பண்ணி முன்னரவைத்து.

58. பஞ்சா முர்தங்கள் படைத்தார் பாயசங்கள்
பால் பழங்கற்கண்டு சீனி தாயங்கொள்ளாமல்
அஞ்சாறு விதமான இங்கிதவங்
காளத்து வாழைக்கனிகள் நீளத்திற்றந்தார்.

59. கொண்டமட்டுக்குஞ்சாப்பிட்டோம் வெள்ளிச்செம்பிற்
கொண்டுவந்து தீர்த்தந்தந்தார் உண்டபிறகு
திண்டுபோட்ட தூளிமெத்தையிற் கைவிளக்கிச்
சித்திரமாய்ப்போயிருந்தார் அத்தருணத்தில்.

60. சந்தனக் குழம்புபனிநீர் பூமாலை
தற்கோலம் வால்மிளகு கற்பூரமுங்
கந்தமிகுஞ் சாதிக்காயுங் கிராம் பேலங்
கட்டிவைத்த தாம்பூலப்பொட்டணங்களும்.

61. விந்தையுடனே கொடுத்தார் போட்டுக்கொண்டு
மெத்தையினிலே படுத்து நித்திரை செய்தார்
இந்த விதமறுபது நாள் ஆதமேவா
ளேதன்வனத்திருந்தாட்போற் பேதமன்றியே.

53-ம் கண்ணியினால் இரண்டுமாதம் சென்னைப்பட்டினத்தில் முத்துசாமிப்பிள்ளையின் உண்டாட்டல் கவிச்சக்கரவர்த்தியாருக்கு நடந்ததென்றறிகின்றோம். மேலும் 147-ம் கண்ணியினால் ஆறு மாத காலம் சென்னையில் தங்கியிருந்தாரென அறியவொல்லும். இனிய லௌகிக கவிகளும்

இயற்றுவதற்குரிய அறிய ஆற்றலுமிருந்ததுகொல்! இற்றை நாளில் பேசும் படங்களுக்கேற்றதாய் இந்நூல் காணப்படு கின்றது வெளிப்படை. தெய்வப்பெற்றி வாய்ந்த தனது வரத்தை நர துதிக்குப் பயன்படுத்தித் தான் சொத்துக்கார ஞக வழி பார்க்காமல், இறைவனுக்கு மகிமையாகவே பற்பல பாடல்களேயும், நாடகங்களேயும், நூல்களேயும் இயற்றினது கடவுளின் வழி நடத்துதல் என்பது இனிது புலனும்.

எலிசபெத்து அம்மாள் என்ற துரைசானியை இவர் சென்னையில் சந்தித்து அளவளாவிப் பெற்ற பரிசிலுக்குரிய கண்ணிகளும் லௌகிக நடையை ஒத்திருக்கின்றது. மேலும் இஃதில் ஆங்கில சொற்களைத் தமிழ் ஒலி பட்டாங்கு எழுதி செய்யுளில் இணைத்தது தன் சொந்த சமர்த்தேயாம். மேலும் இதில் இங்கிலீஷ் பதங்களைத் தமிழாக எழுதி கவியில் இணைத் தது இவருடைய சுய சாமர்த்தியமே.

பக்கம் 15

75. நின்றுகொண்டு சலாம் பண்ணினேம் வேரியூக்கம்
நீயென்றுர் பறஞ்சவுதுவேயம்மா ளென்றேஞ்
சென்றில் மான்கமியரென்றுர் வெல்போயிற்றுச்
சிற்றவுனென்றுரொரு ரெற்றினச்சார்மேல்.

76. வாற்றுயூவான்று சிஞ்ஞோரென்றுர் ஐவான்று
மாம்யூவர்பேவரென்றேந் தெம்போமென்றுர்
கூற்றுமாற்னிங்கென்று சொன்னேம் வென்வில்லியூ
கோவென்றுர் நெக்குஸ்று மன்றேயம்மாளென்றேம்.

77. பேமிசுப்போயிற்று யூவென்றுர் மாம்காட்
பிளேசியூவென்றேம் விரவலேசேசென்றுர்
சீமின்னிசுமிஸ் திரிசம்மாள் அவ்ஜசீ
சிங்கென்றுர் மெனிமெனிசங் பாடினேம்.

இதில் இருக்கும் ஆங்கில மொழிகளை ஆங்கிலத்தில் எழுதிப் பார்த்தால் கீழ்வருமாறு காணும்.

---

75. நின்றுகொண்டு சலாம் பண்ணினேம் "where you come"
நீ என்றுர். "from south way" அம்மாள் என்றேம்.
"gentleman, come here" என்றுர். "well poet"
"sit down" என்றுர் ஒரு rattan chair மேல்.

76. "What do you want, singer" என்றார் "I want"
"Ma'am, your favour" என்றோம். Then போம் என்றார்
"good morning" என்று சொன்னோம் "when will you
go" என்றார். 'next month" எ அம்மாளென்றோம்.

77. Famous poet you என்றார் ma'am, God
Bless you என்றோம் விரவலேசே சென்றார்
Symonds Mistrees அம்மாள் how I see
sing என்றார் Many many song பாடினோம்.

415-ம் கண்ணியினால் 34 பிராயத்துக்குள்ளே இவர் செய்த நூல்கள் 52 என்று காணலாம்.

பக்கம் 10

41. மெத்தமெத்தக் காண நினைத்தோம் நீர் செய்த
மேலாமைம் பித்திரண்டு நூலானதே
யெத்திசையும் பரம்பவென்றே தெய்வமுமை
யித்தலத்திலுங் கொணர்ந்து வைத்தா மென்றார்.

வேதநாயகம் கவிச்சக்கரவர்த்திக்கு 54 வயதிலேயே புகழ் கிளர்ந்து கிறிஸ்தவ சபைகளுடைய நல்மதிப்பையும் நற் சாட்சியையும் பெற்றார் என்ற உண்மைக்கு முன் உட்பிரிவு களில் எடுத்துக் காட்டிய நிகழ்ச்சிகளே வல்லிய சான்றாம்.

அவர் தஞ்சாவூர் மீண்டபின், "பேரின்பக் காதல்" என்றதோர் அருமையான நூலை 1813-ல் இயற்றினார். 1815-ம் ஆண்டில் இஃதைத் திருச்சிராப்புரியில் யாவருமறியு மாறு அரங்கேற்றினார். அவ்வூரிலுள்ள கிறிஸ்து சமய சபை யார் அத்திருநாளை மிகவும் ஆர்வத்துடனும் களிப்புடனும் கொண்டாடினார்கள். சிந்தாமணி வாசலுக்கெதிரே, நகரத்தின் வீதி*யொன்றிலே பெரும் பந்தல் அமைத்து, மரப்பீடமுண்டு பண்ணி, துரைமார் துரைசானிகளும் ஒருப்பட்டுக் குழுமி வந்திருந்து நாற்பத்தைந்து நாள் "பேரின்பக் காதல்" அரங் கேற்றக் கேட்டார்கள். சதுர் முடிந்து பட்டமளிக்குமன்று சங். போலே (Pohle) ஐயர் எல்லா நாட்டையர்மாருக்கும்

* இதுவோர் சிறப்புடைய அகன்ற தெரு. இவண் கண்ணைக் கவரும் பழமையான மாளிகைகள் பலவுள. இன்றுகாறும் நிற்கின்றது.

ஆங்குக் கொடுத்தவண்ணம் கவிச்சக்கரவர்த்திக்குத் தம் செலவினாலே அங்கி செய்து தரிப்பித்து "வேத சாஸ்திரியார்" என்ற பட்டப் பெயரை இவருக்கு அணிவித்து, நிறுவித் தரும் நிருபத்தை ஊரார் கேட்க, சபையாரெழுந்திருந்து நிற்க, அவண் தலைமையானவராயிருந்த ஞானப்பிரகாச உபதேசியார் எழுந்து உரத்த சத்தமாய் வாசித்து முடித்து இவர் கையிலே கொடுத்தார். அதுமுதல் இவர் "வேதநாயக சாஸ்திரி" என்று அழைக்கப்பட்டு வருவாராயினர். நிருபம் கீழ்வருமாறு:

"வேதநாயக வேத சாஸ்திரி" யென்ற பட்டப் பெயர் சூட்டப்பெற்றது

TRICHINOPOLY,
18*th June*, 1815.

We, the undersigned Protestant congregation in the charge of the Rev. Mr. Christian Pohle, the senior Missionary at Trichinopoly, do hereby declare and attest by this certificate, before all the congregations of India respecting Vedanayaga Ceromoniar, son of the catechist and poet Devasagayam Pillay of Carala caste of the Tinnevelly country, who was converted to Christianity from popery by the Venerable father, the Rev. Mr. Christian Frederick Swartz, the English Missionary at Tanjore and was brought up in the principles of Christianity under his protection and is now under the patronage of the Rev. Mr. John Casper Kohlhoff.

We are sending for him this year by letters rejoiced in perusing the papers of three certificates given to him by the Churches of Tanjore, Tranquebar and Madras together with the names mentioned therein calling him by the following titles as 1st, Vedasiromony Maha Njana Cavichacravartiar, 2nd, Evangelical Poet, 3rd, Njanadeeba Cavirayar, i.e., Poet of the Divine Light and erected a pandal in the highway of the city sufficient for the sadir and heard in the night times all the books he composed from May 3rd to June 18th. We heard

him sing in this our audience the two books entitled "Perinba Kadal" and "Sastra Kummy," which are books besides the 52 mentioned by the above stated congregation at three places but of these, the former has been composed to show the contents of the Bible and the method of Salvation wrought by Christ and the latter in order to warn of the ruin incurred by Christians who adopt the wordly fashion, we therefore thought to honour him with another new name, because he excelled in knowledge all the Hindus who are well versed through all-India.

Whereupon in the concluding day of this sadir preached on the doctrines of the last judgment, we formed a pedestal of boards in the midst of the pandal well decorated for the purpose and made him sit in the chair placed upon it and invested him with a white gown together with every privilege that can be possibly given and honoured him with the title Veda Sastriar, i.e., Divine Doctor and gave him this certificate in presence of the gentlemen and ladies and all the persons that are in the city attended him with Divine Songs in the brightness of blue lights.

Therefore we hope that all the congregations that see this certificate will, for the sake of Christ, receive him kindly and show him the honour and marks of distinction and respect which we have shown to him.

(Signed)

(1) Devasagaya, Catechist.
(2) Amurdappa Pillay.
(3) Sandappa Pillay, Writer, son of late Savarimuthoo, Catechist.
(4) Antonimuthoo Pillay.
(5) Paranjodia Pillay, Thukana Vauthiar.
(6) Thyagappa Pillay.
(7) Njanapragasam, Catechist.
(8) Jesudian, Catechist.

(9) Abraham, English Schoolmaster, Temporal servants.
(10) Isaace, Medical writer.
(11) Samuel, Butler.
(12) Amurdappa, Butler.
(13) Daniel, Dubash.
(14) Isaac Joshua.
(15) Eleazar, son of Innasimuthoo, Catechist.
(16) Alangaram.
(17) Titus, Butler.
(18) Arulappan, Butler.
(19) Visuvasam, Butler.
(20) Christian, Butler.

&c. &c. &c.

இவண் "சாஸ்திரி" என்ற சொல்லின் பிறப்பு அல்லது உற்பத்தி சற்று ஆராயற்பாலது. "சாத்திரம்" என்ற சொல் "சூத்திரம்" என்ற சொல்லின் திரிபுயென்பது மலைவிளக்கே யாம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தமிழ் இயல் முதல் நூலான தொல்காப்பியத்தின்கட் "சூத்திரம்" என்ற சொல் தாராளமாய் எடுத்தாளப்பட்டிருக்கின்றது காண்மின். "சாத்திரம்" வடமொழியாளரால் "சாஸ்திரம்" என மாறுபடுத்தப்பட்டுப் பின்னர் எப்பரிசு கலைகளுக்கும் "சாஸ்திரம்" என்ற சொல்லையே பொதுப் பெயராகக் கையாளவே அத்தகைய வழக்கிலிருந்து கலைகளைக் கற்றறிந்த அறிஞனுக்கு "சாஸ்திரி" எனச் சிறப்புப் பெயராக மாறி வழங்கலாயிற்று. ஆதலின் "சாஸ்திரியார்" என கிறிஸ்து மதத்தினரான இவரை நல்மதிப்புற அழைத்ததில் விபரீத இனிமையைக் காண்மின்! "சூத்திரம்" என்ற தூய தமிழ் இயல் சொல்லினின்று உற்பவித்த "சாத்திரம்" என்ற சொல் சமக்கிருதமாவது யாங்ஙனம்? இத்தகைய ஆராய்ச்சிகளைப் பிற ஒப்பான இடங்களிலும் அறிஞர் மேற்கொண்டு சிந்தித்து முடிபுகட்டுவது புலமையையளிக்குமென்பதற்கு ஐயமில்லை.

முதல் பக்கத்து சாஸ்திரியாரின் படத்தைப் பார்க்கவும். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவருடைய சுகிர்த விகிதங்கள்

கொடுக்கப்பட்டுள. அவரின் ஆயுளுக்குப்பின் "சாத்திரி" என்ற பட்டம் "சாஸ்திரி"யென மருவினதெனக் கொள்ளற் பாற்று. "கவிச்சக்கரவர்த்தி" முதலிய விழுமிய பட்டங்கள் யாவும் வழக்கிலின்றியொழிந்தன. "சாத்திரி" என்ற கல்விக் குரிய பட்டம் மாத்திரம் இன்றுகாறும் வழங்கிவருகின்றது கருதற்பாற்று. "வேதநாயக வேத சாத்திரி" என முறைவழி அழைக்கவேண்டியிருக்க, "வேதம்" என்ற பகுதி யேற் கனவே செல்வப் பெயரிலுள்ளமையின், "வேத சாத்திரி", "சாத்திரி" என எஞ்சி நின்றதுகொல்! "Doctor of Divinity" என்ற ஆங்கில பட்டத்தினுக்கு "வேதசாத்திரி" ஈடெனக் கொள்ளற்பாற்று.

இப்புவனத்தின் சிற்றின்பத்தில் மூழ்கியிருக்கின்ற பெயர் வழிகளுக்கு முக்தியின் பேரின்பத்தின் மாட்டுமேவல் கொள்ளுமாறு "பேரின்பக் காதல்" அவர்களைப் பரிந்து எழுப்பும் நூல் என மதித்துரைக்கத் தகும். இஃதில் உன்னிப்பு செலுத்தவேண்டியவை யாவன:

1, நிந்தாஸ்துதி. அதாவது நிந்திக்கும் பாவனையால் துதிப்பது.

91. தேவனைத் தேவனென்று
செப்புவதே மேன்மையல்லாற்
றேவனை மாந்தனென்று
செப்புவது செம்மையதோ.

92. சிருஷ்டியோ அல்லது நீ
சிருஷ்டிகனே செம்மறியின்
குட்டியோ மேய்க்குகின்ற
கோனே குண நிதியே.

இது செபமாலையில் கிடக்கும் நிந்தாஸ்துதிக்கு நிகரல்ல.

**திருச்சிராப்பள்ளி யில் "பேரின்பக் காதல்" அரங் கேற்றியது**

எனினும் இக்கண்ணிகள்தான் அதனுக்குக் கொழுகொம்பாக விருந்தது கொல்! கட வுளை இவ்வண்ணம் பராவுதல் ஐரோப்பிய கிறிஸ்தவ மக்களிடம் காணப்படவில்லை. இந்து பக்தர்களுக்குத் தனிச் சிறப்பாக வமைந்துள்ள வணக்கப் பரிசை மரீஇ கிறிஸ்து சமயத்திற்

கேற்றபடி சாஸ்திரியார் "நிந்தாஸ்துதி"* பாடினது தன் சொந்த கவித்திறனுமென்க. கற்றறிவாளர்க்கும் பக்தர்களுக்கும் இது கிறிஸ்துவின்மாட்டு சலுகையை ஊட்டி தெய்வ நட்பை வளஞ்செய்யும் பரிசு உடைத்து.

2. திருச்சபைத் தாலாட்டு: இதிலே அமைந்திருக்கும் அந்தாதிச் செய்யுள் நடை கவனிக்கற்பாற்று. சேர்மனிய ஞானப்பாட்டுகளின் இயல்பையும் போக்கையும் தோற்றுவிக்கும் உதாரணமாக:—

6. பார்ப்பாருனைத் தயவாய்ப்
   பார்த்துனது துக்கமெல்லாந்
தீர்ப்பாருனக்குத்
   தினந்தினமு நன்மைசெய்வார்.

7. நன்மைசெய்வார் தேற்றரவி
   னல்லாவியைத் தருவார்
தீன்மையெல்லா நீக்கிச்
   சுகத்திலுனை யாதரிப்பார்.

8. ஆதரிக்கக் கர்த்தருண்டு
   அற்புதனுர் காவலுண்டு
வேதன் துணையதுண்டு
   வித்தகனுர் தஞ்சமுண்டு.

9. தஞ்சமுண்டு காவலுக்குச்
   சம்மனசுண் டேசுவுட
ஐந்து காயத்தி
   னடைக்கலமுண் டெந்நாளும்.

---

* "வஞ்சகப் புகழ்ச்சி" என்ற பராவுதலின் இயல்பைக் குறித்து ஸ்ரீ ந. மு. வேங்கடசாமி நாட்டார் தாம் இயற்றிய "கட்டுரைத் திரட்டு" இரண்டாம் பகுதி பக்கம் 30, 31 இல் தெளிவுற எழுதியுள்ளார். இவண் ஒரே யொரு வரியைப் பெயர்த்துத் தருகின்றும்— "அடியார்கள் இவ்வாறு இறைவனை இகழ்வதுபோல நகை தோன்றப் பாடி இன்புறும் இயல்பு, தேவாரம், திருவாசகம் முதலியவற்றிலும் காணப்படுகிறது."

கண்ணிகள் 21–29 குழந்தைகளைத் தொட்டியிலே ...த்தித் தாலாட்டித் துயிலுவிக்க ஏற்றவை. தாய்மாருக்குக் குழந்தையைக் கொஞ்சி, தம் மனத்தை இளக்க சிறந்தவோர் உறுகருவியென மதித்துரைக்கலாமென்க. வாசிப்போருக்கு இவ்வுண்மை விளங்குமாறு அக்கண்ணிகள் சிலவற்றினை ஈண்டுப் பெயர்த்து எழுதியிருக்கிறது.

21. நித்திரைசெய் தெள்ளமிர்தே
நேசமுறும் பைங்கிளியே
சித்திரப்பூங் காவனததிற்
சென்றுவருங் கோகிலமே.

22. கோகிலமே தாராவே
கூவும் புறுவினமே
பாகுதனிலே சமைந்த
பஞ்சாமுதத் தேனே.

23. தேனே ரசமே
திகட்டாத செங்கரும்பே
மானேயென் கண்ணே
வயிரமணிப் பெட்டகமே.

3. பிரலாப ஒப்பாரி: ஞானப்பாட்டுகளினது இயல்பு ஒரே வழி இதிலும் சிற்சில கண்ணிகள்கட் வயங்கும். வேதநாயக சாஸ்திரியார் பிறந்த ஆண்டு 1774-ல் தான் பெப்ரிசியூஸ் ஐயரும் தாம் செர்மனிய பாடை*யிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த ஞானப்பாட்டுப் புத்தகத்தை (பிரார்த்தனைகள்) இயற்றியருளினர். அக்காலத்தில் இதை கிறிஸ்தவர்கள் கோவில் ஆராதனைகளிலும் இல்லத்தில் நடக்குங் குடும்ப செபங்களிலும் தாராளமாகக் கையாண்டு வந்தார்கள். வேதநாயக சாஸ்திரியாரின் பின்னடியார்

---

* பெப்ரிசியூஸ் மொழிபெயர்த்த 235-ம் ஞானப்பாட்டுடன் ("நீ சாய்ந்து தூங்கு பிள்ளையே") வாசிப்போர் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவும். மேலும், சி. சுப்பிரமணிய பாரதியார் "பாப்பாப் பாட்டு" சுவாமி சுத்தானந்த பாரதியார் "தாலாட்டு" முதலிய பாட்டுகளும் இவண் கவனிக்கத்தக்கவையாம்.

இன்றுகாறும் பெப்ரிசியூஸ் இயற்றின ஞானப்பாட்டுகளையும் பராவுதலுக்குப் பயன்படுத்துகின்றார்கள். அப்பாட்டுகளிலே பொலிவுறும் உயிரும் உணர்வும் சாஸ்திரியாரினது நூல்களில் சிற்சிலவிடங்களில் அமைந்து தலைமையான விழுமியக் கருத்துக்களை எடுத்துக் காட்டுவன. திருட்டாந்தமாக:

திருச்சிராப்பள்ளியில் அற்றைநாள் மிசியோனரியாக அமர்ந்திருந்த போலே ஐயரும் (Rev. Pohle) தன் பொறுப்பில் யதேச்சையாய் நற்சாட்சி பத்திரமொன்று கையளித்தார். அஃதாவது:

The certificate of Vedanayaga Shastree given by the Rev. Mr. Christian Pohle.

The bearer of this by name Vedanayagam, a Christian of the Protestant Church, and a Tamil Poet of considerable talents, has at the undermentioned place and in the course of his stay in the same from the 22nd of April last to this date for one full month and one half publicly given his lessons every evening in Prose and Poetry on the suffering of our Saviour Jesus Christ, etc., and has been heard with applause by persons of all ranks and people of all persuasions here assembled in great multitudes. His behaviour also during his stay here has been commendable. Witness my hand.

TRICHINOPOLY,
*July* 31*st* 1815.

(Sd.) CHRISTIAN POHLE,

*Senior Missionary of the Honourable Society*
*for Promoting Christian Knowledge*
*and Officiating Chaplain.*

இறுதியில் 1815, 1818 ஆண்டுகளில் தஞ்சாவூர் சபையாருக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை நாம் அறிந்துகொள்ள வேண்டியதோர் முதன்மையான காரியம். இவ்வுடன்படிக்கையினால்தானே இன்று

காறும் அச்சபையார் சாஸ்திரியாரின் வாரிசுகளை ஆதரித்து அவர்களின் தேவ ஊழியத்தை உகந்து பாராட்டிக்கொண்டு வருகின்றனர். இதற்கு ஆதாரமாக அச்சபையார் எழுதிக் கொடுத்த பத்திரம் (முச்சலிக்கை) கீழ்வருமாறு:—

"கிறிஸ்து பிறந்த 1818-ம்ஹு புரட்டாசிமீ 1-மஉ தஞ்சை நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலுமிருக்கும், இதற்கடியிற் கையொப்பம் வைத்த நாங்கள், மேற்படி ஊரி லிருக்கும், திருநெல்வேலித் தேவசகாயம் பிள்ளையவர்கள் குமாரர் சுவிசேட கவிராயராகிய வேதநாயக சாஸ்திரியார வர்களுக்கு எழுதிக்கொடுத்த மாருத உடன்படிக்கையாகிய தரும சாதனப் பட்டயமென்னவென்றால்,

"தஞ்சை நகரத்தில் மகாகனம் பொருந்திய சுவார்ச்சையர் அவர்கள் நாள்முதல் சங்கிக்கப்படத்தக்க கோலோப்பு அய்ய ரவர்கள் இதுவரைக்கும், ஏறக்குறைய முப்பது வருஷ காலமாய்த் தாங்கள் இவ்விடத்திலிருந்து, வேதாகமங்களை யெல்லாம் ஆராய்ந்து, பழையேற்பாடு புதியேற்பாடுகளிலடங் கிய அனேக நியாயங்களைத் தெரிந்தெடுத்து அவைகளை யெங்களுக்கும் எங்கள் பின்னடியாருக்கு முதவியாக, மகா அலங்கிரதமு மதுரமுமான, அனேகம் பிரபந்தங்களாகப் பாடி கர்த்தருடைய சகல பண்டிகைகளையும், எங்கள் சந்தோஷ நாட்களையுஞ் சிறப்பித்து, எங்களுக்கு மனமகிழ்ச் சியு மெழுப்புதலு முண்டாகும்படிக்குத் தாங்கள் பட்ட பெரிய பிரயாசத்துக்காகவும், இதுவுமல்லாமல் எங்களில் அனேகருக்கு மெங்கள் பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுத்த தங்கள் கருத்தான பட்சத்துக்கு, நன்றியறிதலாகவுந், தங்க ளுக்கு எங்களாற் கூடினமட்டும் ஒரு சந்தோஷத்தைச் செய்யத் தீர்மானம்பண்ணினோம்.

"நாங்கள் பண்ணின இந்தத் தீர்மானம், எங்கள் மனதுக்கு திருப்தியானதல்ல. ஏனென்றால் கர்த்தரெங்களுக்குக் கொடுத்திருந்தால், தங்களுக்குக் கிராமம் பூமி விட்டுக்கொடுத் துப் பெரிய வெகுமானங்களையெல்லாம் செய்து, தங்களைப் பெரிய சீமானும் பாக்கியவானுமாக்க, எங்களெல்லாருக்கு மாசையுண்டு.

"ஆனலிப்போதிருக்கிற காலத்துக்குத் தக்கதாய் நாங்கள் பண்ணின தீர்மானத்தை, தாங்கள் சந்தோஷமா யொப்புக் கொள்வீர்களென்று நம்புகிறேம்.

"அதென்னவென்றல், தாங்க ளெங்களுக் கனுப்பிய ஞானப்பாட்டகரின் பன்னிருஞாயப் புஸ்தகத்தின்படியே, தங்களுக்குந் தங்கள் தருமச் செலவுகளுக்கும் தங்கள் பாடகர்களுக்கு முதவியாக எங்கள் சந்தோஷத்தின்படி, எங்களுக்கு மனப்பூர்வமானது இவ்வளவு செய்வோமென் கிறதை, இதற்கடியிலே, எங்கள் சொந்தக் கையெழுத்தாக எழுதியிருக்கிறபடியினலே, அதிலெழுதப்பட்டதை மாதாந் திரந் தாங்களனுப்புகிற மனுஷர் வசத்திலே யாதொரு தடையுமன்றிச் சந்தோஷத்தோடே செலுத்தி வைத்துப் போடுகிறேம்.

"ஆனபடியினலே நாங்கள் வெகுசனங் கூடி செய்கிற இந்தத் தருமத்துக்கு யாதொருத்தரும் வித்தியா சம்பண்ண மாட்டார்கள். அப்படி வித்தியாசம் பண்ணுகிறவர்களுண்டா ஞல், அவர்களுக்குத் தங்கள் பாடல்களுக்கு நாயனுயிருக் கிற சேனைகளின் கர்த்தரும், இசரவேலின் ராசாவுமாகிய இயேசுகிறிஸ்துவும் வித்தியாசம் பண்ணுவார். ஆனதினலே யாதொருத்தருடைய கட்டாயமில்லாமல் எங்கள் மனப் பூர்வமாய்ச் சம்மதித்துச் சத்தியப்பிரகாரமாக எழுதிக் கொடுத்த இந்த மாருத உடன்படிக்கையாகிய தருமசாதனப் பட்டயத்தின்படியே, நீதிமான்க ளுயிர்த்தெழுதல் வரைக் கும் புத்திர பாரம்பரைபா யெங்களுடைய, உங்கள் சுதந் தரத்தைப்பற்றி யனுபவித்துக்கொண்டு, எங்களுக்கு மெங் கள் பின்னடியாராகிய எங்கள் சந்ததியாருக்கும், நன்மை யுண்டாகத்தக்கதாக, திரியேக பராபர வஸ்துவாகிய இயேசு ராசாவை, சகலவித ராகங்களுடனே பாடிக் கீர்த்தனம் பண்ணிக்கொண்டு, சுகத்திலே யிருப்பீர்களாகவும்.

"இப்படிக்கு நாங்களனைவரு மெங்கள் மனராசியில் சம் மதித்துக் கிறிஸ்து பிறந்த 1815-ம் வருஷம் தை மாதம் 1-ந் தேதி எழுதிக்கொடுத்த மாருத உடன்படிக்கையாகிய தரும சாதனப் பட்டயத்தை மறுபடியு மிந்த 1818-ம் வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதி புதுப்பித்துச் செம்மைப்படுத்தி

சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக் கெழுதிக் கொடுத்தோம்.''

## அத்தியாயம் 5

### யாழ்ப்பாணத்திற்குச் செல்லல்

1811-ம் ஆண்டில் குடும்பத்துடன் இராமநாட்டின் வழியாய் யாழ்ப்பாணத்திற்குப் பயணமாகப் புறப்பட்டுப் போனர். இராமேஸ்வரம் தீவிலுள்ள தோணித்துறையை அணுகினர். அவ்வமயம் வடகாற்று விழுந்துபோனதினாலே தோணி ஓட்ட நீடித்தது. தன் யாத்திரைச் செலவுக்காகச் சேமித்து வைத்திருந்த பணமெல்லாஞ் செலவழிந்துபோயிற்று. இவர் எக்காலமும் இறைவனை இறைஞ்சி நம்பிப் பிழைக்கிறவரானபடியால், கடவுள்பேரிலோர் ஆசுகவியை இசைத்து வடதிசைபால் நோக்கிப் பாடினர்.

**ஆசுகவி யொன்று பாடி காற்றை வருவித்தது**

(கலித்துறை)

''சடகாத் திரத்துயரால் மெலிந்தே தமியேனுமவ
கடகாத் திரைக்கடல் யாட்பாணமேறிக் கடக்கவென்றல்
நடகாத் துற்பான்மையி னலோர்கிழமை நலிந்துநின்றேம்.
வடகாத் தருள்திரியேகா என்பங்கில் வளர்ந்தவனே.''

இக்கவியை இசைத்துப் பாடிக்கொண்டிருக்கின்றுழி, காற்று எழும்பி வீசினது. தோணி ஓட்டுகிறவன் வியப்புற்று இவரைத் துரிதப்படுத்தித் தோணியிலேற்றி யாழ்ப்பாணத்துக் கரைகொண்டு போந்து சேர்த்தான். அவ்வமயம் இவரிடம் பணமொன்று மாத்திரம் இருந்ததாம். கரையினின்றுகொண்டு, பணத்தைக் கையிலேந்தி யாவருமறிய வானத்துக்குக் காட்டி, ''எல்லாம் வல்ல இறைவனே! இந்த வொரு வெள்ளிப்பணமாத்திரம் என்னிடமிருக்கிறது. இதை நான் எந்தக் கூலிக்காரனுக்குக் கொடுக்கலாம்? முதன் முதல் என் நண்பன் வீட்டுக்குப் போய் அவரை யாதொன்றையுங் கேட்பது வெட்கமாயிருக்கின்றது. உம்மையே நம்பியிருக்கிறேன், என்னைக் கைவிடாதேயும்'' என்று செபித்துக் கொண்டு, பல்லக்கிலேறி, யாழ்ப்பாணத்து வூரிலே தன்

நண்பன் Rev. கிறிஸ்தியான் தாவீதுப் பாதிரியார் வீட்டுக்குப் போயிறங்கினர். இவரைக் காணவும் பேருவகையுடன் நல்வரவு கூறி, கூலிக்காரரைப் பார்த்து, "கூலிக்காரர் யாவரும் என்னிடம் வாருங்கள். அவரை நீங்கள் ஒன்றுங் கேட்கக்கூடாது" யெனத் தடுத்து பாதிரியார் தம் பையைத் திறந்து கூலி கொடுத்தனுப்பினர். சாஸ்திரியார் பேரிரும் பூதுகொண்டு நாலைந்து நாள் அவர் வீட்டில் தங்கியிருந்து பின்னர் வாடகைக்கு வீடு அமர்த்திக்கொண்டு சில மாதங்களை யாழ்ப்பாணத்தில் செலவிட்டார்.

தன்னுடைய கீர்த்தனைகளை இனிது பாடிக்கொண்டும் கிறிஸ்துமத போதனைகளைத் தழைத்து மிளிரச்செய்வதற்கு வேதுகரமான பஜனைகளை நடாத்திக்கொண்டும் அவண் நல் மதிப்பும் விழுத்திருவும் பெற்றனர். இன்றுகாறும் யாழ்ப்பாணத்தார் சாஸ்திரியாரின் அரிய சந்திப்பை மறவாமல் அவருடைய நூல்களை ஆழ்ந்தறிந்து கற்று அவற்றைப் பெரிதும் பாராட்டிவரும் அவர்களது மனப்பான்மையே எம் கூற்றை மெய்ப்பிக்கச் சாலும்.

ஊர் வண்ணனிடத்தில் இவரும் இவருடன் போனவர்களும் தங்கள் உடைகளை வெளுக்கக் கொடுத்தார்கள். இரவில் திருடன் வண்ணன் வீட்டினுட் புகுந்து எல்லாத் துணிகளையுந் திருடிக்கொண்டு போய்விட்டான். மறுநாட் காலையில் வண்ணன் வந்து மனம் நொந்து களவுபோனதை அறிவிக்க, "ஏண்டா பொய் சொல்லுகிறுய்?" என்று அவர் கடிந்தபோது, அவன்: "ஐயா, கதிர்காமர் மேலே ஆணைப் படிக்குத் திருடன் கொண்டுபோனது உள்ளது" என்று உறுதியாய் மொழிந்தான். புறத்திலே விசாரித்து வண்ணன் சொல்லுவது உண்மையேயெனக் கண்டுகொண்டார். அவ்

**இராமசாமியா பிள்ளையென்ற வோர் சேம்மலி ஞல் சாத்திரியார் சமய சகாயம் பேற்றது**

அவாய்நிலையில் மனம் புழுங்கி இறைவனை நோக்கி: "எங்களுடைய உடுப்புக்களெல்லாம் களவு போயின. என்னுடன் வந்தவர்களுக்கும் எனக்கும் இப்பொழுது உடை கொடுத்து நாங்கள் மனவமைதியோடு கிறிஸ்து சமய ஊழியத்தின் பொருட்டு வெளிப்படக் கிருபை செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து பிரார்த்தனை பாடி

காலைக் குடும்ப செபத்தை முடித்த பின்னர், இரண்டு மூன்று ஞானக் கீர்த்தனைகளைத் தமியனுய்ப் பாடிக்கொண்டிருந்தாராம். அவ்வமயத்தில் அத்தெரு வழியாய்ப் போய்க்கொண்டிருந்த புகையிலைக் குத்தகையெடுத்த இராமசாமியா பிள்ளை யென்றவோர் இந்து வியாபாரி வாசலில் வந்து நின்று, "ஐயா, உள்ளே வந்து கேட்க உத்தரவுண்டோ?" என்ருர். "சுகமே வரலாம்" என்று உள்ளே அழைத்தார். அச்செம்மலை இவர் முன் கண்டிருந்ததில்லை. சற்றுநேரம் கீர்த்தனைகளைக் கேட்டுக்கொண்டிருந்தபின், "நீங்கள் துக்க முகமாகவிருக்கக் காரணமென்ன?"வென வினவினர். உடைகள் களவுபோன செய்தியைச் சாஸ்திரியார் அறிவித்தார். அச்செம்மல் தன்னுடன் வந்திருந்த ஏவலாளனெருவனை யனுப்பி விரைவில் இரண்டு சேலைகளை எடுத்துவரக் கற்பித்து, "பட்டுச் சேலையை உங்கள் மனைவிக்கும், மற்றதை உங்கள் வேலைக்காரிக்கும் கொடுங்கள்" என்று கூறி, மேலுந் தன் பணச் சாக்கிலிருந்து ஐம்பது இரையால்* அடங்கிய பாங்கி நோட்டொன்று எடுத்துக் கொடுத்து; "உங்களுக்குச் சம்மதியான உடைகளை வாங்கிக்கொண்டு போதாதேபோனல் என்னைக் கேளுங்கள்" என்று சாஸ்திரியாரின் மனங்குளிரச் சொல்லி விடைபெற்றுப் போனராம். "நெஞ்சே நீ கலங்காதே" (எண். 232—கிறிஸ்தவ கீர்த்தனைகள், 1950) என்ற கீர்த்தனை யாழ்ப்பாணத்தில்தான் இசைக்கப்பெற்றது. இதில் "மனையோடு கொள்ளை போனலும்", "பட்டயம் பஞ்சம் வந்தாலும்" என்ற வரிகள் கவனிக்கற்பாலன.

அற்றை ஞான்று அந்நாட்டில் கொடிய பஞ்சமாயிருந்தது. ஒரு †பூவராகனுக்கு மூன்று படி அரிசி விற்றதாம். இவரையும் இவருடன் போனவர்களையும் யாதொரு குறைவுபாடுமின்றி கடவுள் பராமரித்தார். பல்வகை அல்லல் உற்றுழி சாத்திரியார் எதிர்பாராதவண்ணமாய் இறைவன் அவருக்குத் துணைசெய்து கிறிஸ்தவ வாழ்க்கையினூக்கங்

---

* 'இரையால்'—இவற்றிற்கு ஈடான ரூபாய் நாணயத்தின் தொகை திட்டமாகத் தெரியவில்லை.

† = ரூ. 3-8-0.



H. H. SERFOGEE

கெடாமல் அருளும் நலனும் ஈய, நிலைவரமும் மனவமைதி யும் பெற்று மீதூர ஒண்மையாளராக விளங்குவாராயினர் என நாம் ஒப்புக்கோடலுக்கு அவர் யாழ்ப்பாணத்தில் நடாத்தின அற்புத சீவியம் சிறந்ததோர் எடுத்துக்காட் டெனக் கொள்ளற்பாற்று.

## அத்தியாயம் 6

### His Highness சரபோஜி மகாராஜாவுக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் இருந்த இணக்கமும் பின் நேரிட்ட மனத்தாபமும்.

1829-ம் ஆண்டில் சாஸ்திரியார் சரபோஜி மகாராசாவின் மாட்டு வாழ்த்துதலொன்று பாடி அவரைக் கண்டுகொண் டார். அரசன் இவருக்கு நல்லேற்கையளித்து தமக்கு அண்மையில் வீற்றிருக்கச் செய்து, சால்வை போர்த்தி, சங். போலே ஐயர் கொடுத்தவண்ணம் வெள்ளை நிலை அங்கி யொன்று தைத்துக் கொடுத்து, மாதச் சம்பளமும் நியமித் தார். மாதத்தில் இரண்டு நாட்களில் அரசனைக் கண்டு தானியற்றிய நூல்களைத் திறம்பட விளக்கிக் காட்டுவார். புலவரானபடியினாலே அரசனின் போசலை (Bhonsle) வங்கிஷ சரித்திரத்தைச் செய்யுள் நடையாக இசைத்துக் கொடுத்தாராம். அரசனைச் சந்திக்கும் சமயங்களில் இரு வருக்கும் உரையாடல் நடைபெறும். ஒரு சிறிதும் பயமின் றித் திறமையுடன் வலியுறுத்தி எதிர் ஞாயங் கொடுத்து சாஸ்திரியார் பேசுவார். இவர் நவிலும் ஞாயங்களுக்காக அகக் களிப்பும் விம்மிதமும் கொள்வார். ஒருநாள் அரசன் இவரோடு: "நீர் பேசுகிறதைப் பார்த்தால் நம்மை விழத் தட்டிப் போடுவீர்போல் இருக்கின்றது" எனச் சிறப்பித்துக் கூறினாராம்.

சாஸ்திரியார் ஒருமுறை "நோவாவின் கப்பல் பாட்டு" என்றவோர் நூலை இயற்றி அரசனின் முந்நிலையில் அரங் கேற்றினர். மகாராசா மகிழ்ந்து நூறு வராகன் பரிசிலாக அளித்தாராம். எனினும் அச்சமயத்தில் இயைபுடைமை யிலாக் கருத்தொன்றை அரசன் இயம்பவே, சாஸ்திரியாரின்

மனம் புண்பட்டது. "நீர் சம்பளம் வாங்குகிறீர், எச்சரிக்கையாயிரும்; யாதொருவரையும் உம்முடைய மார்க்கத்தில் இழுத்துக்கொள்ளாதேயும்" என அவர் எதிர்பாராத வண்ணம் மொழிந்தாராம். அதற்குச் சாஸ்திரியார் திட்குதலுற்றுலும், "நான் ஞானஸ்நானம் கொடுக்கிறவனல்ல. அதற்காகக் குருக்கள் இருக்கிருர்கள். நான் புத்திமாத்திரஞ் சொல்லுவேன்" என விடை பகர்ந்தாராம். ஆகிலும் மகாராசா நவின்றது இவருடைய மனச்சாட்சிக்கு மிக்க இடை ஊருக விருந்தது கொல்! அவர் கண்ணீர் உகுத்து, "கடவுள் எனக்குத் தம்மைப் பாடுகிற வரத்தையுங் கொடுத்து இத்தாரம் மனுவாக்கினுர். இப்போதும் நானிந்த அற்பப்பொருளுக்காக அவரைப் பாடாமலும் பிரசங்கியாமலும் இப்புனத்திலிருந்து பயனென்ன? இன்று இரவிலே என்னைப் பாம்பு கடித்து நான் மாண்டால், இராசாவுடைய பரிசில் எனக்கென்னத்துக்குதவும்" என உள்ளி, அரசன் தந்த பரிசிலை அவரிடம் தனக்கு வேண்டாம் என்று மறுத்துக் கொடுத்துவிடக் கொண்டுபோனுர். அத்தறுவாயில் இராசா அரண்மனைக்குள் சென்றுர். மன்றத்தில் மந்திரி பாவாப் பண்டிதர் மாத்திரமிருந்தாராம். இவருடைய சமய வைராக்கியத்தை அவர் உணர்ந்து, "உம்முடைய சுவாமியை நீர் பிரசங்கிக்கவேண்டாமென்று மகாராசா கட்டளையிடவில்லை. யாதொருவரையும் இழுக்காதேயுமென்று மாத்திரம் சொன்னுர். நீர் சுகமே உம்முடைய சுவாமியைப் பிரசங்கித்துக்கொண்டிரும். அதற்குத் தடையில்லை" யென உறுதி பயப்பன கூறி, பரிசிலை மாணுக்கனெருவனிடம் கொடுத்து இவரோடுகூடப் போய் வீட்டிலே கொடுத்துவரும்படி கற்பித்தாராம். அரச சபையிலுள்ள பிராமணரும் சாஸ்திரிகளும் இவர் மகாராசாவுடன் சரிசமானமாய்ப் பேசுகிருரென அழுக்காறுற்றனர்.

**சரபோஜி மன்னன் அளித்த பரிசில்**

மற்றுமோர் நாளிலே மகாராசா பிரகதீஸ்வரன் பேரிலே ஒரு பாடல் இசைக்கச் சொன்னதின் நிமித்தமோர் உரையாடல் நடந்து அதை சாஸ்திரியார் தம்முடைய தினவர்த்தமான புத்தகத்தில் குறித்திருந்தவாறு இவண் பெயர்த்தெழுதியிருக்கின்றது.

"மகாராசா அவர்கள், நான் பாடின பெத்தலேங் குற வஞ்சியைக் கேட்டுத் தம்முட தேவனுகிய பிரகதீசுரர் பேரிலே அப்படி ஒரு குறவஞ்சி பாடச்சொன்னுர். நானடுக் கத்தோடே பராபரனைத் தவிர வேறென்றையும் பாடக்கூடா தென்றேன். அதற்கு மகாராசா நான் சம்பளங்கொடுக்கிற படியினுலே நான் சொன்ன வேலையை நீர் செய்யவேண்டிய தில்லையா வென்றுர். அதற்கு நான் ஆண்டவனே, நான் சங். தகப்பனுர் சுவார்ச்சையரவர்களால் வளர்க்கப்பட்ட சீஷனுயிருக்கிறேன். எனக்கிப்போது 56 பிராயமாகுது. இதுமட்டும் பராபர னென்னைப் பராமரித்து நடத்திவந்தார். இப்போ சபையிலே வந்த புது மிசியோனிமார்கள் உண்டு பண்ணின சாதி வேற்றுமையின் கலாபத்தினுலே தங்கள் சமுகத்திலே வந்தேன். இப்போது நான் என் சிருஷ்டி கருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறதினுலே நான் அவருக்குச் சத்துருவாய்ப் போவேன். அதைப் பார்க்கத் தாங்களென்னைத் தள் ளிப்போடுகிறதா யிருந்தால், தங்கள் சித்தமென்றேன். அதற்கு மகாராசா, அதை யெப்படி நீர் பாவமென்று சொல்ல லாம். அது குற்றமாவென்றுர். அதற்கு நான், மகாராசாவே நான் தங்களாலே போஷிக்கப்பட்டு சில வருஷத்துக்குப்பிறகு தங்களைவிட்டு இன்னெரு இராசா வைப் போய்ச் சேர்ந்துகொண்டால் தங்களுக்குப் பிரியப் படுவேனே, தாங்களென்னை சத்துருவா யெண்ணமாட்டீர் களா? அப்படிப்போல சங். தகப்பனுர் சுவார்ச்சையரவர்கள் திருநெல்வேலிக்கு வந்து என்னைப் பன்னிரண்டு பிராயத்திலே கூட்டிவந்து இதுவரைக்கும் எனக்கு அன்ன வஸ்திரங் கொடுத்து ஆதரித்து, எனக்கு ஓதுவித்த உபதேசத் திற்கு விரோதமான காரியத்தை இப்போது நான் செய்கிற போது நான் அவருக்குச் சத்துருவாய்ப் போகமாட்டேனு வென்றேன்.

**வேதநாயக சாஸ்திரியார் பிரகதீஸ்வரன்மீது குறவஞ்சியொன்று பாட மறுத்தது**

அதற்கு மகாராசா, நீர் குறவஞ்சி பாடாதேபோனுல் போகட்டும். ஒரு காப்பு* மாத்திரம் பிள்ளையார்பேரிலே

---

* காப்பு = கடவுள் வாழ்த்து.

யுண்டாக்கிக் கொடுமென்று சொன்னார். அதற்கு நான்: "குறவஞ்சி பாடாமல் ஒரு சின்ன பாட்டுமாத்திரம் பாடினு லும் பின்னையும் எப்படி நான் கர்த்தருடைய பார்வையிலே நேரஸ்தனுய்ப்போவேன். அப்படிச் செய்யக்கூடாது, மகா ராசாவே!" யென்றேன். அப்போ மகாராசா என்னைப் பார்த்து, "உம்முடைய இயேசுநாதர்பேரிலே நாங்களொரு பாட்டுப் பாடுகிறோம். நீர் எப்படிச் சொன்னீரோ அப்படி யெல்லாம் வைத்து இன்னம் அதிகமாகவும் பாடித் தரு கிறோம். அதன்பிறகாகிலும் நீர் எங்கள் பிள்ளையார்பேரிலே ஒரு காப்பு பாடிக் கொடுக்கலாமே" யென்றார். அதற்கு நான்: "மகாராசாவே, நீங்கள் இயேசுநாதர்பேரிலே பாடுவீர்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படி நீங்கள் பாடினுலும், நான் பிள்ளையாரைப் பாடக்கூடாது" என்றேன். அப் பொழுது மகாராசாவுக்கு ஆயாசமுண்டாகித் தம்முடைய சங்கத்தாரைப்பார்த்து: "என்னகாணும், இவருடைய சுவாமியின் பேரிலே பாடியிருக்கிற பாடல்களை நாங்கள் கேட்கவேணுமாம். நாங்கள் அவருடைய சுவாமியின்பே ரிலே பாடினுலும் அவர் எங்கள் சுவாமியின்பேரிலே பாடக் கூடாதாம். இதெப்படி இருக்கிறது?" என்றார். அதற்கவர்கள்: "சும்மா பாடுங்காணும், மகாராசாவின் வார்த்தையைத் தட்டாதேயும்" என்றார்கள்.

அதற்கு நான், "மகாராசாவே, தங்கள் பணிவிடைக் காரர்போல் என்னைப் பாவித்து, என்னை நடத்தவேண்டிய தில்லை. எத்தனை யானை, குதிரை, மாடுகள் முதலான மிருக சீவன்களை வைத்து ஆதரிக்கிறீர்கள். ஒரு யானைக்கு மாதம் எம்மாத்திரமோ செல்லுது. அப்படி யென்னையும் ஒரு யானையாக நினைத்து நடத்தச் சித்தமானுல் தங்கள் மனது. அல்லவென்று அனுப்பிவிட்டாலும் தங்கள் சித்தம். இனி யெல்லாரும் என்னை விரோதித்து தங்களுக்கு ஆயா சத்தை யுண்டாக்குவார்கள். பிழைக்கலாமென்று வந்த இடத்திலே இந்தச் சோதனை நேரிட்டது" என்றேன். அதற்கு மகாராசா, "ஓய், வேதநாயகம் பிள்ளை! நீரொருத்தருக்கும் பயப்படவேண்டாம். எங்கள் சாமியையும் பாடவேண் டாம். உம்முடைய இயேசுநாதரையே பாடிக்கொண்டு சுகமேயிரும்" என்று அனுப்பிவிட்டார். இத்தருக்கங்கள்

ஒரு சாமத்துக்கதிகம்* நடந்தது. நான் மெத்தச் சுருக்கமாய் எழுதினேன்." மேலே விரித்துரைக்கப்பெற்ற வரிய நிகழ்ச்சி கற்பிப்பது என்னே? அரச நட்பும் கடவுளைப் பராவுதலும் இருவேறு இலக்கணங்களேயாம். ஒன்றுக்கொன்று முரண் படுமேயல்லாது ஒன்றுக்கொன்று ஏற்புடைத்தாதல் விபட்ச மானதோர் அசம்பாவிதமேயாமென்க. எம் கூற்று உண் மையேயென்பது கீழே வரூஉம் தியாகராஜாவின் ஒழுகலாற்றி னிடையும் வாசிப்போருக்கு எளிதில் புலனும். தம் அரிய ஒழுக்கத்தில் உரவோர் ஒருகாலும் ஒல்கார் என்பதூஉம் அகங்கை நெல்லிக்கனியேயாம்.

சரபோஜி மன்னன் மனத்தாபத்தினுக்கு இடங்கொடா மல் 1832-ம் ஆண்டில் மரணமடையுங்காறும் இவரை விழைந்து கேண்மை பாராட்டி நடத்தி வருவாராயினர். அவருக்குப் பின் அவருடைய மகன் சிவாஜி ராசன் அரியா சனத்தில் அமர்ந்தபோது, கிறிஸ்தவர்களையும் பகைத்து வேதநாயக சாஸ்திரியாரையும் அரண்மனைக்குட் புகாதவாறு தடுத்தானும். நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல சாஸ்திரியார் அரச தயவை நாடி மனவமைதியுடன் காலங்கழிக்கலாமெனக் கருதியிருக்க, எதிர்மறை முகத்தான் நிகழ்ச்சிகள் வந்துற்றன. இத் தஞ்சாவூர் கடை அரசனும் 1855-ம் ஆண்டில் மரணமடைந்தான்.

வேதநாயக சாஸ்திரியாருடன் ஏககாலத்தில் தஞ்சா வூருக்கு வடக்கே ஆறு மைலுக்கப்பால் திருவையாற்றில் வசித்த சங்கீத வித்வான் ஸ்ரீ தியாகராஜாவின் சரித்திரத்தி லும் சரபோஜி மகாராஜா அவரையும் தன்னுடைய உண்மை விளங்க ஒரு கவி உண்டுபண்ண வேண்டுமென்று ஒரு தூதனை அனுப்பி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு தியாகராஜா உடன்படவில்லையென்றும் பின்வருமாறு கூறியிருக்கிறது:—

"Once Saraboji, Raja of Tanjore, sent for Thiagaraja. The messenger met the musician and said, 'The Raja

---

* சாமம் = $7\frac{1}{2}$ நாழிகை அல்லது 3 மணி.
நாழிகை = 24 நிமிஷம்.

offers you a gift of ten *Velis* of land and a big bullion of gold, as the price of a song or two, which you are requested to compose in praise of the Raja.' The musician replied, 'Why should your Raja misuse his wealth in such paltry things as praise and why should I prostitute the Muse's name by flattering kings, many of whom are but plagues and scourges of mankind, bred up in sloth and ignorance and every vice that nurses both?' The messenger still persisted and drew Thiagaraja's pointed attention to the bullion of gold. 'Fie upon gold' retorted Thiagaraja, 'fie upon that cursed gold which-ever draws unwary humanity to pursue false joy and suffer real woe. Had I valued gold for its own sake, I should have long ago melted my golden image of Rama into bullion and played in the twinkling of an eye, ducks and drakes with it. But, to my fortune, my fascinating idol fills my mind with the God inside and not with the gold outside.' "

இவற்றால் விளங்கும் பொருட்கள்தாம் யாவையோ வெனில் முதற்கண் சரபோஜி மன்னன் கலைஞானத்திற்கும் சங்கீத வித்தைக்கும் புரவலன் என்பதும், இரண்டாவது, அக்காலத்தில் ஒன்று வதிந்து நற்சித்தியடைந்த இவ்விரண்டு உத்தமர்களும் அரசதயவை நாடித் தங்கள் வித்தையை விற்றுத் தாங்கள் முறையே வழிபடும் கடவுளை மறுதலிக்கவாவது நர துதி பாடவாவது இணங்கவில்லை யென்பவையே யாம். வேதநாயக சாஸ்திரியார் மராட்டிய போசலை ராச வங்கிஷ வரலாற்றைச் செய்யுளாக இயற்றினாலும், இவர் சமஸ்தான வித்வானாகச் சம்பளம் வாங்கினதினால் அதில் குற்றம் ஒன்றுமில்லை. ஆனால் இராம பக்தாவாக வயங்கின தியாகராஜா நர துதி பாடமுடியாது வென மறுத்துவிட்டுப் போந்தது தம் சிறந்த இராம பக்தியை என்றும் அழியாமலும் எனைத்தும் குறையாமலும் நன்கு காப்பாற்றிக்கொண்டதோர் அரிய வைராக்கியமே யாமென்க. ஸ்ரீ தியாகராஜாவும் அவருடைய

**வேதநாயக சாஸ்திரியும் ஸ்ரீ தியாக ராஜாவும் தத்தம் இயல்பில் இசையுடைமையும் இசையின்மையும்**



A STATUE OF SERFOGEE

*(At Tanjore Palace)*

சீடர்களும் வாரத்திலொரு நாள் வீதி வழியாய் வாத்தியங்களுடன் அவரியற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டுபோக, கேட்போர் அரிசி, பருப்பு முதலியவைகளைத் தருமமாகக் கொடுக்க, இவைகளைக் கூட்டிச் சேர்த்து இவ்வியாசகம் வழியான் உண்டு காலங்கழித்தவர்கள். இவ்வித உடல் வாழ்க்கையைக். கையாண்ட தியாகராஜாவுடைய இயல்புக்கு அரச தயவாவது, கேண்மையாவது ஞாயமாகவே மிகவும் வெறுப்பாயிருந்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இதுதான் வேதநாயக சாஸ்திரியாருக்கும் தியாகராஜாவுக்கும் தத்தம் பண்பில் உள்ள பேதமாம். வேதநாயக சாஸ்திரியார் "உஞ்ச விருத்தி" என்று வேறுபட்ட யாசக வாழ்க்கையை மரீஇ யினரல்லர். சம்பளம் பெற்று உத்தியோகம் ஏற்றுக்கோடல் தமக்கு இழிவாகத் தோன்றவுமில்லை. ஆனல் பிரகதீஸ்வரன்பேரில் கவி இசைத்துத் தாம் இயேசு பெருமான்மாட்டு வைத்த பக்தி பங்கமடைய இணங்கமாட்டேன் எனச் சாதித்தது இந்தப் பக்தாவினது சிறந்த இலக்கணமென்றே நாம் புகழற்பாலது.

## அத்தியாயம் 7

வேதநாயக சாஸ்திரி நிறைவேற்றின உத்தியோகங்களும், கர்த்தரின் பெறலரிய கருணையை முன்னிட்டு நடாத்தின இல்லாண்மையும், நோயாளிகளைச் செபத்தினல் குணமாக்கின அவரது திறனும்.

வேதநாயக சாஸ்திரியார் சங். பிரதரிக்கு சுவார்ச்சையர் (C. F. Schwartz) காலத்திலும் கொலோப்பையர் (J. C. Kohlhoff) காலத்திலும் பள்ளிக்கூடத்து அண்ணவியாராக விருந்தார். பின்பு சார்ச் இஷ்பர்ஷனேதர் ஐயர் (George Sperchneider) முதலிய மிஷனெரிமாருக்கு தமிழ் கற்றுக்கொடுக்கும் முனிஷியாயிருந்தார். சில காலம் சர்வேயர்-ஜெனரல் மக்கிஞ்சி (Surveyor-General Mackenzie) துரையிடத்தில் உத்தியோகமாயிருந்து, தேச சரித்திரங்களைத் திரட்டிச் சேர்க்கிறதில் அலுவலாயிருந்தார்.

முந்தின அத்தியாயத்தில் சரபோஜி மகாராசாவிடம் சமத்தான வித்வானுக நியமிக்கப்பட்டதை ஓராறு விரித்துரைத்தேன். அம்மகாராசாவினது மரணத்திற்குப்பின் சாஸ்திரியாருக்குத் துன்ப நிலையுண்டானது.

இவருக்கு நிலபுலமாவது பொருளீட்டமாவது இருந்ததெனச் சொல்லுவதற்கில்லை. அவைகளையவர் சேர்த்து சேமித்துவைக்க அவாக் கொண்டதுமில்லை. அவருக்கோர் பேரீகையாளனுகக் கள்ளிக்கோட்டை சிரேஸ்தர் தெய்வசிகாமணிப்பிள்ளையை இறைவன் எழுப்பினுர். அவர் சாஸ்திரியாரின் நூல்களை நன்கு துய்த்து இன்புற்றதினுலே இவருக்கு ஆண்டுதோறும் நூறு வராகன்மட்டும் அனுப்பிக் கொண்டிருந்தார். அவர் இறைவன் அடி சேர்ந்தபின், அந்த அந்த சபைகளிலுள்ள சாஸ்திரியாரின் பாடல்களின் நற்பலனையும், விழுப்பேற்றினையும் ஐயந்திரிபு இன்றி அறிந்த ஐயர்மார்களும் இரண்டு மூன்று துரைமார்களும் மாதந்தோறும் ஆளுக்கு அரையும் ஒன்றுமாகச் சேர்த்துக்கொடுத்துதவினுர்கள். அதுவேயுமன்றி செர்மன் நாட்டிலேவோர் கொடையாளனை ஆண்டவர் புதிதாக எழுப்பினுர். அவர் சங். ஆக்ட்டர்லோனி ஐயர் கைவயமாய் அப்போதப்போது ஓரளவு கையுறைகளை அனுப்பி நன்மை செய்துகொண்டிருந்தார்.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகை நாளிலும், தவசு நாட்களிலும் சதுர் பிரசங்கம் வைத்து சொற்பொழிவை ஆற்றினதினுலே காணிக்கைகள் யாண்டிருந்தும் வந்து பெய்து அவர்தம் வறுமை நிலையை ஓராறு நீக்கின. அவ்வமயம் சம்பளக்காரர் கடன்காரரெல்லோருக்கும் நிலுவையில்லாமல் கொடுத்துத் தீர்த்து பிற்பாடு சின்னுள் சாப்பாட்டுக்காகத் தம் மனைவி வரோதய அம்மாளிடத்திலோர் சிறிய தொகையைக் கொடுப்பாராம். அம்மாதரசி: "பிள்ளை குட்டிகளிருக்கிறதே. கொஞ்சம் நெல்லாகிலும் அரிசியாகிலும் வாங்கி வைக்க ஏதாகிலும்கூடச் செலவுக்குக் கொடுங்கள்" எனக் கேட்பார்கள். "அடுக்குப் பானையிலே அரிசி வாங்கி வைத்துக்கொண்டிருந்தால் கர்த்தர்மாட்டுள்ள உங்கள் நம்பிக்கை குறைந்துபோம். நாமிப்போது கவலைப்படத் தேவையில்லை.

நாளும் அவரிருக்கிறார். நம்மை நடத்துவார். நம்மை பட்டினியே போடமாட்டார்" என்று உறுதி பயப்பன நுகலுவார்.

ஒருதினம் இருநூறு ரூபாய்க்குமேல் மாத வீதம் சம்பளம்பெற்று வருகிறவோர் போதகரிடத்தில் தம்முடைய இல்லாண்மையைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றுழி: "ஐயா! நீங்கள் 'பரமண்டல செபத்தைச்' சொல்லி மன்றாடு கிறபோது, 'அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கின்று தாரும்' என்று சொல்லுகிற வழக்கம்போல நாங்கள் வேண் டிக்கொள்ளாமல், உண்மையாகவே அந்நாளின் அன்றன் றுள்ள அப்பத்தை இறைவன் எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு வருகிறோம்" என்றார். சில வேளைகளில் வறுமை நிலையுண்டாயிருக்குங்காலை, இவர் கடன்பட்டுத் தம்முடைய கூட்டத்தை உண்பிக்கவேண்டி யிருக்கும்; கடன் கொடுக்கிறவர்களும் இல்லையெனில் இவர் கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணி, "வனாந்தரத்திலே, முப்பது லட்சம் சனங்களை நடத்தின வல்லமையுள்ள இறைவா! எங்கள் மக்களும், மாணாக்கரும், பாடகர்களும் ஏறக்குறைய முப்பது பேரிருப்போம். இந்தச் சிறு கூட் டத்தை, நீர் கருணையாய்ப் பார்த்து, எங்கள் பாவங்களை மன்னித்து எங்கள் இரட்சகர் நிமித்தம் அன்றன்றுள்ள உணவைக் கட்டளையிட்டருளும்" என்று வேண்டிக் கொண்டு, ஒன்றுக்குங் கவலைப்படாதிருப்பார். உடனே ஆண்டவர் யாண்டிருந்தாகிலும், இவருக்கும் இவருடைய கூட்டத்தாருக்கும் எதிர்பாராத வண்ணம் யாவரும் வியப் புறப் படியளப்பார். திருட்டாந்தமாக: தஞ்சாவூரிலேயே தன் இல்லத்தில் ஒரு நாளிரவு உணவுக்கு வழியில்லாமல் குடும் பத்தார் பாடகர்கள் முதலியோரைப் பட்டினியாய் படுக்கைக் குப் போகச் சொல்லிவிட்டார். இரவு பத்து மணிக்கு வெண்கல வோசை கேட்க வண்டியொன்று அல்லோல கல்லோலத்துடன் வீட்டு வாசலின் முன்வந்து நின்றதாம். கதவை ஆள் தட்டினதில் திறந்து பார்த்ததில், அயலூரிலோர் கலியாண வீட்டிலிருந்து சாஸ்திரியார் வீட்டாருக்கு ஒரு வேளை சாப்பாடு கொண்டுவந்திருக்கிறதாகத் தெரிவித்

தாளும். சாஸ்திரியார் எல்லோரையும் எழுப்பிச் செபம் செய்து விருந்துண்டார்.

சாஸ்திரியார் தஞ்சாவூரிலே வீடுகட்டிக் குடியேறின அறுபது ஆண்டுகளிலே நோயுற்று வருந்தின ஒருவரும் பிராணசேதம் அடைந்ததில்லை. வைத்தியர் களெல்லாம் பிணியாளரைக் கைநெகிழ விட்டாலும் இவர் ஆண்டவர்மாட்டு நம் பிக்கையாயிருந்து தம் குடும்பத்தாரனைவ ரோடுங்கூட முழங்காலிலிருந்து, "சுவாமி, கிருபையாயிரும்" என்கிற சமுதாயப் பிரார்த்தனையைச் சொல்லி வியாதிப்பட்ட வர் தலைமேலே கைவைத்துச் செபம்பண் ணிக் கர்த்தனை நோக்கிச் செபிப்பார். பிணியாளிக்கு அப்பொழுது கர்த்தன் பரிந்து நற்சுகத்தை அருளியிருக்கிற கண்கூடான சாட்சியுண்டு. இவ் அரிய ஆற்றலின்பொருட்டு எல்லோரும் அவரை "இறைவனின் அடியான்" என்று எண்ணி, தங்கள் இல்லங்களுக்கு அழைத்துப் போந்து வியாதிப்பட்டவனுக்காக விண்ணப்பம் பண்ண விழைந்து கேட்டுக்கொள்ளுவார்களாம். உதாரண மாக, (G. U. போப் ஐயரின் பாயிரம் வாசிக்க) நண்பன் வேதநாயக உபதேசியாருக்குத் திடீரென்று பேதி யுபத்திரவங் கண்டு கைகால் குளிர்ந்துபோயினவாம். ஐயர் போய்ச் சில புத்திமதிகளைச் சொல்லி "மரணத்துக்கு ஆயத்தப்படு" வென எச்சரித்தார். அப்போது உபதேசியார் "தகப்பனை அழைப்பியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். "தகப்பனார் யார்?" என்று போப் ஐயர் வினவ, "வேதநாயக சாஸ்திரி யார்" என்றார்.

**பிணியாளிகளை குணமாக்கும் சாஸ்திரியாரது தெய்வப் பேற்றி (Divine Healing)**

சாஸ்திரியாருக்குத் தகவல் வந்தபொழுது, அவர் போய் உபதேசியாருடைய பரிதாபமான நிலைமையை யறிந்து, கையைப் பிடித்துப் பார்த்து தாது விழுந்துபோயிருக் கிறதை வெளியிட்டார்கள். உபதேசியார் தனக்குச் சுகம்வர செபிக்கும்படி கேட்டுக்கொண்டார். எனவே சாஸ்திரியார் உருக்கமாய் ஆண்டவரிடம் செபித்தபின், உட்கார்ந்து, செபத்தின் பலனை அறியும்பொருட்டு மறுபடி தாதைப்

பார்த்தார். "தாது எழும்பி யடிக்கிறது, இனி மரண பயமில்லை. கர்த்தருமக்குத் தவணை கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தில் தரித்திரும்" என ஆறுதல் படுத்தித் தன் இல்லத்திற்கு மீண்டாராம். உபதேசியார் முற்றிலும் சுகம் பெற்றார்.

இவர் ஞாயிற்றுக்கிழமைதோறும் தேவாலயத்திற் போய் அவண் நடைபெறும் ஆராதனையில் பங்கெடுக்குமுன் தன் வீட்டுச் செபமன்றத்திலோர் குடும்ப ஆராதனையை நடத்துவதோர் சிறந்த வழக்கமாயிருந்தது. பின்பு உடுத்திக் கொண்டு தமக்கடுத்த எல்லோரோடும் ஆலயத்திற்குச் செல்லுவார். கர்த்தருடைய சந்நிதியிலே வெற்றுக் கையாகப் போகக்கூடாதென வெண்ணி யாதாகிலும் கொண்டுபோய்க் காணிக்கை செலுத்திப் போடுவார். சில வேளைகளில் காணிக்கைக்குக்கூட காசில்லாமல் போகுமாம். அப்போது தன் விரலில் உள்ள தங்க மோதிரத்தைக் கழற்றி காணிக்கை வாங்கும் பையில் போட்டுவிடுவாராம். ஆனால் மோதிரம் சாஸ்திரியாருடையதென்று தெரிந்து அதை யவர் வீட்டுக் கனுப்பி காணிக்கையை வாங்கிக்கொள்ளுவார்கள்.

ஒரோவழி வறுமை நிலைக்குட்படும் தருணங்களில் கடவுளைக் கடைப்பிடித்துக் கலங்கா நிலையினனாய் விளங்குவார். எவ்வித பிழையும் எவ்வித இக்கட்டும் உற்றுழி, தம் மனவமைதியை அவர் இழந்தார் என்று சொல்லுவதற்கில்லை. "நாமறியாப் பல வழிகளைக் கர்த்தர் திறப்பார். அவரிடத்தில் அநேக பெட்டகங்களுண்டு; அவருக்குச் சித்தமானால் சிறிய காக்கைக் குஞ்சைக்கொண்டும் நடத்துவார். நாம் கவலைப்படத் தேவையில்லை, நம்மை விசாரிப்பது அவர்பேரில் விழுந்த கடன்" என உறுதி பயக்கும் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைப்பார்.

## அத்தியாயம் 8

### பல்வேறு நடபடிக்கைகள்

ஒருநாள் வெகுநேரம் பரமநிட்டையிலிருந்துகொண்டு கவி இசைப்பதிலிருந்தபின், சாஸ்திரியார் வழக்கப்படி தன் பொடிமட்டையை யெடுத்துத் தட்டிப்பார்க்க, அதில் பொடியில்லாததைக் கண்டு விசனித்து, "இப்போது நான்

சுரைக்கியமாக 'இவருக்குச் சரி சொல்ல இணையொன்று மில்லை' எனத் தேவ மகத்துவத்தை திருப்புகழாகப் பாடியிருக்க, எனக்குப் பொடிக்குக்கூட வழியில்லையா?" என்று மனம் புழுங்கினதைக் கேட்ட ஞானதீப சாஸ்திரி அம்மாள், "நீங்கள் புட்டாரத்தி பறைச்சியையும், கல்லையும், மண்ணையும், பேச்சுமூச்சு அற்றவைகளையும் தெய்வங்களென்று நம்பி கும்பிட்டு வந்த உங்களை, மெய்யான தெய்வத்தை வழிபடவும், அவர் நேச குமாரன் இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு சத்தியத்தின் அறிவுக்கு வரவும், இப்பெரிய ஊழியத்திற்கு அழைத்து மேன்மைப்படுத்தியிருக்கிற ஆண்டவருக்கு நீங்கள் என்ன கைம்மாறு செய்கிறீர்கள்?" என்கவும், உடனே சாஸ்திரியார் தன் வீட்டின் உள்முற்றத்தில் விழுந்து, புரண்டு, "நான் பாவி, நான் பாவி" என்று கதறினார். எல்லோரும்கூடி வந்துபார்க்க, அவரே தன் குற்றத்தை அறிக்கையிட்டு செபித்தார். அன்று இரவே கள்ளிக்கோட்டையிலிருந்த சிரஸ்தார் தேவசிகாமணிப் பிள்ளை தான் கட்டின புதுமனை புகுதல் வினைக்கு பாட்டொன்றை இசைத்து வாழ்த்தி எழுதினதை நினைத்து, நன்றியறிதலாக அனுப்பின கையுறை வந்து சேர்ந்தது. அது ரூ. 200 ஆம். அக்காலத்தில் இருப்புப்பாதையில்லாமையின் ஒரு மாதத்திற்கு முன்னே அனுப்பப்பட்ட தொகை சாஸ்திரியாரினது வறுமை நிலையை அன்று நீக்கி அவர் ஆறுதலடைய வேதுகரமாயிருந்ததை வியந்து யாவரும் கடவுளுக்கு மகிமையை செலுத்தினார்கள். கொடையாளனின் ஈகைச் சிறப்பை என்னென்பது! இவர் இறைவன் அடிசேர்ந்தபின் வே. சா. வினது நற்பயனையும் விழுப்பேற்றினையும் ஐயம் திரிபு இன்றி உணர்ந்த கிறிஸ்தவ சபையார்களும், சில ஐயர் மார்களும் இரண்டொரு துரைமார்களும் மாதந்தோறும் ஆளுக்கு அரையும் ஒன்றுமாகச் சேர்த்துக் கொடுத்துதவினார்கள். அதுவேயுமன்றி செர்மன் தேசத்திலேயோர் கொடையாளனை ஆண்டவர் புதிதாயெழுப்பினார். அவர் சங். ஆக்டர்லோனி ஐயர் வசமாய் யப்போதப்போது ஓரளவு கையுறைதனை அனுப்பிக்கொண்டிருந்தார்.

**தேவசிகாமணிப்பிள்ளையென்றவோர் வள்ளல்**

இவர் தம்மண்டை வருகிற ஏழைகளுக்கும் தமக்கு வருகிற வருமானத்திற்குத் தக்கதாய் வெள்ளிக்கிழமைகளிலும் மற்ற பண்டிகை நாட்களிலும் தருமஞ் செய்வார். மெத்த எளிமையால் இக்கட்டுப்பட்டு வந்த கிறிஸ்தவனுயிருந்தால் அவன் எனேத்து சாதியானுயிருந்தாலும், தமக்கு முன் வைத்து, தமது உணவில் அவனுக்குப் பகிர்ந்து கொடுத்து, பிற்பாடு சாப்பிடுவார். அவன் உடைக் குறைவுள்ளவனுக இருந்தானென்று கண்டால், தன்னுடைய மேலாடையையாகிலும், அல்லது தாம் படுத்திருக்கிற மெத்தையின் உரையையாகிலும் கழற்றி, அவனே உடுத்துவிப்பாராம். "ஏனிப்படிச் செய்யவேண்டும்? உமக்கே தாழ்ச்சியாயிருக்கிறதே" என்று யாதொருவர் வினவிஞல், "நான் கர்த்தனுக்குக் கடனல்லவோ கொடுத்திருக்கிறேன். நான் வீணுய்ச்செல விடவில்லே. அது எனக்கு இரட்டிப்பாய் திரும்பி வரும். மேலும் அந்நாளிலே இச்சிறியோரில் ஒருவனுக்கு என்னத்தைச் செய்கிறீர்களோ, அதை யெனக்குத்தான் செய்தீர்களென்று கிறிஸ்து சொல்லுவாரல்லவோ? அல்லாமலும் ஆத்துமத்தைக் கொண்டிருக்கிற நம்மைப்போலொத்த மனுஷருக்கு இரங்காமல், மனத்தைக் கடினப்படுத்தி பழந் தராத மரத்தைப்போலிருப்பது என்னேப் பாக்கியவானுக்கமாட்டாது" என்று மறுமொழி பகர்வார்.

**சாஸ்திரியாரின் தரும சிந்தை**

1808-ம் வருடம் தரங்கம்பாடியிலே தன் பாடங்களேக் கொண்டு சதுர் நடத்துங்காலே, ஆங்குள்ள இந்து கோவிலின் மடாதிபதி தன்னுடன் மார்க்க விஷயங்களேத் தருக்கிக்க அழைத்தாராம். அவரை நம்பி சில மணிநேரங்களுக்குள் திரும்பி வந்துவிடலாமென்று எண்ணி அக்கோவிலின் சாதாரண சனங்கள் நுழையக்கூடாத உட்பிரகாரங்களுக்குச் சென்ருராம். யாவருமறியப் போனவர் மூன்று நாளாக வெளியே வரவில்லேயாம். இதைக் கேள்வியுற்ற கிறிஸ்தவர்கள் மாநாடு கூடி, சாஸ்திரியாரை விடுவிக்க முயன்ருர்கள். துரைமார்களின் வீடுகளின் கிறிஸ்தவ சமையலாளர்கள் எசமான்களுக்கு அறிவித்து, "எங்கள் குருவான வேதநாயக சாஸ்திரியாரை மடாதிபதியின்

**சாஸ்திரியார் கொலேபடத் தப்பினது**

சிறையினின்று மீட்டாலொழிய நாங்கள சமைக்கமாட்டோம். மடாதிபதி அவரைக் கொலைசெய்யும்பொருட்டு, உட்பிரகாரத்துக்குக் கொண்டுபோய்விட்டான்'' என்று விடாப்பிடியாய் நின்றூர்கள். சாஸ்திரியாருக்கு நிரம்ப ஏமம் அல்லது பாதுகாவல் இருக்கிறதை மடாதிபதி கண்டு, பயந்து உடனே அவரை வெளியே அனுப்பினூர். இச் சம்பவம் ஞானதிக்க சாஸ்திரியார் எழுதின சரித்திரத்தில் சரிவரக் காணப்படவில்லை. அவருடைய பெண் மக்களி லொருவர் (அம்மணி அம்மாள்) எனக்கு இந்த அரிய நிகழ்ச்சியை இருமுறை அறிவித்தார்கள். எனவே வாசிப் போர்கள் இதை நம்ப இடமுண்டு. மேலும் திருச்சிராப் பள்ளியில் உரோமானித்தாரில் சிலர் ஒன்றுகூடி, ''அர்ச் சிட்ட தேவமாதாவே! ஒரு பதிதனைக்* (Protestant) கொன்று போட்டால் எங்களுக்கு மோட்சம் கொடுப்பாயல்லவா?'' என்று வஞ்சினம் கூறிக்கொண்டு இவரைக் கொன்றுபோட முனைந்து குழுமி இவருடைய சதுருக்கு வந்திருந்தார்கள். இவர் தம் தைரியத்தைக் கைவிடாமல் ஊக்கமாய் கிறிஸ்து வைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது கொலை செய்யவெண்ணி வந்திருந்தவர்களின் மனதை ஆண்டவர் மாற்றினூர்! அக்கூட்டத்தில் தலைமையான புறமதஸ்தர்கள் யாவரும் இவரது சொற்பொழிவைக் கேட்டு இவரொரு பேரறிஞன் என மதித்து அமைச்சலாயிருந்து கேட்டுப் போனூர்களாம்.

1815-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி சிந்தாமணியில் ''பேரின்பக் காதலை'' அரங்கேற்றச் சென்றபொழுது உரோமான் மார்க்கத்தார் சாஸ்திரியாரைக் கொலைசெய்ய எத்தனித்தார்கள். சில நண்பர் அவர்கள் பிரசங்கம் செய்யாதிருப்பது நல்லது என்று எண்ணினர். கலவரம் அதிகமாக இருந்தது. சாஸ்திரியார் மாமிசத்தின்படி மலைக்க நேரிட்டாலும், முழங் காலூன்றி ஆயத்த செபம் செய்து தன் மகள், ஞானதீப சாஸ்திரியம்மாளை வழியனுப்பிய வண்ணமாக மேடையி லேறி பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஓர் கல் அவர் மடியில்

---

* இச்சொல்லுக்குப் பொருள் 'ஒழுக்கந் தவறினவன்'. கத்தோலிக்கு மார்க்கத்தாரின் எண்ணத்தில் சாஸ்திரியார் ஒழுக்கந் தவறினவர்கொல்!

வந்து விழுந்தது. அப்பொழுது அவர் அதை எடுத்துக் காட்டி நான் கிறிஸ்துவைப் போதிப்பதற்காக அடிபடுகிறேன் என்பதற்கு இந்தக் கல் சாட்சி என்ருர். உடனே அனைவரும் மனச்சாட்சியில் குத்துண்டு பிரசங்கத்தைக் கவனிக்கலாயினர்.

உரோமானித்தாரின் உபதேசங்களை இவர் கண்டித்து வந்ததால் அவர்கள் இவரை ஏற்றுக்கொள்கிறதில்லை. ஆனுலும், சில சமயங்களில் இவர் பாடல்களில் சிலவற்றை அவர்கள் கேட்டு வாங்கி நகல் எடுக்க முயற்சித்தனர். அவ்வமயம் சாஸ்திரியார் "வேதநாயகன் வேண்டாம், வேதநாயகனின் பாடல்கள் மட்டும் வேண்டுமோ" என்ருர்.

அந்த உரோமானித்தார் "பாடல்களில் பழுதில்லை" என்ருர்கள். உடனே சாஸ்திரியார் தாழ்மையாக "ஆம், நான் பாவிதான்" என்று சொல்லி "என் பாடல்கள் கிறிஸ்துவுக்கு மகிமையாக இருக்கும்" என்று நகலெடுக்க அனுமதித்தார்.

1848-ம் வருடத்து கிறிஸ்து பிறப்பின் பண்டிகையிலே இவர் நோயுற்று மரணப் படுக்கையிலே யிருந்தார். தேவாலயத்துக்கு வரவொண்ணுதிருந்தபடியினுலே அப்பண்டிகையில் சனங்களுடைய அகக்களிப்பு குறைந்துபோயிற்று. அப்பொழுது சங். கெஸ்ற்றையர் பரிந்து பன்முறை வந்து பார்த்துக்கொண்டிருந்தார். "ஐயா! நான் மரித்துப்போவேனென்று நினைக்கவேண்டாம். நான் துவக்கியிருக்கிற சில புஸ்தகங்களின் வேலையிருக்கிறது. அவைகளைத் திருச்சபைக்குப் பயன்படுமாறு குறையறச் செய்து முடிக்கும்படி கர்த்தர் எனக்குக் கிருபைசெய்து, எசேக்கியேல் இராசாவுக்கு அவருடைய ஆயுளோடு பதினைந்து ஆண்டுகள் கூட்டினபடியே அவருக்குச் சித்தமான ஆண்டுகளை எனக்கும் கூட்டவேண்டுமென்று மன்ருடியிருக்கிறேன்" என்று கெஸ்ற்று ஐயருக்கு அறிவித்தாராம். அங்ஙனமே இவருக்குக் கர்த்தர் சுகமருளி பதினைந்து ஆண்டுகளையும் இவருடைய ஆயுசுடன் கூட்டினுர். பிறப்பின் பண்டிகையன்று நம்பிக்கையற்றிருந்த இவர் புத்தாண்டு பண்டிகையன்று உதயத்திலேயெழுந்து தம்முடைய பாடகர்களுடன் புறப்

பட்டு, கர்த்தனைப் பேருவகையுடன் கீர்த்தனம் பண்ணிக் கொண்டு நடந்து கோவிலுக்குப் போனார். சபையார் மகிழ்ச்சியோடே அதைக் கண்டு ஆண்டவரைத் துதித்தார்கள். மறுவருஷமான 1849-ம் ஆண்டில் அவருக்கு எழுபத்தேழு வயது நடக்கிறபோது, சங். கெஸ்ற்றையரும் (Guest), பௌவரையருமாக (Bower) சேர்ந்து, தங்கள் செலவினாலே படமெழுதுகிறவ னொருவனைக்கொண்டு அவருடைய சரியான சாயலை எழுதுவித்தார்கள்.

**வேதநாயக சாஸ்திரியின் சாயுங்சாலம்**

"அவருடைய தலையும் நெற்றியும் அழகான உருவுள்ளது. நல்ல முகக்களையுள்ளவர். அவர் விழா நாட்களில் புறப்பட்டாரானால் முற்காலத்தில் சொல்லப்பட்ட பிரதான ஆசாரியனுக்கொப்பான சாயலாக வயங்குவார்" என அவர் மூத்த மகன் ஞானதிக்க சாஸ்திரியார் கூறியுளர். (முதல் படம் பார்க்க). இப்படத்தில் அணிந்திருக்கும் குல்லாவுக்கு 'சௌத்னுக் குல்லாய்' என்று பெயர். சதுர் வேளைகளில் இதனை தலைப்பாகுக்குப் பதிலாக அணிந்துகொள்வார். இக்குல்லாவின் விசேடம், சென்னை திருவல்லிக்கேணியில் வசிக்கும் ஆர்க்காடு நவாபை சாஸ்திரியார் சந்தித்த நிகழ்ச்சியைப் பற்றுக்கோடாகவுள்ளது. நவாபு இவருடன் மார்க்கக் கொள்கைகளைத் தர்க்கித்தாராம். இவருடைய கிறிஸ்துமத வைராக்கியத்தைக் குறித்து வியந்து, பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, பரிசில் அளித்தாராம். அத்துடன் முஸ்லிம் குருக்களுக்கே தனிச் சிறப்பாகவுள்ள சௌத்னுக் குல்லாயொன்றையும் தந்தருளினாராம். அதனை அணிய அனுமதியையும் கொடுத்தாராம். அது முற்றும் வெள்ளிச் சரிகையால் செய்யப்பெற்றது. படத்தில் காணப்படும் குல்லாய் அதல்ல. சரிகை சௌத்னுக் குல்லாய் கழிந்துபோனபின், அதே உருவமுள்ள சாதா (Felt) குல்லாயொன்றை செய்து அணியலானார். அக்காலத்திலேதான் படம் வரையப்பட்டது. இவர் சதுரில் சௌத்னுக் குல்லாவை அணிந்திருப்பதைப் பார்த்த சில மகம்மதியர் மிகவும் கோபம் அடைந்து, தங்கள் தலைவர்களிடம் முறையிட்டார்களாம். முஸ்லிம் குருக்கள் நேரில் வந்து சாஸ்திரியாரைச் சந்தித்து விசாரித்தார்களாம். அக்குல்லாயை அணிய நேரிட்ட விதத்தை இவர் எடுத்துக்

கூற, "நாங்கள் இனித் தடுக்கமாட்டோம். நீங்கள் எங்களுக்குப் பரிவட்டமாக (Uniform) வுள்ள குல்லாயைப் போட்டுக்கொண்டு சுகமே கிறிஸ்துவைப் பிரசங்கிக்கலாம்" என விடை கொடுத்து சமாதானமாய் மீண்டார்களாம். கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் முதல் பார்வையில் சாஸ்திரியாரின் குல்லாய் விபரீதமாகத் தோன்றும். ஆகையால் நான் இதைக்குறித்து விரிவாக எழுதலானேன்.

சாஸ்திரியாரின் மெய் உடையைக் குறித்து அதிகம் எழுத வேண்டியதில்லை. இது மராட்டிய உடை. தற்காலத்தில் சென்னையில் சர்க்கார் வேலை நிலையங்களில், தவேதார் (Daffadar) அணிவதைக் காணலாம். மராட்டிய தலைப்பாகையை மகாராஜாவைக் காணப்போகும் சமயங்களில் அணிவார். கிழக்கு இந்தியா கம்பெனியார் காலத்தில் இவ்வுடை சர்வசாதாரணமாயிருந்தது. சாஸ்திரியார் இத்தலைப்பாகையுடன் வரையப்பெற்ற வொரு படம் தஞ்சாவூரிலே அவர் வீட்டுச் சித்திரக்கூடத்தில் இருக்கிறது. எனவே அவரின் உடை அக்காலத்திலே திகழ்ந்த உடைக்கோலத்தினுக்கேற்ப (Fashion) இந்துத் தன்மையைச் சார்ந்திருந்தது. ஆனால் சதுர் காலங்களில் மெய்யுடை இந்துவாகவும், தலையணி முஸ்லிமாகவுமிருந்தது. இவரின் வாரிசுகள் இவ்வுடுப்பையொரு பரிவட்டமாக (Uniform) வேற்றுக்கொண்டார்கள். பொதுமக்களின் உடையைச் சாதாரணமாக உடுத்திக் கொண்டாலும், சதுர் காலங்களில் மாத்திரம் சௌத்னுக் குல்லாயைத்தான் தரித்துக்கொள்கின்றனர். இக்கோலத்தின் அடிப்படையை வேதநாயக சாஸ்திரியினது சரித்திரத்தில் கண்டுகொண்டாலன்றி அது விகற்பமாகத் தோன்றுவதுமல்லாமல், விளங்கிக்கொள்ளவும் ஒண்ணாது. மகம்மது மதத்தார் இவரது சதுர் பிரசங்கங்களைக் கூடிவந்து கேட்டாலும், அவர்களிலொருவராவது கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவவில்லை.

கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில் கலியாணம் முதலிய களிப்புக்குரிய நாட்களில், இந்துக்களுக்கொப்பாக, யாதொரு சாஸ்திரச் சடங்குகளை யனுசரித்தால் இவர் மனத்தாபப்பட்டு அவர்கள்மாட்டுள்ள கர்த்தருடைய ஆசீர்வாதம்

விலகிப்போக இடமாயிருக்கிறதேயென்று சிந்தித்து அவர்கள் எனைத்து மேம்பாடுடையவர்களாயிருந்தாலும் உடனே அவர்களை முகமுகமாய் கண்டித்து, அது கர்த்தருக்கு ஏற்காத அருவருப்பான காரியமென்றுணர்த்தித் தடை செய்வார். அவர்கள் செவிகொடாமற்போனால் அவ்வீட்டார் உபசரித்துக் கொடுத்த கையுறையை ஏற்றுக்கொள்ளாமல் தம் கூட்டத்தாருடன் எழுந்து வீட்டுக்கு வந்துவிடுவார். "நாட்களையெல்லாம் கிறிஸ்து சபைகளின் விளையுளையே கருதிச் செலவிட்டு, மிகுந்த சுறுசுறுப்பாய் ஓய்வின்றி யெழுதி, இடையறாது யோசித்துக்கொண்டிருப்பார். அவருடைய பயிற்சிக்கும், முயற்சிக்கும் நிகரானவர் இந்து தேசத்தில் யாண்டும் காண்பதரிது" என ஞானதிக்க சாஸ்திரியார் எழுதியுள்ளார் மேலும், அவர் எழுதியிருக்கிறதாவது:

**சாஸ்திரியாரின் சிற்சில சிறந்த போங்குகள்**

"ஒரோவழி யவர் சிறுமைப்படுகிறதுண்டு. அவ்வமயங்களில் அவர் 'நாமறியாத பல வழிகளைக் கர்த்தர் திறப்பார். அவரிடத்தில் அநேக பெட்டகங்கள் உண்டு. அவருக்குச் சித்தமானலொரு சிறிய காக்காய்க் குஞ்சைக் கொண்டும் நடத்துவார்; நாம் கவலைப்படத் தேவையில்லை. நம்மை விசாரிப்பது அவர்மேல் விழுந்த கடமை என்பார்." எந்தப் பிழை, எந்த இக்கட்டும் உற்றுழி, உறுதிப் பயப்பன கூறிக்கொண்டு, கடவுளைக் கடைப்பிடித்து கலங்கா நிலையில் நிற்பார். 1863-ம் ஆண்டின் பண்டிகைக்கு, தன் உடல் தொய்வினல் தேவாலயத்திற்குப் போக இயலவில்லை. பிறப்பின் பண்டிகைச் சதுரும் நடத்தவில்லை. வீட்டிலேயே யிருந்துகொண்டு, வழக்கம்போல தேதி வாக்கியத்திற்கு விவரிப்புச் சொல்லிச் செபம் செய்து, தம்முடைய வீட்டார், நெடுந் தூரங்களுக்குப் போயிருந்த மக்கள், ஞானப் பாடகர், கொடையாளர், திருச்சபையார் அனைவரையும் தற்காக்கவேண்டுமென்று இறைவனை நோக்கிக் கெஞ்சுவார். கவலைப்படாதபடிக்கு வீட்டாரனைவருக்கும் செவியறிவுறுத்தி: "மேசியாவின் மன்ருட்டிருக்குது, வேதநாயகன் பாட்டிருக்குது, ஏன் மயங்குகிருய் மனமே!" என்ற பாட்டை மேற்கோளாக வெடுத்துக் கூறி, மக்களைத் திடப்படுத்துவார்.

சபையாரில் பலர் அவருடைய அந்திய காலம் அணுகியிருக்கிறதென்று கண்டு, பன்முறை வந்து பற்பல பதார்த்தத்தையும் கொடுத்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுப் போயினர். சபையினொரு செம்மல் அவரைக் காண வந்து, "ஐயா, உங்களைப் பார்க்கவேண்டுமென்று முன்னொரு தடவை வந்தேன். அப்பொழுது நீங்கள் படுத்திருந்தீர்கள். அதை உங்களுக்கு ஞானதிக்கம் பிள்ளை சொல்லவில்லையா?" என்று கூற, சாஸ்திரியார், "என்ன நீர் சொல்லுகிறது ஆச்சரியமாயிருக்கிறது! நீரென்னைப் பார்க்க வந்ததையும், பார்க்க வராததையும் கர்த்தர் பார்த்திருக்கமாட்டாரா? 'நான் வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள். காவலிலிருந்தேன், என்னைக் காண வந்தீர்கள்' என்பார். அவரல்லவோ உமக்குப் பலனளிக்கிறவர்" என்று சற்று கடிந்தோதினர்.

**சாஸ்திரியாரின் விருத்தாப்பியம்**

அவர் வழக்கம்போல சரியளவு சாப்பிடக்கூடாமலேயிருந்தது. ஆகையால் பலவீனத்தோடேயிருக்கிறபோது, தேவநற்கருணை பெற மனதாயிருந்தது. சங். பர்சுவேலையருக்கு (Percival) சொல்லியனுப்பினர். அவர் உடன்பட்டு கோவில் ஆராதனை முடிந்தபின் வீட்டுக்கு வந்து கொடுக்கிறேன் என்று சொல்லியனுப்பினர். வீட்டிலே பெற்றுக்கொள்ளுவது அத்துணை எழுப்புதலைக் கொடுக்க மாட்டாதென்று வழக்கம்போல முழுகி உடுத்திக்கொண்டு, தேத்தண்ணீர் முதலாய் குடிக்காமல் உபவாசத்துடன், தேவாலயத்திற்குப் போய் தம்முடைய குடும்பத்தாரோடு நற்கருணை வாங்கி உவகையுடன் தம் இல்லத்திற்கு மீண்டார். எனினும் போகவர மெத்த வருத்தப்பட்டார்.* ஓரளவு திராட்சரசம் (Wine) சேர்த்தால் நலமென்றும், அது பசிதீபனத்தை யுண்டாக்குமென்றும் யோசனை சொன்னபோது, அவர் "அது கெட்ட வழக்கமாய் பிடித்துக்கொண்டால் மோசம்; அப்படிச் செய்யக்கூடாது" என்றார். பிற்பாடு அநேகருடைய கேட்டுக்கொள்ளுதலினால் அவர் சம்மதித்த போது ஓரளவு கொடுக்கப்பட்டது.

---

* சாஸ்திரியாரினது இல்லத்திற்கும் பரி. பேதுரு தேவாலயத்திற்கும் சுமார் அரை பர்லாங்குதான் இருக்கும்.

ஒருவரும் எதிர்பாராதவண்ணம் கர்த்தர் அவருக்கு உண்ணவும் சற்று நேரம் உட்காரவும் பலம் அருளினர். ஆனல் காலில் சிறிது வீக்கம் உண்டானது. இரண்டு மாதக் காலத்துக்குமேல் அவர் பிரியப்பட்ட சகல பதார்த்தங்களே யும் வேண்டியமட்டும் இரட்டிப்பாய் உண்டுவந்தார். அக் காலத்தில் தென்னுட்டுக்குப் போன அவருடைய குமாரத்தி ஞானதீப அம்மாளும் மற்ற மக்களும் அவ்விடங்களில் வந்த வருமானத்திலே கூடியபோதெல்லாம் செலவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவைகளேயெல்லாம் பேருவகையுடன் பெற்றுக்கொண்டு, கர்த்தனேத் துதித்து, பெரும் பகுதியைத் தான் எண்ணினபடி காசுக்களும், பணங்களும், ஆடை களுமாக ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்ந்தாராம். ஞானு திக்கம் பிள்ளையைக் கூப்பிட்டு, "ஏழைகளுக்குக் கொடுக் கிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறுன்" என்ற வாக்கி யத்தைப் பெரிய எழுத்தா யெழுதி, பார்வையில் ஒட்டி வையென்று கற்பித்தாராம்.

அவர் அதிகப் பலக் குறைவாயிருக்கிறுரென்று கண்டு, வெளியூர்களுக்குப் போயிருந்த மக்களேத் திரும்பி வரும்படி எழுதினதற்கு, "அப்படி யெழுதக்கூடாது. எனக்கென்ன பலவீனம்? அவர்கள் யாரை இரட்சிக்கப்போகிறுர்கள்! அங்கே யிருந்தே கர்த்தருடைய நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்தட்டும்" என்று தடுத்தாராம்.

சங். கிறிஸ்தியான் கொலேப்பையர் வந்து இவரின் தேக வலிமை குன்றியிருக்கிறதைக் கண்டு அன்புடன் விஞவினர். அவரைச் சாஸ்திரியார் செபம்பண்ணக் கேட்டுக்கொண்டதி ஞல், ஆறுதலான செபமொன்று செய்தார். அப்பொழுது சாஸ்திரியார் அவரை வாழ்த்தி, "நீர் எல்லோருக்கும் உதவி யாயிருக்கும்படி கர்த்தருமக்கு நீடிய ஆயுசைக் கொடுத்து உம்மை எப்பிருயீம் மனசேயைப்போல் ஆசீர்வதிக்கக் கடவர்" என்ருர்.

1856-ம் வருடம் இவர் தரங்கம்பாடி யூபிலி பண்டிகைக் குப் (Jubilee) போக விரும்பினபோது, இவர் கையிலே காசொன்றுமில்லே; மனேவி மகார்களுக்குமாத்திரம் வண்டி வைத்துக்கொண்டு, கால்நடையாய்ப் போனர்! ஐயன்

பேட்டை எட்டு மைல் நடக்கிறதற்குள்ளாக, நாலைந்து இடத்தில் உட்கார்ந்து போனார். வண்டியிலேறினால் மயக்கமும் வாந்தியும் உண்டானபடியால் வண்டியிலேறமாட்டார். பல்லக்கில் மாத்திரம் ஏறிப்போகிற வழக்கமுண்டு. சம்பளம் கொடுத்து பல்லக்கு வைக்கிறதற்கு இவரிடம் பணமில்லை. கூடப் போனவர்கள் இவரைக் கை தாங்கலாய்த் தூக்கிக் கொண்டு, கும்பகோணம் சிரஸ்தார் கிறிஸ்தியான் சாந்தப்ப பிள்ளை வீட்டிற்குக் கொண்டு சேர்த்தார்கள். அச்செம்மலின் மனத்தைக் கர்த்தர் உருகச்செய்ய, தன்னுடைய நாற்காலி பல்லக்கை இவருக்குச் சொந்தமாய்க் கொடுத்து, இவரைத் தரங்கம்பாடிக்குக் கொண்டுசேர்க்க, போகிகளுக்குக் கூலியும் கொடுத்து வழிவிட்டனுப்பினர். அவண் போய்ச் சேர்ந்த போது, அவ்விடத்துக் கிறிஸ்து சபையோரெல்லோரும் முகமன் கூறி அளவிறந்த உவகையுடன் இவரை யேற்றுக் கொண்டு தங்களால் இயன்றமட்டும் கையுறை முதலானது கொடுத்தனுப்பினர்கள். வே. சா. வின் மகன் ஞானதிக்க சாஸ்திரியார் அவரைக் குறித்து பின்வருமாறு எழுதியுள்ளார்: "ஆண்டவர்மாட்டு அவருக்கிருந்த பற்றையும் நம்பிக்கையையும் சீர்தூக்கின், தாவீது இராசாவினது நடக்கையை ஒக்குமென்க. எப்போதும் ஆண்டவர்பேரிலே புதுப் பாட்டை இசைத்துக்கொண்டு அவரைக் கீர்த்தனம்பண்ணிக் கொண்டு] இருப்பார். ஞானநூல்களைவிட, விவிலிய நூலையே மிக்க ஆவலோடு கருத்தூன்றி வாசிப்பார். அவ்வாற்றினில் அடங்கிய இறைவனது வியக்கத்தக்க செயல்களையும் நடத்துதல்களையும் வாசிக்கிறபோது, சிலவேளைகளில் சிரித்து மகிழ்ந்துகொண்டிருப்பார். அல்லது கண்ணீர் உகுத்துக்கொண்டிருப்பார். தமக்கிருந்த எந்த அகக் களிப்பிலும், எந்தத் துக்கத்திலாகிலும் அவ்வண்ணம் முறையே உவகை அடையவுமாட்டார், உருகவுமாட்டார். தம்முடைய படுக்கையிலிருந்து விழிக்கிறபோதெல்லாம் செபம்பண்ணுவார். சிலவமயங்களில் பெப்ரிசியுஸ் ஐயருடைய பிரார்த்தனைகளை மனப்பாடமாகச் சொல்லிக்கொண்டிருப்பார். நாளும் கர்த்தனைத் துதிக்கும்படி தம் வீட்டாரை உதயத்திலே எழுந்திருக்க கண்காணித்து வருவார். உண்மையாகவே அவருடைய இதயம், பராபரனைக் காத

வித்த மகாத்மாக்களுடைய இதயத்தினுக்கு இணையாயிருந்தது. அவருடனே உயிர்நிலையத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தவர்கள் சாட்சியிடுவார்கள். ஆனால் அவர் மானிடனுனபடியினாலே அவருடைய நடக்கைகளில் பல பழுதுகளிருக்கும். அவருடைய செய்கைகளெல்லாம் அத்துணையொழுங்குள்ளவைகளெனச் சொல்லவும் இடம் இல்லையென்று வொருநாள் அவர் தம்முடைய வீட்டிலே நடந்த காலை ஆராதனையில் தம்மைக்குறித்து சொன்ன தென்னவென்றால், 'நான் நல்ல மனுஷன்' என்று நீங்களொருத்தரும் நினைக்கவேண்டாம். "நான் கர்த்தருக்கேற்காத வெகுவான பாவங்களைச் செய்த பாவி. ஆனாலும் என் இரட்சகருடைய நீதியையும் அவருடைய உத்திரவாத புண்ணிய பலன்களையும் கெட்டியாய்ப் பற்றிப்பிடித்துக்கொண்டேன். ஆனதினால்தான் இதுநாள்மட்டுந் தற்காக்கப்பட்டிருக்கிறேன். அவைகளினிமித்தந்தான், பராபரன் என்பேரிலே கிருபையாயிருந்து, எனக்கு வந்த எல்லா மோசங்களையும் இடுக்கண்களையும் விலக்கிமீட்டு, என் மன்றாட்டுகளைக் கிருபையாய்க் கேட்டு, நான் எண்ணின எண்ணங்களை நன்மையாய் முடிக்கிறார்." இக்கருத்துக்கள் உள்ளக்கனியினாலாயபயன் என்பது தெற்றென யாவருக்கும் விளங்காநிற்கும்.

## அத்தியாயம் 9

### வேதநாயக சாஸ்திரியின் ஆசீர்வாச்சும் அவர் என்றுமுள்ள இராச்சியத்தில் புகுதலும்

சாஸ்திரியார் அப்போதைக்கப்போது பனிகாலம் ஒத்துக்கொள்ளாமல் சற்று வியாதிப்பட்டார். இவர் இளைத்து பலவீனமாயிருந்தாலும், வீட்டில் நடைபெறும் காலை மாலைச் செபம், ஞாயிற்றுக்கிழமை செபம் தவறினதில்லை. ஞாயிற்றுக்கிழமை யொன்றில் தம்முடைய மக்களோடே "விசுவாசிகளான பூர்வ பிதாக்கள் நமக்குச் சுட்டிக்காட்டின ஒழுக்கமுறைமையைப் பின்பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்த்துதல் சொல்லவேண்டியிருக்



Vedanayaga Sastree
The Evangelical Poet

VENERABLE VEDANAYAGA SASTRIAR

EVANGELICAL POET, TANJORE

*Born 7th September 1774 in Tinnevely*
*Died 24th January 1864 in Tanjore*

கிறது. அதற்கென்ருெருநாளேக் குறித்துக்கொள்ளவேண்டும்'' என்ருர்.

பின்னர் அவர் தானே கர்த்தனெருவேளே என்னேச் சடுதியாய் அழைத்துக்கொள்ளுகிறதாயிருக்கும். ஆனதிஞலே இப்பொழுதே நல்ல சமயத்தில் உங்களுக்குச் சொல்லுகிறேனென்று, சங். பிரதரிக் சுவார்ச்சையரவர்களுடைய பூர்வ பிரசங்கம் எழுதியிருந்த வொரு ஓலேச்சுவடியைத் தம்முடைய மூத்த குமாரன் ஞாஞதிக்கத்தின் கையில் கொடுத்து, "நீ இதில் கிழமைதோறும் ஒரு பிரசங்கத்தை வாசித்து, செபம்பண்ணிவரவேண்டுமென்று கற்பித்து, கூடிவந்தவர்களெல்லோரையும் முழங்காற்படியிடச் சொல்லி, துவக்கமாக, ஞாஞதிக்கம்பிள்ளே தலேமிசை கை வைத்து ஆசிர்வதித்து, 'நீ எனக்கு ஒரு டீக்கனேப்போல வெள்ளேநிலே அங்கி தரித்துக்கொண்டு பாடப் படிக்க என்னேடேகூட ஞானச் சதுர் பிரசங்கத்துக்கு உதவியாயிருக்கிறவன். இன்று முதல் உன்னேயொரு உபதேசியாக நியமிக்கிறேன். கர்த்தர் உன்னே தமக்குச் சித்தமானமட்டும் உயர்த்தக்கடவர்' என்ருர். இரண்டாவது தம்முடைய இளேய குமாரன் எலியா தெய்வசிகாமணியின் தலேமிசை கைவைத்து ஆசீர்வதித்து, ஆண்டவர் உனக்குத் தம்மைப் பாடுகிற வரத்தை ஓரளவு கொடுத்திருக்கிருர். நீ என் ஊழியத்திலே இருக்கக்கடவாய். ஆண்டவர் உனக்குந் தம்மைப் பாடுகிற வரத்தைப் பரிபூரணமாகக் கொடுக்கக்கடவர்" என்ருர். கடைசியிலே சுவிகார புத்திரி ஞானதீபம் அம்மாள் பிரயாணப்பட்டு, தட்சணத்துக்கு அவ்வமயம் புறப்படா நிற்கின்றுழி, சபையோருக்கொரு திருமுகமும் எழுதிக் கொடுத்து தலேமிசை கைவைத்து ஆசீர்வதித்து "நீ போகிற இடங்களிலுள்ள எல்லாச் சபைகளிலும் கர்த்தருடைய பாடல்களே பாடி விஸ்தரித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தக்கடவாய். அப்போது உனக்கு வெகு நன்மையாயிருக்கும். ஆண்டவர் உன்பேரிலும் உன் குமாரத்தியின் மீதும் கிருபையாயிருக்கக்கடவர்'' என்ருர்.

கடைசியாக அவருக்குத் தொண்ணூற்ருெரு பிராயமாகிற 1864ஸு ஜனவரிமீ 24உ ஞாயிற்றுக்கிழமை அவர் இந்த மாயையான உலகத்தைவிட்டு நீங்கிப்போகிற நாளா

யிருந்தது. அந்நாளில் அவருடைய மரணமிருக்குமென் ெறாருவரும் நினைத்ததில்லை. வழக்கப்படி வீட்டில் காலை ஆராதனை நடக்கிறபோது, நாற்காலியில் உட்கார்ந்திருந்த வண்ணம் எல்லோருக்கும் பொதுவான ஆசீர்வாதத்தைக் கூறினார். அதாவது, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பரமபிதாவின் சிநேகமும் பரிசுத்த ஆவியானவ ரின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருக்கக்கட வது." இது அவர் வாயினாலே சொன்ன கடைசி ஆசீர்வாத மும் செபமுமாயிருந்தது. பின்பு அவருக்குக் களைப்பாயிருக் கிறதென்று கட்டிலிலே படுக்கவைத்தபோது, வரவர மேல் மூச்சு அதிகப்பட்டதினாலே சபையாரெல்லோரும் கூடி வந்தார்கள்.

அன்று சாயுங்காலம் நாலு மணிக்கு மேலே சிரஸ்தார் கி. சாந்தப்ப பிள்ளை, மோட்ச மகிமையின்பேரிலே உண்டு பண்ணப்பட்ட, "ஓய் எருசலேமியாரே" என்ற பிரார்த்தனை யைப் பாடி, அன்று தினத்துக்குக் குறிக்கப்பட்ட "முப்புரி நூல்" வாக்கியத்தை வாசித்தார். அது, "பிதாவே, உம் முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்ற வசனமாயிருந்தது. இவ்வாக்கியத்தையவர் வாசித்து எழுப் புதலாகப் பேசிக்கொண்டிருக்கிற சமயத்திலேதானே சாஸ் திரியாருக்கு மேற்சுவாசங்கண்டது. சாந்தப்ப பிள்ளை, "இயேசுவே தயாபரா" என்ற பிரார்த்தனையைச் சொன்னார். அப்போது ஞானதிக்கம் பிள்ளை "என்னை மீட்டுத் தாங் கிய" என்ற பிரார்த்தனையை முழுவதும் வாசித்தார். வரோ தய அம்மாள் சாஸ்திரியாருக்குத் தொண்டை காய்ந்து போமென்றெண்ணி, ஒரு தேக்கரண்டி தாரகம் (செய் நீர்) உள்ளுக்குக் கொடுத்தபோது, வேண்டாமென்று தடுத்து கையினால் தட்டிவிட்டுப் பேரின்ப சுகத்தை நாடினவராய் புன்னகைகொண்டார். அச்சமயத்திலே, தஞ்சாவூர் சபை யின் குருவாகிய சங். நேலரையர் வந்து ஆறுதலான ஒரு செபம் செய்தவுடனே நோவா ஞானதிக்கம் தன் தகப்ப னரின் தலைமாட்டுப் பக்கத்திலே நெருங்கி நின்றுகொண்டு, ஒருவரையும் அழ வொட்டாமல் தடுத்து, உரத்த சத்தமாய்ச் சொன்ன பிரார்த்தனையாவது:—

"என் மூச்சொடுங்கும் அந்த
கடை இக்கட்டிலும்
நீர் எனக்காயிறந்த
ரூபாகக் காண்பியும்.

அப்போ நானும்மைப் பார்த்து
கண்ணேக்கி நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு காத்து
தூங்கட்டும் இயேசுவே."

இக்கவியைச் சொல்லி இயேசுநாதர் பாடுபட்ட தியான செபத்தை வாசித்தபின்பு, அவருடைய மரணம் பாக்கிய மான மரணமாயிருந்ததென்றும் தன் இரட்சகருடைய கையிலே நம்பிக்கையாய்த் தன் ஆத்துமாவை ஒப்புக் கொடுத்து இவ்வுலக வாழ்வை நீத்தார் என்றும் கண்டு முன் வாசித்த "என்னை மீட்டுத் தாங்கிய"வென்ற பிரார்த்தனை யைப் பாடி முடித்தார். அது சாயுங்காலம் ஐந்து மணி வேளையாயிருந்தது. அந்நேரத்திலே லூத்தரன் மிசியோன் தேவாலயத்திலும் S. P. G. மிசியோன் தேவாலயத்திலும் துக்க மணி யடிக்கப்பட்டது. பின்பு ஜெப மன்றத்திலே அவரைக் கட்டிலோடு எடுத்துக்கொண்டுபோய் வைத்து, அங்கி சால்வை முதலானது உடுத்தி, தலைமிசை சரிகை தலைப்பாகும் வைக்கப்பட்டது. வீட்டிலும் தெருவிலும் மெழுகு வர்த்திகள் விளக்குகள் ஏற்றப்பட்டன.

லூத்தரன் மிசியோனரியாகிய சங். அக்டர்லோனி ஐயர் வந்திருந்து ஆறுதலாகப் பேசி சாஸ்திரியார் மன வமைதியுடன் நல்மரணம் அடைந்திருக்கிறுர் என நவின்று, அடக்கம்பண்ணுகிறபொழுது எந்தப் பிரார்த்தனையைப் பாடலாமென வினவினர். ஞானதிக்கம் பிள்ளை, "சங். பிரதரிக் சுவார்ச்சு ஐயரவர்கள் மரணத்தில், அவருக்குப் பிரியமான 'என்னை மீட்டுத் தாங்கிய'* என்ற பிரார்த்தனை பாடப்பட்டதென என் தகப்பனர் சொல்லியிருக்கிறுர்கள். அதுதான் என் தகப்பனருக்கும் பிரியமான பிரார்த்தனை. அதையே பாட உத்தரவாகவேண்டு"மென்று கேட்டுக்கொண்

---

* லூத்தரன் ஞானப்பாட்டுக்கள். எண் 281 (1931). இப்பாட்டை கிறிஸ்து சபை பாமாலையில் (1949) கூட்டவில்லை.

டார். ஐயர் அந்தப் பாட்டுக்கு இராகத்தைத் தம்முடைய சபையின் பாடகர்க்கு வருவிக்கிறதற்குச் சம்மதித்துப் போனார். சில துரைகளும் துரைசானிமார்களும் வந்து துக்கம் விசாரித்தார்கள்.

காலையில் சாஸ்திரியாருடைய குடும்பத்தாராகிய ஞானப் பாடகர் முதலானவர்கள் பிரசங்கச் சதுருக்கு உடுத்திக் கொள்ளுகிறபடி வெள்ளை அங்கி, சட்டை, குல்லா முத லானதுகளைத் தரித்துக்கொண்டு வந்து நின்றார்கள். அப் பொழுது ஞானதிக்கம் பிள்ளை எழுந்து நின்று, சாஸ்திரியார் தம்மைச் சேமிக்கும்பொழுது, தம்முடைய கையிலே எழுதி வைக்க கீர்த்தனை புஸ்தகத்திற் குறித்திருந்த பிரகாரம்,

"இயேசு ராஜா என்னையாளும் நேசா"
"யேசு நாதா கடைக்கண் பார்"
"கிருபாகரனே தோத்திரமையா"

என்ற மூன்று கீர்த்தனைகளையும் பாடினபின்பு, "நான் எப் பொழுதும் என் தகப்பனாருக்குப் பிரசங்க சதுருக்குப் புஸ்தகம் எடுத்துக் கொடுக்கிறவன்; இந்தப் பாடல்கள் மூன் றையும் இன்று தினத்தில் அவர்கள் கட்டளைப்படியே பெயர்த்தெழுதி கடைசியாய் அவர்கள் கையிலே கொடுக்கிறே னென்று" சாஸ்திரியார் கையிலே கொடுத்தார். சாஸ்திரியா ருடைய மக்கள், பாடகர்கள் முதலானவர்கள் "ஆருந் துணையில்லையே"யென்ற பாடலைப் பாடினார்கள். இரண்டு தேவாலயங்களிலும் துக்கமணி ஓயாமல் அடிபட்டுக் கொண்டேயிருந்தது. எல்லாத் துரைகளுக்கும் அவர்கள் தொப்பியிலும் தோளின்பேரிலும் வெண் வஸ்திர மரியாதை செய்யப்பட்டது. அப்பொழுது அவரைப் பல்லக்கிலேற்றி எடுத்துக்கொண்டு அவரது சடலத்தைப் பார்க்கவேண்டு மென்று கூடி வந்த தேச சனங்களுடைய விருப்பத்துக்கு இசைவாகச் சுற்றுப்பிரவேசம் வரவேண்டியதாயிற்று.

சிரஸ்தார் சாமுவேல் பிள்ளை, இயேசுதாஸ் பிள்ளை யிரு வரும் வெண்சாமரை போட்டு சுகந்த வாசனைத் தைலங் களைத் தெளித்துக்கொண்டு நடந்துபோக, இருவர் முன் னாகச் சென்று வெண்பாவாடை வீச, சிலர் பூக்களை அள்ளி அள்ளிச் சொரிந்துகொண்டுபோக, லூத்தரன் சபையாரும்




TOMB OF VEDANAYAGA SASTRIAR

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் ஒருமுறை பிரார்த்தனை பாட, இங்கிலீஷ் சபையாரும் பிள்ளைகளும் ஒருமுறை பிரார்த்தனை பாட, சத்தியநாத பிள்ளை, அதிஷ்டநாத பிள்ளை முதலானவர்கள் தம்புரா முதலான வாத்தியங்களுடனே கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு போக, பின்னாலே சாஸ்திரியாருடைய பாடல்களை அவருடைய பிள்ளைகள், பாடகர் முதலானவர்கள் பாடிக்கொண்டு போக, துரைகளும் துரைசானிகளும் கூடப் பின்சென்று, தோரணம் வாழைகள்கட்டியலங்கரிக்கப்பெற்ற வீதி வழியாய்ச் சுற்றிக் கோவில்சந்நிதி முகப்பில் பல்லக்கைக் கீழே வைத்தார்கள். சடலத்தையெடுத்து உள்ளும் புறமும் அழகுபடுத்தப்பெற்ற சவப் பெட்டியிலே வைத்தார்கள். சபையின் செம்மல்கள் பெட்டியைத் தூக்கிக்கொண்டபின் சங். நேலரையரும் ஆபர்ட்டையரும் செபப் பிரமாண ஒழுங்குப்படி வாசித்துக்கொண்டு முன்சென்று தேவாலயத்திற்குள் புகுந்தார்கள். ஆராதனை முடிந்தபின், செம்மல்கள் சவப் பெட்டியை எடுத்துக்கொண்டு, தேவாலயத்தின் பின்புறத்தில் இருக்கும் கல்லறைத் தானத்தில் வைத்தார்கள். ஐயர்மார் இருவரும் முறைப்படியே செபம் வாசித்து, அடக்கம்பண்ணினார்கள். ஆமென்.

"இதோ என் ஆத்துமாவே,
நீ நம்பினோர் கர்த்தாவே;
பயப்படாதிரு;
நீ யவர் கைக்குள்ளாக
இரு; அப்போ நன்றாக
எல்லாம் முடிந்து போகுது."

"நம்முடைய நாமத்தைக் கனம்பண்ணுகிறவர்களை நாம் கனப்படுத்துவோம்" என்று கர்த்தர் சொன்னபிரகாரம் தஞ்சாவூர் சபையாரும், கனம் ஐயர்மார்களும், சங். வேதநாயக சாஸ்திரியார்மாட்டு வைத்திருந்த நல் எண்ணத்தையும் அன்பையும் அன்று வெளிப்படுத்தினார்கள்.

"புத்தியைக் கற்றுக்கொடுத்தவர்கள், ஆகாச மண்டலத்தின் ஒளியைப்போலேயும், அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப்போலேயும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களாய்ப் பிரகாசித்திருப்பார்கள்"—தானியேல் 12:3. (Fabricius translation).

# அத்தியாயம் 10

## வேதநாயக சாஸ்திரியின் பின்சந்ததியார்

வேதநாயக சாஸ்திரியார் மணம்புரிந்த இரண்டு பெண்களுக்கும் மக்கட்பேறு இல்லாமல்போனது. இரண்டாவது மனைவி மிக்கேல் முத்தம்மாளுக்கும் சாஸ்திரியாருக்கும் கொடிய ஒவ்வாமை நேரிட்டதினால் அவள் இவரைவிட்டுப் பிரிந்து தமியளாய் திருநெல்வேலியூரில் பிழைத்திருந்து சில காலத்திற்குப்பின் மரித்து மறைந்துபோனதாகச் சொல்லுகிறார்கள். புத்திரவாஞ்சை இவருக்கு மேலிட்டிருந்ததினால், 1811ஆம் தன் சகோதரியின் மகளை முப்பது நாள் குழந்தையாயிருந்தபோதே, பெரிய செலவு செய்து தத்துப் புதல்வியாக எடுத்துக்கொண்டார்.

### I

ஞானதீபம் வளர்ந்தபிறகு சாஸ்திரியாரின் பிரசங்கசதுருக்கு மெத்தவும் உதவியாயிருந்து அவரியற்றிய சகல நூல்களிலும் அப்பியாசித்திருந்து, சகல இராகங்களையும் இனிதாய்ப் பாட சாமர்த்தியமுடையவளானாள். மேலும் இங்கிலீஷ் பாஷையை சாதுரியமாய் பேசவும் எழுதவும் கற்றாள். தமிழ் கிறிஸ்தவர்களின் எழுப்புதலுக்கென்று* "இளமைப்பக்தி" என்ற புஸ்தகத்தை 1853ஆம் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார்கள். இது சென்னைப் பட்டினத்து கமிட்டியாரால் (The Tract and Book Society) அச்சடிக்கப்பட்டது.

1853ஆம் மாசிமீ சென்னை அத்தியட்சர் டி. அல்ட்ரி தஞ்சாவூர் சபையைச் சந்திக்க வந்திருந்தபொழுது, சாஸ்திரியார் G. U. போப்பையர் தனக்குந் தன் குடும்பத்துக்கும் செய்த தீமைகளைக் குறித்து அனுப்பியிருந்த அவிதாவைப்பற்றி விசாரணை செய்தார். சாஸ்திரியாருக்கு ஆங்கிலம் தெரியாததினால் திருமதி ஞானதீபம் அம்மாள் அவர்

---

*"Early Piety"—Persuasive to the exercise of piety from an early age. By J. G. PIKE.



VENERABLE NOVA GNANADICKAM SASTRIAR

*Born 13th February 1830*
*Died 2nd December 1902*



VENERABLE V. ELIJAH DEVASIGAMONI SASTRIAR

*Born 26th November 1834 in Tanjore*
*Died 9th September 1908 in Madras*

கூடவேயிருந்து இரண்டு மணிநேரம் நடந்த விசாரணையில் சாஸ்திரியாருக்குத் தமிழிலும் அத்தியட்சருக்குத் தமிழை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துக் கொடுத்தார்களாம்.

இவர்கள் இடையன்குடி என்ற ஊரில் (திருநெல்வேலி ஜில்லா) கனம் D. சாமுவேல், B.D., ஐயரவர்கள் காலத்தில் ஆங்கு வந்து சதுர் பிரசங்கத்தை நடத்திக்கொண்டிருந்தார்களாம். அப்பொழுது தற்செயலாய் விக்டோரியா இராணியின் குடும்பத்தைச் சேர்ந்த வொரு கர்ணல் (Colonel) தன் பட்டாளத்துடன் அவ்வூரிலே பாளயம் இறங்கியிருந்தாராம். அவர் இவர்களின் சொற்பொழிவைக் கேட்க விழைந்து கனம் D. சாமுவேல் ஐயரிடம் சொல்ல, ஐயர் சாஸ்திரியம்மாளிடம் கலந்து அவர்களின் சம்மதத்தைக் கர்ணலுக்கு அறிவித்தாராம். கர்ணல் அவர்கள் பட்டாளத்துடன் வந்து அமர்ந்தனர். அப்போது ஐயர் சாஸ்திரியம்மாளைப் பார்த்து, "நீங்கள் தமிழில் பேசுவதை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறேன்" என்றாராம். அதற்குச் சாஸ்திரியம்மாள், "நானே ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசுவேன்" என்று சொல்லி, வெள்ளைக்காரர் பக்கத்தில் திரும்பி ஆங்கிலத்திலும் சபையார் பக்கம் திரும்பித் தமிழிலும் வெகு பெருமிதமாயும் தைரியமாயும் சொற்பொழிவை ஆற்றினார்களாம். "இயேசுவே இரட்சகர்" என்பது அன்று நடந்த பிரசங்கத்தினது பொருளாம். செவி ஊன்றிக் கேட்டுக்கொண்டிருந்த கர்ணலவர்கள் பேருவகையடைந்து, காணிக்கை எவ்வளவு விழுந்ததென்று கூட்டம் முடிந்தவுடன் விசாரிக்க, எண்ணிப்பார்த்து 250 ரூபாய் என்றார்களாம். கர்ணல் அதற்கு சரியான தொகையாக ரூ. 250-0-0 கூட்டி வைக்க, 500 ரூபாயாக சாஸ்திரியம்மாளுக்குக் கொடுத்தார்களாம். இந்தியாவிலே இவ்வளவு தெளிவாகவும் சாதுரியமாகவும் கடவுளைப்பற்றி பேசும் தமிழ் நங்கையை பார்த்ததில்லையென்று வியந்தும் புகழ்ந்தும் பேசினாராம். இங்ஙனம் கற்றோரும் மற்றோரும், உற்றோரும் உறவினரும் மிகவும் புகழ, பெறலரிதான புலமையைக் கையாண்டு பெருஞ் சிறப்பு கிளர்ந்தோங்கி, வளரப்பெற்ற ஒளியாளர் ஆவர் சாஸ்திரியம்மாள் என்க.

மற்றொரு வியக்கத்தக்கச் சம்பவத்தை இவண் கூறுதும். தன்னுடைய ஊழியத்தை நடாத்துமாறு சாஸ்திரியம்மாள் இலங்கைக்குச் சென்ருர்களாம். அங்கே கொழும்பிலே யிருந்துகொண்டு ஊழியஞ்செய்தபோது, உள்ளூரிலுள்ள வர்கள் அநேகர் வந்து கூடி கேட்பதோடு, அயலூர்களிலிருந் தும் பலர் வந்து கேட்டுவிட்டு விடிந்தவுடன் ரெயிலேறிப் போய் விடுவார்களாம். பாப்பு மார்க்கத்தாரும் கூடிவந்து கேட்பதை யறிந்த சம்மனசு சாமியார் என்றவர் ஒரு நோட்டீஸ் எழுதி பெண் சபையிலே சொற்பொழிவையாற் றல் தவறு எனவும் அதை ஆண்கள் போய் கேட்பது நாணம் என்றும் கண்டித்து எழுதி சாஸ்திரியம்மாளின் படத்தையும் போட்டு ஊரெங்கும் அனுப்பினுராம். அங்குள்ள சபை யாரில் சிலர் அதைக் கொண்டுவந்து சாஸ்திரியம்மாளிடம் கொடுக்க, அவர்கள் அதை மறுநாள் சதுர் பிரசங்கத்திற்குக் கொண்டுபோய் வந்திருந்தவர்களுக்கு வாசித்துக் காண் பித்து, பெண்கள் சபையில் எழுந்து பேசக்கூடாதென்றும், ஆண்கள் அப்பிரசங்கங்களைக் கேட்கக்கூடாதென்றும் எழுதி யிருக்கிறதே! அப்படியானுல் பெண்ணை வணங்கலாமா? இதற்கு உத்தரவு சொல்லுங்கள்; இயேசுவின் தாயாகிய மரியம்மாளை தெய்வத்திற்கு ஒப்பாக வணங்குவது ஞாயமா? அவர்களுக்கு ராஜாதிராஜாக்களுக்கு மேலான கனத்தைச் செலுத்தலாமேயொழிய வணக்கத்துக்குரியவர்களல்லவே. மேலும் அவர்களுக்குத் தெய்வீகம் இல்லாததினுல், எங்கும் நிறைந்திருக்கும் லட்சணம் அவர்களுக்கில்லை. அதினுல் தானே மகனைப்பார்த்து, "நானும் உன் தகப்பனும் வேதனை யோடு தேடினுேமே!" என்று முறையிட்டார்கள் அல்லவா? (லூக்கா 2:43–48). இவ்வண்ணம் பற்பல நியாயங்களை யெடுத்துக்காட்டி சபையாருக்கு வலியுறக் கூறினுர்களாம்.

சாஸ்திரியம்மாள் சில மாதங்களாய்க் கொழும்பிலேயே வேலைசெய்தபின் அங்கேயே மரித்துப்போனுர்கள். அடக்கத் திற்குச் சம்மனசு சுவாமியார் வந்து அவர்களை வியந்தும் விதந்தும் பேசினுராம். அவர்கள் பிரசங்கத்தைக் கேட்ட பலரிலும் அவர்களின் அறிவின் திறமையைப் புகழாதா ரில்லை.




SRI SHEM. VEDANAYAGA SASTRIAR (4TH GENERATION) WITH HIS SONS [*Photo: A. N. Schwartz*

இவர்கள் கொழும்பிலிருந்து அனுப்பிய தொகையைக் கொண்டுதான் தஞ்சையில் வேதநாயக சாஸ்திரியாரின் வீட்டு முகப்பில் 500 பேர் கூடிவந்து கேட்கத்தக்க ஞான சதுர்மண்டபம் ஒன்று அவர்கள் பேராலே 1870ஆம் கட்டினார்கள். இதிலேதான் சதுர் பிரசங்கம் இன்றுகாறும் நடைபெற்று வருகின்றது.

## II

வேதநாயக சாஸ்திரியாரின் மனைவி மிக்கேல் முத்தம்மாள் மரித்தபின், அவருடைய 55-ம் வயதிலே மூன்றுவது தாரமாக, தஞ்சாவூர் சாந்தப்பிள்ளை மகள் வரோதயம் அம்மாளை, சங்கை பிரதர்ட்டன் (T. Brotherton) (1836–1869) ஐயரைக்கொண்டு, விவாகம் முடித்துக்கொண்டார். இந்த அம்மாள் சிறுமியாயிருந்தபோது சுவிசேஷம் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார். நோவா ஞானதிக்கம், எலியா தேவசிகாமணி யென்ற இரண்டு ஆண்களையும் மனோன்மணி என்றுவொரு பெண்ணையும் பெற்றாள். இரு குமாரர்களும் தகப்பனாரின் சதுர் பிரசங்கத்துக்கு உதவியாயிருந்ததுமல்லாமல், அந்தந்தச் சபைகளில் கர்த்தரைப் பாடி பிரசங்கிக்க தகப்பனாராலே அனுப்பப்பட்டதுண்டு. வேதநாயக சாஸ்திரியார் மரித்தபின், இவர்கள் இருவருக்கும் தஞ்சாவூர் சபையாரால் 'சாஸ்திரி' பட்டம் கொடுக்கப்பட்டு அது நெடுகிலும் வழங்கிவருகிறது.

தஞ்சாவூர் சபையாரின் இவ்வகைய பாராட்டலுக்கு முகாந்தரந்தான் யாதோவெனில், அதனை வேதநாயக சாஸ்திரியின் வரலாற்றின்கட் தேடவேண்டும். புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்தைத் தழீஇயின தஞ்சாவூர் இந்துக்களுக்கு ஞானஸ்நானம், கலியாணம், பிரேத அடக்கம் முதலிய சடங்குகளில் பயன்படுத்துமாறு இரண்டொரு செபங்கள்தான் அற்றைஞான்று இருந்தன. இந்துக்களுக்குச் சடங்குகள்மாட்டு பெரும் அவா உண்டு. வே. சா. இச்சடங்குகளுக்குப் பொருத்தமாக நல்லிசைப் பாடல்களை யுண்டுபண்ணி இந்துமனதுக்கு இரம்மியத்தைக் கொடுத்ததுமன்றி களிப்புக்கான சம்பவங்களுக்கோர் மகிமையையும் பெற்றியையும் சூட்டினர் என்க.

# அத்தியாயம் 11

## வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய நூல்களைக் குறித்து மதிப்புரை

வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய நூல்களில் "செப மாலை" மிக்க சிறந்ததானதால் அதை முதலாவதாக ஆய்ந்தறியலாம். இதிலே சிவணிய தலைசிறந்த கருத்து யாதெனில் தேசாசாரத்திற்கும் பண்பினுக்கும் ஒத்திருக்கும் படிக்கு ஐரோப்பியருடைய பிரார்த்தனை புத்தகத்துக்கு ஒப்பாய் அவர் செபமாலையை இயற்றினார் என்பது. அற்றை ஞான்று, புதிதாய் இந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்து மதத்திற்குட்பட்டவர்களுக்கு இந்நூல் அருமையாயிருந்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. ஏனென்றால் இந்து பக்தர்கள் உண்டுபண்ணின இன்னிசையமைந்த பாட்டுக்களின்பாவனை யாய் கிறிஸ்துமார்க்கத்தினுக்கேற்ப அருளப்பட்டிருக்கிறது. தற்காலத்துக் கிறிஸ்தவர்களுக்கு மாணிக்க வாசகரின்* "திருவாசகம்" "நடராஜபத்து" திருநாவுக்கரசின் "தேவாரத் திரட்டு" நம்மாழ்வாரின் "திருவாய்மொழி" முதலிய இந்து பக்தர்களுடைய விருப்பமெய்திய நூல்கள் மூடப்பட்டுள. கிறிஸ்துமார்க்கத்தின் கொள்கைகளை உபதேசிப்பவர்கள், பெரும்பாலும் இந்துமார்க்கம் விக்ரக ஆராதனை மதம் என்றே கற்பிக்கின்றனர். பதுமை வணக்கம் இருந்தாலும் கிறிஸ்து பக்தர்களிடம் காணப்படும் தெய்வ நட்பு அல்லது கடவுளினிடம் கலத்தல் (Personal religion) இந்து பக்தர் களிடமும் இருந்திருக்கிறது. இது மேற்கூறிய இந்து பாடல்களை வாசிப்போருக்கு எளிதில் புலனும். உதாரணமாகக் கீழே பெயர்த்தெழுதியிருக்கும் செய்யுட்களைச் சோதிக்கலாம்:

---

* This book of Hindu religious poems was translated into English verse by Dr. G. U. Pope under the auspices of the Oxford University in the year 1900. In his preface to this book, he observes about Vedanayaga Sastriar as follows: " There has been at least one real native Christian poet Vedanayaga Sastriar of Tanjore whose writings should be collected and edited."

1. போற்றித் திருவகவல் (மாணிக்க வாசகரினது "திரு வாசகம்"):

மூவா நான்மறை முதல்வா போற்றி,
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி,
மின்னுருருவ விகிர்தா போற்றி,
கன்னுருரித்த கனியே போற்றி,
காவாய் கனகக் குன்றே போற்றி,
ஆவாவென்றெனக் கருளாய் போற்றி,
படைப்பாய், காப்பாய், துடைப்பாய் போற்றி.

2. நடராஜபத்து:

'மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ,
மறை நான்கின் அடிமுடியும் நீ,
மதியும் நீ, ரவியும் நீ, புனலும் நீ அனலும் நீ,
மண்டல மிரண்டேழும் நீ,
பெண்ணும் நீ, ஆணும் நீ, பல்லுயிருக்குயிரும் நீ,
பிறவும் நீ, ஒருவ நீயே,
பேதாதி பேதம் நீ, பாதாதி கேசம் நீ,
பெற்ற தாய் தந்தை நீயே,
பொன்னும் நீ, பொருளும் நீ, யிருளும் நீ, ஒளியும் நீ,
போதிக்க வந்தகுரு நீ,
புகழொணா கிரகங்களொன்பது நீ, யிந்த
புவனங்கள் பெற்றவனும் நீ,
எண்ணரிய ஜீவகோடிக ளீன்றவப்பனே,
என் குறைகளார்க்குரைப்பேன்!
யீசனே சிவசாமி நேசனே யெனையீன்ற
தில்லை வாழ் நடராஜனே!'

3. தேவாரத் திரட்டு (திருநாவுக்கரசு)

'அப்பனீ யம்மை நீ யையனு நீ,
யன்புடைய மாமனு மாமியு நீ,
யொப்புடைய மாதரும் மொண்பொருளு நீ,
யொரு குலமுஞ் சுற்றமுமோரூரு நீ,
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ,
துணையா யென்னெஞ் சந்துறப்பிப்பாய் நீ,
யிப்பொன்னீ யிம்மணி நீ யிம்முத்து நீ,
யிறைவ நீ யேறூர்ந்த செல்வனீயே.'

இவைகளுக்கு ஒப்பானதும் மேலானதுமான எதிரொலி களைச் செபமாலையில் இனிது முழங்கக் கேட்கலாம். உதாரண மாக:—

சேப. 1, அடி 2.

*சத்திய வேதத்தெளிவே போற்றி*
*சயமே நயமே மயமே போற்றி*
*தம்முன்னென்று மில்லாய் போற்றி*

..........................................

*யிரட்சகனாக வந்தாய் போற்றி*
*எனைமீண்டவனே யெனையாண்டவனே*
*யேசுநாதா போற்றி போற்றி*

செப. 6, அடி 5.

*அனையு நீ மனையு நீ அருளு நீ பொருளு நீ*
*அணிகலப் பொக்கடமு நீ*
*அறமு நீ திறமு நீ சூட்சாதி சூட்ச நீ*

..........................................

*சனமு நீ யினமு நீ சகல சாம்பிராச்சிய நீ*
*சத்தியத்துறுதி தருவாய்*
*தாதையாகிய வஸ்து வேத மாளிகை ரஸ்து*
*சாமியேசுக் கிறிஸ்துவே.*

சேப. 6, அடி 8.

*துக்கத்தில் ஆறுதலென் வாழ்விற் களிப்பு நீ*
*துன்பத்திலென் இன்ப நீ*
*தொறுவும் வேலையின் அலுவல் பகலிலென் சிந்திப்பு*
*தூக்கத்திலென் சொப்பனம்*

..........................................

*தக்கயோக்கிய மனோக்கிய சலாக்கியமு நீ*
*சகல பாக்கியமு நீயே*
*தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து*
*சாமியேசுக் கிறிஸ்துவே.*

இச்செய்யுட்களில் காணப்படும் உள் எதுகைகளுக்கு (internal rhymes) நிகரான திருஷ்டாந்தங்களை நானறிந்த வரை ஆங்கிலக் கவிகளிலும் சந்தித்ததில்லை. முன் கூறிய படி செய்யுள் நடை மாத்திரம் பிரதிதொனி யென்று அறிக.

மற்றப்படி செபமாலை புதுமையான விழுமிய கருத்துக்களும் பொருட்களும் அமைந்த வேதநாயக சாஸ்திரியின் சுயமாய் தொடுக்கப்பட்டதோர் சங்கீதத் தொடலையே யாமென்க. செய்யுள் நடை யாவருக்கும் பொதுவானது. இந்து பக்தர் களின் மனப்போங்கையும் இயல்பையும் மரீஇயினும் புத்தம் புதிய கருத்துக்களையும் ஞான அர்த்தம் வாய்ந்த சொற்களையுந் தன்னுடைய செபமாலையில் கிறிஸ்து மார்க்கத் தினுக்குப் பொருத்தமாக அமைத்திருக்கின்ற மெய்ம்மையை யுங் காண்மின்!

மேலே பெயர்த்தெழுதப்பட்ட கடைசிச் செய்யுள் அடி கிறிஸ்து பக்தர்களுக்கு அருமையானது. பொருள் உள்ளத் தைப் பரவசப்படுத்தி ஆறுதலை அளிக்கின்றது. பெப்ரிசியுஸ் ஐயர் மொழிபெயர்த்த ஞானப்பாட்டு மாலையில் சில பாட்டுக் கள் சாஸ்திரியாருக்கு மனப்பாடம். இந்தப் பாட்டுக்களில் இவருக்கு நல் அபிமானமும் பேரவாவும் ஏற்பட்டிருந்திருக் கிறது. 138-ம் ஞானப்பாட்டின் 15, 17-வது அடிகளை மேற் கூறிய செய்யுள் அடியில் பொருத்தியிருக்கின்றார்:

15. 'நீர் ராவில் என் நட்சத்திரம்
இருளில் என் தீ வர்த்தி
குறைவில் என் ஐஸ்வரியம்
என் தாழ்வில் என் உயர்த்தி
கசப்பிலே என் மதுரம்
நான் தொய்ந்தால் மீண்டும் என் மனம்
பலக்க நீர் என் சக்தி'

17. 'நீர் துக்கத்தில் என் ஆறுதல்
நீர் வாழ்வில் என் களிப்பு
நீர் வேலையில் என் அலுவல்
பகலில் என் சிந்திப்பு
நீர் ராவில் என் அடைக்கலம்
நீர் தூக்கத்தில் என் சொப்பனம்
விழிப்பில் என் குறிப்பு.'

இவ்விதமாய் உகந்தெடுத்துக்கொண்டு உரித்தாக்கிக் கொள்ளுதலில் ஒரு சிறிதும் பழுதில்லை.*

ஐரோப்பிய பக்தர்களுடைய ஆத்ம உணர்வினுல் வெளிப் பட்ட பொருட்களையும் இந்து பக்தர்களின் விநயத்தையும் ஒன்றுசேர்த்து இசைத்தது யாவரும் மெச்சத்தக்க சுய சாமர்த்தியமேயாம். சீர்தூக்கின், சாஸ்திரியாரின் கவி சற்றேனும் பின்வாங்கவில்லை. 6-ம் நாளுக்குரிய செபமாலை பொருள் நயமும் சொல் நயமும் கூடியமைந்து இனிது முழங்கா நிற்கின்றது. உள் எதுகை ஏராளமாகக் காணப் படுகின்றது. இவைதான் மறைந்துகொண்டு செவியின் வழியாய் ஆத்மாவைத் கவர்ந்து கொள்ளைகொண்டு போகின் றன. செபமாலையை வாசிப்போர் இவற்றினுக்கு ஈடான தும் எடுப்பானதுமான செய்யுட்களைக் கண்டு அறிந்து கொள்க.

நல்லிசை புலவரான சாஸ்திரியார் செபமாலையில் பதுமை ஆராதனையைச் சின்னபின்னமாக்கி, ஆகடியம் செய்து எழுதியிருக்கிருர். இவர் இந்து பக்தர்களின் விநயத் தைப் பற்றுக்கோடாகக்கொண்டு, கிறிஸ்தவர்களின் ஆத்ம விருத்திக்கென்று செபமாலையை இசைத்தபோதிலும், அம் மார்க்கம் முழுமையும் பதுமை ஆராதனையாகவே பாவித்து "வீண்பத்தி நாசம்" என எழுதிப்போந்தார். ஒருசார் தன்னுடைய முன்னேரின் இருளடைந்த அஞ்ஞானத்தை உணர்ந்து மனம் கடினப்பட்டுப்போயினது கொல்! "ஞான தச்ச நாடகத்"திலுள்ள "ஜாதி யேது"காண் என்ற பாட்டின் 22-ம் அடியில் இவ்வெறுப்பைச் சுட்டிக் காட்டியுளார்.

'கட்டாய் நெல்லையின் வேத சாஸ்திரி
கனத்த இனங்கள் பணிந்து போற்றிய
புட்டாரத்தியும் நெல்லையப்பனை
புணர்ந்த கூத்தாடி பறைச்சியல்லவோ?'

---

* எமது வியாக்கியானங்களை ஆழ்ந்தறிய விரும்பும் நண்பர்கள் செபமாலை யொன்றை வாங்கிக்கொண்டு வாசித்து ஒப்பிட்டுப் பார்க் கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றப்படி நான் எடுத்துக்காட்டும் சுவாரசியங்கள் விளக்கமுரு.

நெல்லையப்பரையாவது அவருடைய சொந்த மனைவியை யாவது வணங்காமல், அவருடைய வைப்பாட்டி தேவதையை வழிபட்டு வந்தவர்களின் பரம்பரை சாஸ்திரியார். கிறிஸ்துவின் ஒளி அவரிடம் வந்து வீசினபின், அஞ்ஞாபகம் மிக்க சஞ்சலத்தைக் கொடுத்திருக்கலாமல்லவோ! கீழ்த்தர இந்து மார்க்க வகுப்புக்களில் அடங்கிய கசா கூளமும் ஆபாசமும் ஓரளவல்ல. மனைவியைவிட வைப்பாட்டியின் பேச்சைத்தான் புருஷன் கேட்பானும். ஆகையால் சாஸ்திரியாரின் வம்சம் நெல்லையப்பரை நேர்முகமாய் வணங்காமல் அவருடைய வைப்பாட்டியின் வழியாய்ச் சேவித்து வாழ்ந்தார்களாம். விக்ரக ஆராதனையுடன் வெறுக்கத் தக்கதான கொள்கைகளும் மல்கிக் கிடக்கின்றன. இதுதான் சாஸ்திரியாரின் இந்து மார்க்கத்துக்கு விரோதமான உணர்ச்சிக்கு முதுகண் என சிறிதாழ்ந்து அறிந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. உவமிக்கையில் புட்டாரத்தியைக் கும்பிடுவது அதிகக் கேவல வணக்கம் என்றுணர்ந்து, கிறிஸ்து வணக்கம் அதிக மேம்பாடுடைத்து என்றறிந்துகொண்டதினுல்தானே:

யேசுவினுல் மேன்மை பெற்றேம் கிருபை பெற்றேம்
இன்பமுறப் பரிசுத்தாவியையும் பெற்றேம்
யேசுவினுல் புத்திர சுவீகாரம் பெற்றேம்
எத்தனையோ பாக்கியங்கள் எல்லாம் பெற்றேம்
யேசுவினுல் நித்திய சீவனையும் பெற்றேம்
எண்ணுழி காலமும் வாழ்ந்திருக்கப் பெற்றேம்
பாசம் வைத்துக் கிறிஸ்தவர் நீர் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர் ஆடீரூஞ்சல்.

சத்தியத்தின் மேலான பாதை கண்டோம்
சாங்கமா யுலகத்தைத் தள்ளிவிட்டோம்
பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைக்கச் செய்தோம்
பிசாசினுடம்பரங்கள் அனைத்தும் விட்டோம்
மெத்த மெத்தக் கிருபை பெற்றேம் தேறிப்போனேம்
வேதநாயகன் பாடல் விரும்பிக்கொண்டோம்
பக்தியுள்ளோர்க்கென்ன குறை ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர் ஆடீரூஞ்சல்

என்று பாடி செபமாலையை நன்கு இசைத்து அருளிச் செய்து விளக்கமாக முடிவு கட்டுவாராயினர்.

மேலே பெயர்த்தெழுதினவை "திருச்சபை யூஞ்சல்" என்ற செபமாலையிலுள்ள கடை இரண்டு அடிகள். இவை தம்மின் மனோபாவனை, அலங்காரம், வனப்புக்கள் முதலி யன ஆங்கிலேய கவிகளில் காண்பதரிது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்குகின்றுழி இவ்வடிகளின் விழுப்பம் பத்துமடங்கு அதிகமாகத் துலங்குமென்க.

செபமாலை முப்பத்தொன்றையும் ஈண்டு வியாக்கியானஞ் செய்ய இடமில்லை. கிறிஸ்து பக்தர்கள் இயற்றிய கவிகளில் சாஸ்திரியாரின் செபமாலைக்கு இணையானதொன்றும் அறிந்தி லேம். வங்காள தேயத்து தாகூர் (Tagore) கவிச்சக்கர வர்த்தி இயற்றியுள்ள கீதாஞ்சலியும் (Gitanjali) செபமாலை யின் பக்தி விநயத்தினுக்கும் உட்கருத்துக்களுக்கும் பின் வாங்குமென்று கூற நான் துணிவேன்.

"வீண்பத்தி நாசம்" என்ற 20-ம் செபமாலையைப் புதி தாய் இசைத்த சமயத்தில், ஸ்ரீ வில்லியம் ராபர்ட்டு (Mr. William Robert)* என்ற சென்னையிலிருந்த ஒருத்வ மார்க்க சபையின் (Unitarian Church) குருவுக்குக் கைப் பிரதியொன்றை சாஸ்திரியார் அனுப்பினர். இவர் அதை வாசித்து பேருவகையடைந்து: "புறச்சமயத்தாருக்கு ஏற்ற புத்திமதிக்கானது; ஏராளமாக அச்சில் பதிக்க சித்தமா யிருக்கிறோம். எங்கள் சபை வரும்படியில் 300 வராகன் வரையில் உங்கள் பிரயாசத்திற்கு அனுப்பும்படி ஆலோசித் திருக்கிறோம். ஆதலால் ஒவ்வொரு அடியின் கடைசி வரியில் வருகிற 'யேசுநாயகனே' என்கிற பதத்தை 'ஏகநாயகனே' என்று பிரசித்தஞ்செய்ய உத்தரவு கொடுக்கவேணும்" என்று சாஸ்திரியாருக்கு எழுதினராம். "இயேசுவின் மகத்து

---

* இந்தப் பாதிரியாரைக் குறித்து பௌவர் சாஸ்திரியார் பின்வரு மாறு எழுதியுளார்: "1825ஷு வில்லியம் ராபர்ட்ஸ் என்னும் ஒரு வேளாளன் ஒருத்வ மார்க்கக் குருவாக புரசைபாக்கத்தில் ஒரு கோவிலைக்கட்டி அநேக புஸ்தகங்களை எழுதி அச்சிட்டான். அவன் ஆரிங்டன் (Harrington) என்னும் ஒரு துரையோடு இங்கிலாந்து தேசத்துக்குப் போய் ஒருத்வ மார்க்கத்தைச் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றுக் குருவாகித் தன் கொள்கையை நாட்ட வெகு பிரயாசப் பட்டான்."

வத்தை அறியாத உம்மிடத்தில் என் பாடலிருப்பது சரியல்ல, உடனே திருப்பி அனுப்பிவிடும்" என்று பதில் எழுதினார். இந்தப்பெரிய சோதனையிலிருந்து சாஸ்திரியார் மீண்டது தன்னுடைய விசுவாசத்தின் சுய பலத்தால் என்று நாம் உணரற்பாலது. வறுமை நிலையால் பீடிக்கப்பட்டிருந்தாலும் இயேசு சுவாமியின்மாட்டு இவருக்கிருந்த விசுவாசமும் பக்தியும் யாதொரு உலக விருத்திக்குரிய சோதனையினால் குறைவுபட்டதில்லை யென்க.

இன்னொரு முக்கியமான நிகழ்ச்சியைக் கூறுதும்: 1823-ம் ௵ கல்கத்தா பிஷப்பாக அபிஷேகம் பண்ணப்பட்டு அங்கிருந்து 1826-ம் ௵ சென்னைக்கு விஜயஞ்செய்த ஹீபர் கண்காணியார் (Bishop Heber) தஞ்சாவூரில் வேதநாயக சாஸ்திரியாரைச் சந்தித்தார். இவரைக்குறித்து Rao Sahib S. K. தேவசிகாமணி அவர்கள் எழுதியிருக்கிறதாவது:

"..............மார்ச்சு மாதம் புறப்பட்டு 1826-ம் ௵ தஞ்சாவூருக்கு வந்தார். ஈஸ்தர் பண்டிகை தினம் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார். 1300 இந்திய கிறிஸ்தவர்கள் ஒன்றாய்க் கூடி கடவுளை ஆராதிப்பதைக் கண்டு அகமகிழ்ந்தார். ஏப்ரல்மீ முதல் தேதி திருச்சிராப்பள்ளிக்கு வந்து வெகு உற்சாகத்துடன் வேலையை நடத்தினார். 3-ம் தேதி காலையில் கோட்டை ஆலயத்தில் திடப்படுத்துதல் நடத்தி............................. ஜட்ஜ் துரையின் வீடு வந்து சேர்ந்தார். பகல் சாப்பாட்டுக்குமுன் ஸ்நானம் செய்யப்போன இடத்தில் திடீரென மரணமடைந்து, St. John's ஆலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்."

**கண்காணியார் ஹீபர் வேதநாயக சாஸ்திரியைச் சந்தித்தது**

இவர் தஞ்சாவூரில் சாஸ்திரியாரைச் சந்தித்தபொழுது, செபமாலையினொரு படியையும், ஞானபத கீர்த்தனையின்படியொன்றையும் 55 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டாராம். இவை லண்டன் நகர் புத்தக நிலையத்தினுக்கு (British Museum Library, London) வேண்டுமென்று சொன்னாராம். ஆனால் அவர் அடுத்த மாதமே

திருச்சிராப்பள்ளியில் அகால மரணமடைந்தபடியினல் இவ்விரண்டு கைப்பிரதிகளும் அப்புத்தக நிலையத்தை யடைந்த விடயம் திட்டமாகத் தெரியவில்லை. எனினும் ஹீபர் கண்காணியார் (Metropolitan) வேதநாயக சாஸ்திரியாரைச் சந்தித்து இவரையொரு ஆக்கியோன் அல்லது புலவன் என மதித்து இருநூல்களின் கைப்பிரதிகளைப் பெற்றுக்கொண்டது தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு மிக்க மேன்மையேயாமென்க.

## 2. ஞானபத கீர்த்தனங்கள்

இவைகளின் தொகை உயரத்தாழ 500. சிலவற்றைக் கோவில்களில் பயன்படுத்தி வருகிற 'ஞான கீர்த்தனை' புத்தகத்தில் காணலாம்.

நாம் மேலே செபமாலையின்கட் 138-வது ஞானப்பாட்டினுள்ள சில பொருட்களைக் கூட்டி அமைத்து எழுதினதை வியந்தோதினும். இச்சார்பு (Tendency) சில ஞானபத கீர்த்தனங்களிலும் காணப்படுகின்றது.

உதாரணமாக, புது ஆண்டு விழாவன்று கோவிலில் சபையார் பாடுகின்ற சாஸ்திரியாரின் கீர்த்தனையை (கிறிஸ்தவ கீர்த்தனைகள்) 363-ம் எண் (Second Revised Edition, 1950) கருத்தூன்றி நோக்குங்கால், அஃது அதே விழாவன்று பாடப்படும் ஞானப்பாட்டை (கிறிஸ்து சபை பாமாலை, 79-ம் எண், 1949) முழுவதூஉம் தழீஇ நிற்கின்றது புலனும். அத்தியட்சர் கால்டுவேல் (Dr. R. Caldwell) ஆங்கில ஞானப்பாட்டாகிய 'பிளவுண்ட மலையே' (Rock of Ages) என்ற பாட்டைத் தமிழ் யாப்பிலக்கண முறையைத் தழுவி சங்கராபரண இராகத்தில்,

> 'எசையா பிளவுண்ட மலையே
> மோசநாளில் உன்னில் மறைவேனே'

என்ற கீர்த்தனையை இசைத்தார். இஃதுவோர் அப்பியாசம். கலையின் துவக்கத்தில் இது பழுதன்று. கவிவரம் நல்விருத்தி பெற்றபின் சாஸ்திரியார் சுயமாகப் பொருட்சுவையும் சொற்சுவையும் சிவணிய பாடல்களை இனிய ராகத்தில் அமைத்து கிறிஸ்து மார்க்கம் தமிழருக்குள் நல்

மதிப்பு பெறும்படி உரைக்கொணு பேருதவி புரிந்தார். ஐரோப்பிய கிறிஸ்து பக்தர்கள் ஞானப்பாட்டுக்களை (Hymns) இயற்றியிருக்கின்றனர்; இந்து தேசத்துப் பக்தர்கள் கீர்த்தனைகளை (Lyrics) இசைத்திருக்கின்றனர். இவர்கள் ஞானப்பாட்டுக்களை உண்டுபண்ணவாவது அவர்கள் கீர்த்தனைகளை இசைத்தலாவது ஒல்லும் வகையல்ல. மயில் கத்தும் சத்தம் ஒன்று; குயில் கொடுக்கும் குரல் மற்றொன்று. எல்லாம் கடவுளுடைய அமைப்புத்திறன். ஞானப்பாட்டுக்களை ஐரோப்பியர் பாடினுல் அது இனிமையாகத்தான் தொனிக்கின்றது. இந்திய பக்தர்கள் கீர்த்தனங்களைப் பாடினுல் அதுவும் இனிமையாகத்தான் ஒலிக்கின்றது. கேட்கும் கடவுள் ஒன்றைமட்டும் மெச்சி புகழ்வார் கொல்! மற்றொன்றை இழிவுபடுத்தி இகழுவாரோ!

கீர்த்தனைகளின் கடைசி சரணத்தில் தன் பெயரை வேதநாயக சாஸ்திரியார் கூட்டியிருப்பதை வோர் இயைபின்மையெனச் சிலர் எண்ணுகிறுர்கள். ஆராய்ந்து நோக்குங்கால் இஃது அற்றைஞான்று நிலவியவோர் தேச வழக்கமாயிருந்ததென்று புலனுகின்றது. துகாராம் (Tukaram 1608–1649) என்ற மராட்டிய கவி பக்தன் தன்னுடைய பாடல்களின் கடை அடியில் தன் பெயரைத் தவருமல் நிறீஇயினுர். உதாரணமாக:—

159. All my desires are in God.

By day and night will I keep busy sounding the praises of Govind.

All my desires are in God; I have offered my body to Him.

I do not wait a moment but continually direct all my verses toward Him.

Tuka says, I sing His praises; I rouse the people.

துகாராம் 4,500 பாடல்களை யிசைத்ததாகச் சொல்லு கிறார்கள். அவர் கடை அடியில் தன் பெயரைக் கூட்டி இருந்தாலும், இந்த இந்துவின் பாடல்களை ஐரோப்பிய மிஷனெரிமார் அதிக வேட்கையுடன் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டாடுகின்றனர். (Dr. W. S. Deming [13] பார்க்கவும்). சாஸ்திரியார் இவ்வழக்கத்தினைக் கையாண்டதற்குப் பற்பல நியாயங்களைச் செபமாலையின் முகவுரையில் எடுத்து நவிலுகின்றனர். நான் சிந்தித்தவரையில் எனக்குத் தோன்றுகிறதென்னவெனில், இவருடைய ஞானஸ்நானப் பெயர் 'வேதபோதகம்' ஆனமையின், 'வேதநாயகம்' வீட்டிலே தனக்கு வழங்கிய செல்லப் பெயரானதினாலும், துகாராம் தியாகராஜா முதலிய இந்து பக்தர்களிடம் ஏற்கனவே தங்கள் பெயரை கடை அடியில் நிறுவுகிற வழக்கம் இருந்ததினாலும், சமர்த்தையே கையாண்டு 'வேதநாயகம்' என்ற செல்லப் பெயரை ஞானப் பொருளாக வமைந்திருக்கவேண்டும். அல்லது சிற்சில விடங்களில், கிறிஸ்துவையே 'வேதநாயகா'வென அழைத்துப் பாடினதற்கு நியாயம் கூறுவதரிது. மேலும் பக்தர்களுடைய மார்க்கம் தங்களுக்கும் கடவுளுக்குமேயொழிய சபைக்கும் கடவுளுக்குமன்று. இவர்கள் முக்காலமும் கடவுளைத் தியானித்து, அவரையோர் நண்பனாகப் பாவித்து, அவரைப் போற்றி வாழ்வதே 'பக்தி'. கீர்த்தனங்கள் அவருக்கு அவர்கள் படைக்கும் கையுறையாவன. 'பெருக்கத் திருக்கருணைப் பிதாவத்தனே' என்ற கீர்த்தனையின் கடை அடியில்,

**தம் கீர்த்தனைகளின் கடை சரணத்தில் வே. சா. தன் பெயரைக் கூட்டியிருப்பது**

> தூதர்களின் பாட்டுனக்குச் சோபனப்பாட்டு
> வேதநாயகன் பாட்ட தென்னபாட்டு

என்று முழங்கினது புகழத்தக்கதே. இதுதான் இந்திய பக்தர்களின் இயல்பு (personal note in the songs). ஐரோப்பிய குருக்களுக்கு 'இந்து பக்தி மார்க்கம்' விளக்கமுறவில்லை. சாஸ்திரியாருடைய 'பக்தி மார்க்கம்' பலருக்குப் புரியாமல் தப்பான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுப் பிழைபடக் கருதுவாராயினர்.

சென்னை ஹைகோர்ட்டு அட்வொகேட் சத்திய ஜோசப் அவர்களால் அச்சிடப்பட்ட "தமிழ் கிறிஸ்தவர்கள் வீடுகளில் செய்யவேண்டிய குடும்ப செப முறைகளும், ஞான பத கீர்த்தனைகளும், ஞானப்பாட்டுக்களும்" என்ற புத்தகத்தில் சாஸ்திரியாரின் நூல்களிலிருந்து அநேக பாடல்களைப் பெயர்த்துச் சேர்த்திருக்கிறார். அக் கீர்த்தனைகளின் கடை அடிகளை இவர் நீக்கவில்லை. இவ்வடிகள் சாஸ்திரியாரின் கையொப்பம் என்று அறிந்துகொள்ளவேண்டுமெனத் தெளிக.

இந்து கவி தியாகராஜ ஐயர், சாஸ்திரியாரின் ஏககால வாசியாயிருந்தபடியினால் வாசிப்போருடைய பயனைக் கருதி இருவரையும் சமரசப்படுத்தி ஒப்பிட்டு நோக்குவது அவசியம். தியாகராஜாவுடைய தகப்பன் இராமபிரம்மம்; தாய் சாந்தை. தகப்பனார் தஞ்சை மகாராஷ்டிர மன்னன் ஷாஜி என்பவரால் மிகவும் மதிக்கப்பெற்றுத் திருவாரூரில் வந்து குடியிருந்தார். தம் குடும்பத்தைக் காப்பாற்ற அவண் வசதியில்லாததால் தஞ்சைக்கடுத்த திருவையாற்றிற்குக் குடிவந்து குடும்பத்தை நிர்வகித்துவந்தார். இவரது மூன்றாவது மகன் தியாகராஜர். தந்தை தாய் சொல்படி நடப்பவராய், இளமை பருவத்திலேயே தந்தையார்க்குப் பூசைக்குரிய இலை தளிர் மலர் முதலியவைகளைக் கொய்து கொடுத்து, இராம பக்தியில் சிறந்தவராய் மிளிர்ந்து, பெற்றோர் மறைந்தபிறகு, இசைவளம் நிறைந்த கீர்த்தனங்களை இராமபிரான்மீதில் பாடி பெரும் புகழ் படைத்தவர். இவர் 24,000 கீர்த்தனங்கள் பாடினதாக வதந்தி.

தியாகராஜர் யாதொரு பயனையும் கருதாது கடவுளையே வழிபடுகிறவரானதால், தஞ்சை சரபோஜி மன்னன் நேரில் திருவையாற்றிற்குப் போய் அவரைக் கண்டு, தமக்கிருந்த வயிற்றுவலி அவரால் நீக்கப்பெற்று, பரிசில்களை அளித்துத் திரும்பினார் என்றும் சொல்லுகிறார்கள். இச்சம்பவத்தினால் ஏற்படுகிற விழுமிய வுண்மைகள் தான் யாதோவெனில் கூறுதும். சாஸ்திரியாரும், தியாகராஜாவும் ஏககாலவாசிகள். ஒருவர் கீர்த்தனைகளை ஒருவர் வாசித்தும் கேட்டும் இருக்க வேண்டும். தியாகராஜர் சங்கீத வித்வானானபடியினால்

இனிய புதிய இராகங்களை உண்டுபண்ணவும் இசைக்கவும் ஆற்றல் வாய்ந்தவர். சாஸ்திரியார் கவிகளை யாப்பிலக் கணத்து முறையில் தொடுக்க மாத்திரம் திறன் எய்தினவர். இராக பிரமாணங்களுக்கும் ஏற்றதாய் கீர்த்தனங்களை அமைக்க வரம் இருந்தது. கிறிஸ்துவின் சரித்திரத்தைக் கதாப் பிரசங்கமாய் பஜனை செய்து வணங்குவதே சாஸ் திரியாருடைய முதன்மையான வேலையாக இருந்ததால் அதனுக்கு உறுகருவியாய் திருவிழாக்களுக்கு உகந்தவண்ண மாய்க் கீர்த்தனைகளைக் காலாகாலங்களில் இசைத்துவந்தாரே யொழிய தியாகராஜரைப்போல சங்கீத வித்வானாக மிளிர வில்லை. தியாகராஜருடைய இன்னிசையமைந்த இராகங் கள் சிலவற்றைச் சாஸ்திரியார் இரவலாக வேற்றுக்கொண்ட தாக கர்ண பரம்பரையால் அறிகின்றோம். இப்பாட்டுக ளெவையெனத் தீர்மானிக்க, பரந்த ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவ்வித முயற்சிக்குச் சமயமில்லை. ஒரேயொரு கீர்த்தனையை மாத்திரம் திருட்டாந்தமாக ஈண்டுக் குறிப்பிடு கின்றோம்.

தியாகராஜய்யர் கீர்த்தனை—(தெலுங்கு)

இராகம்—நாட்ட குறிஞ்சி] பல்லவி [தாளம்—ரூபகம்

ஸுஜன ஜீவனு—ஸுகுண பூஷணு ராமா ஸுஜன

அனுபல்லவி

புஜதபூஷணு ஸரிசபுத ஜனுவனு
அஜவந்தித துருதசம்தன தசதுரங்கமா ராமா— ஸுஜன

சரணம்

ஸாருநேத்ர ஸ்ரீகளத்ர—ஸ்ரீ ரம்மிய காத்ரா
தாரக நாம ஸுசரித்ர—தசரத புத்ரா
தாரகாதிபா—கனதர்ம பாலனு
தார யாகுவா நிர்மல தியாகராஜ ஸன்னுத— ஸுஜன

வேதநாயக சாஸ்திரியாரின் கீர்த்தனை—(தமிழ்)

பல்லவி

பரம ஜீவனு—பவவிமோசனு சீமா பரம

அனுபல்லவி

கிருபையாசனு கிறிஸ்தருள் செய்யோசனு
தருமிங்கித நிறை சுந்தர திரவிய சம்பன்னு— பரம

சரணம்

நாதகீர்த்தன ஞானசாஸ்திர—இஸ்திரியேவை நேத்திரா
ஞாபகசே முயர் சரித்திர—தவிதிறை புத்திரா
வேதநாயகன் தமிழ்க்குரிய தாயகா
மேசியா குருபர நிர்மல யேசு ராஜசனுதா— பரம

சாஸ்திரியார் ஈங்கு அமைத்திருக்கும் பதில் சொற்களைக் கண்டுபிடிக்கவும். இப்பாட்டின் இராகத்தை யறிந்தவர்களுக்கு அதன் மதுர தொனியின் அருமை விளங்கும். நாம் மனோ பாவனையில் இந்துக்கள்தானே. "Blood is thicker than water" என்ற ஆங்கில பழமொழிக்கேற்ப நம் இயல்பு இந்து ஆகையினால் இந்து கீர்த்தனங்கள் சிலவற்றைத் தமது கீர்த்தனைகளுக்கு மாதிரி உருவாகவேற்றுக் கோடல் மாறுபாடு அன்று. நம் தமிழ் மக்களின் வழக்கம், கல்வி, சித்தி முதலியன நமக்கு உரிமையாயினமையின் சாஸ்திரியார் தியாகராஜாவைப் பின்பற்றினது செயற்கையு மல்ல, முரணுமல்ல!

கிறிஸ்தவ சபையோருக்கு அறிமுகமாகாத நான்கு அரிய கீர்த்தனைகளை முதலாம் பதிப்பில் பெயர்த்து அச்சிட்டோம். நான்காவது கீர்த்தனையின் மூன்றும் அடி பின்வருமாறு:—

3. உன்னதத்தின் கிருபாசனத்தை விடுத்
துயர்ந்த வெளியைத் தாண்டி யந்த
உம்பர்கள் சேனைக் குழாங்க ளுலாவிய
ஒளிவின் விரிவுந் தாண்டிச் சுடர்
மின்னிய சேரக்கூடாத வெளிச்சத்தின்
வீதிவிலாசமுந் தாண்டியப்பால்
விந்தை நட்சத்திர மண்டலங்களுட
விம்பத்தையும் விட்டுத் தாண்டிச் சென்று
பின்னையுஞ் சூரிய மண்டலத்தினுட
பெருஞ் சக்கரமுங் கடந்து அங்கே
பெருத்த கிரக மண்டலத்தை யெல்லாம்
பின்னிடத் தள்ளியே நடந்து புயல்
மன்னு மாகாச விரிவின் பெருவழி
மட்டற்ற பாதையிற் றொடர்ந்து—இங்கே
மண்டிய தேவரு மண்டரும் போற்றிப்பூ

மண்டலத்தைக் கிட்டி அடர்ந்து—கடுஞ்
சின்னஞ் சீனக்குன்றி னெட்டைப் பிடித்துச்
சேர்ந்த ஸ்திவாரத் தோடொட்டப் பிடித்துத்
தின்னுங் கனிஉம் போடத்
துன்னும் பகையுஞ் சாடப்
பன்னுந் துதியும் பாடப்
பொன்னின் கிரீடமுஞ் சூட— வந்தானே பரன்மகன் மு.

இவ்வடியில் ஆங்கில வீர காவியகவி மில்டோன் (Milton) இயற்றிய "முக்தியை யிழந்த" கதை (Paradise Lost) என்ற காவியத்தில் முதன்மையான தூதன் மோட்சத்தை விட்டு நீங்கின விவரிப்பின் எதிர் ஒலியைக் கேட்கலாம். சாஸ்திரியார் கிறிஸ்துவின் பிறப்புக்கேற்ப இனிது அமைத்துக்கொண்டார். மேலும் இஃதுடன் ஹனுமார் சீதாதேவியைத் தேடி இலங்கை விசும்பின் மார்க்க மாகச் சென்ற சம்பவத்தின் விஸ்தரிப்பை இராமாயணத்தில் காண்மின். இந்து புராணங்களையும் காவியங்களையும் நன்கு கற்ற நல்லிசைப் புலவர் சாஸ்திரியார்!

### 3. பெத்தலகேங் குறவஞ்சி

இந்நூலின் இலக்கணங்கள் சிலவற்றைச் சென்னைப்பட்டி னம் பிரவேசம் அடங்கிய அத்தியாயத்தின் கடை சுட்டிக் காட்டினேம். இது ஒரு நாடகம் (Similar to a Miracle or a Mystery Play in English Drama). இந்நூலை அவண் அரங்கேற்றிய வரலாற்றின் தொடர்பாக, அதன் சிறப்புக்கள் சில எடுத்துக் கூறப்பட்டன. முகவுரையில் மாதிரி உரு யாது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றூர். குற்றூலக் குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூடராசப்பர் தம் நூலை அரங்கேற்றிய ஆண்டு கிறிஸ்தாப்தம் 1718. சாஸ்திரி யார் பிறந்த ஆண்டு 1774. ஆனபடியினுல் இந்நூலையவர் கற்றறிந்திருப்பது ஒருதலை. தஞ்சாவூரில் குடியேறினபிறகு, அந்நாட்டின் அரசனது கட்டளையின்படி இந்நூலை ஆண்டு தோறும் அரண்மனையின் அரங்கத்தில் நவராத்திரியன்று நடைபெற்றதை அவர் கண்ணுற்று இவ்வண்ணம் கிறிஸ்த வர்களுக்கொரு நாடகம் அமைப்பது நலம் என்று உணர்ந்து பெத்தலகேம் குறவஞ்சியை உண்டுபண்ணினுர் என்று நாம் சிறிதாழ்ந்தறிந்துகோடல் நியாயமே.

'குறவஞ்சி' என்றால் யாது என வினவுவோருக்கு விடை பகருமாறு குற்றாலக் குறவஞ்சியின் முகவுரையி னின்று சில வரிகளைப் பெயர்த்து எழுதுகின்றோம். குறவஞ்சி யென்பது குறத்திப் பாட்டு எனக் கூறப்படும்; அது வரு மாறு:

"தலைவன் பவனி வருதல், அப்பவனியைக் கண்ட பெண் கள் அத்தலைவனைக் காமுறுதல், மோகினிப் பெண் (தலைவி) வருதல், அவள் பவனிவந்த தலைவனைக் கண்டு மயங்கல், மயங்கின பின் சந்திரன் தென்றல் முதலியவரை நிந்தித்தல், அது கண்டு பாங்கி மோகினியை ஐயுற்றதென்னென வினவு தல், தலைவி பாங்கியோடு உற்றதுரைத்தல், பாங்கி தலைவ னைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தலைவனிடம் தூது போகச்சொல்லி வேண்டுதல், தலைவி பாங்கிக்குத் தலைவனடையாளங் கூறல், குறத்தி வருதல், தலைவி குறத்தியை மலைவள முதலியவை வினவுதல், குறத்தி தலைவிக்கு தனது மலைவளம் நாட்டுவள முதலியவையுந் தலைவனது தலைவளங் கிளைவள முதலியவை யும் பிற தேசத்திற்குக் குறி சொல்லி விருதுகள் பெற்று வந்தமையுங் கூறல், தலைவி குறத்தியினிடம் குறி கேட்டல், குறத்தி தெய்வந் தொழுதல், தலைவி குறத்திக்குப் பரிசிலுதவி விடுத்தல், குறவன் வருதல், பறவைகள் வருதல், கண்ணி குத்தல், பறவைகளைப் பிடித்தல், குறவன் குறத்தியை விருப்பமுற்றுத் தேடல், பாங்கனோடு குறவன் குறத்தியடை யாளங் கூறல், குறவன் குறத்தியைக் காண்டல், குறவன் குறத்தியினிடத்துப் புதிய ஆபரணங்களைக் கண்டு ஐயுற்று வினவுதல், அங்ஙனம் வினவும் ஒவ்வொன்றுக்கும் விடை கூறல் ஆகிய இவ்வகை உறுப்புக்களமைய, அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம் இவைகளினிடையிடையே சிந்து முதலியவற்றை நாடகத் தமிழாற் பாடுவது."

எனவே, இச்சிறந்த நிரூபணத்தால், பெத்தலகேங் குறவஞ்சியை விலைமதித்தால், ஆக்கியோனின் கவி வல்லமை திரிகூட ராசப்ப கவிராயரின் கலைத் திறனுக்கு ஒரு சிறிதும் பின்வாங்கவில்லையென்பது புலனாகும். இரண்டு நாடகங்

களும் சிறந்த ஒட்டுவமைகள் (Allegories). இவற்றினைச் செவ்வையாய்க் கற்றறிவது கல்வியழகைக் கொடுக்குமென நான் சொல்லத் துணிவேன். குறவஞ்சி நாடகப் பாவனையை சாஸ்திரியார் மாதிரி உருவாக வேற்றுக்கொண்டு பெத்தலகேங் குறவஞ்சியை யுண்டுபண்ணினர் என்று பொதுவாக நாம் ஒப்புக்கொண்டாலும், கீழே பெயர்த்தெழுதப்பட்ட வரிகளை ஒப்பிட்டு நோக்கின், சிலவற்றை ஏறக்குறைய பார்த்தெழுதினதாகத் தோன்றும்.

குற்றாலக் குறவஞ்சி—பக்கம் 70.

1. கலந்த கண்ணியை நெருக்கிக் குத்தினற்
காக்கையும் படுமே குருவா காக்கையும் படுமே

2. மலர்ந்த கண்ணியை கவிழ்த்துக் குத்தினல்
வக்காவும் படுமே குளுவா, வக்காவும் படுமே குருவா

3. உலந்த கண்ணியை இழுக்கிக் குத்தின
லுள்ளானும் படுமே குருவா வுள்ளானும் படுமே

4. நூலந்த கண்ணியை திருத்திக் குத்தடா
குற்றால மலைமேற் குருவா குற்றால மலைமேல்.

பெத்தலகேங் குறவஞ்சி—பக்கம் 158.

5. அடர்ந்த கண்ணியைக் கலந்து குத்தினல்
அன்னப்புரு படுமே குருவா
படர்ந்த கண்ணியை யிருக்கிக் குத்தினற்
பருங் கொக்கும் படுமே குருவா
தொடர்ந்த கண்ணியைச் சுருக்கிக் குத்தினற்
சொன்னதெல்லாம் படுமே குருவா
இடர்ந்த கண்ணியை திருத்தி குத்தடா
ஏகாந்த பெத்தலே மலைக் குருவா.

இரண்டாவது உதாரணத்தை ஒப்பிட்டு நோக்கின், சாஸ்திரியாரது வாழ்த்து, செய்யுள் நடையை அனுசரிப்பதுமல்லாமல், கிறிஸ்து மார்க்கத்தின் கருத்துக்களையே சிறப்பித்து அமைக்கப் பெற்றுள்ளதென்பதை அறிந்துகொண்டு இன்புறலாம். மேலும் அக்காலத்திில் புதிதாகக் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினரானபடியால் தன்னுடைய வரம் வெளிப்பட யேதுகரமான மாதிரி உருக்கள் பெரும்பாலும் இந்து நூல்கள்தானே!

செந்தமிழ் வாழ்ந்த அக்காலத்தில் இந்த நாடகம் தமிழ் உலகத்தினுக்கு அதிகக் களிப்பைக் கொடுத்திருக்குமென்பதற்கு ஐயமில்லை. இற்றைஞான்று, தமிழ் பாஷாவிருத்தி தோல்வியடைந்து, ஆங்கிலமும் இந்தியும் தமிழை மேற்கொண்டபடியினுல், கிறிஸ்தவ தமிழருக்கு இந்நூல் கருகலாகவே தோன்றுவது வியப்பன்று.

பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் பொதுவாகக் கிறிஸ்தவர்களைப் "பறையர்" என்றும், கிறிஸ்து மார்க்கத்தைப் "பறையர் வேதம்" என்றும் இழிவாகச் சொல்லிக்கொண்டு வருவாராயினர். அதைக் கண்டித்து உணர்த்தும்படி, "கிறிஸ்தவரின் மகிமை" என்ற பிரிவை உண்டாக்கியிருக்கலாம். பெத்தலேம் குறவஞ்சி 91–94 பக்கங்கள் பார்க்கவும். உதாரணமாக;

9. நல்லவர்கள் நாங்களென்ற கிறிஸ்தவர்களம்மே,
நாலுவர நன்மைமிகுங் கிறிஸ்தவர்களம்மே,
வல்லமையின் வாயாகக் கிறிஸ்தவர்களம்மே,
மனுடர்களைத் தொழுகாத கிறிஸ்தவர்களம்மே,
சொல்லரிய வண்மையுள்ள கிறிஸ்தவர்களம்மே,
துல்லிபஞ்சேர் கற்பினெழுங் கிறிஸ்தவர்களம்மே,
அல்லலற்று வாழ்ந்திருக்குங் கிறிஸ்தவர்களம்மே,
அருமை பெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே

பெத்தலேங்குறவஞ்சியை அரங்கேற்றக் கேட்ட சரபோஜி மகாராஜா இதைப்போலொரு நாடகம் பிரகதீஸ்வரன்பேரில் உண்டுபண்ண சாஸ்திரியாரைக் கேட்டுக்கொண்டதினுல் இதுவோர் சிறந்த நாடகம் என்றே நாம் மதிக்கற்பாற்று. ஓர் அரசனுலும் அரச சபையாலும் புகழப்பெற்ற கிறிஸ்தவ நூல், இஞ்ஞான்று கிறிஸ்தவர்களுக்கு அறிமுகமில்லாத புத்தகமானது.

## 4. பேரின்ப காதலும் தியான புலம்பலும்

இவ்விரண்டு நூல்களும் கிறிஸ்துவினது பாடுகளின் பேரில் இயற்றப்பட்டுள்ளன. 1813ஆம் பேரின்ப காதலும் 1821ஆம் தியானப் புலம்பலும் உண்டுபண்ணப்பட்டன. பேரின்ப காதலின்சிறப்பை ஏற்கனவே 5-ம் அத்தியாயத்தில் எடுத்துக் காட்டினேம். 'பிரலாப ஒப்பாரி'யின் 7-வது பாகம்

'சிலுவை நடை' (March to Calvary) கவனிக்கத்தக்கது. 65–69 அடிகளுக்கு சாஸ்திரியாரே அனுபந்தத்தில் வியாக்கியானஞ்செய்து கொடுத்திருக்கிறார். இவ்வடிகளிலே பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு சாதியையும் கிறிஸ்துவுக்கு உவமானமாகக் காட்டியிருக்கின்றது. இப்பொருள் முதல் பார்வையில் விபரீதமாக வாசிப்போருக்குத் தோன்றும். ஆனால் கருத்தை ஊன்றி, நோக்குகின்றுழி சுவாரஸியம் சுரக்கும். கிறிஸ்துவை 'வெள்ளன்' 'பார்ப்பன்' 'சத்திரியன்' 'வைசியன்' 'சூத்திரன்' என்றழைத்து, வேத வசனத்திலிருந்து ஆதாரங்களை எடுத்துரைத்து நல்ல வியாக்கியானஞ் செய்திருக்கிறார். பேரின்ப காதலின் அனுபந்தத்தை வாசித்து ஆண்டுக் கண்டுகொள்க.

மேலும் 'சிலுவை நடை'யின் 70-ம் அடியில்

செஞ்சோதி நாட்டான்
திருப்பத்தூர் கோட்டை கட்டத்
தஞ்சாவூருக்குத்
தனிவழியே போனானே

'திருப்பத்தூர் கோட்டை' என்ன என்று எனக்கு விளங்காததினால் சாஸ்திரியாரின் பரம்பரையில் வந்த Rev. V. Gnanadikam, B.A., B.D., அவர்களுக்கு எழுதி விசாரித்ததில் கீழே வருமாறு மறுமொழி அனுப்பினார்:

"To understand the meaning of the word திருப்பத்தூர் and similar words in Tamil poetry, start etymologically and proceed poetically.

"It is not only a town or a country but also a fortress (கோட்டை). Therefore, it may even refer to the glorious New Jerusalem. 'திருப்பத்தூர் கோட்டை' stands for the great mission of our Lord to reconcile the human race with God by his atonement on the cross which is the battlefield where the final battle with the Devil was fought and won, man redeemed and reconciled to God.

திருப்பத்தூர்:—திரு = அழகிய, பரிசுத்த
பத்து = பற்று, அன்பு, உறவு—hence here ஒப்புரவு

திரு + பத்து + ஊர் = பரிசுத்த ஒப்புரவாகுதலின் ஊர்."

தம் + சா + ஊர் (தஞ்சாவூர்) கிறிஸ்துவின் சரித்திரத்தில் 'கல்வாரி மலை'யைக் குறிப்பிடும். சாஸ்திரியார் தான் குடியிருந்த ஊரின் பெயருக்கு மூல அர்த்தம் எடுத்துப் பார்த்திருக்கிறார். செர்மானிய தேசத்திலிருந்து வந்த அவர் குருபரி. பேதுருவின் தேவாலயத்திலும், திருநெல்வேலியூரிலிருந்து வந்து சீடனாகிய வே. சா. பக்கத்திலுள்ள கல்லறைத் தோட்டத்திலும் அடக்கம் பண்ணப்பட்டு தஞ்சாவூர் அவர்களிருவருக்கும் தம்சா ஊராகவானது காண்மின்!

தியானப்புலம்பலின் துயரமும் உருக்கமும் அந்நூலைக் கற்றவர்களுக்கு வெளிப்படை. கிறிஸ்துவின் ஆத்மப்பாடுகள் கொண்ட செய்யுட்கள் (33-ம் பக்கம்) மெய்யுணர்ச்சியும் நற்கருத்துக்களுமுடைத்தன.

## 6. ஆரணாதிந்தம்

இதுவும் பெத்தலேங் குறவஞ்சிக்கு ஒப்பான வோர் நாடகம். பல அருமையான இராகங்களில் இசைத்த பாடல்கள் அடங்கியது. இதிலேவுள்ளவொரு விருத்தம் பெயர்த்தெழுதத்தக்கது:

*'நினைத்தது தருஞ் சகாயா*
*நித்திய கிருபைத் தூயா*
*வினைத்துயர் தவிர்க்கு மாயா*
*வினோத வுற்பன வுபாயா*
*வுனைத்துதி செய்வோ மோயா*
*தூழியோ டூழி நேயா*
*அனைத்துனை வுயிர்க்குந் தாயா*
*அன்பையா அல்லேலூயா'*

சாஸ்திரியார் வீட்டார் இதை நன்றிகூறவேண்டுங்காலை பாடுகிறார்கள். ஆழ்ந்த பொருளும் இனிய தொனியும் பொருந்தி கடவுளுடைய நட்பை அடைந்துகொள்ள ஆற்றல் வாய்ந்த கவியெனத்தகும். எட்டு வரிகளில் அடுக்கி அடைத்த பொருட்களும் பண்வளமும் யாவரும் வியக்கத்தக்கதே!

## 7. ஞானவுலா

இதை 1837-ல் உண்டாக்கியிருக்கிறார். ஆனால் 1885-ல் தான் முதலாக, (The Religious Tract and Book Society, Vepery, Madras) அச்சிட்டிருக்கிறார்கள். இதில் பக்தா மார்க்கம் சிறந்து ஒளிவீசுகின்றது.

பக்தாக்கள் கடவுளைப் பற்றிக்கொண்டு சுதந்தர நியாயம் கூறி வாதாடுவதற்கு உதாரணம் சில அடிகளில் காணப்படுகின்றது. ஒவ்வொருவருடைய இல்வாழ்க்கையிலும் இவ்வண்ணம் மன்றாடவேண்டிய தருணங்கள் உண்டு:

32-ம் பக்கம்

அநித்தியம்

557. யென்றைக்குத் தீர்ப்பாய் நீயென்றுயர மேழையைக்கண்
ணென்றைக்கு நோக்கி யிரங்குவா யென்றைக்குத்
தேற்றி யிருதயத்தின் சிந்தா குலங்களெல்லா
மாற்றி வழியடிமை யாக்குவாய் போற்றுமுன்றன்
பாதார விந்தமல்லாற் பாதகனுக் காருதவி
யாதாரமாராதர வார், சொல் தாதாவே
தந்தையோ வல்லதென்றன் றுயாரோ, பந்தனேயோ
மைந்தரோ நேசமனையாளோ, பந்துக்களோ

560. கூடப்பிறந்தவரோ கூட்டாளரோ நிசமுந்
தேடப்பிறந்த திரவியமோ மாடங்கள்
மாளிகையோ தோட்டம் வயலோ நிலங்கரையோ
வாளடிமையோ திரண்டவாஸ்தியோ நாளதிலே
கற்றபல வித்தைகளோ கல்வியோ சாஸ்திரமோ
பெற்றவிருதோ பிரபலமோ வுற்றறிந்த
வாணிபமோ கப்பல்வரத்தோ செங்கோலரசோ
வாணுவமோ ரத்தினசிம்மாசனமோ பூணுங்
கரிபரிதோ காலான் கனத்த சிவிகை
திரளான சேனைசெருக்கோ பொருளிவைக
ளொன்றாயினும் உதவாதுண்மையே போம்வழியி
லென்றாயினும் பார்த்திரங்காயோ நன்றானம்
ஆறுதலுநீயே யடைக்கலமு மாதாவுந்
தேறுதலுநீயே திடனீயே பேறுதவு
மன்னையுநீ தந்தையுநீ யன்பான நேசனுநீ!

இவ்வடிகளை வியாக்கியானஞ் செய்யவேண்டற்பால தன்று. இயலழகும் பொருளழகும் நடையழகும் உணர் வழகும் பழுத்தொழுகுஞ் சுவை மிக்க தமிழ்த் தொடர்கள் 'ஞானவுலா' வின்கடை செறிந்து கிடப்பன. இவை சாஸ் திரியாரின் உள்ளத்தெளிவையும் இதயக்கனிவையும் ஓராறு விளக்கியபடியாம். கடவுளைக் குரங்குப்பிடியாகப் பற்றிக் கொண்டு வாழ்ந்தவர்.

இந்நூலுக்கு 26 பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சம்பிரதாயமாக இயேசுபொருமானையே கொண் டாடுகிறதாயிருக்கின்றன. வாசிக்கும் இடமெல்லாம் விசே ஷார்த்தங்களே அமைந்துள்ளன. ஓசை நயம் சொற்செறிவு, பொருட்பொலிவு இவைகளுக்கு வேண்டிய திருஷ்டாந்தங் களைக் காணலாம். பலவகை கற்றறிவாளரும் கொண்டாடி ஆனந்திப்பதற்கு ஏற்ற சிறப்பும் வனப்பும் அடங்கப்பெற் றுள்ளது. இப்பிரபந்தத்தின் கவிவடிவின் மகத்துவத்தை நன்குணர விரும்புவோர், இதற்கு நேரான இந்து உலாக்களை வாசித்து, அவற்றின் வடிவம் அலங்காரம் முதலியவைகளை ஓரளவு கற்றறியவேண்டும். "திருக்காளத்தி நாதருலா" "திருப்பூவண நாதருலா" "தேவையுலா" "திருக்கழுக்குன் றத் துலா", "கடம்பர் கோயிலுலா", "திருக்கைலாய ஞான வுலா", "மதுரைச் சொக்க நாதருலா" என இந்து உலா பல உள. உலாவென்பது தமிழ்ப் பாஷைக்குரிய தொண் ணூற்ருரு வகை பிரப்பந்தங்களிலொன்று. தாம் தொழும் கடவுள்மீதும், தம்மைத்தாங்கி ஆதரித்த அரசர்கள்மீதும் பண்டைக்காலந் துவங்கி கவிராயர்கள் செய்து பற்பல உலாக்கள் இத்தமிழ் நாடெங்கணும் வழங்கி வந்தன, வழங் கியும் வருகின்றன.

உலாவென்பதற்கு அர்த்தம் 'பவனி'. உலாவென்னும் தமிழ்நூல் மாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித் துப் பாடப்படுதலால் இப்பெயர் பெற்றது.* "தத்தம் புலமைத் திறத்திக் கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற விவரித்துத்

---

* Dr. உ. வே. சாமிநாதைய்யரவர்களால் குறிப்புரையுடன் பதிப் பிக்கப்பெற்ற "கடம்பர் கோயில் உலா"வின் முகவுரையைப் பார்க்க வும்.

தாம் வழிபடும் தெய்வங்கள்மீதும் தாம் வழுத்தும் ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்துவரும் உபகாரிகள்மீதும் பல புலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கிறார்கள்." ஒரு தலைவன் (Lover) பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற ஏழு பருவ மகளிர்களும், தன்னைக்கண்டு காதல் கூறும்படி வீதியில் பவனி சென்றானென்றும், கலிவெண்பாவாற் கூறல் வேண்டுமென்பது உலாவுக்குரிய விதியாம். வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய "ஞானவுலா" வில் தாம் வழிபடும் இயேசுநாதர்தான் தலைவன். இவர் பவனி வரும்பொழுது, சாஸ்திரியார் தன்னைத்தானேவோர் தலைமகளாகப் பாவித்துக்கொண்டு, தலைவனின் சகலவிதமான பண்புக்களை விளக்கி கிறிஸ்து மார்க்க பூங்காவில் தான் கொய்த அரிய இனிய வாசனை பரிமளிக்கும் பூக்களை ஓயாமல் தலைவன்மேல் பொழிகிற வண்ணமாய் ஈரடியில் கிறிஸ்துமார்க்கத்தினுக்கு உகந்த விதமாய் இந்நூலை இசைத்திருக்கின்றார்.

தமிழ்க் கிறிஸ்தவ புலவர்களில் ஒருவராவது வேறு உலாக்கள் உண்டுபண்ணினதில்லை. இன்னவர் தமிழ் நாட்டின் கண்ணே ஏற்கனவே வழக்கிலிருந்த இராகங்களில் சாஸ்திரியாரின் கீர்த்தனைகளை மாதிரி உருவாக வைத்துக் கொண்டு, பாடல்களை இயற்றினவர்களேயன்றி கவிராயர்கள் அல்ல. தமிழ்க் கிறிஸ்தவ நூல்களில் "ஞானவுலா" வொன்றே யிருப்பதால் இதை நாம் பொன்னே போல் போற்றிப் புகழவேண்டும்.

## 8. பராபரன் மாலை

மிகவும் எழுப்புதலான அடிகளில் சிலவற்றை ஈண்டுப் பெயர்த்தெழுதுகின்றேம்:

27. எதிர்த்தா லெனைப்பகைத்தா லெங்கேபோ வேனெளியே
னதிர்தா லரவணைக்க வான்துணை யாலெனக்கு
வெதிர்த்தாலுன் பாதமதில் வீழ்ந்தெனின் கண்ணீரை
யுதிர்த்தா லிரங்காயோ வுண்மைப் பராபரனே!

29. நீயிருக்க வேத நெறியிருக்க நெஞ்சமுற
வாயிருக்க நின்பதத்தில் வந்திருக்க வென்மனமும்
போயிருக்க நின்புதல்வன் புண்ணியனு ரன்பிருக்கத்
தாயிருக்கச் சேய்க்குத் தவிப்பேன் பராபரனே!

41. ஊரைநம்பி நேரைநம்பி யுற்ற வினசனங்கள்
சீரை நம்பி வீட்டிலுள்ள செல்வமெல்லா நம்பி யெந்தன்
பேரை நம்பிப் பெற்றவரைப் பெண்டீரைப் பிள்ளைகளை
யாரைநம்பி யாவதென்ன வையா பராபரனே!

43. பொய்யே யரண்மனையும் பொற்கட்டு மாளிகையும்
பொய்யே பதாதி புடைசூழ்ந் துலவுவதும்
பொய்யே நவமணியும் பொற்றுகிலும் பூடணமும்
பொய்யே கண்கண்டல் புகையே பராபரனே!

இவற்றால் வழங்கப்படும் கிளர்ச்சியும் இன்பமும் மிகப் பெரிய.

## 9. சாஸ்திரக் கும்மி

இந்நூல் சாதாரண கும்மி இராகத்திலே (Ballads) இசைக்கப்பெற்றதினால் நான் இஃதையொரு நூலாகத் தினை யளவும் மதிக்கவில்லை. இக்கும்மியைச் சாஸ்திரியாரின் வீட் டார் பெரிதுங் கொண்டாடுகின்றமையின் முயன்று வாசித் தேன். இந்நூலை ஆனந்திப்பதற்கு இதன் மனோபாவனை (imagery) யைச் சற்று விளங்கிக் கோடல் ஆவசியகமாம். அல்லது "சாஸ்திரியார் உண்டுபண்ணின விழுமிய நூல்களைக் கற்றறிந்தால் போதும். அவருடைய கும்மி பாசுரங்கள் பெண்களுக்குரியது", வெனப் பாராமுகமாய் இருந்துவிட நேரிடும். "ஞானப்பெண்" தஞ்சாவூர் திருச்சபையைக் குறிக் கிறது. நூலாசிரியரைத் தலைவனாகப் பாவிக்கவேண்டும். இவ்வித மனோபாவனை இந்து நூல்களில் ஒரோவழி காணப் படுகிறது. உதாரணமாக, "மதுரைக்கலம்பகம்" "சடகோப ரந்தாதி" இவைகளில் காணப்படும் தலைவன் (Lover) தலைவி (Lady) பாட்டுகளைக்கொண்டு, சாஸ்திரக் கும்மியின் கொழுகொம்பை அறிந்து கோடல் எளிது.

சடகோபரந்தாதியின் 12, 20, 21, 43 செய்யுட்களுக்குக் கம்பரைத் தலைமகனாகவும், சடகோபரைத் தலைமகளாகவுங் கொண்டு, உள்ளுறை பொருளுரைத்தல் சிறக்குமென வியாக்கியானிகள் நவலுகின்றனர். சாஸ்திரக் கும்மியில் தலைவன் மாத்திரம் பேசுகிற பாவனை காணப்படுகின்றது. தலைவி (ஞானப்பெண்) மௌனம் சாதிக்கிற போங்காக

இயற்றப்பட்டிருக்கின்றது.* தஞ்சாவூர் சபையாரில் சிலர் இந்துமதச் சடங்குகளில் சிலவற்றைக் கைவிடாமல் அனுசரித்து வந்தார்கள். இப்பிழைபடும் நடக்கையைக் கண்டித்து உணர்த்துமாறும் இந்துக்களுக்கு விரோதமாகவும் சாஸ்திரக் கும்மியை உண்டுபண்ணினரென்க. இதில் 850 செய்யுட்கள் அடங்கியிருக்கின்றன. 768—774 செய்யுட்களைப் பெயர்த்தெழுதி அவைகளைப் பரிசோதிக்கலாம்.

சாஸ்திரி வந்த பிறகல்லோ வாகம
சாரங்களெல்லாம் பாட்டாச்சு
சாஸ்திரி வந்தல்லோ எண்பது நூல்களைச்
சாதித்தானடி ஞானப் பெண்ணே.

சாஸ்திரி யாலல்லோ பள்ளிக்கூடங்களுஞ்
சபையுங் கோவிலுந் தான்சிறந்து
சாஸ்திரி யாலேவுன் மைந்தர்க ளெல்லாஞ்
சமர்த்த ராயினர் ஞானப்பெண்ணே.

ஞானப் பாட்டை படித்தவ னுகுந்தன்
ஞான ஸ்நானக் கலியாண
மான மற்றவுன் சந்தோஷ நாட்களி
லதிகஞ் செய்ததார் ஞானப்பெண்ணே.

அதிகஞ் செய்தவனெங்கேயடி வே
தாகமம் பாடினே னெங்கேயடி
மதியுனக்கிருந் தாலவனை மனம்
நோக வைப்பாயோ ஞானப்பெண்ணே.

---

* In "Omar Khayyam" it would be seen that the poet just as here addresses his verses to an unseen lady who is a good listener but has not sufficient learning to reply to her lover. This is a kind of imagery which seems to be peculiar to oriental art. It is unlikely that Vedanayaga Shastriar could have borrowed the imagery from the original Omar Khayyam in Persian though we read that Schwartz employed a Persian Pundit to teach him Persian. In this Satirical Poem, the Shastriar has combined romantic cult with religious admonition.

இந்நாளல்லோ அந்தப் பேருனக்
கிஷ்டமாகின ரென்று சொன்ன
யந்நா ளுந்தன் விவாகங்க ளெல்லா
மாரா லாயிற்று ஞானப்பெண்ணே.

என்னென்ன நன்மைக செய்தாலு மதை
யெள்ளள வேனும் நினையாமற்
பின்னையு முன்பிடி வாதத்தில் நிற்கின்ற
பேதைமை யேதடி ஞானப்பெண்ணே.

எத்தனை பாடலெல் லாம்படித்தான் சபைக்
கெத்தனை யாய்ச்சிறப் பாக்கிவைத்தா
னித்தனை யாயுனை நேசித்த தோழனைச்
சத்துருவாக்கினுய் ஞானப்பெண்ணே.

இச்செய்யுட்களில் சாஸ்திரியார் தனக்கும் தஞ்சாவூர் சபைக்கும் ஏற்பட்ட உரிமையைச் சிலேடையாக எடுத்து முழங்குவாராயினர். தஞ்சாவூர் சபையார் தம்மால் அடைந்த விழுப்பத்தினையும் பொலிவேறு நூல்களில் காட்டியிருந்தால், தற்பெருமையென்றும் சுய அபிமானமென்றும் பிழைபடக் கருதுவதற்கு அஃது இடந்தருமல்லமோ? தலைவன் தனக்கும் தலைவிக்கும் உண்டான வேறுபாட்டை நீக்கும் பொருட்டு உரிமை பாராட்டி விளம்பிய கருத்து என மதிக்கக்கூடியதினுல் சம்பிரதாயத்தைவெளிப்படுத்துகிறதேயன்றி வேறல்ல.

சாஸ்திரக் கும்மியோர் ஞானேபதேசமாகையால் அதைக் கேட்டுப் பயனடையுந் தலைவியை "சகி" (Saki) அல்லது 'மானே' என்றழையாமல், "ஞானப்பெண்ணே" யென்றழைத்தது தகுதியாகும். மேலும் "ஞான" என்ற பண்புச் சொல் விழுமிய கருத்தை உணர்த்த பயன்படுத்தப்படுகிறது. உ—ம். ஞானக் கும்பி, ஞான உலா, ஞானஸ்நானம், ஞானேபதேசம் முதலியன.

## 10. கலியாண வாழ்த்துதல்

இந்நூல் கிறிஸ்தவ விவாகங்களைச் சிறப்பிக்குமாறு இயற்றப்பெற்றது. யாவரும் விரும்பத்தக்க, "பெண் வாழ்த்து", "மணவாளி சோடிப்பு", "மணவாளன் சோடிப்பு", "பொது வாழ்த்து" என்ற கவிகளை அருளினர்.

ஆங்கிலேய கவிராயர்களின் செய்யுட்களை வாசித்துத் தேறின கற்றறிவாளரும் "பெண் வாழ்த்துக்கு" ஈடான செய்யுட்களை அந்நூல்களில் சந்தித்திருப்பது ஐயுறவுக்குட் படும்.

## கலியாண வாழ்த்து. 1. பங்து

49. அன்ன நடையாளை அன்புமிகும் பொற்கொடியை
வன்னக் கலாப மயிலைப் பசுங்கிளியை
துய்யகனி யாஸ்திரிமார், சூழ்ந்தொளிருஞ் சோபனத்தைச்
செய்ய தமிழ்ச்சொரிசிந், தாமணியைச் செண்பகத்தை
வாசமிகும் ரோச, மலரை மலர்க்காவைத்
தேசு திகழேதனிலச் செல்வ பூங்காவனத்தைப்
பெந்து சனத்தோர் பெருமைப் பெரும்புகழைச்
சிந்திக்கத் தோன்று, தேவ திருச்செயலைப்
பத்தினியை யுத்தமியை, பட்சமுள்ள நற்சுகத்தை
அத்தன் படைத்த, வரிய திருவடிவை
அருமை பெருமை, யறிந்த குலக்கொழுந்தை
யுரிமையிட வந்துதித்த, வுற்பனத்தை யுச்சிதத்தை
55. கற்கண்டைச் சர்க்கரையை, கற்பதித்த நற்பணியைச்
சொற்கொண்ட தீப, சுடரைமகா துல்லிபத்தைக்
காணிக்கு வாய்த்த, கனதனத்தைக் காட்சியினை
ஆணிமுத்தை வச்சிரத்தை, யாசைக் கரும்பொருளைச்
சாத்திரமெலா முணர்ந்த, சாத்திரத்தைச் சூத்திரத்தைப்
பாத்திரவிச் சேத்திரத்தை, பங்கையத்தை யிங்கிதத்தை
மாதா பிதாவின், மனக்கவலை யாற்றவந்த
வேதா விநோதன், விதித்த விளக்கொளிவைச்
செம்பவள வாயாளை, சிந்தையிலாச் சுந்தரியைச்
சம்பிரம மாகவளர், சந்தோட காரணியை
60. விண்ணி னொளிவை, விளங்குகதி ரோன்மதியை
யெண்ணத் தொலையாத, வின்பமிகும் சற்குணத்தைக்
கிஞ்சுகத்தை ரஞ்சிதத்தை, கீர்த்தி மிகும்புகழைக்
கொஞ்சு குணநிதியை, கோதையரைக் கொம்பனையை
மன்னவர் சூடோரியினை, வாணிபத்தை வாணுதலை
மின்னனைய ராசைகொள்ளும், விண்ணவர்க்கு மேனகையை
தங்கத்தை நேர்விளைந்த தற்சீசின் ரத்தினத்தை
துங்க வபரஞ்சி சுகசாம்பி ராச்சியத்தை
கட்டழகை மையல், கதித்த கருணைக்கடலை
மட்டுலவும் பூங்குழலை, வாஞ்சாலைப் பெண்ணமிர்தை

இத்தன்மைய செய்யுட்களை வாசிக்கும்போதே தீஞ்சுவை உண்டானால், அவைகளைக் கின்னரம், தம்புரு முதலிய வாத்தியங்களுடன், பூ, சந்தனம், பன்னீர் முதலியன மணக்குங் கலியாண பந்தலில் பாடுங்காலை, பெற்றோருக்கும் மற்றோருக்கும் எல்லைகடந்த பேருவகையை விளைவிக்குமல்லமோ? இது காரணத்தில்தானே தஞ்சாவூர் சபையாரின் மனதையும் ஆன்மாவையும் சாஸ்திரியார் இனிது கவர்ந்து கொள்ளைகொண்டுபோவாராயினர். முதன்மையான இல்லற சம்பவங்களுக்குக் குருமார் மாத்திரம் வந்தால்போதுமென்று மிஷனெரிமார் கருதினாலும் சபையார் "கோவில் ஆராதனைக்குப் பாதிரிமார்; வீட்டில் நடக்கும் மங்கல வாழ்த்து செப ஆராதனைக்கு வேதநாயக சாஸ்திரியார்" என்று சாதித்தார்கள். இவருக்கு முதலாவது தாம்பூல மரியாதை செய்த பின்தான் பாதிரிமார்களுக்கும் மற்றோருக்கும் உபசாரம் நடத்தினார்கள். அவரின் ஆயுளுக்குப்பின் இவரிரு குமாரரும் அத்தகைய கண்ணியத்திலுக்கு உரிமையுடையவர்களென்றாலும் அவர்கள் தம் தகப்பனாரின் நூல்களைச் சடங்காசாரங்களுக்கு உதவியாகப் படித்து, கிறிஸ்தவர்களுக்கு மகிமையாகத் தம் வாழ்க்கையை நடாத்தினபடியினால் இவர்களிருவருக்கும் சாஸ்திரியார் பட்டம் சூட்டினார்கள். இன்றுகாறும் சாஸ்திரியாரினது ஊழியம் தஞ்சாவூரில் அவரின்பின் வாரிசுகளால் நடைபெற்று வருகின்றது. நம்முடைய சொந்த பாஷையில், சொந்த ஆசாரப்படி கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, சதுர் பிரசங்கத்திலும் பஜனையிலும் தெய்வ வணக்கத்தை யாவரும் விழையும் பொருட்டு தலைசிறந்த ஊழியஞ்செய்துவரும் இக்குடும்பத்தார் ஒருகாலும் மறைந்துபோகாதபடிக்கு இறைவன் கிருபைசெய்யவேண்டுமென்று வாசிப்போர் செபிப்போமாக.

## அத்தியாயம் 12

### கிறிஸ்துமார்க்கம் இந்து தேசத்தில் பரவும்படி வேதநாயக சாஸ்திரி செய்த ஊழியம்

இவரிடத்தில் படித்த மாணாக்கர்களில் ஐந்துபேர் குருப் பட்டம் பெற்றார்கள். எழுபதுபேர் உபாத்தியாயர்களும்

உபதேசிமார்களும் தேச உத்தியோகஸ்தர்களுமானார்கள். சீர்மை ஐயர்மார் சிலருக்கு முன்ஷியாகத் தமிழ் கற்றுக் கொடுத்தார்.

இவருக்குக் கவிபாடும் வரமிருந்ததினாலே, இரவு பகலாய் உழைத்து முயன்று தன்னுடைய 20-ம் பிராய முதல் சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பயன்படுமாறு சிறியதும் பெரியதுமான நூற்றிருபது புஸ்தகங்களைச் சாஸ்திரமுறையாக உண்டுபண்ணி கிறிஸ்தவ உபதேசங்களையெல்லாம் வேத வழுவின்றிப் பலவிதப் பிரபந்தங்களாகச் செய்ததுமன்றி, கர்த்தருடைய பண்டிகை நாட்களிலும் சபையாருடைய ஞானஸ்நானம், கலியாணம் முதலிய சந்தோட நாட்களிலும் சில மாணுக்கரைக்கொண்டு தாம் இசைத்த பாடல்களைப் பாடி வருகிற வழக்கத்தை யுண்டுபண்ணினார். அன்றியும் இந்துக்களுக்கும் ரோமானித்தாருக்கும் பயன்படுமாறு, சில கட்டுரைகளை யுண்டுபண்ணித் தம்முடைய வீட்டிலே வருகிறவர்களுக்கும் தாம் வெளியே புறப்பட்டுப் போகிறபோது தம்மைச் சந்திக்கும் குழாங்களுக்கும் வாசித்துக் காண்பித்துக் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்துக்கொண்டு இருப்பார்.

இதுமாத்திரமல்ல, 1814-ம் வருஷம் துவக்கி 1863-ம் வருஷம் காறும் தவசு நாட்களிலே, தம்முடைய வீட்டின் முகப்பிலே பந்தல்போட்டு* பிரசங்கச் சதுர் உண்டாக்கி இரவுதோறும் ஏழரைமணி முதல் பத்தரைமணிமட்டும் சொற்பொழிவாற்றுவார். அவரின் சத்தம் இன்பமும் தெளிவுமாயிருக்கிறதுமல்லாமல் வெகுதூரம் தொனிக்குமாம். திரளான கிறிஸ்தவர்களும், ரோமானித்தாரும், மகம்மதியரும் கேட்கும்படி வந்து கூடுவார்கள். தேவசுபாவ மகிமைகளையும் சிருட்டிப்பின் கிரியைகளையும் பழையேற்பாட்டின் காலத்தில் செய்த ஆண்டவருடைய அதிசயமான ஆற்றல்களையும் கிறிஸ்துவின் மனுடாவதாரந் துவக்கி, அவர் பாடுபட்டு மரித்து உயிர்த்துப் பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்து பரிசுத்தாவியையனுப்பி, இனி நடுத்தீர்க்க வரப்போகிற கடைசி நாளின்

---

* இப்பந்தலிருந்த மனையின்கட்தான் இற்றைநாள் காணப்படும் மண்டபத்தை ஞானதீபசாஸ்திரியம்மாள் எழுப்பினர்.



THE EVANGELICAL HALL, TANJORE
*Built:* 1870

நடைபெறுதலேயும் நியாயத்தீர்ப்பு நாளின் கொண்டாட்டத் தைப்பற்றியும் புது எருசலேமைக் குறித்தும் அந்த நாற்பத் தைந்து நாட்களில் பாடி விரித்துரைப்பது அவருடைய முதன்மையான வேலேயாயிருந்தது. சங். தகப்பனூர் கொலோப்பையரும், சாப்பிளன் போலே ஐயரும் அவர் களுக்குப் பின்வந்த மற்றெல்லா மிஷனெரிமாரும் வந்து சாஸ்திரியாரின் சொற்பொழிவுகளேக் கேட்டறிந்தார்கள். இவர் மற்றுஞ் செய்ததோர் சிறந்த பணியாதோவெனில், புதிதாய் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினவர்கள் பலருக்குத் தன் வீட்டில் உணவும் உடையுங்கொடுத்து, நல் உபதேசம் அருளி, தன்னுடைய நூல்களேக் கற்பித்து, கிறிஸ்து பக்தர்களாக்கி புறமதஸ்தர்களுக்குப் பிரசங்கிக்க அனுப்பி னது. எனவே, தமிழ் நாட்டிலே புதிதாகக் கிறிஸ்து மார்க்கம் பரவினதற்கு ஏதுவாயிருந்தவர்கள் ஐரோப்பிய குருக்கள் மாத்திரமல்ல, வேதநாயக சாஸ்திரியாரும் அவ ரியற்றிய நூல்களும் அவரால் பயிற்றுவிக்கப்பெற்ற உபதேசி மார்களும் என்று சிறிதாழ்ந்தறிந்து கோடல்வேண்டும். ஏனென்றால் இவர்கள் ஊர் ஊராய்ச்சென்று சாஸ்திரியாரின் நூல்கள் மூலமாய்க் கிறிஸ்துவைப் பிரசங்கித்து அநேகர் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவ உறுகருவியானூர்கள். Rev. ஜே. சி. கொலோப் ஐயருக்குப் பின்வந்த மிஷனெரிமாருக்குச் சாஸ்திரியாரின் ஊழியம் எதிர்கட்சியாகத் தோன்றினது. சாஸ்திரியாரைக் குறித்து அத்தியட்சர் ஸ்பென்சர் (Bishop Spencer) எழுதியிருக்கும் வரிகளே சான்றுகளாம்:

'The Tanjore Poet, a person well known in this part of India and unquestionably a man of considerable talent came forward with a request that he and his pupils—he has as many followers as a Grecian Philosopher—might be allowed to chant some of his religious poetry. It was pretty and not monotonous, the usual fault of Tamil songs and the thought as explained to me very good.

**அத்தியட்சர் ஸ்பென்சரை வே. சா. சந்தித்தது**

Vedanayagam, the Religious poet of Tanjore, is about seventy years of age. His countenance is decidedly

intellectual and his head remarkably well formed. His verses are much esteemed by his countrymen, and I am assured that some of them possess considerable merit. He is a Christian, but I believe, aspires to be the founder of a school of his own ; no Bishop or Missionary ever passes without a visit from him and all I imagine gladly render some little contribution towards his support.'

[From the Right Rev. The Lord Bishop Spencer's Printed Journal, pp. 40 and 41, published in 1846.]

'உங்களுக்குத் தெய்வ வசனத்தைப் போதித்து உங்களை வழி நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களின் நடக்கையின் முடிவை நன்றாய்க் கவனித்து அவர்கள் விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.' எபி. 13:7.

## அத்தியாயம் 13

### வேதநாயக சாஸ்திரியும் ஜாதி பேதமும்

இப்புவனத்தில் 'சாதி வித்தியாசம்' இந்தியா தேசத்தினுக்கு மாத்திரம் தனிச் சிறப்பாகவுள்ளவோர் திணை. இந்திய கிறிஸ்தவர்கள் சாதி வித்தியாசம் பாராட்டினாலும் அதைக் குறித்து மௌனமாகவேயிருக்கிறார்கள். ஏனெனில் மிஷனெரிமாருக்கு இது சஞ்சலத்தை விளைவிக்கின்றது. ஆனால் தீக்குருவியைப்போல இருகண்களோடுகூடிய தலையை மணலில் சொருகிக்கொண்டு அபாயம் இல்லையென்று நினைத்துக் கொண்டு வசிப்பது நன்றன்று. பொதுவாகத் தென் இந்தியாவில், தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்குள் அது ஒழிக்கக்கூடாதவோர் கிணுங்கம்.

ஆதியிலே கிறிஸ்துமார்க்கத்தைப் பெருந்தொகையாகத் தழுவினவர்கள் ஆதிதிராவிடர். ஆகையினால் "கிறிஸ்து மார்க்கத்தை"ப் "பறையர் வேதம்" என இந்துக்கள் அழைத்து வருவாராயினர். இதற்குவோர் சான்றை பௌவர் புத்தகம் (1) 104-ம் பக்கத்தில் காண்கலாம். ஆங்குக் குறிப்பிட்ட சம்பவம் கீழே வருமாறு:

"இந்த ஆபிரகாம் என்பவர் வடுகராயிருந்தார். இவருக்கு விஸ்வநாதன் என்னும் பெயரும் வழங்கினது. இவர் கும்ப

கோணத்தில் உபதேசியராயிருக்கும்போது, ஒரு பிராமணன் தெருத் திண்ணையில் உட்கார்ந்து, தன் மாணுக்கருக்கு வேத பாராயணம் செய்துகொண்டிருக்கிறதைக் கண்டு தெருவில் நின்று கேட்டுக்கொண்டிருந்தார். பிராமணன் இதைக் கண்டு வேதபாராயணத்தை நிறுத்தி, வேதமொழி சூத்திரர்களின் காதில் விழக்கூடாதென்று விஸ்வநாதனை அவ்விடம் விட்டு விலகிப் போகும்படி சொன்னான். அதற்கு விஸ்வநாதன் வேதபாராயணம் மற்றவர்களுக்குப் பிரயோஜனமுள்ளதானால் எனக்கும் பிரயோஜனமாயிருக்கும்; ஆகையால் நானும் அதைக் கேட்கும்படி தயவு செய்யவேண்டும் என்றார். அப்பொழுது பிராமணன் விஸ்வநாதனைக் கிறிஸ்தவனென்று அறிந்து வாயிலே வந்ததெல்லாம் திட்டி ஓடிப் போகச் சொன்னான். விஸ்வநாதன் திட்டையெல்லாம் பொறுத்து வேத புஸ்தகத்தைக் காண்பித்து 'என்னிடத்திலும் வேதம் உண்டு' என்றார். அதற்குப் பிராமணன் பறையர் வேதம் என்னத்தைப் படிப்பிக்கக்கூடும் என்றான். அதற்கு விஸ்வநாதன் 'உங்கள் வேதம் சூத்திராள் கேட்கக் கூடாததாயிருக்க, எங்கள் வேதம் யாவரும் கேட்கக் கூடியதாயிருக்கிறது. உங்கள் வேதம் மற்றவர்களை வைது தூஷிக்கும்படி சொல்ல, எங்கள் வேதம் பொறுத்து ஆசீர்வதிக்கும்படி சொல்லும்; எது உத்தம வேதம் என்று அறிந்துகொள்ளும்' என்றார். இதைக் கேட்டுப் பிராமணன் புத்திசாலியானபடியினால், தான் செய்த குற்றத்தை உணர்ந்து, விஸ்வநாதனைத் தழுவி, தன் மாணுக்கரோடு உட்காரும்படி சொல்லி, மத்தேயு சுவிசேஷம் ஐந்தாம் அதிகாரத்தை வாசிக்கக் கேட்டுச் சந்தோஷித்து, அடிக்கடி தன்னிடத்தில் வரும்படி கேட்டுக்கொண்டான்.'

பின்னர் உயர்ந்த சாதிகளிலிருந்து சிலர் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொண்டனர். இதுபற்றியே நாளடைவில் 'பறையர் வேதம்' என்ற பழிமொழி நீங்கி கிறிஸ்துசமயத்திணுக்குப் படிப்படியாய்ச் சிறப்பும் மதிப்பும் உண்டானது இத்தருணத்திலே வேதநாயக சாஸ்திரியாருந் தோன்றி இந்து பக்தாக்களுடைய நூல்களுக்கு இணையாகவும் மேலாகவும் வேண்டிய கிறிஸ்தவ நூல்களையியற்றி அரங்கேற்றி தன் பாடகர்கள் மூலமாகப் பிரசாரப்படுத்தி 'பறையர் வேதம்'

நிந்தைப் பெயர் தலையெடுக்கவொட்டாமல் சின்னபின்ன மாக்கிக் கிறிஸ்துமார்க்கத்தினுக்கு நல்ல வெற்றியைச் சம்பாதித்தார். பொதுவாக ஆதித்திராவிடருக்குள் அக் காலத்தில் மனேவிர்த்தியாவது கல்விப் பயிற்சியாவது காணற்கில்லை. உயர்தர சாதிகளுக்குட்தான் பல பக்தாக்கள் தோன்றியிருந்தனர். இன்ன சாதிகளுக்குள் கிறிஸ்து மார்க்கம் பரவி வரும்பொழுது இவர்களின் ஆசாரங்களை மாற்றிக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினதினுல் தஞ்சாவூர் சபையில் குழப்பம் உண்டாயிருக்கிறது. நான் ஆராய்ச்சி செய்தமட்டில், பரிசுத்த நற்கருணை ஆராதனையில் ஆதித்திராவிடரும் உயர்ந்த ஜாதியாரும் கலந்துவந்து அப்பத்தையுந் திராட்சரசத்தையும் வாங்கி உட்கொள்ள வேண்டுமென்றுேர் கட்டளையைப் பிறப் பித்ததுதான் இக்கலகத்திற்கு மூலகாரணம். அக்காலத்திலே சாஸ்திரியார் சரபோஜி மகாராஜாவுடைய சமஸ்தான வித்வானனபடியினுல் அரண்மனைக்குப் போகவேண்டியிருந் தது. பல்லக்கில் இவர் போகும்போது, ஆதித்திராவிட ருடைய நிழல்கூட இவருடைய போயிகளுடைய நிழலில் படாமற்போக வேண்டுமாம். அல்லாவிட்டால் அரண்மனைக் குள் புக அனுமதி கொடுக்கமாட்டார்களாம்.

**சாதி வேற்றுமை கலாதியும் வே. சா. வின் கட்சியும்**

"1845-ம் வருஷம் ஸ்பென்ஸர் (Spencer) பிஷப் விஜயம் செய்திருந்தபோது, 145 பேர்களுக்குத் திடப்படுத்தலும் ஹென்ரி பௌவர் ஐயருக்குக் குருபட்டமும் கொடுத்தார். அவர் தஞ்சாவூர் கிறிஸ்தவர்களைப்பற்றி 'இவர்கள் இறுமாப் பும் பிடிவாதமும் உள்ளவர்கள். இவர்களை நடத்துவது மிகவும் கஷ்டம். மிஷனெரிமார் அநேக ஆண்டுகளாய் இவர் கள் இஷ்டப்படியே விட்டுவிட்டதே இந்தத் தீமைக்குக் காரணமாகும்' என்று எழுதி வைத்திருக்கிறுர். அந்தக் காலத்தில் அங்கு வசித்து வந்த பேர்பெற்ற வேதநாயக சாஸ்திரியார் என்பவர் 'ஜாதிக்கட்டு அவசியந்தான்' என்று சாதித்தவர்களில் ஒருவராவர்."

சாதி வேற்றுமை கலாதி இவருடைய நூல்களில் ஓரோ விடங்களில் குறிப்பிட்டிருக்கிறதை நாம் அறிவது சரித்திர

விஷயத்தினுக்குரியது. உ தா ர ண மா க, 'ஆருந்துணை யில்லையே' என்ற கீர்த்தனையின் கடை இரண்டு சரணங் களை ஆராய்ச்சி செய்வோம்.

9. ஆயிரத்தி யெண்ணூற்று முப்பதாம்
ஆண்டில் வந்த ஆபத்திலே
ஆபரூ ஐயரால் பிரிந்தடி
யன் படுந்துயரத்திலே
சம்பளத்தை நடத்தவே
தஞ்சையான் சரபோஜி மன்னனித
யத்திலே யருள் வைத்தவா! ஆருந்

10. உன்னதப் பிதாவே விண் வாழ்வதும்
உலகவாழ்வது மோங்கியே
உத்தபுத்திர ஜீவாஜி மன்னுடன்
ஊழிகாலமும் வாழ்கவே
இன்னமுஞ் சரபோஜி மன்னிதை
யத்திலன்பு வவுர்த்தியே
என்னையும் எனின் வீட்டையுமெனின்
பாட்டையும் கிருபை கூர்வையே! ஆருந்

இக்கவிகளிலே ஆபரூ ஐயரால்தான் (L. P. Haubroe) சாதி வேற்றுமையை அழிக்கக் கடுமுயற்சி நடந்ததாகவும், சரபோஜி மகாராஜா அத்தறுவாயில் சம்பளம் கொடுத்துக் காப்பாற்றினதாகவுந் தெரிகிறது. இக்கீர்த்தனையை யுண்டு பண்ணினது 1830-ம் வருஷம். சாதிக் கலகம் துவங்கினது 1829-ம் வருஷம். முதல் ஏழு சரணங்கள் கிறிஸ்தவ சபை களுக்கு நன்கு அறிமுகமானவை. கடைசி இரண்டு சரணங் களை நீக்கி அச்சடித்திருக்கின்றனர்.

சாஸ்திரியாருடைய சுவிசேட பிரபல்லிய ஊழியத்திற் காக மிஷனெரிமார்கள் மாதச்சம்பளம்கொடுத்து வந்தார்கள். சாதிபேதக் கட்சியினால் பிரிவினை ஏற்பட்டவுழி, இவருடைய சம்பளம் நிறுத்தப்பட்டது. மிடியினால் பீடிக்கப்பட்டு சஞ்சலப்பட்டபொழுது, தன்னுடைய சொந்த துயரத்தை வெளிப்படுத்தி எல்லோரும் தன்னைக் கைநெகிழவிட்டதாக வும் இயேசு திருப்பாலனே (Jesu Bambino) துணை என்றும் கடவுளுக்கும் தனக்கும் வாதமாக அநேக வழக்குகளை எடுத்துக் கூறிக்கொண்டு, பாடி, தனக்கு நிம்மதி

யைச் சம்பாதித்துக்கொண்டார். இம்முடிவைப் பாடுவோர் துலாம்பரமாக அறிந்துகொள்ளலாம். தற்காலத்திலே இக் கீர்த்தனையின் அடிப்படையை மறைபொருளாக்கி, இழவில் பாடுகிறார்கள். பிரேத அடக்கத்தினுக்குரிய கீர்த்தனையாய் மக்கள் இதை ஒப்புக்கொண்டது விகற்பமாகக் காணப்படு கிறது. உயிர் நீத்தவர் இப்பாட்டைப் பாடிக்கொண்டு தன்னை தந்தவருடன் வாதாடிக்கொண்டு அவரிடத்தில் மீளுகிற பாவனையாயிருக்கிறது. சாதிக் கலகத்தினால் ஏற் பட்ட தனது மனநோவை கவிவாயிலாய் வெளியிட்டும் தனக்கு நேரிட்ட கட்டநட்டங்கள் சரபோஜி மன்னனால் நிவிர்த்தி பெற்றதற்கு நன்றி கூறிக்கொண்டும் கடவுளுடன் ஒப்புரவாகி பிரலாபித்திருக்குங் கீர்த்தனை சவசேமத்திற்கு பயன்படுத்துவார்களென்று அஃதை இசைத் தருணத்தில் சாஸ்திரியார் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.*

எம்முடைய சரித்திர ஆராய்ச்சிக்கு இக்கீர்த்தனையின் தற்கால உபயோகத்தினால் அடைந்த தப்பிதமான இலக்க ணம் இடைஞ்சலாகவிருக்கின்றது. ஒரு கவிபக்தா இவ் வண்ணம் அழாக்குறையாய் மனம் புண்பட்டு புலம்பி சரணங்களை யுண்டுபண்ணக் காரணமாகவிருந்த சாதிக்கலாம் எனைத்து கொடுமை வாய்ந்ததாயிருக்கலாமென்பதை வாசிப் போர் உணரற்பாலது. மிஷனெரிமாரின் விரோதத்தினால் சாஸ்திரியார் இந்து அரசனின் உதவியை நாடவேண்டிய தானது துக்கிக்கற்பாலது.

17-ம் செபமாலையிலும் சாதி வித்தியாசத்தினாலேற்பட்ட இக்கலாதியைக் குறிப்பிட்டிருக்கிறார்:

6. வல்லமை யிலையோஎங்கள்
வறுமைகண் டறிந்திலாயோ
அல்லது மனதில்லாயோ
அடியர்மேல் அன்பிலாயோ

---

* சாஸ்திரியாரின் நல்லடக்கத்தில் இக்கீர்த்தனை பாடப்பட்டபடி யால் அவருடைய ஆயுட்காலத்திலேயே இஃது அவ்வழக்கில் புகுந்து வரலாயிற்று என்க.

கல்லறைக் கிடமுமற்றுக்
காட்டினுக் ககற்றப்பட்டோம்
இல்லையோ இரக்கமையா
எம்மையா ஏசுநாதா!

10. சங்கைபோர்ந் திலங்குதஞ்சைச்
சுவார்ச்சையார் சபைகள்நாங்கள்
மங்கியே துயரத்தாலே
வாடினோம் இரக்கங் காணோம்
தங்களைத் தங்கள் வீட்டைத்
தங்கள் பிள்ளைகளை யன்றி
எங்களை நினைப்பாரில்லை
எம்மையா ஏசு நாதா!

6-ம் அடியினால் 'சாதிபாராட்டும் கிறிஸ்தவ கட்சியின் பிரேதங்களுக்குச் சமாதிதோட்டத்தில் இடங்கிடையாது' வென்ற கட்டளையைப் பிறப்பித்திருக்க வேண்டுமென்று தெரிய வருகிறது. மிகவும் பிரலாபித்து இச்செபமாலையை இசைத்திருக்கின்றார்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, தஞ்சாவூர் கோவிலில் சாதிக் கிறிஸ்தவர்கள் வலங்கை சபையாருடன் கலந்துட் காரவும் நற்கருணைச் சடங்கை ஒருப்பட்ட சங்கமாய்க் கைக் கொள்ளவுங் கற்பிக்கப்பட்டுச் சமாதானமாய் வசித்து வந்தார் கள். சாஸ்திரியாரும் பிடிவாதம் நீங்கப்பெற்று ஒருவாறு பிற்றை நிலை முனியாது பொது நெறிக்குக் கீழ்ப்பட்டிருந் தார். ஆனால் வாதிகளோ வழக்குத் தொடர்பைவிடாமல் 1848-ம் வருஷம் புதுக்கட்டளையொன்றையேற்படுத்தி அனை வரும் அதைக் கைக்கொள்ளுமாறு பெருமுயற்சி எடுத்தார் கள். இதினால் சாஸ்திரியாருக்கிருந்த மனவமைதி கலைந்து மறுபடியும் கிறிஸ்தவர்கள் சாதிபாராட்டும் குழப்பத்திலுட் படலானார். இதன் விவரங்களைச் சாஸ்திரியார் வீட்டிலுள்ள பழமையான சாதனங்களிலுள்ள (Archives) கைப்பிரதி யினால் அறியலானேன். அதன் விளக்கப் பெயராவது: 'Refutation against the Minute on Caste.' ஆங்கிலத்

சாதிவேற்றுமையைச் சிதைக்குமாறு சென்னையில் 82 பாதிரிமார் கூடி ஏற்படுத்தின சட்டக் குறிப்பும் அதனுக்கு விரோதமாக தஞ்சாவூர் சாதிக் கிறிஸ்தவ கட்சி வே. சா. வின் மூலமாய் அனுப்பின எதிர் உரையும்

தில் எழுதப்பட்டிருக்கிறது. அத்தியட்சர் ஸ்பென்ஸர் (Spencer) சுகவீனத்தினால் இங்கிலாந்துக்குச் சென்றபின் வேலையை ராசிநாமா செய்ய நேரிட்டது. அத்தியட்சர் டி அல்டெரி (de Alderi) அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டு சென்னைப்பட்டினத்தில் வந்து வேலையை ஒப்புக்கொண்டது 1850 வருஷம். அத்தியட்சர் நிலையம் காலியாயிருந்த சமயத்தில் 82 பாதிரிமார்கள் சென்னையில் மகாநாடு கூடி சாதிபாராட்டும் ஒழுக்கத்தைச் சபைகளினின்று ஒழிக்கும்படியோர் சட்டக் குறிப்பை (Minute) ஏற்படுத்தி அதனைப் பயிற்சிக்குள் நாளடைவில் கொண்டுவர கழிபெரும் பிரயாசையெடுத்தார்கள். இதன் பொருள் நோக்கத்தை இவண் சுருக்கமாய் எடுத்து கூறுதும்.

'கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவ விரும்புகிற உயர்ந்த சாதி இந்து முதலாவது, தனக்குச் சாதி வேண்டியதில்லையென்று பொதுமக்கள் கூட்டத்திற்குமுன் உறுதிமொழி கொடுக்கவேண்டும். இரண்டாவது அதனுக்கு அடையாளமாக ஆதிதிராவிடர் சமைத்த உணவை உட்கொள்ளவேண்டும். அல்லாவிடில் அவனுக்கு ஞானஸ்நானம் அளித்து சபையில் சேர்க்கக்கூடாது' என்பதே. இராஜதானியில் சேவைபுரிந்து வந்த எல்லா ஆங்கிலேய குருமார்களுக்கும் நாட்டு குருமார்களுக்கும் இச்சட்டத்தை அனுசரிக்க வேண்டுமென்று தகவல் கிடைத்தபின், பல ஆபாசங்கள் தலையைக்காட்டின. உதாரணமாக:

தஞ்சாவூரைச் சேர்ந்த வல்லத்திற்கு அருகில் அரைமுண்டன்பட்டி யென்ற கிராமத்தில் Rev. Reigle ஆதீனத்தில் ஓர் கொல்லன் இரண்டு ஆண்டுகளாகக் கிறிஸ்து மார்க்க ஞானோபதேசம் போதிக்கப்பட்டு வந்தான். அவன் ஞானஸ்நானம் பெற விரும்பினபொழுது, Reigle ஐயர், 'நீ உன் குடுமியை நீக்கி, தலையை மழுப்பி மொட்டையாக்கிக் கொண்டாலொழிய உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கமுடி

யாதென்று மறுத்துவிட்டாராம். கொல்லனுக்குக் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவ பேரவாவிருந்தபடியால், அவர் பிடிவாதமாகச் சாதித்த முறைக்குக் கீழ்ப்பட்டானும். அப்படியிருந்தும், 'நீ சாதிக்கட்டை உன்னைவிட்டு நீக்கிக்கொண்டு, அதற்கு ரூபகாரமாக, ஆதித்திராவிடன் சமைத்த சமையலைச் சாப்பிட்டாலொழிய உனக்கு ஞானஸ்நானம் கொடுக்க மாட்டேன்' என்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாராம். 'ஐயா, நான் உங்கள் கட்டளைக்கேற்ப தலையை மழுப்பி மொட்டையாக்கிக்கொண்டேன். ஆதித்திராவிடன் சமையலை உட்கொள்ள வெறுப்பாயிருக்கிறது' என்று சொல்லி, வருந்தி, மனம் புழுங்கி, வீட்டுக்குத் திரும்பினானும். சில நாட்களுக்குள்ளே ஞானஸ்நானம் பெறாமலே, மரித்துப் போனானும். இவ்வாறு Reigle ஐயர் கொல்லனுடைய ஆத்ம இரட்சிப்பை இழக்கலானார்.

தற்காலத்துக் கிறிஸ்தவர்களுக்கு மேற்கூறிய சம்பவம் நகைப்புக்குக் காரணமாகும். சென்ற நூறு ஆண்டுகளுக்குள் பற்பல நோக்கங்களால் உண்டாயிருக்கும் பொது ஜனசார சீர்திருத்தங்கள் பலவாம். 82 பாதிரிமார்கள் ஏற்படுத்தின சட்டம் பொதுமக்களுடைய நாகரிக பருவத்திற்கு முந்தினது (premature). அத்தியட்சரின் அனுமதி பெறாமல் பலவந்தஞ் செய்யப்பட்டதினால் அநீதமானது. தஞ்சாவூரின் சபையின் சாதிக் கட்சிக்குப் பிரமுகராக நின்று சாஸ்திரியார் எழுதி அனுப்பின எதிர் உரைக்கு என்ன பதில் கிடைத்ததென்று தெரியவில்லை.

'சாஸ்திரியாரின் வாக்கு ஒன்று, செய்கை மற்றொன்று' என ஐயுறவுகொள்வதற்கு இவரியற்றிய ஞானத்தச்ச நாடகத்தில்:

"சாதியேதுகாண் அதிலொரு
சைவமேதுகாண்"

என்ற பாட்டில் இடந்தருகின்றது. இதில் 32 சரணங்கள் அடங்கியிருக்கின்றன. இந்து மார்க்கத்திலிருக்கும் ஆபாசங்களை மாத்திரம் திரட்டி ஆகடியமாக வெழுதியிருக்கின்றார். உதாரணமாக:—

15. உத்திரகேசை மங்கைச் சிவனும
உகந்து மகாமீனைப் பிடித்து
மத்தமாகவே பரத்தி மங்களேஸ்
பரியைமணஞ் செய்திருந்ததில்லையோ சாதி

16. விந்தையாகவே பரவை நாச்சியார்
சுந்தரமூர்த்திக் கிணங்கவேண்டியே
தந்திரம் பண்ணியாரூர் வீதியிற்
சங்கரன் தூது நடந்ததில்லையோ சாதி

18. ஆய்ப்பாடி யினிலிடைச்சிகள் பதி
ஞயிரம் பெண்களைக் கற்பழித்துத்
தீட்பாய் விஷ்ணு துலுக்க நாச்சியைத்
சேர்த்துக்கொண்டது சீரங்கஞ் சொல்லுமே சாதி

21. தொட்டியை பொம்மியை வெள்ளையம்மாளென்ற
சுயமரத்தியை சோரம் பண்ணின
மட்டில்லா துஷ்டத்தனத்து
மதுரைவீரன் சுக்கிலியனல்லவோ சாதி

இந்தப் பாடலைப் பாடினவரோர் வீரமார்த்தாண்டன அல்லது வீரசூரன் என்றே நாம் மதிக்கற்பாலது. இவரைத் தரங்கம்பாடியில் இந்து மடாதிபதி கொலைசெய்ய வெத்தனித்தது ஆச்சரியமல்லவே.

"குலங்களேது தான் அதினுட
நலங்களேது தான்"

என்ற பாட்டில் சாதிகளின் ஒற்றுமைக்கு நயமாக 19 சரணங்களை இசைத்திருக்கின்றூர். ஆனால் நாம் முன் கூறியவாறு சாதி வேற்றுமையின் சிதைவு ஆத்ம ஈடேற்றத்துக்குத் துணை செய்வதில்லை. சம்பிரதாயமாக, சாஸ்திரியாரைப்போல கவிகள் உண்டுபண்ணலாம். பொது மக்களின் ஆசாரத்தை மாற்றவேண்டுமானால் கூட வதிக்கும் கூட்டாளரான இந்து மக்களின் உடன்பாடும் உடன் கலந்த முயற்சியும் வேண்டும். கிறிஸ்து மார்க்கத்தின் பரவுதலையே வித்தையாகக் கையாள வந்த மிஷனெரிமார் நற்சரிதி இந்துக்களுக்குள் சங். C. F. சுவார்ச்சு ஐயரைப்போல தலைப்புக்கூடி அளவளாவி அவர்களில் சிலரையாவது கிறிஸ்துவைக் கண்டடைய முயலாமல், அற்றைநாள் தஞ்சாவூரிலிருந்த சிறு

தொகையான வேளாள குடும்பங்களை ஆதித்திராவிட கிறிஸ்த வர்களுடன் கலக்கவேண்டுமென்று கழிபெரும் முயற்சி யெடுத்தது அற்ப சிந்தையாகக் காணப்படுகின்றது. பொது மக்களின் ஆசாரத்தைச் சீர்திருத்த இவர்கள் அனுப்பப்பட வில்லையே. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் வேரூன்றி வாழ்ந்துகொண்டிருக்கும் சாதி வேற்றுமைகளை நேற்று வந்த ஐரோப்பிய குருக்கள் அழிக்க ஏலாது. இந்து சாதி வேற்றுமையின் அடிப்படை பிறப்பு. ஒரு சாதியில் பிறந்தவன் மற்றொரு சாதிக்குத் தன்னை மாற்றிக்கொள்வது ஒல்லும் வகையன்று. உதாரணமாக, தச்சாசாரி குலத்தில் பிறந்தவனொருவன் அக்குலத்தில் ஏற்கனவே சஞ்சரிக்கும் உறவினரோடு வதிந்து ஊடாடி சாதிக்குரிமையான கைத் தொழிலைக் கற்று அதன் வழியாய் பிழைத்துத் தன் சாதிக் குள்ளேயே மணம்புரிந்து குடும்ப நிர்வாகம் வகுத்து தனக் குக் கடவுள் வரையறுத்த உயிர்வாழ்க்கையின் காலத்தை நிறைவேற்றவேண்டுமேயல்லாது, அவன் தன்னுடைய சாதி யாரை எதிர்த்து, பிராமணனாகத் தன்னைப் பாவித்துக் கொள்ள முயலுவது ஒல்லும் வகையல்ல. இந்துக்கள் தங்களுக்குள்ளேயே வெளிச்சம் உதித்து, "இந்த ஆசாரம் இனி நமக்கு வேண்டாம்; இதனாலடைந்த பயன் போதும்" என நிர்ணயித்து இதை ஒழித்தாலன்றி சாதிக் கட்டுகள் நம் தேயத்தைவிட்டு நீங்குதலரிது.

இறுதியில் நான் அறிந்துகொண்டவைகள் என்ன வெனில்: (1) சாதிக் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மிஷ னெரிமார் நடத்தின போர், அவர்களைமாத்திரம் தாக்கவில்லை. சாதிபேதத்தை அடிப்படையாகக்கொண்ட இந்து மார்க்க மும் தாக்கப்பட்டது. (2) மார்க்கங்களுக்கும் மனுமக்க ளின் ஆசாரங்களுக்கும் கூடுகையில்லை. (3) இச்சாதிகள் ஆயிரம் ஆண்டுகளடைவில் மாயாவாதத்தினால் (idealism) இந்தியாவினிடை பரிணமித்த (evolved) இராசிகள் (ideal quantities) பரிணாம இயக்கத்தினால் (evolution) பிறந்து வேற்றுமை (variation) அடைந்த இராசிகளைத் தொலைக்க முயலுவது விபட்சமானதோர் அசம்பாவிதம். (4) கிறிஸ்தவர்களுக்குள் இருக்கும் சாதி வித்தியாசத்தை விலக்க முயற்சி வேண்டியதில்லை. இந்து மக்களுக்குள்

இருக்கும் அவ்வித்தியாசம் நாளடைவில் ஒழிகின்றவுழி கிறிஸ்தவர்களுக்குள்ளும் அது ஒழிந்துபோம். (5) உடன் சாதி மணம் (inter-caste marriages) மாத்திரம் சாதி வித்தியாசத்தைச் சிதைக்கவொண்ணுமேயல்லாது வேறொன்றும் அழிக்கமுடியாது. உடன் சாதி மணம் நிறைவேற்றும்படி மிஷனெரிமார் கட்டளையைப் பிறப்பிக்க அவர்களுக்கு அதிகாரமில்லை.

## அத்தியாயம் 14

### வேதநாயக சாஸ்திரியாரும் சைவ சமயக் கருத்துக்களும்

ஸ்ரீ மகான் பவுல் அப்பாசாமி அவர்கள் தாமியற்றிய வோர் நூலில் (8) பின்வருமாறு* எழுதியுளர்: "சிவ மதத்திலும் நாம் ஒப்புக்கொண்டு மாசு நீக்கிப் பெருக்கிப் பயன்படுத்த வல்லிய பல சித்தாந்தங்கள் உள. 'கடவுள் ஏக வஸ்து', 'கடவுள் உட்கலந்தவர்', 'கடவுளினது மனுடாவதாரம்', 'கிருபையின் வழியாக வரூஉம் இரட்சிப்பு' முதலியன இந்து மதத்தினருக்கும் அறிமுகமான கோட்பாடுகளாவன. பண்டை இந்து சித்தாந்தங்கள் யுகாயுகங்களடைவிலே, சடங்ககுகளாலும் வைதீகங்களாலும் கறைப்பட்டு இடுதிரை இடப்பெற்று ஒளிந்தன. எனவே, அடிகளான முடிபுகள் வளரவொண்ணுமல் ஊடறுத்துக்கொண்டு நிற்கின்ற பழுப்பு அடகுகளையும் கீழ்ச் செடி கொடி வகைகளையும் அகற்றி அவற்றை மீட்டு கிறிஸ்துவ சமயத்தின்கட் சேவைக்குட்படுத்தினல் யூதமார்கத்தைக் கொழுகொம்பாகக்கொண்டு கிறிஸ்து மார்க்கம் வளர்ந்ததுபோல அவை இந்து மதத்தின் உச்ச நிலையாக வயங்கும் அல்லது அம் மார்க்கத்தின் பூரணமாக மிளிராநிற்கும் என்பது என் சொந்தக் கருத்து."

இவ் உட்கருத்தினுக்கு இசைவாகத்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துமார்க்கமோர் பற்றுக்கோடாக வைத்துக்கொண்டு கிறிஸ்துவ சமயம் அஃதின்மிசையாக்கப்பெற்ற இல்லம் ஆகுமாறு சமரச நூல்களை முதன் முதல் இயற்

* பக்கங்கள் **293, 294** வாசிக்கவும். மொழிபெயர்ப்பு எனது.

பெரிதும் முயன்றவர் வேதநாயக சாஸ்திரியார் எனல் பொருந்தும். பெத்தலேங் குறவஞ்சியும் ஞானவுலாவுமான இரு நூல்களுமே எம் கூற்றை மெய்ப்பிக்கச்சாலும். நூல்களின்பேரில் மதிப்புரை பார்க்க. இக் கவிபக்தன் கிறிஸ்துவ கொள்கைகளும் ஞானமும் நிறைந்து ததும்பும் இன்னிசையமைந்த செய்யுட்களைப் பெரும்பாலும் சுத்த வெள்ளைத் தமிழில் இயற்றுவாராயினர். இவர், சிவமதம் வேரூன்றி நிற்கும் திருநெல்வேலியூரில் சிவபக்தர் மரபில் தோன்றினவராகலின், சைவ சித்தாந்தங்களை நன்கு அறிந்தவர்போலும். உதாரணமாக, செபமாலை 14-ம் பக்கம் வாசிக்க.

"கண்ணறிவொன்றுங் கழலதிரண்டுங் *

.....................................

யேசு நாதா போற்றி போற்றி"

கதிப்பதவி நான்காவன: சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்.

சாலோகம் யாது? ஒருவர் துஞ்சினபின் கடவுளுக்குத் தொண்டு செய்து வசிக்கும் முக்தி நிலை. இன்னது கிறிஸ்து சமயத்தில் கூறப்படும் மோட்சம்.

சாமீபம் யாது? யாக்கை அழிந்த பின்னர் கடவுளுடன் அந்நியோந்நிய ஐக்கியமாய் அவருடன் அமர்ந்து இயக்கத்திற்குட்படுவது. இயேசுநாதர் பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பதைச் "சாமீபம்" எனல் பொருந்தும்.

சாரூபம் யாது? கடவுளின் வடிவத்தையே அடைவது. (Cf. ye shall be like him. 1 John 3:2).

சாயுச்சியம் யாது? சமரச சீவியாய் தேவ அம்சத்துடன் கலந்துகோடல்.

இந்நான்கு முக்தி நிலைகளும் சைவ சித்தாந்த கோட்பாடுகள். சிவஞானத்தினுக்கும் கிறிஸ்து மார்க்கத்தினுக்கும் ஒற்றுமையுண்டாக்கி இந்து மதாசாரக் கொள்கையை உகந்து எடுத்துக்கொண்டார் சாஸ்திரியார்.

---

* கண்ணறிவு = ஞானம்; கழல் = பாதம்.

இன்னுமொரு உதாரணத்தை வகுத்தறியலாம். ஆரணு திந்தம், 204-ம் பக்கம் பார்க்க.

"வானந்தருஞ் சச்சிதானந்தமே—இம்
மாநிலத்தில் வந்தவர்க்கு வந்தனமே"

இவண் இயேசுபெருமானையே "சச்சிதானந்தம்" என அழைக்கலாயினர்.

சச்சிதானந்தம் = சத் + சித் + ஆனந்தம்.

சத்—என்றும் உள்ள உண்மை, அறிவு, சாரம்.

சித்—செயல், வெற்றி பெறுதல்.

ஆனந்தம்—சத்தினுலும் சித்தினுலும் பெறப்படும் குதூகலம்.

கடவுள் சச்சிதானந்த குணுளன் என்பது சைவ சமய சித்தாந்தங்களிலொன்ரும்.

## அத்தியாயம் 15

### தமிழ்* இசையும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரும்

இற்றைஞான்று இந்துக்களுக்குட் திகழும் பாடல்கள் இசைத் தமிழ் வகுப்பினைச்சார்ந்தவை யல்லவென எண்ணி, பிராமண சங்கீத வித்வான்கள் பெரிதும் பாராட்டி நிலைநாட்ட முயலும் கருத்துக்களில் இராகங்கள் தமிழ் இசைக் கலைக் குரியன வல்லவென எதிர்த்து பல தமிழ்ச் செம்மல்கள் வழக்காடி நிற்கின்றனர். அதுவேயுமன்றி, அன்னவரின் பொருளற்ற ஒலித்திரட்டுகள் இன்னிசையன்று என்ற உண்மையைத் திராவிடருக்குள் நிலவுமாறு, தமிழ் இசைச் சங்கங்கள் சில ஊர்களிலே கிளம்பி யிருக்கின்றன. சென்னைப்பட்டினத்தின் கண்ணே, இவ்விசையை வளஞ்செய்யுமாறு பெரியவோர் கட்டடத்தையுங் கட்டி அது சென்ற 1953ஸு பிரதிஷ்டை செய்யப் பெற்றது. தமிழ் இசைக்கலையை அவண் அப்பியாசிக்க மாணவருக்கு வசதி அளித்துளர்.

---

*இசை—இராகங்கள், கீதங்கள், கீர்த்தனைகள், பண், மதுரநாதம் (tune, melody, music, lyrics, anthem) முதலியன.

கருத்துக்களிலா ஏழு ஒலி வகைகளை (ச ரி க ம ப த நி ச) பிராமண சங்கீத வித்வான்கள் நீட்டியும், துண்டித்தும், விகார ஓசைத் தொடர்புகளாக்கியும் பயிலுவதற்குக் காரணந்தான் யாதோவெனில் கூறுதும்: இம்முயற்சிக்கு அடிப்படை, "கடவுள் தெய்வத்தன்மை பொருந்திய சமக்கிருத பாஷையைத் தான் காதால் கேட்க விரும்பினவர். கேவலம் தமிழை அவர் சற்றேனும் விழைந்து கேட்பதில்லை. எனவே எழுவகை ஒலிகளையும் சிறிய சிறிய பின்னங்களாக (சுரங்கள்) வெட்டியுங் கூட்டியும் நீட்டியும், அவற்றினை சுருக்கியும் பெருக்கியும் இராகங்களாக தெய்வங்களுக்குப் படைப்பது நலம்" என்ற போலிப் போதகமாமென்க. இப்போதகத்தை ஒப்புக்கொண்டு, பல நூற்றுண்டுகளாக தெய்வ உணர்ச்சி அறவே அற்று, பிராமணர் பிதற்றிய விகிர்தங்களை முழுவதும் நம்பி, துயில் கொண்டிருந்த பிராமணரல்லாத இந்துக்கள் அண்மையில் புது உயிர் அடைந்து தத்தங்குலங்களுக்குள் முற்காலத்தில் யதேச்சையாய் எழும்பித்திகழ்ந்த 'பரி பாடல்' முதலிய இசைத் தமிழ் பொருந்திய நூல்களை ஊக்கத்துடன் ஊன்றி ஆராய்வாராயினர். இந்நூல் பண்டைத் தமிழர் 3000 ஆண்டுகளுக்கு முன்னேயிருந்து சிவனுக்கு இசைத்த (set to music) பாடல்களாம். தஞ்சை திருவாளர் மு. ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய "கருணாமிர்தசாகரம்" முதற் புத்தகம், 707, 708 பக்கங்களில் ஷெ பரிபாடலின் இசை இலக்கணக் குறிப்புக்களையும் மற்ற விசேடக் குறிப்புக்களையும் வாசித்து ஆங்குக் கண்டுகொள்க. "பரி" என்ற அடைமொழிக்கு இவண்: தெய்வ உணர்ச்சி மேலெழுந்து வெள்ளம் போல மேலும்மேலும் வந்துகொண்டேயிருப்பது என்பது பொருளாம். தலைசிறந்த கருத்துக்கள் இப்பாடல்களினூடு நிறைந்து, ததும்பி, தெய்வ வணக்கத்தினைச் சிறப்பிக்கின்றன. அத்தன்மைய உணர்ச்சியைச் சுடர் ஒளிவிட்டு வலியுறுத்தும் பாடல்கள் தமிழுக்கே தனிச்சிறப்பாக வழங்குகின்றதைக் கண்ட பிராமணக் குருக்கள் பரிபாடலின் செய்யுட்களைக் கோவிலில் பாடக்கூடாதெனக் கட்டளை யிட்டனர். ஆதலின் நூற்றுண்டுகளடைவில் இப்பாடல்கள் மறந்துபட்டன. "சிலப்பதிகாரத்தை"த் தேடி கண்டுபிடித்த கும்பகோணம் மகாமகோபாத்தியாய டாக்டர்

(Dr.) உ. வே. சாமிநாதய்யரே 'பரிபாடலையுந்' தேடி அஃதினை அச்சில் பதிப்பித்தார். அப்பாடலின் பரிதபிக்கத் தக்க நிலைமையைக் கேள்வியுற்ற ஐயர், நடுவு நிலையைக் கையாளுபவராதலின் அப்பாடல்களின் சுவடிகளை (பனை யோலை) கோவில்கட்தோறுந்தேடி ஆங்குப் பூச்சியும் புழுவும் அரித்த சுவடிகளைச் சோதித்து அரையுங் குறையுமாய்க் கிடந்த பாடல்களைத் திரட்டித் திருத்தி உரையுடன் அச் சடித்தார். தமிழ் பாஷை தலையெடுக்க வொண்ணுமல், பிராமணர் அம்மொழியை முற்றிலும் குருட்டுப் போக்காகத் தடுத்து பகைத்து வந்த செய்கைக்குச் சிறந்த உதாரணம் பரிபாடலின் அழிவாமென்க. உ. வே. சாமிநாதய்யர் இவ் வரிய பாடல்களின் இராகங்களைக் கண்டுகொள்ளுமாறு வெடுத்த தம் பெரு முயற்சியில் சித்தி பெறவில்லை. இன் னிசையும் உள்ளீடும் கலந்த பாடல்களைத் தமிழ் பக்தர்கள் வசம் முற்காலத்தில் கேட்டு மகிழ்ந்த கடவுள், பிராமணர் உதித்தபின் தமிழை வெறுத்துத் தமிழ் பண்ணை இகழு வாரோ! யாதொரு சாதியாருடைய பேச்சு வழக்கைப் பெருத புத்தம் புதிய செயற்கை மொழியான சமக்கிருத வேதச் செய்யுட்களை மாத்திரங்கேட்டு கடவுள் புகழுவாரோ தான்!

கிறிஸ்து மதத்தைத் தழுவின வே. சா. வும் அவருக்குப் பின் தோன்றின கிறிஸ்தவ சாயகஸ்தர்களும், 'கடவுள் வணக்கம் பொருளற்ற ஒலித்தொடர்ச்சி யன்று. அஃது பொருட்களும் உணர்ச்சியும் சிவணி புனைந்து இயங்கும் இசைத்தமிழில் உண்டு பண்ணப்பெற்ற கீர்த்தனைகளென' ஐயமற நிறீஇனர்களென்க. இசைத் தமிழினது சிறப்பியல் புக்களைத் தேடி நாடி இன்புற விழையும் இந்துக்களானோர் யாப்பிலக்கணமும் இசை இலக்கணமும் வளமாகக்கொண்டு நிலவும் நம் கீர்த்தனைகளை (Tamil Christian Lyrics) யல் லவோ பயின்று அறிந்து கோடல் வேண்டும். உள்ளத்தைக் கிளர்ந்து, தெய்வத்தின்பால் அன்பை யூட்டி தெய்வ வணக் கத்தையும் பெருக்கி மனுமக்களுக்கு ஊக்கத்தினை அருளி, உள்ளீடு நிறைந்து பொலிவுறும் பண்களைக் கிறிஸ்தவ ஞான கீர்த்தனைகளினூடு யாவரும் பரக்கக் காணலாம். பொருளற்ற வெற்று ஓசைத் திரட்கள் கிறிஸ்து மார்க்கத்தினிடை பயன்

படுவதில்லை. உதாரணமாக, 1950-ம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்ற 'கிறிஸ்தவ கீர்த்தனைகள்' நம்பர் 225-ஐ வாசிக்கவும்.

"எல்லாம் யேசுவே—எனக்கெல்லாமேசுவே
தொல்லைமிகும் இவ்வுலகில்—துணை இல்லையே."

இக்கீர்த்தனையின் 6 சரணங்களினிடை அடங்கி நிற்கும் பொருட்களை யென்னவை யென்று வியப்பது! கிறிஸ்துவின் நட்பு எத்துணை சிறந்தது!

தமிழ் இசைக்குரிய சிற்சில கருவிகளையும் சாஸ்திரி யாரின் குடும்பத்தாரும் மாணவரும் அவர் இயற்றிய பாடல் களைப் பாடு வமயம் எடுத்து வழங்கினர்களென அவருடைய சரித்திரத்தில் வாசிக்கின்றோம். நம் திருமறையூரில் வாத் தியங்களுடன் பாட மாணவர் பயிலுவது நல்ல முறையா மென்க. புதிய இசை வகைகளை அல்லது இராகங்களைத் தெலுங்கு கவி தியாகராஜாவைப்போலப் படைக்க சாஸ்திரி யாருக்கு வரமிருந்ததில்லை. பொருள் தலைசிறந்து வழங்க வும், தெய்வீக உணர்ச்சி மிகுதலுக்குரிய கிளர்ச்சி எழும்ப வும் ஏதுகரமாகவும், இசை இலக்கணத்தினுக்குப் பொருத்த மாகவும் பாடல்களை அமைக்க மாத்திரம் அவர் அரிய திறன் வாய்ந்தவர். இக்காலத்தில் நிலவும் இந்துக்களைப்போல, நாம் பிராமண சங்கீத வித்வான்களின் மாய வலையினூடு சிக்கிக் கொண்டு வருந்தாமல், யதேச்சையாய் நம் கடவுளைப் போற்றியும் புகழ்ந்தும் வணங்குமாறு கிறிஸ்தவ பரிபாடல் களை இசைத்தமிழுடன் இயைபு பெற இயற்றிச் சிறந்த வழியை முதன் முதல் காட்டினவர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரெனக் கூறுவது தவருகாது, மிகையுமாகாது.

இவண் வே. சா. வின் செய்யுள் நடையின் எதுகைகளை ஆராயற்பாலது, செய்யுட்களின் முதல் சொற்கள் அல்லது கடைச் சொற்களின் ஒலி இயைபுடைமை 'எதுகை' எனப் படும். தமிழ் செய்யுள்நடை அனுசரிப்பது 'தலை எதுகை'. ஆங்கிலம் பயன்படுத்துவது கடை எதுகை. வரிகளின் ஊடே கிடக்கக்கூடிய எதுகைக்கு உள் எதுகை (Internal rhymes) எனப் பெயர். பழக்கத்தினடி வழியாய்ப் பார்த்தால் தலை எதுகை தமிழுக்குரிய தென்றும் கடை எதுகை ஆங்கி லத்தினுக்கேவுரியதென்றும் முடிவுகட்ட அது இடந்தருகின்

றது. வே. சா. இரு பழக்கங்களேயும் சலிக்காமல் கையாண்டுளர். இவர் ஆங்கிலம் கற்றவரல்ல. யாண்டிருந்து இவ்வரியவரம் இவருக்குக் கிடைத்தது? இதையறிய விரும்புவோர் லுத்தரன் சபையார் பயன்படுத்தும் ஞானப்பிரார்த்தனைகள் உதித்த வரலாற்றைச் சற்று கவனிக்கவேண்டும். ஐரோப்பிய சபையார் பயன்படுத்திய பிரார்த்தனைகள் (Hymns) ஏற்கனவே யிருந்தன. இவ்வாற்றில் 300 பிரார்த்தனைகளே தாம் நடாத்தின கிறிஸ்தவ ஊழியத்திற்கு உறுகருவியாயிருக்கும் பொருட்டு பெப்ரிசியூஸ் ஐயர் தமிழ்ச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்தார். தான் அன்னைமொழியில் பயின்ற செய்யுள் நடையை பெரிதுந் துணிந்து தமிழில் பொருத்திவிட்டார். உதாரணமாக:

வே. சா. வின் செய்யுள் எதுகைகளின் சிறப்பு

24-ம் எண் செய்யுள் 1

தூதர்கள் சந்தோஷமாக ($a$)
பாடச்சே என்னிலே
நெஞ்சு துள்வதாக ($a$)
கேளுங்கள் ஆகாசமெங்கும் ($b$)
கிறிஸ்துவின் ஜென்மத்தின்
கீதங்கள் முழங்கும் ($b$)

இரண்டு விதமான கடை எதுகைகள் $a, a, b, b$ இவண் தொனிக்கின்றன; எனவே வே. சா. வுக்கு இவ்வழியைக் காட்டினவரோர் செர்மன் என்பது ஈண்டு நினைவுகூறற்பாலது. சாஸ்திரியார் பெப்ரிசியூஸ் ஐயரின் பிரார்த்தனைகள் மாட்டு பேரவா கொண்டவர். எனவே, அறிந்தோ அறியாமலோ அவர் எடுத்தாண்ட கடை எதுகை குணத்தை இவரும் பேணி தலே எதுகைகளேயும் உள் எதுகைகளேயும் கூட்டி, இவர் தம் கீர்த்தனைகளே முழங்குவாராயினர். உதாரணமாக, 169-ம் கீர்த்தனையைக் கூறுபடுத்துவாம்:

பல்லவி

ஐயா($a$) உனதருள்புரி அருமைமேசையா($a$)

அனுபல்லவி

பொய்யா($a$) மருள்வினை செய்யா($a$) துலகதில்
நையா($a$) தடிமைகொள், துய்யா($a$) மெய்யா($a$)

ஒரேவித எதுகை $a$ எழுதரம் தொனிக்கின்றன. மூன்று தரம் தலை எதுகையாகவும் மூன்று தரம் கடை எதுகையாகவும் ஒரே தரம் உள் எதுகையாகவுந் தொனிக்கின்றது.

சரணம் 1

ஆதா($b$) ரமும் நீயலதா($b$)ர் திருப்பாதா($b$)
சாதா($b$) ரணவேத விநோத சங்கீதா($b$)
சாதா($b$) ரவினவு நீதா($b$) எனின்குறை
தாதா($b$) பரகுரு நாதா($b$) போதா($b$)

ஒரேவித எதுகை $b$ பத்து தரம் தொனிக்கின்றன—தலை எதுகையாக நாலுதரம், கடை எதுகையாக நாலு தரம், உள் எதுகையாக இரண்டு தரம், எதுகைகளின் மிகுதி காதுக்கு இன்பத்தைப் பெருக்குகின்றதைக் காண்மின்!

மற்றொரு உதாரணமாக (63) கீர்த்தனையின் பகுதிகளைக் கூறுபடுத்துவாம்:

பல்லவி

| | |
|---|---|
| தேவ தேவனே ($a$) எகோவா | $a$ |
| வா என் ஜீவனே ($a$) | $a$ |

அனுபல்லவி

| | |
|---|---|
| காவலர்க்குபதேசனே ($a$) கனபாவிகட் கதிநேசனே ($a$) | $a$ $a$ |
| கர்த்தன் எக திரித்வ ($b$) ஞானமகத்வ ($b$) | $b$ $b$ |
| ராஜ கிறிஸ்த்வ ($b$) ாகிய—தேவ | $b$ |

சரணம் 1

| | | |
|---|---|---|
| $y$ | ($g$) அந்தமேனியே ($c$) கனம்பெரும் அனந்த ஞானியே ($c$) | $c$ $c$ |
| $h$ | ($h$) விந்தை ($e$) மாணியே ($d$) சுகந்தரமிகுந்ததானியே ($d$) | $e$ $d$ $d$ |
| $h$ | ($h$) தந்தை ($e$) யர்தா வந்தவா ($f$) கதி | $e$ $f$ |
| $g$ | ($g$) தந்தவா ($f$) சொல் உவந்தவா ($f$) மெய் | $f$ $f$ |
| $g$ | ($g$) சிறந்தவா ($f$) விண்ணெழுந்தவா ($f$) திவ்ய | $f$ $f$ |

—தேவ

மேலே பெயர்த்தெழுதப்பட்ட கீர்த்தனைப் பகுதிகளில், மூன்று வகுப்புக்களையுஞ் சார்ந்த எட்டுவித எதுகைகள் தொனிக்கின்றன. இவண் நடராஜபத்தின் 2-ம் செய்யுள் வே. சா. பின்பற்றிய எதுகை தொடர்ச்சிக்குச் சிறந்த உதாரணமாம். ஆங்கில செய்யுட்களில் தலை எதுகைகள் காண்பதரிது.

அந்தமேனியே / விந்தைமானியே, அனந்த ஞானியே / மிகுந்த தானியே, இவை இரட்டை எதுகைகளுக்கு (duplex rhymes) உதாரணங்களாம். வே. சா. வினது தமிழ் இசையின் குணுங்கத்தை மேலும் மேலும் வியாக்கியானஞ் செய்யின் அது விரியுமெனவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேம்.

பொதுவாகப் பெண் மக்களுக்குத்தான் நற்குரல் உண்டென்பது சபையாரின் எண்ணம். அற்றன்று, நந்தமிழ் ஆண்பாலாருக்கும் வேறு வகையில் இனிமையான குரல் உண்டென்ற உண்மையைத் திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்து சபைகளிற் காணலாம். அதிக தூரம் போகவேண்டாம். மேற்கூறிய அரிய குணவீற்றுக்களை இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கு ஆரோபிப்பதில்லை. எங்ஙனமிருப்பினும், தெய்வ நட்பை வளமாகக் கொண்டாடும் குணவீற்றின் சிறப்பியல்புக்கள் நமக்குச் சிறப்பாகவுள்ளதை இந்துக்களும், பிராமண குருக்களும் சங்கீத வித்வான்களும் மறுக்கவொண்ணுத காலம் அண்மையிலிருக்கிறதென்பதற்கு ஐயமில்லை. அன்னை மொழிக்குரிய உயர்தர செந்தமிழ் நூல்களைக் கற்றறியா மக்களெனவே கிறிஸ்தவ தமிழர் குழுவை இந்துக்கள் பெரும்பாலும் நிந்தித்து அவமதிக்கின்றனர். இது ஒரு புறமிருக்க, நாம் தமிழிசையைக் கைநெகிழவிடாமல் நம் கோவில்களிலும், குடும்ப ஆராதனைகளிலும், தெருப் பிரசங்கங்களிலும், தமிழ் பண்ணை ஆதரித்து காப்பாற்றி வரும் அருஞ்செயலையும் ஒழுக்கத்தினையும் என்னென்று மதித்துரைப்பது! யாங்ஙனம் விதந்தும் வியந்து மோதுவது! தெய்வ நட்பினுக்கும், வணக்கத்தினுக்குமுரிய சங்கீத முயற்சிக்கு வோர் பெரிய பகுதியை நன்கொடையாய்க் கிறிஸ்தவ கீர்த்தனங்கள் மனுமக்களுக்கு அளித்துதவுகின்ற உண்மை மறக்கற்பாலதன்று, மறுக்கவுமொண்ணுது.

பொருளற்ற விகாரமான தொனித் தொடர்ச்சியை, வானெலிப் பிரசுரத்தில் நாள்தோறுங் கேட்கலாம். மனுவுக்கும் பிறபாலுண்ணும் பிராணிகளுக்கும் உள்ள பிரிநிலைகளில், வாய்ப்பேச்சு சிறந்ததொன்ரும். இஃதினைத் தள்ளிவிட்டு காட்டுமிருகங்கள் கையாளும் வெற்றுவொலியை

எடுத்து வழங்குவது வெறுக்கவேண்டிய பிற்போக்கன்றே! எனினும் உயர்திணையைச் சார்ந்த மாந்தருக்குள் நிலவும் கற்றறிவாளர். இத்தீமையான பயிற்சியைத் தகாதென விலக்க முயலாத குறைவுபாடு (தமிழ் இசை சங்கத்தார் நீங்கலாக) விசனிக்கத் தக்கதொன்றும்.

## அத்தியாயம் 16

### சாஸ்திரியாரைப்பற்றிய கிளைக் கதைகள்

### I

வேதநாயக சாஸ்திரியார்மாட்டு சரபோஜி மகாராஜா கொண்ட அன்பினாலும் நல்லபிமானத்தினாலும், "சொற்ப நஞ்சை நிலம் உமக்கு மானியமாக விடுகிறேன். அதை வைத்துக்கொண்டு நீர் எப்போதும் சுகமாய் ஜீவித்து உமது ஊழியத்தைத் தடையில்லாமல் நடத்தலாம்" என்று ஒரு சமயத்தில் சொல்லியறிவித்தார்.

அதற்குச் சாஸ்திரியார் "மகாராஜாவே! தாங்கள் கொடுப்பது சந்தோஷமாயிருந்தாலும், அதனால் வரும் தீது அனந்தம். சாப்பாட்டிற்காக நிலமிருப்பதால் எங்கள் கர்த்தருடைய செபத்தில் இயேசுநாதர் கற்பித்தபடி 'அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்' என்று தினஞ் செபிக்கிறது நின்று கர்த்தருடைய உதவியில்லாமலே நாம் உண்டு உடுத்தி சுகமாயிருக்கலாமென்ற எண்ணம் மேலிட்டு ஆண்டவரை மறந்துபோவோம். நஞ்சை நிலமிருந்தால், என் வாரிசுகள் பிற்காலத்தில் ஒருவரோடொருவர் சண்டைபோட்டு வழக்காடி, சமாதானக் குறைவும் பிரிவினையும் உண்டாகி ஆண்டவரைத் துதிக்கிற ஊழியம் நின்றுபோம். கர்த்தருக்கு மகிமையாக நான் வெகு பிரயாசையெடுத்து உண்டாக்கிய நூல்கள் வீணாய்ப் போகும். பணமிருப்பதினால் சகல ஏராளமான பாவங்களையும் செய்து, ஆத்ம சரீர சுகத்தையும் கெடுத்து, நம்மையுண்டாக்கி ஆதரித்து நடத்திவருகிற ஆண்டவருக்குத் துரோகஞ் செய்து பொல்லாதவர்களாவோம். ஆகையால் மகாராஜாவே! தயவுசெய்து நிலம் வேண்டாம். தங்களுடைய தயவு இருந்தால் போதும்" என்று மறுத்துவிட்டார்.

## II

ஒருநாள் சரபோஜி மகாராஜா சாஸ்திரியாரை, 'நீங்கள் வேதங் கேட்டவர்களா? அல்லது வேதங் கெட்டவர்களா?' என்று சக்கந்தமாக வினவினர்.

'வேதங் கேட்டது மெய்தான். ஆனல் அதின்படி நடவாமலும் உலகத்தில் மானிடரைக் காப்பாற்றி இரட்சிக்க நராவதாரமாக வந்த இயேசுநாத சுவாமியை முழுவதும் நம்பாமலும் இன்னும் உலகத்தைச் சார்ந்திருப்பதால் வேதங் கெட்டவர்களென்றே சொல்லலாம்!' என்று சம்பிரதாயமாய் விடை பகர்ந்தார் சாஸ்திரியார்.

## III

C. F. சுவார்ச்சு ஐயருக்குத் தஞ்சாவூர் துளசி மகாராஜாவின் நட்புயிருந்ததுபோல, சாஸ்திரியாருக்குச் சரபோஜி மகாராஜாவின் கருணை இருந்திருக்கிறது. திருட்டாந்தமாக: எல்லோரும் மகாராஜாவைக் கொலு வீற்றிருக்கும் மண்டபத்தில் காணும்போது, தரையில் வீழ்ந்து தெண்டஞ் செய்வதுண்டு. ஆனல் சாஸ்திரியார் மகாராஜாவின் அதிகாரத்தினுட்பட்டும் அவ்வண்ணம் மரியாதை செய்யவில்லை. இது ராஜ சபையிலுள்ளவர்களுக்குக் கோபம் உண்டாக்கினது. சாஸ்திரியார் அவரை மதிக்கவில்லையென்றதுபோல் ராஜாவுக்கு அறிவித்தபோது, அவர் 'சாஸ்திரியார் என்னை ஆசீர்வதிக்கிறவரானபடியால் சாஷ்டாங்க தெண்டனிட அவசியமில்லை' என நியாயம் கூறினர்.

## IV

கப்பல் பாட்டு, பெத்தலேங் குறவஞ்சி முதலிய தம் நூல்களை ராஜசமுகத்தில் சாஸ்திரியார் அரங்கேற்றக் கேட்ட சரபோஜி மன்னன் இவரிடம்: 'உமது கவிகளில் சொற்சுவை, பொருட்சுவை, கருத்துக்கள், அந்தி, சந்தி, தாளம் எல்லாம் 'சரிவரக் காணப்படுகின்றது. நான் புவிராயன், நீரோ கவிராயன்' என்று புகழ்ந்து பேசினர்.

## V

சாஸ்திரியார் ஒரு கனவானையாவது, தனவானையாவது புகழ்ந்து பாடுவதில்லை. வாக்கு ஆசாரமாய் கவியுண்டு பண்ணுவதுமில்லை.

"மனுவேலர் திருநாம மிகழாதே, சாகும்
மனுடர் தமை மகிழ்ந்து புகழாதே" என்றும்
"நரஸ் துதி பாடாதனுக்கிரகித்த
ஞானஜீவப் பெருமானே"

கீர்த்தனையடிகளைப் பாடியிருக்கிறார். ஆனால்

"சீருயருந்தவிது மைந்தா! ஆடீருஞ்சல்
சீயோனின் திருமகளோ டாடீருஞ்சல்!"

என்று அந்தமாக முடிந்திருக்கும் 27-ம் செபமாலையான 'திருவிளையாட்டூஞ்சலின் செய்யுட்களை ஓர் கிறிஸ்தவர் தாவீதுபிள்ளை குமாரனின் கலியாணத்தில் ஊஞ்சல்பாட்டாகப் பாடினதினால், உடனே சாஸ்திரியாருக்கும் அவர் பாடகர்களுக்கும் தொண்டை கட்டிக்கொண்டதுமன்றி, சாஸ்திரியாருக்குப் புத்திமாறி திகில்களும், பயங்களும் சொப்பனங்களுமுண்டாகி தன் வீட்டை விட்டு நீங்கி கோவிலையடுத்த சமாதி நிலத்திற்கு அருகாமையில் குடியிருக்க நேரிட்டது. இச்சுகக் கேட்டுக்குப் பரிகாரமாக, 'சிலுவைத் தியானம்' என்ற 28-ம் செபமாலையை இசைக்க, பூரண சுகங்கிடைத்து, தன்னகத்திற்குச் சாஸ்திரியார் மீண்டார்.

## VI

ஒரு தமிழ்ச் சங்கமாக சில இந்துக்கள் ஒன்றுகூடி, 'கிறிஸ்து மதக் கண்டனம்' என்றவோர் திருமுகம் எழுதி, அதில் இயேசுநாதரை 'கழுதை வாகனன்' என்றழைத்து, 'மாதிரிக்கு ஒரு பாதிரி பூண்டில்லாமல் வேரறுத்துவிடுவோம்' என்று அச்சங்காட்டி அதிதூஷணையாயெழுதி அதன் பிரதிகளை மிஷனெரிமார்களுக்கெல்லாம் அனுப்பினார்கள். மிஷனெரிமாரும் குருக்களுங்கூடி ஆலோசித்து, அந்நிருபத்தை வேதநாயக சாஸ்திரியாருக்கனுப்பி விடை பகரும்படி வேண்டிக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்

கிணங்கி, 'நேச நிருபம்' என்ற பத்திரிகையை வரைந்து அனுப்பினர். இதில் இந்துக்களுக்கு நியாயம் சொன்னது மன்றி, உரோமானித்தாரோடும் மகம்மதியரோடும் சாஸ்திரியார் தர்க்கித்த விவாதங் கண்டிருக்கிறது. மிஷனெரிமார் பத்திரிகையை அச்சிட்டு, பிரதிகளைச் சுற்று விளம்பரம் செய்தும், விற்றும், கிறிஸ்து மார்க்கத்திற்குக் கௌரவத்தை சம்பாதிக்க அது துணைக்கருவியாக விருந்தது.

## VII

தன் மாணுக்கர், பாடகர் முதலியோருடன் சுற்றுப் பிரயாணஞ்செய்து, சதுர் பிரசங்கம் செய்வதுண்டு. ஒரு நத்தத்தில் தாகமடைந்ததினால், அங்கேயுள்ள தலைமையானவரொருவர் வீட்டில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார். கிறிஸ்தவரானபடியால் கொடுக்கமுடியாதென்று அறிவித்தார்கள். மனம் புண்பட்டு அவர் திரும்பினவுடன், அந்தத் தனவான் வீட்டுப் பசுமாடுகள் கட்டியிருந்த கொட்டகை தீப்பற்றி யெரிந்தது.

எல்லோரும் ஒரு தேவதாசனை மதிக்காமையினால்தான் என்றுணர்ந்து, அவரை அழைத்து மரியாதை செலுத்தி செம்பில் மோர் கொடுத்தார்கள். அதை அருந்தி, "என் மனம் குளிர்ந்ததுபோல் இந்த நெருப்பும் குளிர்ந்துபோகட்டும்" என்றோர் விரிச்சி மொழிந்தவுடன், தீயுந்தானே அணைந்து போயிற்றென்று ஓர் கிளைக் கதையுண்டு.

## VIII

மற்றொரு சுற்றுப் பிரயாணத்திலோர் இந்து சத்திரத்தில் இராத்தங்க நேரிட்டது. இந்து யாத்திரிகருக்கு மாத்திரம் சாப்பாடு உண்டு. கிறிஸ்தவர்களுக்கில்லை என்று மறுத்ததினால் சாஸ்திரியாரும் பாடகரும் பட்டினியாய் படுத்துக் கொண்டார்களாம். அவ்வமயத்தில் சத்திரத்துக்குரிய தர்ம கர்த்தா உணவு கொள்ள அமர்ந்தபோழ்து, அவருடைய வலது கை வழங்காமற்போயிற்று. இதென்ன காரணத்தினாலென்றறிய வீட்டார் வைத்தியர்களையும் கோடங்கிகளையும் அழைத்து விசாரித்தார்கள். ஒரு கோடங்கி, "யாரோ

ஒரு தேவதாசன் சத்திரத்தில் இறங்கியிருக்கிறார். அவருக்கு நல் மரியாதை செய்யாததினால்தான் இப்படி ஆபத்து வந்திருக்கிறது" என்று அறிவிக்க, உடனே ஆட்களையனுப்பி சாஸ்திரியாருக்கும் பாடகர்களுக்கும் நல் மரியாதை செய்து விருந்து கொடுக்க, தர்மகர்த்தாவின் கை முன்போல் வழங்கவே, சாப்பிட்டாராம்.

## IX

கூடுகளில் குருவி வளர்க்கும் செய்கை சாஸ்திரியாருக்கு அருவருப்பானதாம். குருவி விற்கும் குறவன் அவைகளைத் தன்னிடங் கொண்டுவந்தால், மொத்தமாய் குருவிகளை விலை பேசி, கூட்டைத் திறந்து குருவிகளையெல்லாம் பறந்து போகும்படி செய்வார். "அவைகளின் களிப்பைக் கெடுத்து, சிறையில் வைப்பது கொடுமை. குருவிகள் கத்திப் பாடுவது கடவுளுக்கு மகிமை, நமக்கும் இன்பம் பயக்கின்றதல்லவா?" என்று முகாந்தரம் கூறுவார்.

## X

சாஸ்திரியாருக்கும் அவரது இரண்டாவது மனைவி மிக்கேல் அம்மாளுக்கும் ஒற்றுமையில்லாததினால் அந்த அம்மாள் திருநெல்வேலி ஊரிலிருக்கும் தகப்பன் வீட்டிற்குப் போய் நெடுநாள் திரும்பாத காரணத்தால், தன் கடிதத்தில் பின்வருமாறு எழுதினாராம்:

"எண்ணறவே கற்று எழுத்தறவே வாசித்தும்
பெண் புத்தி பின் புத்தியே!"

அதற்கு அந்த அம்மாளுடைய பதிலில்,

"கால் பல உள்ள அட்டை கடுந்தூரம் போகமாட்டா!
நூல் பல கற்ற மாந்தர், தமக்கு நூல் அறியமாட்டார்!"

என்று விகடமாய் எழுதினார்களாம்.

## XI

யோகாப்பியாசத்தில் சாஸ்திரியார் நேரத்தை செலவிடுவது வழக்கமாம். நள் இரவில் தேவாவியின் ஏவுதல் வருவதுண்டு. தனக்கு உறவினரான அன்னம்மாளுக்கு "சிக்கி

முக்கி"க் கல் (pebbles) போட்டு நெருப்புப் பொறியுண்டாக்கி விளக்கேற்றும் வேலையை நியமித்திருந்தார்.* எந்தச் சாமமானாலும் ஞான அருட்சி யுண்டானவுடனே, "அன்னம்மாள்!" என்று கூப்பிடுவாராம். உடனே அவர்கள் குத்துவிளக்கேற்றிக் கொடுக்க, எழுதும் குமாஸ்தாக்கள் அவர் நவின்ற வழி எழுதுவார்கள்.

இவ்வாறு உன்னத ஆவியால் பிடிகொண்டு நூல்களை இயற்றுவிப்பது ஐரோப்பிய கவிராயர்களிடமும் காணப்படும். திருஷ்டாந்தமாக, இரு விழிகளும் அகாலமாய் இருளடைந்தபின், மில்டோன் (Milton) என்ற ஆங்கில கவிராயர் தமது காவியமாகிய "பரதீசை இழந்த கதை"யை இசைக்கும்போது, அவருக்கும் இரவிலேதான் வல்லமை புறப்பட்டு ஈர்த்ததாகவும் அவ்வமயங்களில் தன்னுடைய பெண்மணிகளை யெழுப்பிச் சொல்ல, அவர்கள் எழுதினதாகவும் அவருடைய சரித்திரத்தில் வாசிக்கின்றோம்.

## அத்தியாயம் 17

### இறுதியுரை

சாஸ்திரியாரினது நூல்கள் கிறிஸ்து மார்க்கத்தைத் தமிழருக்கு உரைக்கொணுவோர் புதிய புதிய வனப்புக்களையும் உண்மைகளையும் புலப்படுத்தி, மீதூர விளங்குவனவாய் வியப்பும் நயப்பும் விளைவிக்கின்றன. இற்றை ஞான்று இப்பரிசு நூல்களை இயற்றுபவரைக் காண்பதரிது. இவை தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கக்கூடிய ஆத்ம அவாய் நிலையை ஒழித்தன.

நிலன் நூல் கற்றுக்கொடுக்கும் ஆசானொருவர், மாணுக்கருக்கு முன் பூகோள பாடங்களை விரித்து உயர்த்தி ஊர்களை

---

* இரண்டு கூழாங்கற்களை உறைத்து வருகிற (நெருப்புப்) பொறியில் பஞ்சைக் காண்பித்தால், அது பற்றி எரியும்போது குத்து விளக்குத் திரியில் கொளுத்துவார்களாம். அக்காலத்தில் நெருப்புப் பெட்டி கிடையாது. சாஸ்திரியாரின் கடைசி காலத்தில் அபூர்வமாய் நெருப்புப் பெட்டி செய்துவந்து 12 குச்சிகள் 4 அணுவுக்கு விற்றதை வாங்கி வீட்டாருக்குக் காண்பித்து, மேசை மணி அடித்துச் செபம் பண்ணி, ஆண்டவருக்குத் துதி செலுத்தினர்.

யும் மலைகளையும் ஆறுகளையுங் கோல் கொண்டு சுட்டிக் காட்டாமல், "பூகோள படங்கள் சீர்மையில் அச்சிடுகிறார் கள். நான் எழுதியிருக்கிறேன். நீங்கள் பரீட்சை எழுதி ஆறு மாதங்களுக்குள் வந்துவிடும்" என்று ஆறுதல்படுத்தி னாராம். இதனுக்கு நேர்தான் என்னுடைய பிரயாசையும். வே. சா.-வினது நூல்களில் பதினொரு புத்தகங்களைத் தெரிந்துகொண்டு மதிப்புரையை எழுதலானேன். இந்தச் சீவிய சரித்திரத்தை வாசிக்கும் நண்பர்களிடம் ஒவ்வொரு நூலுக்கும் பிரதியொன்று இருக்கவேண்டுமென்று சொல்லு வதற்கில்லை. பதினொரு நூல்களும் சில பத்தாண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டன. பிரதிகள் போனவிடம் தெரிய வில்லை. விலைக்கு வாங்க வழியில்லை. இந்த அபாயத்தை நீக்கி ஒரேயொரு உபாயம் என் மனத்தைத் தைக்கின்றது. செல்வாக்குள்ள கிறிஸ்தவ நண்பர்கள் வே. சா.-வின் முதன்மையான நூல்களை அச்சில் பதிப்பதற்கு ஒரு நிதியை ஏற்படுத்தலாம். பலர் தத்தம் நிலைமைக்கேற்ப நன்கொடை கொடுக்கலாம். நிதியை C.L.S. சங்கத்தாரிடம் ஒப்புக்கொடுத்து அவர்களைப் புத்தகங்களை அச்சிடும்படி கேட்டுக்கொள்ளலாம்.

பொது மக்களின் ஆத்ம நலனைக் கருதி அதைப் பாராட்ட விரும்புவோர் என் ஆலோசனையை உகந்து எடுத்துக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

முற்றிற்று.

## உடன் கலந்து வாசித்த புத்தகங்கள்

1. 1879—"கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்." வேத சாஸ்திரியாகிய என்ரி பவரைய ரால் (Dr. Henry Bower) இயற்றப்பட்டது.

2. 1899—"தஞ்சாவூர் சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார் சரித்திரம்." குமாரன் V. நோவா ஞானதிக்க சாஸ்திரியாரால் தெரிந்தெடுக்கப்பட்ட சுருக்கமான சரிதை.

3. 1906—"தரங்கை மிசியோன் சரித்திரம் (1706-1906.)" ஞா. சாமுவேல் ஐயர் இயற்றியது.

4. 1906—*Hindu Manners, Customs and Ceremonies*, by the Abbe J. A. Dubois. Translated from French by H. K. Beauchamp, C.I.E.

5. 1921—*Schwartz of Tanjore*, by Jesse Page, F.R.G.S.

6. 1921—*The Life and Work of Henry Martin*, by Butler. Published by C.L.S., Madras.

7. 1921—*William Carey*, by Murdoch. Published by C.L.S., Madras.

8. 1923—*The Centenary History of the C.M.S. in Tinnevelly*, by Paul Appasamy, M.A., LL.B. (Cantab.), Bar-at-Law.

9. 1927—*Biography of Thiagaraja*, by M. S. Ramaswamy Aiyer.

10. 1927—*H. A. Krishna Pillai*, by Amy Carmichael. Published by C.L.S., Madras.

11. 1928—*Raja Ram Mohan Roy*, by Macnicol. Published by C.L.S., Madras.

12. 1931—"சுவிசேஷ லுத்தரன் ஞானப்பாட்டுகள்", 1774-ம் வருஷம் பெப்ரிசியூஸ் ஐயரால் ஜர்மானிய பாஷையிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது.

13. 1932—*Selections from Tukaram.* Edited by Dr. W. S. Deming.

14. 1932—"இரக்ஷணிய சரிதம்". ஸ்ரீ H. A. கிருஷ்ண பிள்ளை இயற்றியது. புதுக்கோட்டை ஸ்ரீ P. S. கடம்பவன சுந்தரநாயனார் அவர்களெழுதிய பொருள் விளக்க உரையும்.

15. 1932—*Tune Book to Tamil Christian Lyrics.* Revised in Western Staff Notation by G. D. Eleazer, St. Paul's School, Vepery, and Tamil Sangam Notation by Rev. L. I. Stephen of Erode. Published by C.L.S., Madras.

16. 1935—*The Tamil Bible.* Translated by Fabricius. Current Edition.

17. 1935—"சென்னை அத்தியட்சாதீனத்தின் சதாப்த சரிதம் (1835-1935)". Rao Sahib S. K. தேவசிகாமணி, B.A., L.T., இயற்றியது.

18. 1937—"ஆசிரம பாமாலை". Dr. J. சவரிராயன் அவர்களால் திரட்டப்பட்ட ஓர் கலம்பகம். கிறிஸ்து குல ஆசிரம பிரசுரம் (நான்காம் பதிப்பு).

19. 1937—*Tamil Christian Lyrics.* Published by the Religious Tract and Book Society. Fifth Edition.

20. 1938—*Sri Ramakrishna Paramahamsa.* Motherland Series. No. 18.

21. 1938—"திருக்குற்றாலக் குறவஞ்சி". திரிகூடராசப்ப கவிராயர் இயற்றியது. மூன்றாம் பதிப்பு.

22. 1908—"தமிழ்க் கிறிஸ்தவர்கள் வீடுகளில் செய்யவேண்டிய குடும்ப ஜெப முறைமை". இது சென்னை High Court Advocate, Sri Satya Joseph, M.A., M.L., அவர்களால் இயற்றப்பட்டது.

23. 1934—"இரக்ஷணிய கீர்த்தனைகள்". இது இராயபுரம் தென் இந்தியா ஐக்கிய சபையின் போதகரான S. பரமானந்தம் ஐயரால் இயற்றப்பட்டது.

## VEDANAYAGA SASTRIAR

**By Dr. D. W. Devanesan**

NATIONAL CHRISTIAN COUNCIL REVIEW—
August 1948

Until recently there were only two biographies of this great Tamil Christian poet of Tanjore, one by Dr. Henry Bower and the other by Sastriar N. Gnanadickam. Now a third biography has been written by Dr. Devanesan and published by the Christian Literature Society, Madras. The author has done much research in collecting and weighing the material for his book and he has also enriched it by adding his own comments on the domestic life of Vedanayaga Sastriar, his views on caste, the part he played in spreading Christianity in South India, etc. The last chapter of the book dealing with anecdotes is interesting reading.

The Church in South India owes a great deal to the lyrics and hymns of Sastriar and the devotional life of many a Christian has been enriched by them. In this book by Dr. Devanesan we have a scholarly record of the life, work and teachings of this great Christian Poet of South India. We commend it very highly, and we trust that there will be a wide sale of this splendid work.

(Sd.) R. B. MANIKKAM.